அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் மார்ச் 2008

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HomeLife Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# ஓய்வு பெற்றார் காஸ்ரோ

கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ரோ கடந்த மாதம் ஓய்வு பெறுவதாக அறிவித்திருக்கிறார். 81 வயதாகும் காஸ்ரோ கியூபாவின் அரசுப்பத்திரிகையான கிரன்மாவின் இணையப் பதிப்பில் எழுதியிருக்கும் கடிதம் ஒன்றின் மூலம் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். இவர் ஒரு சிறந்த புரட்சியாளர். சேகுவேராவுடன் இணைந்து இந்த நூற்றாண்டின் சிறந்த மாதிரி நாட்டை உருவாக்க முற்பட்டவர். கடந்த 48 வருடங்களாக, பல தடவைகள் அமெரிக்காவால் இவர் மீது மேற் கொள்ளப்பட்ட கொலை முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. பல மத்திய அமெரிக்க நாடுகளின் பொருளாதாரம் அமெரிக்காவால் விழுங்கப்பட்ட நிலையில், தன்னிறைவுள்ள நாடாக தனது நாட்டை கட்டியெழுப்பிக் காட்டியவர். உலக சந்தையில் பல எதிர்ப்புக்கள் மத்தியில் தனது நாட்டை நிலை நிறுத்தியுள்ளார். உலக வங்கியை தூக்கியெறிந்தவர், அமெரிக்காவால் அழிக்கப்பட்ட கியுப கலாச்சாரத்துக்கு புதிய வடிவம் தந்தவர், ஒடுக்கப் பட்ட மக்களுக்கு ஒளியாகச் செயற்பட்டவர், பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளை களைந்தவர், பெண்கள் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியவர் என பல மகுடங்கள் இவருக்கு உண்டு. புரட்சிக்கு முன்னர் பாலியல் தொழிலாளிகளாக கடமைபுரிந்த பெண்கள், இவரது ஆட்சிக் காலத்தில், கல்வி கற்று சமூக நிலை மாற்றங்களுக்கு உட்பட்டார்கள். இவருக்கு பின்னரும், கியுபா தன்னிறைவுடனும், கம்பீரத்துடனும் திகழ்வதற்கு இவர் ஏற்படுத்திய திட்டங்கள் சான்றாக அமையும்.

*34ம் பக்கம் பார்க்க...*




*பெப்பிரவரி 16, 17ம் திகதிகளில் பாரதி ஆட்ஸ் அமைப்பினரால் “அன்பின் பணி” எனும், 24 மணிநேர தொடர் இசைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. சிறுவர்களே முக்கியமாகப் பங்கேற்ற இந்நிகழ்வு ஒரு உலக சாதனை முயற்சியாகும்.*

Photo: S. Vicky

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Mortgage Canada Inc.

Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E.,
Unit 202, Scar, ON

PMCI Mortgage Canada Inc.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

முக்கிய குறிப்பு வீட்டு உரிமையாளர்களுக்கு
60 நாட்களில் அதிகூடிய விலையில் உங்கள் வீட்டை என்னால் விற்க முடியும் உங்கள் அனுசரணையுடன். தாமதிக்காது உடன் அழைத்தால்...
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21 Affiliate Realty Inc.


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Radha
4362 Sheppard Ave. East
Scarborough, ON
M1S 1T6 Canada
Tel: 416.412.3838
Fax: 416.412.1174


Mortgage
Line of Credits
Second Mortgage
Residential & Commercial
Personal & Business
Raj. S
Broker / Director
416. 993. 2638
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


இந்த அழகிய வீட்டை வாங்க
விரும்புகிறீர்களா?
240 Bedrooms, 78 Washrooms, 825,000 square feet, 40 acre garden, 1500 doors, 750 windows, movie theatres, swimming pools, many more..
இன்னும் பல வசதிகள்... அது
பக்கிங்காம் அரண்மனை
துரதிஷ்டவசமாக அது விற்பனைக்கில்லை. ஆனாலும் என்னால் உங்களுக்கு பொருத்தமான, பிடித்த அழகியதோர் இல்லத்தை வாங்கித் தரமுடியும்.
SHRI PARAMSOTHY
Sales Representative
Dir: 647.285.4663
Office: 905.812.9000, fax: 905.812.6909
shri@shri.ca, www.shri.ca
TERREQUITY REALTY, BROKERAGE,
Independently Owned And Operated
2690 Erin Centre Blvd., Unit A5,
Mississauga, ON L5M 5P5
COLDWELL BANKER


LOWEST RATE IN CAR INSURANCE
Save 40% - 60%
MORTGAGE LOAN | BUSINESS LOAN | CAR LOAN |
SECURED VISA | LOWEST RATE CAR INSURANCE |
We can get any automobiles instantly, with proof of your income.
BAD CREDIT?
For Better Savings Call Vijay!
at 647 281 9084

THAIVEEDU
உள்ளும் புறமும்

## கொசோவா கற்றுத் தரும் பாடம்

கொசோவா என்கிற புதிய நாடு உதயமாகியிருக்கிறது. அந்த நாட்டின் பிறப்பை ஆரவாரித்து வரவேற்கவேண்டியவர்களாயிருக்கிறோம். கொசோவாவின் பிறப்பை சேர்பியா ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஐ.நா.வில் அதன் உறுப்புரிமையும் கேள்விகுறியாகவே உள்ளது. ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் சேர்பியாவுக்கு ஆதரவாக வாக்களிக்லாம். புதிய நாடு பிறந்ததுமே அங்கு வன்முறை வெடித்திருக்கிறது. அல்பானியர்களும், சேர்பியர்களும் சண்டையிட்டுக்கொள்வதைத் தடுக்க மேலதிக வெளிநாட்டுத் துருப்புக்கள் அனுப்பப் பட்டுள்ளன.

புதிய நாடு 'சுதந்திரம்' என்ற பெயரைத்தவிர பெரிதாக எதையும் இப்போதைக்கு அனுபவிக்கும் போலத் தெரியவில்லை. ஐரோப்பிய ஒன்றியம் என்கிற பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட சிற்றரசு போலவும், அவர்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் மாகாணம் போலவுமே இந்நாடு இயங்கும் போலவே தெரிகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரிகளிடமே இந்த நாட்டை ஆளப்போகும் 'எழுதப்படாத' அதிகாரம் இருக்கப் போகிறது. கொசோவா எப்படியான நாடாக இருக்கவேண்டும் என்பதையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். 'இரட்டைத் தலைக் கழுகு'க் கொடியை கொசோவோவின் கொடியாக அனுமதிக்க அவர்கள் மறுத்துவிட்டார்கள். அல்பேனியாவுடன் இணைவதற்கு மறுத்ததுடன் அதற்கான தொடர்புகளையும் மட்டுப் படுத்தியிருக்கிறார்கள்.

சேர்பியா வரலாற்று ரீதியாக கொசோவாவை ஆண்டு வந்தது என்பதற்காக அந்த மக்களின் சுயநிர்ணய உரிமையைப் புறக்கணிக்கமுடியாது. அந்நாட்டு மக்கள் சேர்பியாவின் ஆட்சியின் கீழ் வாழ விரும்பவில்லை என்பது கடந்தகால சம்பவங்களின் மூலம் தெளிவாகவே தெரிகிறது. அதேசமயம் இப்போது சிறுபான்மையினராக்கப்பட்டிருக்கும், கொசோவோவில் வாழும் சேர்பிய மக்களின் சுயநிர்ணய உரிமையும் புறக்கணிக்க முடியாததது. ஒரு சுதந்திரமான வாக்கெடுப்பு மூலமே அவர்களது எதிர்காலம் தீர்மானிக்கப்பட முடியும்.

இலங்கை கொசோவோவின் தனிநாட்டுப் பிரகடனத்தை நிராகரிப்பதாக அறிவித்திருக்கிறது. இலங்கை மட்டுமல்லாது ரஷ்யா, சீனா, இந்தியா, ஸ்பெயின் போன்ற நாடுகளும் இந்த தனிநாட்டுப் பிரகடனத்தை எதிர்த்திருக்கின்றன. இவை தமது நாடுகளில் தனிநாட்டுப் போராட்டத்தை எதிர்கொண்டிருக்கும் நாடுகள். எனவே அவற்றிற்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கருணையில் கிடைத்திருக்கும் இந்த 'தனிநாடு' ஈழத்தமிழர் போராட்டத்தில் பல பாடங்களை எமக்குக் கற்றுத்தந்திருக்கிறது. எமக்கான போராட்டத்தை நாமே முன்னெடுக்க வேண்டும். வல்லமை படைத்தோர் தயவில் எமது நோக்கம் எட்டப்படுமானால் சிற்றரசாக, சுதந்திரம் என்ற பெயரில் 'சுதந்திரம்' இன்றி வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கே தள்ளப்படுவோம். அதே சமயம் எமது பகுதிகளில் வாழும் சிறுபான்மையினர் தொடர்பாக நாம் எவ்வாறு நடந்துவருகிறோம் என்பதையும் மீளாய்வு செய்யவேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

கடந்த பெப்ரவரி 16ம் திகதி சனிக்கிழமை பாரதி கலைக்கோயில் "அன்பின் பணி" எனும் 24 மணிநேர தொடர் இசை நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறது. இதில் 25 மாணவர்கள் இசைக்கருவிகளை இசைக்க 30 பாடகர்கள் 240 பாடல்களை பாடி பார்வையாளர்களை பிரமிக்க வைத்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி ஒரு உலகசாதனைக்காகவும் விண்ணப்பக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி மூலம் திரட்டப்பட்ட 39,000 ஆயிரம் டொலரை பாரதி கலைக்கோயில் மாணவர்கள், ரூச் வலி வைத்தியசாலைக்குக் கொடுத்திருக்கின்றனர். இது ஒரு முன்னுதாரணமான நிகழ்வு. எமது வளரும் தலைமுறையை சரியான முறையிலும் அதே சமயம் எமது பண்பாட்டுத் தளத்திலும் வழிநடத்தவேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கிறது. பாரதி கலைக்கோயில் அதை செவ்வனே செய்து வருகிறது. அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

வரும் மார்ச் 29 இரவு 8 மணியிருந்திலிருந்து 9 மணிவரை கனடாவிலும், மற்றும் உலகெங்குமுள்ள பல நகரங்களிலும், புவிமணித்தியாலம் (Earth Hour) அனுசரிக்கப்பட இருக்கிறது. மின் விளக்குகளை அணைத்து. காலநிலை மாற்றம் பற்றிய கவனத்தை ஈர்ப்பதற்காக இது நடத்தப்படுகிறது. அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பதன் மூலம் புவி வெப்பமடைதல் தொடர்பில் நாம் ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஒவ்வெருவரும் அந்த ஒருமணி நேரத்திற்கு மின்சாரப் பாவனையை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குவோம்.

■ ■ ■

# மிகுதியான வெப்பத்தினால் தீ பிடிக்கும் அபாயம்!

## வீடு வைத்திருப்பவர்களுக்கான முக்கியமான அபாய அறிவிப்பு!!

Venmar Ventilation எனும் நிறுவனமானது, பலவிதமான பெருந்தொகையான வீட்டு நெருப்புப் பிடிப்பு அனர்த்தங்களை சமீபத்தில் கவனத்தில் கொண்டு வந்து ஆராய்ந்ததில், அதற்கான முக்கியமான காரணம், வீட்டை அளவுக்கு மீறி வெப்பப் படுத்துவதே என்பது தெரிய வந்துள்ளது. அதிலும் Venmar உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு பொருத்தப்பட்ட, Burlingtonஇல் உள்ள இருவீடுகள் தீப்பிடித்து சேதமாக்கப்பட்ட சம்பவங்களை தீவிபத்துக் கண்டு பிடிப்பு நிறுவனங்கள் கவனத்தில் கொண்டு வந்துள்ளன. எனினும் Venmar நிறுவனம் தமது பிரத்தியேக ஆராய்ச்சிகளின்படி, இன்னும் அந்த முடிவுக்கு வரவில்லை. அவர்கள் இதற்கான சரியான காரணியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இன்னும் ஈடுபட்டுள்ளார்கள்.

எனினும், வீட்டில் பொறுத்தப்பட்டுள்ள பலவிதத் தயாரிப்பு நிறுவனங்களின் சாதனங்களாலும், வீட்டின் சுற்றுப்புறச் சூழலால் உண்டாக்கப்படும் பலவித, எதிர்பாராத தாக்கங்களாலும்கூட, இவ்வகை Air exchangers நெருப்புப் பிடிக்கும் அபாயத்திலுள்ளன என்பதை வலியுறுத்துகின்றன. இதை மனதில் கொண்டு, Venmar Ventilations தங்கள் சாதனங்களை வீட்டில் பொருத்தியுள்ள வீட்டு உரிமையாளர்களைக் கூடியளவில் தொடர்பு கொண்டு, இதைப்பற்றிய எச்சரிக்கையைப் பரப்பி வருகின்றன. அதிலும் இதனால் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களையும் அவர்கள் இனம் கண்டு அதற்கான விடையைத் தர விளைகிறார்கள்.

இதில், 1991 முதல் 2001 வரையரைக்குட்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த Air Exchangers சாதனங்கள், மற்றும் அக்டோபர் 2006 இலிருந்து ஆகஸ்ட் 2007 வரையிலான காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட சாதனங்களே பெருமளவில் இம்மாதிரி தீவிபத்து சம்பவங்களில் பாதிக்கப்பட்டவையும், காரணியுமாம் என இனங்காணப் பட்டுள்ளன. கீழே, பலவித பெயர்களில் உருவான Air Exchangers தயாரிப்புக்களும் அவற்றின் மாதிரி இனங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை தயாரிப்பில், தரமற்றவை என இனங்காணப்பட்டவையாம்:

12ம் பக்கம் பார்க்க...

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் :
For More Info : Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.veedunews.com
E-mail : thaiveedu@gmail.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# ஒரு வீட்டைச் சொந்தமாக்க நீங்கள் தயாரா? இதோ சில குறிப்புக்கள்...

- நீங்கள் அடிக்கடி இடம் மாறிச் செல்வதை விரும்புவீர்களா?
- விடுமுறை, (Vacation), இளைப்பாறுதல் (Retirement) அல்லது உங்கள் சொந்தத் தொழிலைச் செய்தல் போன்ற விடயங்களில் உங்கள் சேமிப்புக்களைப் பயன் படுத்துவதை நீங்கள் விரும்புகிறீர்களா?
- ஒழுங்கான பராமரிப்பு, திருத்த வேலைகள் என்பவற்றை பற்றி நீங்கள் கவலைப் படாதிருக்க விரும்புகிறீர்களா?

மேற்கண்ட வினாக்கள் யாதாயினும் ஒன்றுக்கு நீங்கள் ‘ஆம்’ என்ற பதிலளித்தால், நீங்கள் ஒரு வீட்டை சொந்தமாக வைத்திருப்பதற்கு இன்னும் ஆயத்தமில்லை என்பதே கருத்தாகும். ஒரு வீட்டை வாங்குவதற்கு அநேக காரணங்கள் இருப்பதைப் போன்றே ஒரு வீட்டை வாங்காதிருக்கவும் அநேக காரணங்கள் உண்டு.

வீட்டை வாங்குவது, நீங்கள் எப்போதும் உருவாக்கும் பாரிய உணர்வு பூர்வமானதும் நிதி தொடர்பானதுமான தீர்மானமாகும். எனவே அறிவுபூர்வமான தீர்மானத்தை எடுப்பதற்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு வீட்டை வாங்குவதில் பணம், நேரம், சக்தி என்பவற்றை முதலீடு செய்ய வேண்டியிருப்பதுடன், மேலதிக பொறுப்பையும் எடுக்க வேண்டியிருக்கும். எனவே ஒரு வீட்டை வாங்க முன்பாக நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா என்பதை உறுதிப் படுத்துங்கள்.

### ஒரு வீட்டை சொந்தமாகக் கொள்வதனைப் பாதிக்கக் கூடிய சில பிரதான சாதகமான தன்மைகள்.

உங்கள் வீடு உங்களுக்கு ஒரு முதலீடாகும். உங்கள் குடும்பத்தின் தனிப்பட்ட தேவைகளைச் சந்திக்குமுகமாக நீங்கள் உங்கள் வீட்டை அலங்காரப்படுத்தவோ, புனரமைக்கவோ முடியும்.

### ஒரு வீட்டை சொந்தமாகக் கொண்டிருப்பதனால் ஏற்படக் கூடிய பாதகமான தன்மைகள்

- Down Payment செலுத்துதல், ஈட்டுக் கடன் கொடுப்பனவுகள் (Mortgage Payments), மற்றும் வீடு தொடர்பான ஏனைய செலவுகள் உங்கள் நிதி நிலமைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.
- உங்கள் வீட்டை நல்ல நிலமையில் வைத்திருப்பதற்கு அதிக நேரமும் பணமும் தேவைப்படும்.
- நீங்கள் வாடகைக் குடியிருப்பாளராக இருப்பதை விட சொந்தமாக வீடு வைத்திருக்கும் போது ஒவ்வொரு மாதமும் வீட்டிற்கு அதிகமாக செலவிட வேண்டியதாயிருக்கும். பராமரிப்பு மற்றும் சொத்துடமை வரிகள் (Property tax) போன்ற மேலதிக செலவுகள் உண்டு.
- நீங்கள் கொடுப்பனவுகள் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பாக அதிக பொறுப்புள்ளவர்களாக (Responsible) இருப்பீர்கள்.

இந்நிலையில் ஒரு வீட்டை வாங்கி அதனைப் பராமரிக்கக் கூடிய நிலையில் உள்ளீர்கள் என்பதைக் குறித்து உங்களால் தீர்மானம் எடுக்க முடியும். இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் வீட்டை வாங்குவதற்கு அதிகூடிய விலை எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை அறிய வேண்டும். மேற்கூறிய நிலமைகளுக்கேற்ப நீங்கள் பணத்தைச் சேமித்துக் கொள்ள முடியும். உங்கள் மாதாந்த வீட்டுச் செலவுகள், உங்கள் மொத்த வீட்டு வருமானத்தில் 32%தை விட கூடுதலாக இருக்கக் கூடாது. உங்கள் முழு மாதாந்த கடன் சுமையும், உங்கள் மொத்த மாதாந்த வருமானத்தில் 40%இற்கு மேற்படாததாக இருக்க வேண்டும். இதனுள் வீட்டுச் செலவுகள், மோட்டார் வாகன கடன்கள், கடன் அட்டை கொடுப்பனவுகள் போன்ற ஏனைய கடன்களும் உள்ளடங்கும்.

உங்களால் செலுத்தக்கூடிய (Affordable) அதிகூடிய வீட்டு விலைகளை நீங்கள் கணிப்பிட்டபின்பு, வீட்டை வாங்குவதுடன் தொடர்புடைய Up–front costs, மேலும் அதனுடன் தொடர்புடைய செலவுகளைச் சமாளிப்பதற்கு உங்களிடம் போதுமான பணம் உள்ளதா என்பதை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

### Up – front Costs

உங்களது வீட்டிற்கு 20% குறைவாக Down Payment செய்து வாங்குவதாக இருந்தால் உங்களுக்கு ஈட்டுக்கடன் காப்புறுதி (Mortgage Insurance) தேவை. இந்தக் காப்புறுதியைப் பெறுவதற்கு, நீங்கள் தேவைப்படும் காப்புறுதி வட்டத்தை (Insurance Premium) செலுத்தும்படி கேட்கப்படுவீர்கள்.

### Appraisal fee

Appraisal என்பது உங்கள் வீட்டின் பெறுமதியை மதிப்பிடுவதாகும். இதற்கு $250 - $350 வரை செலவாவதுடன், இப்பணமானது வீட்டின் பெறுமதியை மதிப்பிடும்போது செலுத்தப்பட வேண்டும். இது சில வங்கியினால் கட்டாயமாக செய்யவேண்டும் என அறிவுறுத்தப்படும்.

### Deposit

இது உங்கள் Down Paymentஇன் ஒரு பகுதியாகும். ஒரு வீட்டை வாங்குவதற்கான offer (Agreement of Purchase & Sale) ஒன்றை நீங்கள் செய்யும் போது நீங்கள் இந்த வைப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும். நீங்கள் செலுத்தும் இப்பணம் உங்களது நிபந்தனைகள் நிறைவேறும் வரை விற்பனையாளரின் (Seller) Real Estate Companyயின் Trust Accountஇல் வைப்பில் இடப்படும். நீங்கள் உங்கள் நிபந்தனைகள் திருப்தியாக நிறைவேற்றப்பட்டால், நீங்கள் அந்த வீட்டினை வாங்கக் கூடியதாக இருக்கும். அல்லது உங்களுக்குத் திருப்தியற்ற நிபந்தனைகள் இருந்தால், நீங்கள் அவ்வீட்டினை வாங்காமல் விட்டுவிட்டு உங்களுடைய Depositஐ மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

### Home Inspection Fees (வீட்டுச் சோதனைக் கட்டணம்)

இதற்கு $200இற்கு மேல் செலவாகலாம். அதிக சதுர அடி கொண்ட இடத்தைப் பரிசோதிப்பது, அதிக செலவுகூடியது. நிலப் பரிமாற்றவரி (Land Transfer tax) அல்லது உறுதிப் பதிவுக் கட்டணம் (Deed Register fee)என அழைக்கப்படும் சொத்து கொள்வனவு போன்ற கட்டணங்களை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும். தற்போதைய வீதங்களைப் பற்றி அறிய உங்கள் சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

### Property Insurance (சொத்துக் காப்புறுதி)

ஈட்டுக்கடன் வழங்குபவர் இதனைக் கோருவார். வீடானது ஈட்டிற்கான ஓர் உத்தரவாதம் ஆகும். இந்தக் காப்புறுதியானது உங்கள் வீட்டினதும் அதனுள் இருப்பனவற்றையும் மீளமைக்கும் செலவை அடக்கும்.

### Survey or Certificate of location Cost (இட ஆய்வு அல்லது இட அமைவு சான்றிதழ் செலவு)

ஈட்டுக்கடனை முடிவு செய்வதற்கு முன்பாக Up-to-date Survey அல்லது இடஅமைவு பற்றிய சான்றிதழை (Certificate of location) ஈட்டுக்கடன் வழங்குபவர் கேட்கலாம். விற்பவரிடம் இது இல்லாவிட்டால், அல்லது இச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு உடன்படாவிட்டால், நீங்கள் அதற்கு கட்டணம் செலுத்த வேண்டும். இதற்கு $100-$200 வரை செலவாகலாம்.

### Water Quality Inspection (நீரின் தரப் பரிசோதனை)

வீட்டிற்குக் கிணறு இருந்தால், நீர் வழங்கல் போதுமானதாகவும், நீரானது குடிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு நீரின் தரத்தைப் பரிசோதிக்க விரும்புவீர்கள். விற்பவரிடம் இந்தச் செலவுகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவும், வாங்குவதற்கான உங்கள் offerஇல் இதனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### Legal fees & Disbursements (சட்ட ரீதியான கட்டணங்கள்)

Closingஇன் போது இக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருப்பதுடன், ஆகக் குறைந்தது $500ஐ (GST/HSTஐயும்) செலுத்த வேண்டும். உங்கள் சட்டத்தரணியும் (Lawyer/ Notary) உங்கள் சொத்தின் சட்டரீதியான அந்தஸ்தை பரிசோதிப்பதற்கு நேரடிச் செலவுகளை அறிவிக்கலாம்.



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

மேற்கண்ட எல்லா up-front செலவுகளையும் உங்களால் சமாளிக்க முடியாதிருக்கும் என நீங்கள் நம்பினால் உங்களுக்கு கடன் கொடுப்பவரிடமிருந்து நீங்கள் கடனைக் கேட்கலாம். மேற்கண்ட Up-front செலவுகளை விட, கவனத்தில் கொள்ள வேண்டிய ஏனைய செலவுகள் உள்ளன.

### ஏனைய செலவுகள்

- வீட்டின் உட்புற பராமரிப்பிற்குத் தேவையான உபகரணங்கள்
- பூந்தோட்ட பராமரிப்பு உபகரணங்கள்
- பனியகற்றும் உபகரணங்கள்
- அலங்காரப் பொருட்கள்

*5ம் பக்கம் பார்க்க...*

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

மார்ச் குறிப்புகள்

- மார்ச் 21 பெரிய வெள்ளியைத் (Good Friday) தொடர்ந்து, மார்ச் 24 ஈஸ்டர் திங்கள் (Easter Monday) வரையுள்ள விடுமுறை காலத்தை பயனுள்ளதாகக் கழியுங்கள்.
- மார்ச் 29 ஆம் திகதி கனடா பூராகவும் இரவு 8 மணியிலிருந்து 9 மணி வரை நீர்மின் (Hydro) சக்தியை சேமிக்கும் நேரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீங்களும் இதற்கு உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள்.
- உங்கள் வருமானவரியை தயார்படுத்துங்கள் அல்லது வருமானவரி வேலைகளைச் செய்து முடியுங்கள்.
- உங்கள் கம்பளங்கள் (Carpets) மற்றும் கால்துடைப்பான்களை (Rug) துப்பரவு செய்யுங்கள்
- திரைச்சேலைகளை vacuum அல்லது Steam அல்லது dry clean செய்யுங்கள்.
- வெப்பமேற்றும் மற்றும் குளிராக்கும் (Heating and Cooling System)இன் வெளிப்பகுதியில் இலைகள் மற்றும் ஏனைய அழுக்குகள் இருக்கிறதா என பார்த்து சுத்திகரியுங்கள்.
- சுவர்கள், நிலப்பகுதி, தளபாடம் போன்றவற்றை Vacuum செய்யுங்கள்.
- கதவுக்குமிழ்களை கீறலை ஏற்படுத்தாத தூய்மையாக்கிகளைக் கொண்டு துப்பரவு செய்யுங்கள்.
- கொதிகலன்கள் (Boilers)மற்றும் கனலடுப்பில் வைக்கப்படும் பாத்திரங்களைத் (Oven drip pans) துப்பரவு செய்யுங்கள்.
- வெப்பமேற்றியின் (Gas heater) புகை மற்றும் காற்று வெளியேறும் குழாய்களில் அழுக்கு மற்றும் தூசுகள் இருக்கின்றதா என்பதை சரிபார்த்து அகற்றுங்கள்.
- குளிர்காலத்திற்கென அமைத்த யன்னல்களை (Windows) அகற்றுங்கள்.
- வீட்டின் வெளிப்புறப் புற்தரை மற்றும் பூந்தோட்ட பாத்திகளை வசந்தகாலத்திற்கு ஏற்றதாக மாற்றி அமையுங்கள்.
- புற்தரைகளில் மீண்டும் விதையிடுங்கள்
- செடிகள், மரங்களை அவை பூக்கத் தொடங்குமுன்பாக அளவோடு கத்தரியுங்கள்.
- குளிரான காலத்தில் வளரக்கூடிய வெங்காயம், உருளைக் கிழங்கு, கோவா, கரட் போன்ற காய்கறிகளை தோட்டத்தில் பயிரிடுங்கள்.
- விதைகளை விதைக்க முன்பாக அல்லது தாவரங்களை நாட்ட முன்பாக திராட்சைக் கொடி மற்றும் ஏறுகொடித் தாவரங்களை படரவிடக் கூடிய கொடிக்கால்களை நாட்டுங்கள்.
- உங்கள் வீட்டைச் சுற்றிலும் மற்றும் நடைபாதைகளில் மின்விளக்குகள் சரியாக எரிகின்றதா எனச் சரிபாருங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

4ம் பக்கத் தொடர்ச்சி...

- வீட்டின் திருத்த வேலைகட்குப் பயன் படுத்த வேண்டிய சில உபகரணங்கள் (Hand tools)
- ஈரப்பதனகற்றி (Dehumidifier)

போன்ற உபகரணங்கள் உங்களிடம் இருக்க வேண்டியது அத்தியாவசியமாக இருப்பதுடன், திருத்தங்கள் அல்லது புனரமைப்புக்களுக்கான கட்டணங்கள், அத்தியாவசிய சேவைகளுக்கான கட்டணங்கள், தொலைபேசி சேவைகள், வெப்பமேற்றும் சேவைகள் என்பவற்றுடன் Condominium கட்டணங்களையும் நீங்கள் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட செலவுகட்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கும் அதேவேளை, கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் வேறுபலவும் உள்ளன. வீட்டின் அளவு எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்?, உங்களுக்கு ஒன்றுக்கும் அதிகமான படுக்கை அறைகள், அலுவலக அறை போன்றன தேவையா?, இரு மோட்டார் கார்கள் விடக் கூடிய கராஜிற்கான இடவசதி தேவையா? போன்றவற்றையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வளிச்சீராக்கி உபகரணம் (air conditioning), சேமிப்பு இடவசதிகள் (Storage) அல்லது பொழுதுபோக்கிற்கான இடவசதி, நெருப்பு மூட்டும் இடம் (Fire place), ஓர் நீச்சல் குளம் போன்றன தேவையா? உங்கள் குடும்ப அங்கத்தவர்கட்கு சிறப்பு தேவைகள் உள்ளனவா போன்றவற்றை நீங்கள் கருத்திலெடுக்க வேண்டும்.

இதனைவிட நீங்கள் எத்தனை குழந்தைகளைக் கொண்டிருக்க விரும்புகிறீர்கள்? உங்களிடமிருந்து வெளியேறிச் செல்ல விரும்பும் teenagers இருக்கிறார்களா? நீங்கள் இளைப்பாறும் வயதில் உள்ளீர்களா? என்பனவற்றையும் கவனத்தில் எடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அடுத்த 5 தொடக்கம் 10 வருடங்களுக்கு உங்கள் தேவைகளைச் சந்திக்கக் கூடியதான வீட்டினை வாங்குங்கள்.

உங்களுடைய தேவைகள் அனைத்தையும் சந்திக்கக் கூடியதாக உங்கள் வீடு அமைந்தாலும், வீட்டின் இடஅமைவு பொருத்தமாயிருக்க வேண்டும். எங்கு வாழவேண்டுமென்பதை எண்ணும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.



- நீங்கள் ஓர் நகரத்திலோ அல்லது பட்டினத்திலோ அல்லது நகரப்பகுதிக்கு வெளியில் வாழ விரும்புகிறீர்களா?
- நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள்? நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து வேலைக்குச் செல்லுதல் எவ்வளவு இலகுவானது?
- உங்கள் பிள்ளை எங்கு பாடசாலைக்குச் செல்வர்? எவ்வாறு செல்வர்?
- குடும்பம் மற்றும் நண்பர்கட்கு எவ்வளவு நெருக்கமாக நீங்கள் இருக்க விரும்புகிறீர்கள்?

## புதிய வீடா? ஏற்கனவே சொந்தமாக்கப்பட்டதா? அல்லது நீங்களே கட்டியதா?

உங்களுக்கு தேவைப்படும் வீட்டைப்பற்றி யோசிக்கும்போது, நீங்கள் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டியவை, மீள்விற்பனை (Resale) வீட்டை வாங்க நினைக்கிறீர்களா? அல்லது புதிய வீட்டை வாங்க நினைக்கிறீர்களா? எனத் தீர்மானிப்பது அவசியம்.

புதிய வீட்டை வாங்கும்போது, வீட்டின் சுவர்கள், நில அமைப்பு, மற்றும் குழாய் இணைப்புக்கள், மின்சார வேலைகளை ஏற்றவாறு இலகுவில் அமைக்க முடியும். எல்லாம் புதிதாக இருப்பதினால் அநேக விடயங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டனவாக இருப்பதால் பராமரிப்புச் செலவு குறைவாக இருக்கும்.

## சூழவுள்ள சேவைகள் (Neighborhood amenities)

பாடசாலை, கடைத் தொகுதிகள், சேவைகள் என்பன புதிய வீட்டுத் தொகுதி காணப்படும் இடங்களில் பூர்த்தியாகாது இருக்கும்.

## மேலதிக செலவுகள்

உங்கள் வாகனப் பாதையை மீளமைக்க வேண்டுமெனின் நீங்கள் மேலதிகமாக செலுத்த நேரிடும்.

உங்கள் வீடு $450,000ஐ விட குறைந்த விலையுடையதாக இருந்தால், GST அல்லது HSTஇன் ஒருபகுதியை திரும்ப பெறுவதற்கு தகுதி உடையவர்களாவீர்கள். புதிய வீட்டுக்கான GST மீளப் பெறும் திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ள கனடா வருமான நிறுவனம் (Canadian Revenue Agency)இல் இணையத்தள முகவரிக்கு www.cra-arc.gc.caஇற்கு விஜயம் செய்யுங்கள்.

## மீள் விற்பனை வீடு (Resale House)

இத்தகைய வீடுகள் அமைந்திருக்கும் இடங்களில், சேவைகள் இலகுவாகக் கிடைக்கக் கூடியதாக இருக்கும். பொதுவாக, பாடசாலை, கடைத்தொகுதிகள், ஏனைய சேவைகளுடனான அயற்சூழல் என்பன ஏற்கனவே தாபிக்கப்பட்டிருக்கும்.

நிலஅமைப்பாக்கம் (Landscaping) ஏற்கனவே செய்யப்பட்டு வேலியிடப்பட்டிருக்கும்.

ஏற்கனவே சொந்தமாக்கப்பட்டிருக்கும் வீடுகள், நெருப்பு மூட்டும் இடங்கள் அல்லது பூர்த்தியாக்கப்பட்ட நிலக்கீழ் அறைகள் அல்லது நீச்சல் தடாகங்களைக் கொண்டிருக்கும்.

கூரைகள், யன்னல், கதவுகளை மீளமைத்தல் போன்ற பாரிய திருத்தங்களை நீங்கள் செய்ய வேண்டியதாயிருக்கும்.

ஒரு வீட்டை சொந்தமாக்கிக் கொள்ளும் தகுதி உங்களுக்கு இருக்கிறதா? எத்தகைய வீட்டை வாங்க விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானித்த பின் ஒரு சிறந்த வீட்டை வாங்குவதற்கு வீடு விற்பனைப் பிரதிநிதியை (Real Estate Agent) அணுகுவது சிறந்ததாகும். இவர் Offer of Purchase எழுதுவதிலும் சிறந்த வீட்டை நீங்கள் பெற்றுக் கொள்வதிலும் உங்கள் சார்பில் பேசக்கூடியவர். சுற்றியுள்ள அயல் பற்றி உங்களுக்கு முக்கியமான தகவலை வழங்குதல், வீட்டுப் பரிசோதனையை ஒழுங்குபடுத்தி Co-Ordinate பண்ணுதல், முக்கியமாக உங்கள் நேரத்தையும், பிரச்சனைகளையும் பணத்தையும் சேமித்தல் என்பவற்றுக்கு வீடு விற்பனைப் பிரதிநிதியை அணுகுதல் சிறந்ததாகும்.

■ ■ ■

Search Your Dream Home @ www.mlscentre.com

Buying, Selling, Leasing

PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage

Residential, Commercial, Investment
Industrial And Rental



Mohan Subramaniyam
Broker Of Record
416-857-1780

Search Your Dream Home
@
www.mlscentre.com
OR Call
416-321-2300

One Source For Many Type Of Properties And Mortgages!



3+2 Bdrms, 2 Washrooms,
Detached Bungalow House,
Close To All Amenities.



2+1 Bdrms, 2 Washrooms,
Steps To Shopping Centre, Public
Library, Ttc, Well Known Schools.



4 Bdrms, 3 Washrooms,
Detached 4Bedroom With Many
Upgrades, Hardwood Floor.

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!

# மனைவி / கணவன் அமைவதெல்லாம்...


கே. எஸ். பாலச்சந்திரன்

கண்ணதாசன் எழுதிய "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்ற பாடலை, ஒரு பெண் கவிஞர் "கணவன் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்று மாற்றிப்பாடியிருக்கலாம் என்ற நினைத்ததின் விளைவுதான் இந்தத் தலைப்பு.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருமுறை தன் மனைவியைப்பற்றி எனக்குச் சொல்லத் தலைப்பட்டார். அவர் சொன்ன முக்கியமான குறை என்னவென்றால், மனைவியும், தானும் பலவிடயங்களில் ஒருமித்த கருத்துடையவர்களாக இல்லாமல் வேறுபாடு உடையவர்களாக இருக்கிறோம் என்பதே.

"சொந்தக்காரர், நண்பர்களோடு எப்படி..?".

"எல்லாரோடும் முகம் கோணாமல், அன்பாய், தேவையறிந்து உதவிசெய்யிற குணத்தோடு நடந்து கொள்ளுவா.."

நான் அவருக்குச் சொன்னேன். "இப்படியே வாரும்.. ஒருதரம் கோயிலுக்கு போயிட்டு வரலாம்"

"ஏன்.. இப்ப என்னத்துக்கு" என்று கேட்டார்.

"இப்படி ஒரு மனைவி கிடைத்ததுக்கு சாஷ்டாங்கமாக ஒருமுறை கடவுள் சந்நிதியில் நீர் விழுந்து கும்பிடலாம்" என்றேன்.

அவரது மனைவியும் அவரைப்போலவே சங்கீதம், திரையரங்கு என்று ஆரம்பித்தால்



தனக்கு கர்நாடக சங்கீதம் பிடிக்கும் என்றார். தனது மனைவியோ, "சிந்து பைரவி" திரைப்படத்தில் வந்த வித்வான் ஜே.கேயின் மனைவி பைரவியைப்போல, "சங்கீதம் என்றால் இறாத்தல் என்ன விலை" என்று கேட்பவளாக இருக்கிறாள் என்று ஒரு குறை. தரமான திரைப்படங்களை தேடிப்பிடித்து, திரையில் பார்க்கும் பழக்கம் தனக்கு இருக்கிறதாம். கூட வரும்படி அழைத்தால் நிர்த்தாட்சண்யமாக மனைவி மறுத்து விடுகிறாளாம். அப்படியே திரையரங்குக்கு வற்புறுத்தலுக்காக வந்தாலும் படம் ஆரம்பித்தவுடன் நித்திரை கொள்ளத்தொடங்கிவிட, தனக்கு தொடர்ந்து படம் பார்க்கும் ஆசையே இல்லாமல் போய் விடுகிறதாம் இந்த ரீதியில் நண்பர் சொல்லிக்கொண்டே போனார்.

எல்லாம் சொல்லி முடிந்தபின் நான் அவரைக்கேட்டேன்.

"உங்கள் மனைவி வீட்டுக்காரியங்களில் எப்படி..?".

"அதெல்லாம் அந்தந்த நேரத்துக்கு நடக்கும். பிள்ளைகளின்ரை படிப்பு, ரியூசன், சங்கீத வகுப்பு எல்லாம் அவவே பார்த்துக் கொள்வா.. சமையல் ஒரு குறையும் இல்லை.."

அவரது குடும்பம் சீராக கொண்டு நடத்தப்படும் நிலை திசைமாறிப்போயிருக்கலாம். அந்தப் பெண்ணின் ரசனைகள் மாறுபட்டதாகவிருக்கலாம். அவருக்கு விருப்பமில்லாததைச் செய்ய வற்புறுத்துவதும் அவசியமில்லை. எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதில் அவருக்கு உள்ள அபிப்பிராயம் சரியானதெனில் அப்படியே விட்டுவிடுங்கள்.

நண்பருக்கு நான் இறுதியாகச்சொன்ன ஒரு வாக்கியம். இப்படி எனக்கு சொன்னதைப் போல மற்றவர்களுக்கு உங்கள் மனைவியின் குறைகளைச் சொல்வதை விட்டு விடுங்கள். உங்களுக்கு அனுதாபம் காட்டுவதுபோல பாவனை செய்து கொண்டு உங்கள் குடும்பவாழ்வின் சந்தோசத்திற்கே தீங்கு விளைவிக்கவும் கூடும்.

குடும்பத்தலைவிகளும், தங்கள் கணவரை மற்றவர்களோடு மனதளவில் கூட ஒப்பிடத் தலைப்படுதல் நன்றன்று. எந்தவிதமான முயற்சியும் அற்றவராய், குடும்பத்திற்கே தீங்கும், தொல்லையும் விளைவிக்கின்ற ஒரு கணவராய் இருந்தால் உரிய இடத்தில் உங்கள் நிலையைச்சொல்லலாம். "கல்லான் ஆனாலும் கணவன், புல்லன் ஆனாலும் புருஷன்" என்ற கடப்பாடு ஒன்றும் அங்கு இல்லை.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்ற குறளுக்கு கலைஞர் மு.கருணாநிதி இவ்வாறு பொருள் கூறுகின்றார். பெற்றோர், வாழ்க்கைத்துணையான மனைவி, பிள்ளைகள் என்று இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் ஆற்றுவோனுடைய கடமையாகும்.



விவிலிய நூலில் ஆதியாகமத்தில் இறைவன் ஆணை உலகின் மண்ணிலிருந்து உருவாக்கினார் என்றும், அவனது விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார் என்று சொல்லப்படுவதற்கு ஒரு அருமையான விளக்கத்தை அண்மையில் வாசித்தேன். நெஞ்சுக்கூடு என்ற எலும்புத்தொகுதி, இதயத்தையும், சுவாசப்பையையும் பாதுகாக்கிறது. அந்தத்தொகுதியிலிருந்து ஒரு எலும்பை எடுத்துத்தான் பெண்ணை ஆண்டவர் உருவாக்கினார் என்றால் ஆணின் மிகமுக்கியமான இதயத்தைப் பாதுகாக்க வேண்டியவள் பெண், அவன் மூச்சை, அதனால் இயங்கும் வாழ்வைப் பாதுகாக்க வேண்டியவள் பெண் என்ற அர்த்தத்தில் தான் என்பதுதான் விளக்கம்.

"பெண்ணே.. ஆணின் கால் எலும்பிலிருந்து நீ உருவாக்கப்படவில்லை. எனவே நீ அவனுக்கு அடிமையாக இருக்க உருவாக்கப்படவில்லை. நீ அவனின் தலையிலிருந்து உருவாக்கப்படவில்லை. எனவே அவனுக்கு மேலானவளாக இருக்க உருவாக்கப்படவில்லை. அவனின் விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டதால் அவனுக்கு என்றும் துணையாக, அவன் அருகில் இருக்கவேண்டியவள்."

"ஆண்மகனே.. நீ பெண்ணின் மீது அன்பு காட்டு, அவளை மதி. அவளுக்கு துன்பம் இளைக்கின்றபோது உன் இதயத்திற்கே துன்பம் இளைக்கின்றாய் என்பதை நினைத்துக்கொள்."

திருமணம் செய்து கொள்கின்றபோது ஏன் நான்காவது விரலில் (இதையே மோதிர விரல் என்று சொல்வதுண்டு) மோதிரம் அணிந்து கொள்கிறோம் என்பதற்கான ஒரு சுவையான விளக்கத்தை (சீன நாட்டுக் காரர்களினது) தருகின்றேன்.

படத்தில் இருப்பதைப்போல இரண்டு கைவிரல்களையும் எதிர், எதிராக வைத்துக் கொண்டு, கட்டை விரல்கள், இரண்டாவது விரல்கள், நான்காவது விரல்கள், சின்ன விரல்கள் என்பனவற்றை நுனிகள் தொடுமாறு வைத்துக்கொள்ளுங்கள். நடுவிரல் களை பின்பக்கமாக மடித்து சேர்த்து வைத்துக்கொள்ளுங்கள். எல்லாம் அப்படியே இருக்க கட்டை விரல்களை பிரித்துப்பாருங்கள். அவை பிரியும். அவை உங்கள் பெற்றோரைக்குறிப்பன. என்றோ ஒருநாள் உங்களை விட்டு அவர்கள் பிரியத்தான் செய்வார்கள்.

பழைய நிலையில் வந்தபின், இரண்டாவது விரல்களையும் உங்களால் பிரிக்கமுடியும். அவை உங்கள் உடன்பிறந்தவர்களைக் குறிக்கும். அவர்களும் கால ஓட்டத்தில் உங்களைவிட்டு பிரியத்தான் செய்வார்கள். நடுவிரல்கள் உங்களைக் குறிக்கும். நான்காவது மோதிரவிரல் உங்கள் மனைவியையும், சின்னவிரல்கள் உங்கள் பிள்ளைகளையும் குறிக்கும்.


பழைய நிலையில் விரல்களைக்கொண்டு வந்து, பிறகு சின்னவிரல்களையும் உங்களால் பிரிக்கமுடியும். ஏனென்றால் பிள்ளைகளும் பெரியவர்களாகி, ஒருநாள் உங்களை விட்டு பிரிவார்கள்.

மீண்டும் பழையமாதிரி விரல்களை வைத்துக்கொண்டு, மனைவியைக்குறிக்கும் நான்காவது விரலை பிரித்துப்பாருங்கள். பிரியவே பிரியாது. மனைவியும் வாழ்நாள் பூராவும் உங்களோடு இணைந்திருக்க வேண்டியவள். எனவேதான் அந்த விரலில் மோதிரம் அணிகிறோம் என்று சீனக்கதை சொல்கிறது.

விளக்கம் எப்படியோ, கூறும் கருத்து சரிதானே. நீங்களும் செய்து பாருங்கள்.

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# இரத்தக் கொதிப்பு நோய்

# (HIGH BLOOD PRESSURE)

**இதயம் மலர்கிறது - தொடர் - 2**




கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -



இரத்த அழுத்தம், பிறசர், இரத்தக் கொதிப்பு என்று பலவாறாகக் கூறப்படும் இந்தக் குருதியமுக்க நோய்க்குப் பல காரணங்கள் உண்டு. உடல் முழுவதும் குருதியானது பாய்ச்சப்படுவதற்கு, இதயத்தினுள் அமுக்க மாற்றம் இயல்பாகவே நடைபெறுதல் வேண்டும். இந்த அமுக்க மாற்றத்திற்கு ஒரு அளவுகோல் உண்டு. இதனைச் சுகதேகிக்குரிய சாதாரண இரத்த அழுத்தம் என்று கூறுவர். இங்கு நான் குறிப்பிடும் சாதாரண இரத்த அழுத்தம் வளர்ந்தவர்களுக்குரியது. சராசரியாக சாதாரண இரத்த அழுத்தம் 120/80 மில்லி மீற்றர் / பாதரசம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். ஆங்கிலத்தில் 120/80mm/Hg என்று குறிப்பிடுவர். கோட்டின் மேலே குறிப்பிட்டுள்ள அமுக்கம் இதயமானது சுருங்கும் பொழுது 120mm/Hg அமுக்கத்துடன் குருதியைப் பாய்ச்சுவதைக் குறிக்கும். இப்படியாகப் பாய்ச்சப்பட்ட குருதியானது இதயத்தின் பெருநாடியில் தேங்கி நின்று படிப்படியாக 80mm /Hg அமுக்கம் வரும் வரை (கோட்டின் கீழே காட்டப்பட்ட அமுக்கம்) உடல் பூராகவும் குருதியைப் பாச்சும். இத்தருணத்தில் இதயமானது விரிந்து குருதியை உள்வாங்கி பின்பு அடுத்த கட்டம் சுருங்குவதற்கு ஆயத்தமாகும். இதயம் விரிவடைந்து சுருங்குவதற்கு ஆயத்தமாகும் கட்டத்தில் 80mm/Hg அமுக்கம் பெருநாடியில் காணப்படும். ஒவ்வொரு தடவையும் இதயமானது சுருங்கும் பொழுதும் விரியும் பொழுதும் பெருநாடியில் ஏற்படும் அமுக்க மாற்றமே 120/80mm/பாதரசம் ஆகும். சாதாரண குருதியமுக்கம் என்பது ஒரு தேவையான உடற்தொழிற்பாடு என்பது இப்பொழுது புரிகிறதல்லவா?

## குருதியமுக்கநோய் என்பது என்ன?

உடற்பயிற்சி செய்யும் பொழுது, கோபமடையும் பொழுது, அதிகளவு வேலை செய்யும் பொழுது இதயத்தில் குருதியமுக்கம் கூடுவதுண்டு. உடற்தொழிற்பாட்டின் தேவையைப் பொறுத்து குருதியமுக்கம், SYSTOLIC BLOOD PRESSURE தற்காலிகமாகக் கூடலாம். பின்பு உடலானது ஓய்வாக இருக்கும் பொழுது குருதியமுக்கம் படிப்படியாகக் குறைந்து வந்து சாதாரண அளவுக்கள் வந்துவிடும். கோட்டின் கீழேயுள்ள அமுக்கத்தை DIASTOLIC BLOOD PRESSURE என்று கூறுவர். ஒரு சாதாரணமான நோயற்ற மனிதனுக்கு, இதயத்தில இருந்து புறப்படும் பெருநாடி என்னும் வாவியினுள் குருதியமுக்க மாற்றம் ஒவ்வொரு இதயத்துடிப்பின் பொழுதும் 80mm/Hgற்கும் 120mm/Hgற்கும் இடையில் மாறுபட்ட வண்ணம் இருக்கும். குருதியமுக்கம் அளக்கும் பொழுது வைத்தியசாலையை அடைந்து சற்று ஓய்வாக இருந்த பின்பு அளப்பது மிகவும் நல்லது.

மேற்குறிப்பிட்டுள்ள குருதியமுக்க அளவுகளிலும் பார்க்க, உங்களது அமுக்கம் கூடியிருந்தால் வைத்தியர் உங்களுக்கு அதனை தெரிவிப்பார். அதனை உறுதி செய்வதற்கு நீங்கள் மேலும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி ஏற்படலாம். உங்கள் வயதிற்கேற்பவும் குருதியமுக்கம் மாறுபடும். ஐம்பது வயதுடையவரின் அமுக்கம் 130/90ஆக இருந்தால் அதனை வயதுக்குரிய சாதாரண அமுக்கம் எனலாம். எனினும் வைத்திய ஆலோசனை இங்கு மிகவும் பிரதானமானது.

ஏறத்தாழ 40%மானவர்கள் தமக்கு இரத்தக் கொதிப்பு நோய் இருப்பதை அறியாவதவர்



Enlarged heart
(heart failure)

களாக இருக்கிறார்கள். ஓரிரு தடவைகள் குருதியமுக்கத்தை அளப்பதன் மூலம் இந் நோயை உறுதிப்படுத்திவிட முடியாது. மூன்றாவது, நான்காவது தடவைகள் அளக்கும் பொழுது குருதியமுக்கம் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டால் வைத்தியர்கள் அதனை உறுதிப்படுத்துவார்கள். உதாரணமாக ஒருவருக்கு இரத்த அழுத்தம் 150/100mm/Hg ஆக இருந்தால் அவருக்கு குருதியமுக்க நோய் இருப்பதாக அறிவிக்கப்படும். குருதியமுக்க நோய் இருந்தால் மிகவும் அவதானமாக வைத்திய ஆலோசனையைப் பின்பற்றி மருந்து உட்கொள்வதுடன், உடற்பயிற்சியும் செய்து சமபல உணவும் உட்கொள்ளுதல் அவசியமாகும். இரத்தக் கொதிப்பைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளாவிடில் குருதிக் குழாய்களில் கொழுப்புப் படியும், குருதிபாயும் இரத்தக் குழாய்களின் துவாரம் சிறிதாகும். குருதிக் குழாய்களில் சுவர்கள் பாதிப்படையும். குருதிக் குழாய்களில் அடைப்பு உண்டாகும் பொழுது மார்படைப்பு நோய் அதாவது இதயத் தசைகளுக்குரிய குருதி விநியோகம் தடைப்படலாம். தொடர்ச்சியான கட்டுப்படாத குருதியமுக்கம் இதயவறைத் தசைகளை விரிவடையச் செய்து இருதய பெலவீனம், மற்றும் மூளையில் குருதிக்கலன் விபத்து என்பன மூளையில் ஏற்படும் ------- விபத்து பாரிசவாதத்தை ஏற்படுத்தி அங்கங்களின் செயலிழப்பு ஏற்பட வழிவகுக்கும்.

மூளையில் ஏற்படும் குருதிகலன் விபத்து பாரிசவாதத்தை ஏற்படுத்தி அங்கங்களில் செயலிழப்பை ஏற்படுத்தும்.

குடும்ப வைத்தியரை அணுகி உங்களைப் பரிசோதித்துக்கொள்வது எவ்வளவு தூரம் பிரதானமென்பது மேற்கூறிய பந்தியை வாசிக்கும் பொழுது தெரிந்திருக்கும்.

எல்லா உறுப்புகளும் திறம்பட இயங்குவதற்கு குருதிவிநியோகம் பிரதானமானது. அதுபோல் குருதி விநியோகத்தைச் சீர் செய்ய மூளை, ஈரல், சிறுநீரகம், சுவாசப்பை போன்ற உறுப்புக்களும் சீராக இயங்குதல் அவசியம். உதாரணமாக சிறுநீரகத்தில் பழுது ஏற்பட்டால் குருதியில் உள்ள பல கழிவுப் பொருட்களுடன் தேவையற்ற மிதமான உப்புக்கள் கழிவடையாது உடலில் தேங்குகின்றன. இதனால் குருதியமுக்கம் கூடலாம். கிருமித் தொற்றினால் சிறுநீரகம் தற்காலிகமாகப் பழுதடைந்தால் வைத்தியரை நாடி சிகிச்சைபெறுவதன் மூலம் குணமாக்கலாம். சிறுநீரக நோய் குணமடைந்ததும் குருதியமுக்க நோயும் முற்றாக மாறிவிடும். ஆனால், இது நாட்பட்ட நோயாக இருந்து சிறுநீரகங்கள் நிரந்தரமாகப் பாதிப்படைந்தால் குருதியமுக்க நோய் இதன் காரணமாகத் தொடர்ந்து இருக்கலாம். வைத்திய ஆலோசனைப்படி குருத்தியமுக்கத்தை தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் பின் விளைவுகள் பலவற்றைத் தடுத்து நல்லபடி வாழலாம்.

சில சமயங்களில் அதிக வயிற்றோட்டம், வாந்தி, குருதியிழப்பு என்பனவற்றால் குருதியின் கன அளவு குறைந்து அதனால் குருதியமுக்கம் குறையலாம். நரம்பியல் தாக்கங்கள் கூட சடுதியாகக் குருதியமுக்கத்தைக் குறைத்து மயக்கத்தை ஏற்படுத்தலாம். இவைகள் தற்காலிகமானவை. சில சமயங்களில் பாரிய நரம்பியல் தாக்கு (NEUROGENIC SHOCK) மரணத்தைக் கூட ஏற்படுத்தும் அளவிற்கு பாரியதாக இருக்கும். இத்தகைய தருணங்களில் கூட அநேகமாக இருதயமானது தன்னைச் சுதாகரித்துக்கொண்டு வேகத்தை அதிகரித்து குருதி விநியோகத்தைச் சீர்செய்யும் அளவிற்கு பெரிய மனம் படைத்தது.

## குணங்குறிகள்:

அநேகமாகக் குணங்குறிகள் தென்படுவதில்லை. துலைச்சுற்று, தலையிடி போன்றவை கூட ஒருசில குணங்குறிகளாக இருந்தாலும் வேறு பல காரணங்களாலும் தலையிடி, தலைச்சுற்று என்பன ஏற்படலாம். ஆதனால் வைத்திய பரிசோதனை செய்து உங்களுக்கு பிறசர் இருக்கின்றதா என்பதை அறிந்து கொள்வது மிகவும் நல்லது.

## எப்படி கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்,

- வயது, வளர்த்திக்கு ஏற்ப உடற்பருமன் பேணுதல்.
- உடற்பயிற்சி தினமும் 45நிமிடநேரம் குறைந்தது கிழமையில் 4 நாட்கள்
- உணவில் உப்பு அதிகம் சேர்க்கக் கூடாது.
- மதுபானம் அருந்துதல் வைத்திய ஆலோசனைப்படி \ புகைத்தல் - இதில் உள்ள நிக்கொரின் என்ற பதார்த்தம் அட்ரீனலின் என்ற சுரப்பைத் தூண்டுவதால், அது குருதிக் குழாய்களைச் சுருக்கி பிறசரைக் கூட்டிவிடும். இருதயத்துடிப்பும் அதிகமாகும்.
- கொழுப்பு உணவு – அளவோடு உண்ணுதல்
- தபானம், யோகப்பயிற்சி செய்தல்
- பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம் போன்ற கனியுப்புக்கள் அடங்கிய உணவு வகைகளை தினமும் உணவில் அளவோடு சேர்த்தல்,

| | |
|---|---|
| ***பொட்டாசியம்*** | *வாழைப்பழம், கீரை, உருழைக்கிழங்கு, தக்காளி,* |
| ***கல்சியம்*** | *பால், எள்ளு, பச்சை கீரைவகை, Kale கீரை முருங்கைக்காய்,* |
| ***மக்னீசியம்*** | *பயறு, கடலை, கச்சான் போன்ற தானியவகைகள், பச்சை இலைக் கீரை* |

## மருந்து வகைகள்

அதிகுருதியமுக்கத்தைக் குறைக்கும் மருந்து வகைகளை வைத்தியர் ஒருவரே உங்களுக்கு நிர்ணயிப்பார். வைத்திய ஆலோசனை மிகவும் அவசியம் தேவை. தரப்படும் வில்லைகள் பலவிதமாகப் பல இடங்களில் தொழிற்பட்டு குருதியமுக்கத்தைக் குறைக்கும். சுருக்கமாக அதைப் பின்வருமாறு கூறிவிடலாம்.

- **சிறுநீரகத்தில் தொழிற்படுவது** – நீர் வில்லை. இது உப்பை வெளியேற்றும்
- **குருதிக்குழாய்களில் தொழிற்படுவது** - குழாய்களை அகட்டி வைத்திருப்பதன் மூலம் அமுக்கத்தைக் கட்டுப்படுத்தும்
- **இதயத்தில் தொழிற்படுவது** - அமுக்க வேகத்தைக் குறைப்பது, மேலும் பல உண்டு.

வைத்தியர் ஒருவரே எந்த வில்லை உங்களுக்குச் சிறந்ததெனத் தீர்மானிப்பார். அவரின் ஆலோசனைப்படி ஒழுங்காக மருந்து எடுத்தல் அவசியம். நீரிழிவு, கொலஸ்றோல் அதிகரிப்பு போன்ற வியாதிகள் மேலும் சிக்கல்களை ஏற்படுத்தும். மிகவும் அவதானமாக வைத்திய ஆலோசனையைப் பின் பற்றி மருந்து உண்ணுதலுடன், வாழ்க்கை முறையை சற்று மாற்றுவதும் உதவி செய்யும்.

குருதியமுக்கத்தைப் பேணும் பொழுது கோட்டின் கீழேயுள்ள DIASTOLIC PRESSYUREஐ 5-6mm/Hg அளவு குறைத்தால் பாரிசவாதம் ஏற்படுவது 42% குறைவடையும் வாய்ப்பு உள்ளது. 14% அளவு மாரடைப்பு குறைவடையும் சந்தர்ப்பம் உண்டு. குருதியமுக்க கட்டுப்பாட்டு எவ்வளவு பிரதானமானது என்பது இப்பொழுது விளங்குகின்றது அல்லவா? வயது வந்தவர்களில் மறைமுககுருதியமுக்கமும் (MASKED HYPENTENSION) ஏற்படலாம். இதற்கு வீட்டில் ஒரு அமுக்கமானி வைத்திருந்து குருதியமுக்கத்தை அடிக்கடி அளந்து வைத்தியருக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் அறியப்படலாம்.


தொடர்ந்தும் எமது இதயங்களை மலரவைப்போமா!

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*


*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


### துயர் பகிர்வோம்



### திரு. இறப்பியல் சந்தியாப்பிள்ளை

தாய்வீடு பத்திரிகையின் கட்டுரையாளர் மாமூலன் அவர்களின் தந்தையாரும், கட்டுரையாளர் கௌசலாவின் மாமனாருமான திரு. இறப்பியல் சந்தியாப்பிள்ளை அவர்கள் பெப்பிரவரி 28 - 08 அன்று காலமானார்.

இவரின் பிரிவுத் துயரில் தாய்வீடும் பங்குகொள்கிறது.

தொடர்புகளுக்கு:
மாமூலன்: 416 274 9669

OFFICE: 416.321.6969

வீடு, வியாபார நிலையங்கள்

## வாங்க விற்க

ஜூடி ஞானேந்திரன்



Sales Representative

CELL: 416.629.9797

HOMELIFE HIGHER STANDARDS

ஞானேந்திரன் நரசிங்கம்



Sales Representative

CELL: 416.937.8090

**RESIDENCIAL PROPERTIES**



$599,000

**33 CANDLEBROOK CRES, Warden & Finch**

- Gorgeous 4 Bdrm Home, 2800 sqft
- Two apartments in BSMT
- Close to all amenities
- Rare Opportunity don't miss it.



$399,900

**FINCH & STAINES**

- Spotless 4 Yrs Old,4 Bdrms,3 Baths
- 9' Ceilings.Gleaming Hwd Fl.Open Concept.
- Dream Kit W Stainless Steel Appliances & Breakfast Bar.
- Min To Schools,Ttc& Rouge Park.



$578,800

**BRIMLEY & STEELES**

- Immaculate&Well Maint. "Monarch" Built Executive Hm
- 9' Ceilings & Columns *Over $40K Upgds
- Gorgeous Living Rm W/17'Cathedral Ceilings
- Steps To Park,Ttc,School & All Amenities

**COMMERCIAL PROPERTIES**



**"Market East" Markham & Steeles**

Last Phase of 20 Restaurant and Retail Units. Some of the Units are available.

More details **Call Gnani.**

**STRIP PLAZA FOR LEASE ON LAWRENCE ROAD**

Call GNANI

- Fully Renovated 4000 sqft Retail Strip Plaza
- Accross LCBO Store & High Rise Apt. Building.
- Bright, Clean Retail Space With Prominant Exposure.



**"Sitara"**

The largest South Asian Indoor Mall in North America

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள் Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

ராம் கிருஷ்

**RAM KRISH**

Senior Mortgage Consultant

The Mortgage Alliance company of Canada

Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200, Toronto, ON M2J 5B4

Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# Carbon Monoxide Detectors & Maintenance

# காபனோரொக்சைடு(CO) வாயுவை அறிவுறுத்தும் கருவியும் அதன் பராமரிப்பும்



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -


கடந்த மாதங்களாக புதிய வீடுகள் கொள்வனவு செய்தல், உத்தரவாதத்தினை உறுதிப்படுத்தல் தரம் உயர்த்தல் போன்ற விடயங்கள் பற்றிக் கவனித்தோம். கொடுக்கப்பட்ட தரவுகள் பல, பலருக்கும் நன்மை அளித்ததாக அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். தொடரும் அத்தியாயங்களில் வீட்டுரிமையாளர்களுக்குப் பயன் அளிக்கும் விதத்தில் வீட்டில் இருக்கக்கூடிய மின்சார மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல் பற்றிய தகவல்களைத் தர முயற்சிக்கிறேன்.

பொதுவாக வீடுகளில் புகையைக் கண்டு பிடிக்கும் கருவி பொருத்தப்பட்டிருப்பதுதான் வழமையாக இருந்து வந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக Carbon Monoxide Detector பொருத்தப்படவேண்டியது கட்டாயம் ஆக்கப்பட்டிருக்கிறது. தவறுபவர்களுக்கு 2000டொலர் வரை அபராதம் விதிக்கப்படும் அளவிற்கு ஒன்றாரியோ மாகாண அரசு இதற்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறது.


## இதற்குரிய காரணம் என்ன?
## How dangerous is carbon monoxide? Consider these facts:

Carbon Monoxide (CO) is the number one cause of accidental poisoning deaths in the United States. According to the Consumer Products Safety Commission. It's estimated approximately 500 deaths occur each year from accidental CO poisoning. Carbon Monoxide also results in approximately 10,000 illnesses each year, for which people are treated in hospital emergency rooms, a number which is underestimated.

Carbon Monoxide is totally undetectable by human senses; it is an odorless, colorless and tasteless poison and is so deadly that it has earned the name, "The Silent Killer." Carbon Monoxide is highly toxic and can act on the body quickly in high concentrations, or slowly over long periods of time.

மணம் நிறம் அற்ற கண்ணுக்கும் புலனாகாத இவ்வாயுவினால் வீடுகளிலும் தொடர்மாடிகளிலும் உள்ள பலரும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள். ஆண்டொன்றிற்கு சுமார் 10 ஆயிரம் பேர் வரை கனடாவில் மட்டும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சில புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது. கடந்த மாதம் அல்பேட்டா மாகாணத்தில் சுமார் 7 பேர் ஒரே நாளில் இத்தகைய பாதிப்பிற்கு உள்ளாகி முதியோர் இல்லத்தில் இருந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிந்தது.

இத்தகைய பாதிப்புக்கள் பொதுவாக வின்ரர் காலத்திலேயே அதிகமாக ஏற்படுகின்றது. வீட்டினை வெப்பமாக வைத்திருப்பதற்காக வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் வெப்பமாக்கி மூலம் (Gas Furnace) அளவுக்கு அதிகமான Carbon Monoxide உருவாக்கப்பட்டு அது வீட்டிற்குள் தங்கிவிடுவதே இதற்குக் காரணம் ஆகும்.















அது தவிர Gas அடுப்பு, Gas துணி உலர்த்தி, Fire Place என்பவற்றின் மூலம் மேற்குறிப்பிட்ட வாயு உருவாக்கப்படலாம். பொருத்தப்பட்ட உபகரணங்கள் முறையாக இயங்கினால் அத்துடன் முறையாகப் பராமரிக்கப்பட்டால் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பில்லை.

Carbon monoxideன் அளவு கூடினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பல மட்டத்தில் இருக்கும். ஓரளவு கூடினால் தலையிடி, வாந்தி, மயக்கம் போன்ற அறிகுறிகள் தென்படும். அளவுக்கு அதிகமாகக் கூடினால் அது நச்சுவாயுவாக மாறி கொல்லும் அளவிற்கு ஆபத்தானதாக மாறிவிடும். பொதுவாக வீடுகளில் Count 2-4 அளவில் இத்தகைய வாயு இருப்பது பொதுவானது. பாதக விளைவுகள் இல்லை. ஆனால் Count 10ற்கு மேல் போனல் Co Detector அபாயத்தை அறிவுறுத்தத் தொடங்கிவிடும். 20ற்கு மேற்போனால் வீட்டை விட்டு வெளியேறி மாற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

புதிய வீடுகளில் கட்டிட அமைப்பாளர்கள் படுக்கை அறைக்குச் சமீபமாக குறைந்தது ஒரு Co Detector ஆவது போடுதல் வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றது. அத்தகைய கருவிகள் தற்போது பிரதான மின் இணைப்போடு பொருத்தப்பட்டிருக்கும். நிலக்கீழ் அறைகளிலும் இத்தகைய ஒரு கருவியினைப் பொருத்தி விடுவது வரவேற்கத்தக்கது. கட்டிட அமைப்பாளர்களினால் பொருத்தப்படும் இக்கருவிகள் பொதுவாக 2 in 1 ஆக இருக்கும். அதாவது புகைக்கும் காபனுக்கும் பொதுவானதாக இரண்டையும் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும்.

பொதுவாக கட்டிட அமைப்பாளர்களினால் பொருத்தப்படும் இத்தகைய அறிவுறுத்திகள் சரியாக இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. இவை தானாக இயங்குவதும் பிழையாக இயங்குவதும் (Malfunction) பொதுவான குறைபாடாகக் காணப்படுகிறது. 1 வருடத்திற்குள் இத்தகைய குறைபாடுகளை உத்தரவாதத்தின் கீழ் தீர்த்துவிட வாய்ப்பு இருக்கிறது. புள்ளிவிபரங்களின் படி முதல் 5 வருடத்திற்குத்தான் இவை சரியாக இயங்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் இவை செயலிழந்து போவதால் வீட்டுரிமையாளர்கள் அவற்றை பிரதியீடு செய்வதை மனதில் வைத்திருத்தல் வேண்டும்.

## பராமரித்தல்:

இத்தகைய உபகரணங்களை நாம் சரிவரப் பராமரிக்காவிட்டால் ஏற்படக்கூடிய இடர்கள் காலத்திற்கு முதலே வரத் தொடங்கிவிடும். வீட்டில் VACUM செய்யும் போது மாதம் ஒருமுறையாவது இதனை சரிவர VACUM செய்வதன் மூலமும் அதில் இருக்கக்கூடிய TEST பொத்தானை அழுத்தி பரீட்சிப்பதன் மூலமும் இதன் இயக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இக்கருவியானது பிரதான மின் இணைப்புடன் இணைக்கப்பட்டிருப்பதால் தொடர்ச்சியான மின் இணைப்பை சில மணித்தியாலங்களிற்கு துண்டித்து

## வீடும் விடியலும் - 25

விடுவதும் இதனது பிழையான இயக்கத்தை சரிப்படுத்த எடுக்கக்கூடிய ஒரு யுக்தியாகும். SLIDE IN செய்யக்கூடிய முறையிலேயே இக்கருவி பொதுவாக இருக்கும். எனவே அதனை ஒருதரம் கழற்றி சுத்தம் செய்வதும், மின் இணைப்பில் ஒரு இடைவெளியை ஏற்படுத்துவதும் மிக இலகுவானது. ஆபத்தானது அல்ல.

CARBON MONOXIDE DETECTOR என்பது மிக அவசியமானதாக இருப்பதாலும், உயிர்காக்கும் தோழனாக அது செயற்படுவதாலும் -ஒரே ஒரு கருவி புத்தம் புதிதாகவே இருக்கிறது என்று காலாதி காலமாக நம்பி இருக்காது மேலதிக கருவி ஒன்றையோ, இரண்டையோ வாங்கிப் பொருத்திவிடுவது (Plug in) மிக அவசியமானது என்பதே எனது ஆணித்தரமான சிபார்சாகும். இதற்கு 30 - 35 டொலர்கள் மட்டுமே செலவாகும்.

காபன் மொனோக்சைட் அறிவுறுத்தி சத்தம் இடத் தொடங்கினால் தயக்கமின்றி 911 இலக்கத்தை அழுத்தி 'தீயணைக்கும் படையின்" உதவியை நாடினால் அவர்கள் விரைந்து வந்து உண்மை நிலையைக் கண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள். இதற்கு கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது. முற்றிலும் இலவசம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

குறிப்பு:
பழைய வீட்டில் இருப்பவர்கள் Furnace ல் இருக்கக்கூடிய Heat Exchanger துருப்பிடித்ததன் காரணத்தால் மேலதிக காபன் மொனோக்சைட் உருவாக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது வேறு வழிகளினால் அதன் தொழிற்பாட்டில் இருந்து இத்தகைய பாதிப்பு வருவதாகக் கண்டுபிடித்தாலோ அதனை முற்றாக நிறுத்திவிட்டு அதனைச் சரிப்படுத்தும் வரை Gas யை (Shut Down) முற்றாக நிறுத்திவிட்டு போகக்கூடிய உரிமையும் கடப்பாடும் தீயணைக்கும் பிரிவினருக்கு உண்டு என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

■ ■ ■


Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca





Warden & Finch
3 Bed Room, 1Wash Room,

வீடு வாங்க விற்க அல்லது அது
சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

Tel: 416-843-8585
Bus: 416-290-1200



**Kuga Raveendrarajah**
Broker




"சேமிப்பின் அடையாளம்
அழகானதோர் வீடு"



Markham & 14th Ave
3 Bed Room,4 Wash Room,

Century 21.
Affiliate Realty inc. 80 Corporate Drive, Suite 208, Toronto Ont.

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# “0” டவுனில் சொந்தவீடு: ஆரோக்கியமான சிந்தனையா?



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

## வீடு - வினாவும் விடையும்

வாசக வாசகிகளுக்கு வணக்கம். இவ்வினாவும் விடையும் பகுதி மூலம் இணைந்து கொள்வதில் பெறுகின்ற நிறைவைவிட நீங்கள் தரும் ஆதரவு மற்றும் தரமான வினாக்கள் மீண்டும் மீண்டும் உங்கள் தாகத்தினை தணிக்கத்தூண்டுகின்றது. நன்றி வாசகர்களே, இம்மாதத்திற்குரிய சந்தேகங்களையும் அதற்கான விடைகளையும் காண்போம்.

**எனது வீடு வாங்கியபோது நான் முற்பணம் செலுத்தியிருந்தேன். இப்போது நான் செலுத்திய பணத்தினை HOME EQUITY LINE OF CREDIT முறை மூலம் மீளப் பெற முடியுமா?**

*மு.கண்மணி Brampton.*

இக்கேள்விக்குரிய பதிலைத் தருவதற்கு மேலும் பல தகவல்கள் வேண்டும். இருப்பினும் ஒரு அனுமானத்தில் விடை காண்போம். நீங்கள் முற்பணமாக செலுத்திய தொகை வீட்டின் விலை அதிகரிப்பு மற்றும் நீங்கள் வாங்கிய காலத்தில் இருந்து மீள செலுத்திய தொகை என்பவற்றைப் பொறுத்து முடியும் என்றே கூறலாம். அதாவது இன்றைய பெறுமதியின் 25%க்கும் மேற்பட்ட சொத்து வீட்டின் பெயரில் இருப்பின் இம்மேற்பட்ட சொத்தினை Home Equity Line of Credit(HELOC)மூலம் பெறமுடியும். வீட்டின் இன்றைய பெறுமதி உங்கள் தெருவில் அல்லது அயலில் தற்போதைய கால கட்டத்தில் சந்தைப்படுத்தப்பட்ட வீடுகளை ஒத்துக் காணப்படும். இதற்காக ஓர் APPRASOR அல்லது வீடு விற்பனை முகவர்களை நாடலாம்.

**வீடு வாங்கும்போது HOME INSPECTORS களின் சேவை என்ன? வீட்டினை பரிசோதனை செய்வதன் அவசியம் என்ன?**

*சு. காண்டீபன், ஸ்காபுரோ.*

‘உரசிப்பார்த்து வாங்க வேண்டும்’ என்று சொல்லுவார்கள். அதாவது நீங்கள் வாங்குகின்ற பொருள் தரமானதா என்பதனை அனுபவமும் அறிவும், பரீட்சயமும் பயிற்சியும் உள்ள ஒருவரிடம் தெரிந்து கொள்வது சிறந்தது. பொதுவாக வீட்டுப் பரிசோதகர்களின் கடமைகள் பற்றிப் பார்போம். உங்கள் வீடு எல்லா விதத்திலும் பாதுகாப்பானதா? மற்றும் பாரிய திருத்த வேலைகள் உண்டா என்பதனை சோதித்து பார்ப்பதே அவர்களின் கடமை. வீட்டின் அமைப்பு, கட்டிட தரம், மற்றும் உபகரணங்களின் தொழிற்பாடு, கால நிலைகளுக்கு ஈடு கொடுக்க கூடிய ஜன்னல்கள் மற்றும் சுவர்கள், மின்சார பகுதி, தண்ணீர் (சூடு/குளிர்) மற்றும் வழங்கிகள் மட்டுமல்லாமல் ‘அ’ தொடக்கம் ∴ வரை சோதித்து, வரும் காலங்களில் எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்பதனையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**எனது வீட்டின் பெறுமதியை அதிகரிப்பது எப்படி? அதற்காக நான் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம்.?**

*K.V. கோபி. Brmpton .*

முதலாவதாக வீட்டின் விலை அதிகரிப்பு பொருளாதார மற்றும் சந்தை நிலவரத்திலேயே தங்கியுள்ளது. மாறாக மேலும் பல காரணிகள் இதற்கு துணைபோகின்றன. வீட்டின் தரம், குறிப்பிட்ட தர உயர்வுகள், அயல்/சூழல் மற்றும் பாதுகாப்பு போன்றவை. அதிகூடிய பங்கு விலை அதிகரிப்பு சந்தை நிலவரத்தில் தங்கி இருந்தாலும் வீட்டுக்குள் நீங்கள் ஏற்படுத்தும் தர உயர்வுகள் பற்றி ‘Remodeling magazine’யின் அறிக்கையின் பிரகாரம் ‘Cost Vs Value’ முறைப்படி குளியலறை மறுசீரமைப்பு 81% மீளளிப்பும், புதிதாக குளியலறை நிர்மானிப்பு 89%மும்’ mastebedroom குளியலறை மறுசீரமைப்பு 82% மீளிப்பும் தருகின்றது. ‘Quality pays’ என்பதற்கிணங்க சமையலறை, குளியலறை மற்றும் தரைகள், ஜன்னல் மறைப்புக்கள் போன்றவற்றையும் ரசனையுடன் அலங்கரித்தல் பெறுமதியேற்றத்திற்கு வழிகோலும். பாதுகாப்பான சூழல் மற்றும் குற்றச்செயல்கள் இல்லாத சூழல்களும் விலை தாழ்வினை ஏற்படுத்தாது.

**Home Warranty என்பது பற்றி நான் அறிந்து கொள்ள வேண்டியது என்ன? பொதுவாக எவற்றிற்கெல்லாம் இவை உதவுகின்றது?**

*B.ரூபன், ஸ்காபுரோ.*

‘Warranties’ என்கின்ற பதம் நுகர்வோரை கவர்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. ஏதாவதொரு பொருளை கொள்வனவு செய்யும் வேளைகளில் நீங்கள் கொள்வனவு செய்த காலத்தில் இருந்து உபயோகத்தில் இருக்கும் காலவேளைகளில் அப்பொருளுக்கு பழுதடைதல் மற்றும் சேதங்கள் ஏற்படின் உற்பத்தியாளர்களோ அல்லது விற்பனையாளர்களோ இலவசமாக சீரமைத்து தருதல் ஆகும். வீடுகளுக்குரிய Warranty கட்டிட பகுதிகளில் ஏற்படும் சேதங்கள் மற்றும் Heater/AC போன்றவற்றில் வரும் திருத்தவேலைகள். அடுப்பு, குளிர்சாதனப்பெட்டி மற்றும் வீட்டுக் காப்புறுதியினால் சரிசெய்ய முடியாத முக்கிய பகுதிகள் Home Warrantyயினால் பாதுகாக்கப்படும். இவ் warrantyயானது ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் வரை அதாவது வரையறுக்கப்பட்ட கால அளவுக்கே காணப்படும். ஒருவர் வீடு வாங்கியவுடன் எதிர்பாராத செலவீனங்கள் திருத்தவேலைகளுக்கு செலவிடுதல் எல்லோராலும் முடியாதவொன்று. warranty உடன் வாங்கும் போது இவை பெரிதும் உதவும். மட்டுமல்லாது புதிதாக நிர்மானிக்கப்படுகின்ற வீடுகளுக்கே இவை பொருந்தும்.

**வீடு வாங்குவதற்காக ஓர் இடத்தினை எவ்வாறு தெரிவுசெய்வது?**

*ப.ஜெயந்தன். Brampton.*

Select a community that will allow you to



best live your daily life என்பது போல, நாளாந்தம் சௌகரிகமான வாழ்க்கைத் தரத்தினை பெறக்கூடிய பகுதியையே தேர்ந்தெடுத்தல் வேண்டும். அனேகர் பிள்ளைகளின் பாடசாலைகளை அண்டி இருப்பர். சிலர் தமது வேலையின் நிமிர்த்தம் இடம் தேடுவர். மற்றும் சிலர் பேருந்து வசதிகளுடன் கூடிய பகுதியை விரும்புவர். உங்கள் தெரிவு தேவையின் நிமிர்த்தமோ அல்லது விருப்பின் நிமிர்த்தமோ இருக்கலாம். ஆனால் ஓர் நல்ல சூழல் தெரிவு என்பது வீட்டின் விலையுயர்ச்சிக்கு மட்டுமல்லாது உங்கள் மன அமைதிக்கும் வழிகோலும். ஓர் சூழல் பற்றி அறிந்துகொள்வதற்கு அச்சூழல் சார்ந்தவர்கள் தவிர்ந்து யார் தான் திருப்தியான விளக்கம் தரமுடியும். முடிந்தவரை நீங்கள் தெரிவு செய்யும் சூழல் பற்றிய விபரங்களை திரட்டிய பின்னர் உங்கள் தெரிவுகளை மேற்கொள்ளலாம்.

**‘0 downஇல் வீடு வாங்குவது உங்களை நீங்களே அழித்துக் கொள்வதற்கு சமன்’ என்று சொல்கிறார்கள். உன்மைதானா?**

*கிருபா கந்தையா, நோத்யோக்.*

“கண்டிப்பாக. இப்படித்தான் வாழவேண்டும் என்று விரும்புகின்ற சமுதாயத்தில் எப்படியும் வாழலாம் என்பவர்களும் இருக்கத்தானே செய்கின்றார்கள். இப்படித்தான் வாழவேண்டும் எனத் திட்டமிடுங்கள்.”

பொருளாதார வளர்ச்சி வீட்டு வளர்ச்சிக்கு வழிகோலுகின்றது. வருடாந்த வீட்டு சராசரி வளர்ச்சி அண்ணளவாக 5%மாக கணக்கிடப்பட்டுள்ளது. மாறாக 3-4 வருடங்களில் நாம் 25% வளர்ச்சியையும் கண்டிருக்கின்றோம். அவ்வாறான காலங்களில் நீங்கள் 0 downஇல் வாங்கும் வீடுகளுக்கு வட்டி வீதம் அதிகமாக இருந்தாலும் அதீத விலையுயர்ச்சி சீர்செய்யும். மாறாக சராசரியான காலங்களில் நாங்கள் பார்க்கின்ற 0 down எவ்வாறு எம்மை பாதிக்கின்றது என்று பார்ப்போம்.

Hihf satio matfafe என்று அழைக்கப்படுகின்ற 20% முதலீட்டுக்கு குறைவான முதலீடு உள்ள matfafe இனை பெறும் போது HIGH RATE INSUARANCE என்று அழைக்கப்படும் காப்புறுதி பெறப்படுகின்றது. இக்காப்புறுதி பணத்தின் அளவு நீங்கள் முதலீடுகின்ற தொகையைப்பொறுத்து மாறுபடும். இருப்பினும் 5%வரை முதலிடுபவர்க்கான காப்புறுதி சுமார் 2.75% (மொத்த தொகை)இனை விட அதிகரிப்புக்கு சாத்தியமில்லை. மாறாக 0 down முறைமூலம் இக்காப்புறுதித் தொகை சுமார் 6% வரை கூட அறவிடப்படுவது மட்டுமலல்லாது, மாதாந்த வட்டி அளவும் சராசரியாக அறவிடப்படுவதை விட சற்று அதிகமாகவும் அனேக கடன் வழங்கும் நிறுவனங்களின் கடின சுய கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைவானதாகவும் காணப்படும். (Best enhancement) சலுகைகள் குறைந்த இம்முறையினை தெரிவுசெய்து நாளடைவில் நாம் மற்றவர்களை விட அதிகசெலவில் ஓர் சராசரி வசதியை பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் கொள்கைப்படி best return – Hifh risk Hifh return என்று சொல்லுவார்கள். அவர்கள் 0 downஇல் ஓர் MORTGAGEஇனை தருவது அவர்களைப் பொறுத்தவரை High risk என்பது கண்கூடு. இந்த வகையில் High return பெறுவதற்கும் அவர்கள் தகுதியாகின்றார்கள். அந்த High return செலுத்துபவர்கள் நாங்கள் என்கின்ற பட்சத்தில் அது எம்மை நாமே அழித்துக் கொள்வது போலல்லவா?

நன்றி. வாசகர்களே! உங்கள் தரமான வினாக்கள், சந்தேகங்களை தொடர்ந்தும் அனுப்பிவையுங்கள். மட்டுமல்லாது உங்கள் comments உம் வரவேற்கத்தக்கது. மீண்டும் வெளிவரும் இதழ்களில் இணைந்துகொள்வோம்.


■ ■ ■

Rely On The Expert Team
Committed to Providing Real Estate Service with Integrity and Honesty



Amir Ramalingam, B.Sc.
Sales Representative
Cell: 416-409-6067
Email: aramalingam@trebnet.com

Century 21
King's Quay Real Estate Inc.
Bus: 905-940-3428 (24hrs)



Pratheep Balasubramaniam
Sales Representative
Cell: 416-884-7020
Email: pbalasubramaniam@trebnet.com

சிறப்பான சொந்த வீடு மற்றும் சொந்த முதலீடுகளை முழுமனநிறைவுடன் மகிழ்ச்சிகரமாக அடைவதற்கு அழையுங்கள் அமிர்/பிரதீப் Top Producing Agents.

Call us for a No cost, No obligation market evaluation of your home.

# மிகுதியான வெப்பத்தினால்...

3ம் பக்கத் தொடர்ச்சி...

| **Brand** | **Model Number** |
|---|---|
| Venmar | AEXX, EARC, 1XX, 30X, 40X, 4XXXX |
| Venmar AVS | 1.X, 2.X, 30XX, 55XX, 4XXXX, 4XXXXX, 16016XX, C32042 |
| Flair | 30, 30XX, 55, 55XX, 85115 |
| VanEE | 10, 1XX, 100X, 20, 20XX, 30XX, 90, 4XXXX, 16016XX |
| Sears | OPTIMUM |
| Guardian -by Broan | 100X, 200X, ERVXXXXX, HRVXXXX |
| Nutone | NUTR130 |
| Conformax | 300, 350, 400 |
| Payne | VXXXXXXXXX |
| Day and Night | VXXXXXXXXX |
| Carrier | ERVXXXXXX, HRVXXXXXXX, VXXXXXXXXX |
| Bryant | ERVXXXXXXX, HRVXXXXXXX, VXXXXXXXXX |
| Heil | HEILXXXXX |
| York | 5263554XXXX |
| Rheem | 84-ERV100, 84-ERV200, 84-HRV100, 84-HRV200 |
| Ruud | 84-ERV100, 84-ERV200, 84-HRV100, 84-HRV200 |
| Protech | 84-ERV100, 84-ERV200, 84-HRV100, 84-HRV200 |
| Weatherking | 84-ERV100, 84-ERV200, 84-HRV100, 84-HRV200 |

குறிப்பு: X என்ற குறியீட்டு வகையானது, ஒன்றில் ஒரு எழுத்தையோ அன்றில் ஒரு இலக்கத்தையோ குறிக்கவல்லது என்பதைக் கவனத்திற் கொள்க. வெளிப்புறம் காணக்கூடியதான இச்சாதனத்தின் வெளிப் பாகத்தில் தெரியக்கூடிய இடத்தில், இந்த Model இலக்கமானது, வெள்ளியில் அல்லது கறுப்பு நிறத்தினாலான பட்டியலில் பொறிக்கப்பட்டிருக்கும்.

மேற்குறிப்பிட்ட எந்தச் சாதன வகையாவது, வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீட்டில் பொருத்தப் பட்டிருப்பதைக் கண்டுபிடிப்பின், உடனே அவ்வகைச் சாதனங்களை உடன் செயலிழக்கச் செய்தல் வேண்டும். மின்சார உற்பத்தியை இவ்விடத்தில் செயலிழக்கச் செய்து, பொருத்தியையும் உடனே கழட்டி விடல் வேண்டும். உடனே Venmar நிறுவனத்தைத் தாமதமின்றி தொடர்பு கொள்ளல் வேண்டும்.

இணையதள முகவரி: **www.venmar.ca**
இலவச தொலைபேசி அழைப்பு:
**1-866-441-4645**
அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்வதெனில்:
**SUP, 550 Lemire Blvd,**
**Drummondville,**
**Quebec, Canada, J2C 7W9**

Venmar நிறுவனமானது, தங்கள் வாடிக்கையாளர்களின் நிம்மதியையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, இந்த வகையான ஆராய்ச்சிகளை மிகுந்த உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

நன்றி: **Scarborough Mirror (February 27, 2008)**

■ ■ ■

# மார்ச் 29ஐ மின்சேமிப்பு நாளாக்குங்கள்

மார்ச் 29,2008 இல் இரவு 8 மணியிலிருந்து 9 மணிவரை கனடாவிலும் மற்றும் உலகெங்குமுள்ள நகரங்களிலும், புவிமணித்தியாலத்தினை (Earth Hour) அனுசரிப்பதற்காக தமது மின் விளக்குகளை அணைப்பார்கள். காலநிலை மாற்றம் (Climate Change) பற்றிய கவனத்தை ஈர்ப்பதற்காகவும், அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பதன் மூலம் காலநிலை மாற்றத்திற்கெதிரான போரில் உலக மக்கள் ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைக் காட்டுவதற்காகவும் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

புவிமணித்தியாலமானது (Earth Hour) அவுஸ்திரேலியாவில், சிட்னி நகரத்தில், 2007ஆம் ஆண்டு ஒரு தனியொரு நிகழ்வாக ஆரம்பித்தது. இது 2008இல் 6 கண்டங்களில் 20இற்கு மேற்பட்ட நகரங்களில் நிகழ்வதாக விரிவடைந்தது.

புவிமணித்தியாலம் 2008ஐ கொண்டாடுவதை ஆரம்பித்த நகரமாக கனடாவில் ரொறன்ரோ இருந்த போதிலும், ஒட்டாவா, வன்கூவர், மொன்ரியல் உள்ளிட்ட பல நகரங்கள் இதில் இணைந்துள்ளன.

இந்த வரலாற்றுரீதியான நிகழ்வில் பல ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் வர்த்தகர்கள் பங்குபற்றவேண்டும் என்பதே எமது பொது இலக்காகும். இதன் மூலம் எமது உலகு எதிர்நோக்கும் மிகச் சிக்கலான விடயங்களுள் ஒன்றான காலநிலை மாற்றம் பற்றி கவனத்தில் கொள்வதில் கனடியர்கள் முன்னணியில் உள்ளனர் என்பதை எமது நாட்டிற்கும் உலகுக்கும் காட்ட முடியும்.

புவிமணித்தியாலத்துடன் மட்டும் நின்று விடாது, ஒவ்வொருநாளுமே இவ்வாறு நல்லவிதமாக எண்ணுவதன்மூலம், சிறந்த வாழ்வை வாழமுடியும். இந்த உலக வனவாழ்வு நிதியம் (World Wildlife Fund –WWF), கனடாவின் புதிய விழிப்புணர்வூட்டும் ஓர் அமையமாகும். இது கனடியர்கள் தாம் வாழும் புவிக்காக எடுக்கும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் ஒரு அமைப்பாகும். இதன்மூலம் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வாறு காலநிலை மாற்றத்திற்கெதிராக போராடுவதில் உதவமுடியும் என்பதை அவதானிக்க முடியும்.

தயவு செய்து இதனை மறந்து விடாது உங்கள் ஒத்துழைப்பினை வழங்கி மின் சக்தியை நீங்களும் சேமித்து WWF இன் முயற்சிக்கு கைகொடுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

■ ■ ■

***தாய் வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# போர் முகங்களும் சமாதான முகமூடிகளும்

- கணபதிப்பிள்ளை -

போர், சமாதானம் என்ற வார்த்தைகளின் பிரயோகங்கள் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாதனவாக, உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள மக்களிடையேயும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இலங்கைத் தீவின் மக்கள் எங்ஙனம் புறநடையாக இருந்துவிட முடியும். கடந்த அரைநூற்றாண்டுகளுக்குமேலாக அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் அம்மக்களுக்கு எது போர், எது சமாதானம் என்பதே குழப்பமான ஒன்றாக இருந்து வருகிறது.

போர் என்பதற்கு எதிர்ப்பதம் போரின்மை. போரில்லாத சூழல் ஏற்படும்பொழுது மக்களது வாழ்வு போரில்லா வாழ்வு என்ற வாழ்க்கை முறைக்கு இயைபுபட்டதாக மாறிவிடுகிறது. போர்ச்சூழல் ஏற்படுகின்ற பொழுது மக்கள் வாழ்வானது போரியல்பு வாழ்க்கைக்கு இயைபுபட்டதாக மாறிவிடுகிறது.

போரியற் காலங்களில் குடும்பங்களின் புறச்சூழல் நடவடிக்கைகளுக்கு ஏற்ப அவர்களின் வாழ்வியல் தொடர்பிலமைந்த அகச்சூழல் நடவடிக்கைகள் மாற்றமுறுகின்றன. இதே போலத்தான் போரில்லா வாழ்வியற்கால மக்களின் நடவடிக்கைகளிலும் அகப், புறச் சூழல் நிகழ்வுகள் அடையாளம் காணத்தக்கவையாக இடம்பெறுகின்றன.

போர் என்பது ஒருவகையில் அடக்குமுறையாகவும் போராட்டம் அத்தகைய அடக்குமுறைக்கு எதிரானதாகவும் இருப்பதாகக் கற்பிதம் செய்யப்படுகிறது. போர் என்பது போராட்டமாகவோ, போராட்டம் என்பது போராகவோ மாறிவருவது தவிர்க்கமுடியாத தொன்றாகும். எனவேதான் போராட்டம், போர் என்ற இரு செயற்பாடுகளின் வடிவங்களும் தொடர்ந்தும் மாற்றம் பெற்றுக் கொண்டிருப்பதனைக் காணமுடிகிறது.

> “அத்தகையதொரு தேசிய வடிவத்தினுள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த இலங்கை வேற்றுமையுள் ஒற்றுமை காண முடியும் என்று நம்பிய சிறுபான்மைச் சமூகங்களைக் கசப்புக்கலந்த தேசியவாதத்தினுள் உட்படுத்துவதற்கு உறுதி பூண்டு செயற்படத் தொடங்கியது. அப் பொழுது ஆரம்பமாகியதுதான் போர் முகங்களும் சமாதான முகமூடிகளும்.”

முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளைகளில் அதில் ஈடுபட்டிருந்த குடியேற்றவாதச் செயற்பாட்டுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்ட வல்லரசுகள் பழைய குடியேற்றவாதச் செயற்பாட்டுடன் புதிய குடியேற்றவாதச் சிந்தனைகளையொட்டிய செயற்பாடுகளுடன் தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருந்தன. இவற்றின் பயனாகக் குடியேற்ற நாடுகளும் அங்குள்ள மக்களும் போரியல் வாழ்வுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டனர். பொருளாதார மந்தத்தின் விளைவாக ஏற்பட்ட உலகளாவிய பஞ்சமும், பற்றாக்குறைச் செயற்பாடுகளும் பூகோளப் பெருளாதாரச் செயற்பாடுகளின் இயலாமையினை உணர்த்தத் தொடங்கியிருந்தன.

வளரும் நாடுகள் என்று தம்மை அழைக்க விரும்பிய குடியேற்றவாத செயற்பாடுகளினால் கடின வாழ்வை அனுபவித்து வந்த நாடுகள் தமக்கெனத் தேசிய அரசுகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதன்மூலம் தேசியத்தையும் தேசியப் பொருளாதாரத்தையும் ஒன்றாக வழிநடத்திச் செல்ல முடியும் என்பதனையும் எதிர்பார்த்துச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தன.

சில நாடுகள் சுதந்திரப் போராட்டங்களை நிகழத்தி மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்ததுடன் பொது எதிரியின் அடக்குமுறைக்கு எதிராக அணிதிரள வைக்கத் தொடங்கின. மத, இன, பிரதேச வேறுபாடுகளை மறந்து மக்கள் ஒரு குடையின்கீழும் ஒற்றுமை என்ற தாரக மந்திரத்தின் கீழும் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டிருந்தனர். இத்தகைய போராட்டம் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரையிலும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருந்தன. இக்காலப்பகுதிகளில் தான் தேசியம் என்பது ஒற்றுமை என்பதனை மாத்திரமன்றி அடக்குமுறையினையும் தனக்குள் கொண்டிருக்கமுடியும் என்ற புதிய கோட்பாடு ஒன்றினை வெளியுலகுக்குக் கொண்டுவரத் தொடங்கியது. தேசிய ஒருமைப்பாடு பல்வேறு சிற்றரசுகளை ஒன்றிணைக்கும் சக்தியை பெற்றிருந்த காலப்பகுதியில் ஒவ்வொருநாடும் பலமான சக்தியாகத் திகழ

17ம் பக்கம் பார்க்க...



# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

### Ellesmere/Morningside



**$114,900**

2 Bedrooms, 1 Washroom, Condo Townhouse, Good Location, Close To U Of T, Convenient Location, Centennial College

### Neilson/Mclevin


**$164,500**

2 Bedrooms, 2 Washrooms, Condo Apt, Bright And Spacious With A Gorgeous View! Gated Community, Ttc Nearby

### Kennedy/Eglinton


**$214,900**

2+1 Bedrooms, 2 Washrooms, Condo Apt, Immaculately Clean And Spacious Unit With Unobstructed South View

### Lawrence/Morningside


**$269,900**

3+2 Bedrooms, 2 Washrooms, Public Transportation. Good Condition. Plaza Close

### Sheppard/Morningside


**$275,000**

3 Bedrooms, 2 Washroom, Att/Row/Twnhouse, Mattamy Built Townhome Only 3 Ys.Old. Clean,Tidy & Well-Maintained Just Like New

### Neilson/Sheppard


**$279,900**

3 Bedrooms, 2 Washrooms, Detached Backsplit 4, Main Entrance With Double Door. Georgeous, Must See Both Inside & Outside

### Mccowan/Steeles


**$309,900**

3 Bedrooms, 2 Washroom, Link 2-Storey, Excellent Home For Starter Lots Of Potential, Very Convienant Location, Is Ready For Any Budget

### Mccowan/Denison


**$309,900**

3 Bedrooms, 2 Washrooms, Link 2-Storey, Absolutely Well Maintained Home In Great Location.Close To Yrt,Ttc,Places Of Worship

### Markham & Steeles


**$315,000**

3 Bedrooms, 3 Washroom, Att/Row/Twnhouse, Immaculately Maintained Beautiful Bright Spacious Freehold T/H!!

### Mccowan/Denison



**$334,900**

3 Bedrooms, 4 Washroom, Link 2-Storey, Approx 1600 Sf Remington Home 3 Bedroom With Finished Basement New Windows

### Mccowan/Denison



**$339,000**

4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Finished Bsmt W/ One Bedroom & New 3Pc Washroom, Oak Staircase, 4Pc & 2Pc Washroom

### 9th Line / 14th



**$379,900**

4 Bedrooms, 3 Washroom, Brick And Stone Front Semi Detached In A Prime Markham Area. Cornor Lot On A Quite Crescent, 2100Sq Ft.

### Finch/Morningside



**$399,000**

5 Bedrooms, 3 Washrooms, Detached 2 Storey, Gorgeous Home With Premium 115 Feet Pie Shaped Lot, Hardwood In Living

### Mcvean/Castlemore


**$399,900**

4 Bedrooms, 3 Washroom, Detached 2-Storey, Absolutely Immaculate Property In One Of Bramptons Finest Location, $$ Spent Upgraded

### Middlefield/Denison


**$399,900**

4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Def Decorated Like A Model Home, A1 From Top To Bottom, Too Many Upgrades To List

### Middlefield/Highglen


**$399,900**

3 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Absolutley Well Maintained 2130 Sq Ft(As Per Bldrs Plan), Main Floor Study Rm, Prof Fin Bsmt

### Morningside/Sheppard


**$424,900**

4 Bedrooms, 4 Washroom, Detached 2-Storey, Prestigious Mattamy Built.Premium Corner Lot(45 Feet By 97.54 Feet). Double Door Entry

### W.9th Line/N.14th


**$499,900**

5 Bedrooms, 4 Washrooms, Detached 2 Storey


***New Retail/Restaurant Units Available for SALE/LEASE***

### Taunton/115



**$1,500,000** **Plus Stock**

Very Good Opportunity For Investment. This Money Making Busy Gas Station Is Located In The Heart Of Canada's Fastest Growing Oshawa Area

### Kingston/Brock


**$38,000** **Plus Stock**

3 Bedrooms, 3 Washroom, Location, Location, Location. Busy Plazza(7 Days Open), Family Bussiness, Turn Key Operation, Easy To Operate

**I can also assist you with: Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**



## Elaguppillai (Mike) Srinathan, B.Sc.

Sales Representative

**Direct: 416.276.1225**

esrinathan@trebnet.com
**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

HOMELIFE
HIGHER STANDARDS

digi Media Creations - 416.467.4952

## கிரிக்கெற்: இந்திய பிரிமியர் லீக் உருவாக்கம்

# இந்தியா வயசுக்கு வந்தாச்சு!

- மாறன் செல்லையா -

1987இல் நாங்கள் கனடாவுக்கு வந்த நேரத்தில் WWF மல்யுத்தம் பார்ப்பது ஒரு ஆனந்தம். முக்கியமான போட்டிகளைப் பார்ப்பதற்காக இரவு வேலைக்கு 'சுகயீனம்' என்று சொல்லிவிட்டு வேலைகளை இழந்தவர்கள் ஒருபுறம். இவற்றையெல்லாம் பார்த்து, இந்த முதலாளித்துவ நாடுகளில் விளையாட்டுகளும் பணம் பண்ணத்தான் என்று உணர எவ்வளவோ காலம் எடுத்தது.

2008இல் இந்தியாவில் விளையாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றின் பெயர் Delhi Dare Devil அண்மைக் காலங்களில் பணக்காரரான குபேரர்களும் பொலிவூட் நட்சத்திரங்களும் இளம் விளையாட்டு வீரர்களுக்காகப் பேரம் பேசினார்கள். இளம் இந்திய விளையாட்டு வீரர்கள் ஒரு இரவில் லட்சாதிபதிகள் ஆகி விட்டார்கள்.


வழமையாக, ஒரு கணவான் விளையாட்டாக இருக்கும் கிரிக்கெட்டுக்கு காசைக் காட்டப் புறுப்பட்டுள்ளது இந்திய வர்த்தகம். இந்த புதிய விளையாட்டுக் கழகம் அண்மையில் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் சேர்த்துள்ளது. ஏப்பிரல் 15இல் புதிய பருவம் ஆரம்பிக்கவுள்ள இந்த விளையாட்டில் இன்னும் ஒரு பந்துகூட எறியப்படாமலேயே இவ்வளவு பணம் சேர்ககப்பட்டுள்ளது. இது மேற்கு நாடுகளில் நடக்கும் professional sports இந்தியாவிலும் ஆரம்பித்துவிட்டதைக் காட்டுகிறது.

தொலைக்காட்சிக்கான உரிமைகளை சோனி நிறுவனம் 918மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கியுள்ளது. இந்த விளையாட்டுக் கழகங்களுக்குரிய Franchise இன்னொரு 733 மில்லியன் டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளது,

வட அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பிய இரசிகர்களினதும் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கை உடைய தொலைக்காட்சி ரசிகர்களுக்காக நடத்தப்படவிருக்கும் ஒரு பெரிய காட்சியாகும் என அமெரிக்காவில் படித்த லட்சாதிபதியும் இந்த விளையாட்டுக் குழுவின் தலைவருமான Lalit Modi என்பார் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்காக கிரிக்கெட்டினதும் பொலிவூட்டினதும் சக்தி இணைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்திய பொருளாதாரம் 8 தொடக்கம் 9வீத வளர்ச்சி கண்டு வருகையில், இந்தியாவின் குபேர வர்க்கம் உருக்கு, கார், சுரங்கத்




தொழில் என வெவ்வேறு சர்வதேச ரீதியான வர்த்தகங்களை வாங்கி வருகிறது. தற்போது சிலர் இந்த புதிதாகக் கிடைத்த செல்வத்தை விளையாட்டில் செலவிட விரும்புகிறார்கள் என்றார் அவர்.

தொழிலதிபர் Mukesh Ambani, 111 மில்லியன் டொலர்களைக் கொடுத்து மும்பாய் Franchise வாங்கியுள் ளார். இவர் இந்தியாவிலேயே பெரிய பணக்கார் ஆவார்.

தற்போது கிரிக்கெட்டில் நடப்பது இந்தியாவில் நடக்கும் மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது என்று அவதானிகள் கூறுகின்றனர். இந்தியாவிற்கு புதிதாகக் கிடைத்த பொருளாரதார பலத்தினால் இது சமுதாய மாற்றத்தைக் கொண்டுவருகிறது.

வழக்கமாக 5நாள் ரெஸ்ற் போட்டியாக நடைபெறும் விளையாட்டு, இந்தியர்களின் தற்போதைய சுறு சுறுப்பான, விறுவிறுப்பான வாழ்க்கை முறைக்கு ஏதுவாக 3மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த குறுகிய நேரத்தில 20 ஓவர் விளையாட்டை இந்தக் குழுவினர் விளையாடுவர்.

இந்த விளையாட்டை விளம்பரப்படுத்துவோர் High octane play in adrenalin packed line எனத் தெரிவித்துள்ளார்கள் இது ஒரு முழுக் குடும்பத்துக்குமான பொழுது போக்காக இருக்குமாம்.

இத்துடன் புதுப்பிக்கப்பட்ட விளையாட்டு அரங்குகள் பெரிய திரையில் காட்சிகள், கண்ணுக்கு விருந்தாக Cheer -Leaders இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த விளையாட்டுக் கழகம், முதல்தர கிரிக்கெட் விளையாட்டுக்கு பொலிவூட் கவர்ச்சியையும் கொடுத்து, முதிர்ச்சியடைந்து கொண்டு வரும் இந்திய ஊடகத் துறையையும் வளைத்துப் போட்டு ஒரு முதல் தரமான முதலீட்டைச் செய்துள்ளது.

கடந்த வாரம் விளையாட்டு வீரர்களும், அந்தக் குபேரர்களும் நட்சத்திரங்களும் ஒரு ஐந்து நட்சத்திர விடுதியிலே கூடி 9மணி நேரமாக விளையாட்டு வீரர்களுக்கு பேரம் பேசியுள்ளார்கள். அங்கு மொத்தமாக 40 மில்லியன் பேரம் நடந்துள்ளது. இந்திய தேசிய விளையாட்டுக் குழுத் தலைவர் மகேந்திர சிங் தோனியின் விலை 1.5 மில்லியன். 19வயது வேக பந்து வீச்சாளர் இஷாற் சர்மாவின் விலை 950,000.

இது அதிசயம் தரத்தக்க சம்பவம் என்றார் ஷாருக்கான். இந்தியா கடந்த காலங்களைப்போல் கதவருகில் நிற்கவில்லை. கதவினூடாக நன்கு உள்ளே வந்துவிட்டது என்றார் அவர்.

பொருளாதார வளர்ச்சி 8தொடக்கம் 9வீதமாக இருந்தாலும், பல செல்வந்தர்களை அது உருவாக்கிவருகிறது. அத்துடன்,



ஆரோக்கியமாக மத்திய வகுப்புப்பும் வளர்ந்து வருகிறது. அரசாங்கத்தின் பொருளாதார சீர்திருத்தங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களைக் கொடுத்துள்ளது.

இந்த சீர்திருத்தங்கள் எல்லாம், மேற்கு நாட்டவர் உருவாக்கி, விதிமுறைகளை வகுத்த முதலாளித்துவ பொருளாதார முறையில் இந்தியா எப்படி விளையாட ஆரம்பித்துள்ளது என்பதைக் காட்டுகிறது, ஆனால், இங்கும் அருவருப்பு தெரிவிக்காதவர்கள் இல்லாமல் இல்லை. சிவசேனா தலைவர் பால் தாக்கரே, முதலாளித்துவம் கிரிக்கெற்றில் ஊழலைப் புகுத்திவிட்டது எனக் கண்டித்துள்ளார்.

எது எப்படி இருந்தபோதிலும் 1990இல் தொடங்கிய முதலாளித்துவ பரிசோதனை பல தடைகளையும் தாண்டி இன்று இந்த நிலைக்கு வந்துவிட்டது. இந்தியர்களும் சீனர்களும் முதலாளித்துவ விளையாட்டை ஐரோப்பியர்களையும் அமெரிக்கர்களையும் விட நன்றாக விளையாடுவதாகத் தெரிகிறது.

இந்தப் போட்டிகள் நடக்கும்போது அங்கு பீடாவும் சோடாவும் விற்பவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும். விளையாட்டு இல்லாவிட்டால் அவர்களுக்கு சோறு இல்லை. ஆகவே, நண்பர்களே, Let the game begins!

■ ■ ■

### 10 அதிகூடியவிலை வீரர்கள்

| | | |
|---|---|---|
| மகேந்திரசிங் தோனி | $1.5m | (சென்னை) |
| அன்ட்ரூ சிமொன்ட்ஸ | $1.35m | (ஹைதராபாத்) |
| சனத் ஜயசூரியா | $975,000 | (மும்பை) |
| இஷான்ற் ஷர்மா | $950,000 | (கொல்கொத்தா) |
| இர்பான் பதான் | $925,000 | (மொஹாலி) |
| பிறற் லீ | $900,000 | (மொஹாலி) |
| ஜக்குவாஸ் கல்லீஸ் | $900,000 | (பெங்களூர்) |
| R.P. சிங் | $875,000 | (ஹைதராபாத்) |
| ஹர்பஜன் சிங் | $850,000 | (மும்பை) |
| கிறிஸ் கெயில் | $800,000 | (கொல்கொத்தா) |

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344



# To Buy or Sell Commercial & Residential Properties Call me First...

**Gerrard/Greenwood**



**$1,475,000**

Gorgeous Investment Property,Apprx 5500 Sf,In Famous Gerrard India Bazaar!! With Income Of Apprx $120,000-$150,000.One Jewellery Store,One 2-Bdrm Apt,Three 1-Bdrm Apts & Apprx 1500 Sf Bsmt.Seller Operating A General Store In Apprx 1200 Sf Extended Corner Stor

**Clarington**



**$1,500,000 Plus Stock**

Very Good Opportunity For Investment. This Money Making Busy Gas Station Is Located In The Heart Of Canada's Fastest Growing Oshawa Area. Enough Space To Build Car Wash, Tim Hortons, Truck Shop And On The Run Franchise

**401 & Simcoe**



**$1,590,000 For Sale**

Propose 57 Condo Units

CALL ME FOR INFO...



HomeLife/Future Realty Inc., Brokerage

**Baskaran Sinnadurai**

Commerial & Residential Sales Representative

**416-880-8585**

# JetSpeed Travels

முதன் முதலாக
CHANNAIக்கு நேரடி
விமான சேவை
RETURN FARE

From
**$899.00**
Plus Tax
(Some Conditions Apply)

IATA ATAC ACTA TICO
#50011321

**5800 Sheppard Ave. East, Suite #12**
**Scarborough, ON.**
**TEL: 416-609-0544, or 1877-33-SPEED**

# போர் முகங்களும் சமாதான...

13ம் பக்கத் தொடர்ச்சி...

வேண்டும் என்ற விருப்புடன் செயற்படத் தொடங்கின. மறுபுறமாக கட்டாயத்தின் பேரில் இணைத்துவிடப்பட்ட சிற்றரசுகள் பேரரசுகளின் பெரும் பசிக்க இறையாகிக் கொண்டிருந்தன. இத்தகைய கசப்பும் களிப்பும் கலந்த தேசியவாதம் தனது முழுமையான செயற்பாடுகளைப் பிரதேசத் தனித்துவத்திற்கேற்ப மாற்றிக்கொண்டிருந்ததனைக் காணமுடிகின்றது.

அத்தகையதொரு தேசிய வடிவத்தினுள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த இலங்கை வேற்றுமையுள் ஒற்றுமை காண முடியும் என்று நம்பிய சிறுபான்மைச் சமூகங்களைக் கசப்புக்கலந்த தேசியவாதத்தினுள் உட்படுத்துவதற்கு உறுதி பூண்டு செயற்படத் தொடங்கியது. அப்பொழுது ஆரம்பமாகியதுதான் போர் முகங்களும் சமாதான முகமூடிகளும்.

பிரித்தானிய வல்லரசால் வாரிக் கொடுக்கப்பட்ட சுதந்திரமும் அதற்கு முன்னும் பின்னுமாயிருந்த பிரித்தானியா வழங்கிய பல்வேறு அரசியல் திட்ட ஆலோசனைகளும் இலங்கை பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்திருக்க வேண்டும் என்பதனையும் அதன்மூலம் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தினை ஏகபோகமாக அனுபவிக்க முடியும் என்பதனையும் பிரித்தானியா முற்றாக நம்பியிருந்தது. அதற்கு ஏற்றவாறு பெரும்பான்மையினரின் செயற்பாடுகளுக்குத் தனது ஆதரவினையும் தெரிவித்துவந்தது. இதன் விளைவாக பாராளுமன்றத்தினுள் போர் முகங்கள் உருவாக்கம் பெற்றன.

உயர்குழாத்தினர் பாராளுமன்றத்தினுள் இடம்பெற்ற காலங்களில் குறிப்பாகச் சுதந்திரத்தின் முன்பாக பெரும்பான்மையினரின் தேசியத்துக்கும் தேசிய அரசுக்கும் வித்திடப்பட்டது. ஒற்றுமையுடன் வாழ முடியாவிட்டாலும் மொழி, மதம் வாழும் உரிமை தொடர்பாகச் சில சலுகைகளை யாவது பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்றே சிறுபான்மை உயர் குழாத்தினர் சிந்தித்தனர். இதற்கான போராட்டத்தினை நடாத்தினர். சட்டரீதியில் பாதுகாப்புக் கிடைக்குமா என்பதனைத் தேடினார்கள். பிரித்தானிய சட்டத்துக்கும் அதற்கு விசுவாசமாகவும் இருந்தவர்கள் பிரித்தானிய சட்ட விதிகள் மூலம் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என நம்பினார்கள். இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குக் குடியுரிமை பறிக்கப்பட்ட பொழுது பிரித்தானிய பாராளுமன்றச் சட்டங்களால் தமிழர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்பதனை உணரத் தொடங்கினார்கள்.

சிலர் இன்னமும் இதுபோன்ற இலங்கை அரசுநடாத்தும் நிகழ்வுகளைத் தமிழர்களினதும் சிறுபான்மையினரதும் நன்மையின் பொருட்டே செய்யப்படுவதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சலுகைகளை முற்றாக அனுபவிக்கவேண்டுமானால் சிறுபான்மையினருள் தெரிந்தெடுக்கப்பட்ட, தனியன்களாக சிறுபான்மையினருடைய ஒன்றுபட்ட கருத்துடன் ஒத்துப்போகாத தராதரத்தினைப் பெறவேண்டும் என்பதனை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகையோர் போர்முகங்களின் போராயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இதுவே சிறுபான்மையினர் அனுபவித்துவரும் கசப்பான தேசியத்தின் ஒரு அம்சமாக இருந்து வருகின்றது.

இத்தகைய வெளித் தெரியாத போரினால் காயப்பட்டவர்கள் சாதாரண குடிமக்கள்தான் என்பதனை சனநாயகத்தத்துவம் வெளிக் கொணரத் தொடங்கியிருந்தது. வெளித் தெரியாத போருக்கெதிரான போராட்டங்கள் நடாத்தப்படுகின்ற பொழுதில் வெளித்தெரியும் போர் முகங்கள் தோற்றம் பெறத் தொடங்கின. போரின் வடிவத்துக்கு ஏற்ப அதன் தாக்கம் சிறுபான்மையினரை மட்டுமன்றி மக்களாட்சியின் சுகத்தை மட்டுமே அனுபவிக்கும் பெரும்பான்மையினரையும் தாக்கத்துக்கு உட்படுத்தியது.

போரின் பின்பாகச் சமாதானம் ஏற்படுத்தப்படுவது என்பது எல்லோருடைய எதிர்பார்ப்புமாகும். சமவலுவுள்ள இருபகுதியினர் போரில் வெற்றி பெறாது போகின்ற பொழுதில் போரினை நிறுத்திக் கொள்ளுவதுதான் சமாதானம் என்று எண்ணுகின்ற அளவில்தான் இலங்கையின் போரும் சமாதானமும் இருந்து வருகிறது என்பது கசப்பானதொரு உண்மை நிலைமையாகும்.

சிறுபான்மையினரின் போராட்டங்கள் வலுப்பெறுகின்ற பொழுதிலும் அரசாங்கங்கள் நடாத்துகின்ற போரின் விளைவாகச் சலித்துப்போகின்ற சிறுபான்மையினருக்கு ஓரு ஊக்கமூட்டும் உந்துசக்தியாகப் போட்டுக் காட்டுகின்ற சமாதானமுகமூடிகள் அரசியல் திட்டத்தில் மேற்கொள்ளப் படகின்ற அல்லது மேற்கொள்ளப்போகின்ற திருத்தங்களாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

அரசியல் திட்டங்கள் புதிதாக உருவாக்கப்படுகின்ற பொழுதில் அதுவரையில் மேற்கொண்ட திருத்தச் சட்டங்களின் விதிகளும் சிறப்புரிமை அல்லது உரிமைப்பயன்பாட்டு விதிகளும் காலாவதியற்றுப்போய் விடுகின்றன என்பதனைப் பலதடவைகளில் கண்கூடாகக் காணமுடிந்தது. இந்தப் போரையும் சமாதானத்தையும் தொடர்ந்தும் நடாத்திவருவதர்க்கு உதவியாக இருந்து வரும் அரசியற்திட்டப் போர்முகத்துக்குப் பல்வேறுவகையான அரசியற் திருத்தச் சட்டங்கள் என்ற முகமூடிகள் தேவைப்படுகின்றன. இவைதான் சமாதான முகமூடிகளாகப் போர்முகங்களுக்குப் போடப்பட்டு வருகின்றன.

■ ■ ■






# வீட்டைத் திருத்துவது நல்லதா? திருத்தாமல் இருப்பது நல்லதா?

S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -



தற்போதைய வீட்டுச் சொந்தக்காரர்களது மனத்திலுள்ள கேள்வி இது வீட்டை விற்கும் நேரம் வந்ததும் வீட்டுச் சொந்தக்காரர் நினைப்பது தாம் செலவு செய்யும் நேரமும், தாம் செலவு செய்யும் பணமும் மீள பெறப்படுமா? எவ்வளவு வீதம் வீட்டுச் சொந்தக்காரர் மீளப் பெறப்படுமா? எவ்வளவு வீதம் வீட்டுச் சொந்தக்காரர் மீளப் பெறுகிறார்கள்? Appraisal Institute of Canada (AIC)வினால் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி (Renovation and home value survey) வீட்டைத் திருத்துவது, வீட்டின் பெறுமதியைக் கூட்டுகிறது. ஆனால் வீட்டு உரிமையாளர் செலவு செய்யும் முழுப்பணமும் திருப்பிக் கிடைப்பதில்லை. முதல் 10 தித்த வேலைகளும் அவற்றில் எத்தனை வீதம் சராசரியாக வீட்டு உரிமையாளர்களுக்கு திரும்பவும் கிடைக்கும் என் பதனை கீழ் உள்ள தரவுகளில் விளங்கிக் கொள்ளுங்கள்

| | |
|---|---|
| Painting and Decor, Interior | 73% |
| சமையலறை திருத்த வேலை | 72% |
| குளியலறை திருத்த வேலை | 68% |
| வெளிச்சுவர் Painting | 65% |
| நிலத்தின் திருத்த வேலை (upgrades) | 62% |
| யன்னல்/ கதவுகள் மாற்றுதல் | 57% |
| மேலதிக Fire Place | 50% |
| Basement Renovation | 49% |
| Furnace or Heating System Replacement | 48% |
| Main Floorல் மேலதிகமாக Family Room போடுதல் | 51% |

சாதாரணமாகப் பழைய விட்டை புது வீடு போல் தருத்துவதால் வீட்டின் பெறுமதி அதிகரிக்கின்றது. President of the Ontario Association of the Appraisal Institute of Canada வின் கருத்தின்படி கூடுதலான வீட்டு உரிமையாளர் கூடுதலான பணத்தை வீட்டின் திருத்த வேலைக்கு செலவு செய்ய விரும்புவதில்லை. ஆனால் அவர்கள் வீட்டை பராமரிப்புச் செய்து வீட்டின் பெறுமதியை குறைக்காது தக்கவைக்க விரும்புகிறார்கள். AICன் அங்கத்தவரின் கருத்துப்படி தேவையில்லாது வீட்டுச் சொந்தக்காரர் மேலதிக பணத்தை செலவு செய்தாலும் வீட்டின் பெறுமதி கூடுவதில்லை. உதாரணமாக வீட்டின் திருத்த வேலை ஓர் குடும்பத்தின் மேலதிக வசிப்பிட அறைகள் கூடுமாயின் அது வீட்டின் பெறுமதியைக் கூட்டும். எப்படியாகினும் ஒரு வீட்டின் திருத்த வேலை படுக்கை அறைகளின் எண்ணிக்கை குறைத்தால் தேவையற்ற உருவங்களைத் தோற்றுவித்தாலும் வீட்டின் பெறுமதி குறையும். அத்துடன் வெளி வீட்டின் வேலைகள் அயலவர்களின் வீட்டிலிருந்து வித்தியாசப்படுமாயின் விட்டின் பெறுமதி குறையும். வீட்டின் விலையைத் தீர்மானிப்பது தனிப்பட்ட வீட்டையும் அயலவர்களின் (Neighbourhood) வீட்டின் பெறுமதியையும் பொறுத்திருக்கின்றது. நீங்கள் உங்கள்



வீட்டின் பெறுமதியைக் கூட்டவோ அல்லது புதிய வீட்டை விற்கவோ செய்யும்போது சில சிறப்பு அம்சங்களை மேலதிகமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## சிறந்த திட்டமிடுதல்

மெயின் Floory; சலவை செய்யும் அறையை போடுதல் (Laundry Room)
Ground Floor ல் அலுவலக அறை
சமையலறையில் (Hard Wood Floor போடுதல்)
Whirl Pool Bath Seperate from Shower
சமையலறையில் வீட்டுக்குரிய உபகரணங்கள் நிரந்தரமாகக் கட்டுதல்
மேலதிக Cooking Island
ஒரு நிலையில்லாத நிறமுடைய உள் Paint
நல்லநிலையில் வீட்டு Wiring
Home Theare Room
Skylights

பொதுவான அறிவுரை வீட்டை உங்களின் வசதிக்குத் திருத்தி சந்தோஷமாகவும், அதேநேரம் வீட்டின் பெறுமதி மங்காமலும் வைத்திருங்கள்.

■ ■ ■

நிம்மதியான வாழ்வுக்கு நிரந்தரத்தீர்வு காப்புறுதி ஒன்றே...

ஆமாம் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு காப்புறுதி நிறுவனத்தில் உங்கள் குடும்பத்திற்குரிய அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களையும் ஒழுங்காக அமைத்துத் தருவதே எனது சேவை....

சியாமளா ரட்ணசபாபதி

RBC
Manulife Financial
Canada Life
COMMUNITY FINANCIAL SERVICE GROUP INC.
2100 Ellesmere Road, Unit 105, Scarborough, Ontario M1H 3B7



LIFE INSURANCE
Shiamala Ratnasabapathy
Life Insurance Broker
Dir : 416.414.2374


மூலிகைத் தயாரிப்புக்கள்
புதிய டிசைன்களில் சபோனா காப்புகள்
Ervamatin POWER Loção Capilar Natural
SHAMPOO
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
SABONA
Tel: 416•264•8787
Gluteala
க்லூட்டியலா
பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கிறது.
டயபீனா
இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியது. கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
Diabina
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
Consitap
கொன்சிடாப் மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது.
Dreamron HENNA
Treated Natural Henna
மகிழ்ச்சிகரமான தாம்பத்திய உறவுக்கு
இயற்கையின் மூலிகைகொண்டு தயாரிக்கப்பட்ட பானம். இருபாலாருக்கும் உகந்தது.
MALE PLUS
LongLife
லோங்லை∴ப்
இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம்.
JayaCS•416•275•0070
www.dreamron.ca www.mediherbs.ca
இங்கேயும் விற்பனையாகின்றன!
மிக விரைவில் ஐரோப்பா எங்கும் விற்பனையாகவிருக்கின்றன
New Spicy Land
416 292 9769
Daily Needs
416 490 7703
Jaffna Super Store
416 289 8812
M&S Convenience
416 444 8202
Eera Super Market
416 269 2622
Durcaa Supermarket.
905 796 6762
Priyas
905 415 8508
Amazon Health Care
www.amazonhealthcare.com 2602, Eglinton Ave East (Midland/ Eglinton)



**Justin William**
*Broker*
**Cell: 416.803.7344**



**Ravi Raveendran**
*Broker*
**Cell: 416.817.8479**



**Wilton Gnanapragasam**
*Sales Representative*
**Cell: 416.554.4747**

# For All Your Real Estate Needs !

**$ 144,900 — Midland & Lawrence**
- Well Maintained Condominium
- 3Bedrm W/Ensuite Washrm
- Large Unit w/2 Balconies
- Perfect For First Timers
- Call **Wilton** For Details....

**$ 349,900 — 9th Line & 16th Ave**
- Less Than 5 Years Old
- Well Kept Semi Detached Hse
- Spacious 4 Bedrooms
- Approx 1865 Sq.ft
- Call **Ravi** For Details....

**$ 329,900 — Neilson & Passmore**
- Spacious 4 Bedrm House
- Approx 2300 Sq Ft
- Less Than 5 years Old
- Finished Basement
- Call **Wilton** For Details....

**$ 234,900 — Brimley & Finch**
- Beautiful Condo Townhouse
- Excellent Location
- Spacious 3+1 Bedrooms
- Close To Schools & Ttc.
- Call **Ravi** For Details....

**$ 369,000 — Markham & Steeles**
- 3 Bedroom Detached House
- Corner House
- Stainless Steel Appliances
- Great location
- Call **Ravi** For Details....

**$ 469,900 — 14th Ave & 9th Line**
- 4 Bedroom Detached House
- Brand New House
- Oakwood Staircase
- Decorative Pillars.
- Call **Wilton** For Details....

**$ 424,000 — Middlefield & Finch**
- 4+1 Bedroom House
- Well Maintained House
- Finished W/out Basement
- Excellent Neighbourhood
- Call **Justin** For Details....

**$ 99,000 — Scarborough — Super Market**
- Very Profitable Business
- Established Since 1993
- 15 Years At the Same Plaza
- Surrounded By Apt & Houses
- Call **Justin** For Details...

**$ 229,900 — Warden & Finch**
- Spacious Luxury Condominium
- One Bedroom Plus Den
- Approx 1375 Sq. Ft
- Excellent Location
- Call **Wilton** For Details....

**$ 224,000 — Morningside & Finch**
- Beautiful Town House
- 3 Bedrooms
- Ideal Starter Home
- Low Maintenance Fee
- Call **Ravi** For Details....

**$ 349,000 — Brimley & Steeles — SOLD**
- 3+1 Bedroom House
- Finished Basement
- Approx 1600 Sq Ft
- Recently Renovated
- Call **Justin** For Details....

**$ 424,900 — Brampton**
- Brand New Mattamy Home
- 4 Bedrooms. Approx 2620 Sq.Ft
- Over $ 20,000 in Upgrades
- Close To Schools & Park.
- Call **Justin** For Details....

**HomeLife GTA Realty Inc., Brokerage*** 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated







0% இலும்
Bad Credit இலும் கூடிய வட்டி வீதத்தில் வீடு வாங்குவது
உங்களை நீங்களே அழிப்பதற்கு சமமானது
digi Media Creations
RE/MAX
Remax Vision Realty Inc.
1-2210 Markham Rd., Scarborough, ON, M1B 5V6
Siva Ratnasingam
Mortgage Consultant
416.430.0111
2005, 2006 Diamond award winner
No. 1 Invis Mortgage agent in Canada
Karuna Gopalapillai
Real Estate Broker
416.430.0111
invis
CEYLINGO FINANCIAL GROUP.
416.430.0111
2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8


வீடு, வியாபாரம் வாங்க, விற்க..
20 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA
Top 1% in Canada
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker.
Karu's ROYAL TEAM, Top 10 Team in Canada
Praba Jeganathan*
Chandran Sornalingam*
Siva Kandiah*
Charles Deva*
Malini Muhunthan*
Ranjan Franics Xavier*
Joy Emmanuel*
Sri Ganesh Thambaiah*
14th Ave/ 9th Line
4 Bedrooms, 3 Washrooms
Excellent Box Grove Neigbrhood
Extra Wide Premium
Corner Lot, 2712 Sq Ft, Exctve.
New Arista Home
$539,900
Markham/Bur Oak
4 Bedrooms, 4 Washrooms
Less Than 1 Year New,
Well Maintained Ap.2850 SqFt
Double Door Entrance With
Porch Area And Metal Railings
$494,900
14th Ave/9th Line
4+1 Bedrooms, 4 Washrooms
Luxury W/Perfection In
Prestigious Legacy Community!
Chiavatti Built!2840 Sq.Ft!
Quality Custm Upgrds,9'Ceiling
$574,900
Staines/Steeles
JUST LISTED
4 Bedrooms, 3 Washrooms
Unique Bungalow Style
2750 Sqft Home,
Beautiful Ravine Lot, Large Br
On Ground Flr W/ 5Pc Ensuite
$499,900
Markham/Passmore
4 Bedrooms, 3 Washrooms
Mattamy Built, Open Concept
With Practical Layout.
Separate Entrance To The
Basement
$382,900
427/Humberwood
2 Bedrooms, 2 Washrooms
2 Car park Brand New luxury
Condo & 5 Brand New
Appliances, Close to Wood bine
centre ,Hwy 427, 409,401
$274, 900
Mccowan/Denison
5+2 Bedrooms, 6 Washrooms
Basement Finished,
Interlocking Driveway,
Double Enclosed Porch,
Custom WindowTreatments
$599,900
Pickering
Daisy Mart Located
In A Good Area.
Lots Of Potential For Growth.
Good For Owner Operator
Low Rent
$79,000
Birchmount/Danforth
3 Bedrooms, 3 Washrooms
Brand New Spacious Full
House For Lease! Freehold
Townhouse In Upper
Danforth Village.
$1,8 00 For Lease
Mccowan/Ellesmere
1+1 Bedroom, 1 Washroom
"Brand New" Never Lived In!
Eat-In Kitchen/Breakfast Area,
W/ A Walk-Out To Balcony
Five Never Used Appliances
$199,900
Jane/Steeles
3 Bedrooms, 2 Washrooms
Closer To Ttc, Hwy, Library,
University, School, Plaza,
Hospital. New Kitchen!!
Call for more info!
$99,900
Scar Golf/Lawrence
3+2 Bedrooms, 2 Washrooms
Finished Basement With 2
Bedrooms, Kitchen, Rec Rm,
4 Pc & Separate Entrance
Close To Schools, Shops
$289,900
Kipling/Steeles
2+1 Bedrooms, 2 Washrooms
Luxury 2 Bedroom Condo.
Overlooking Beautiful Ravine
And Parklands. Large
Balcony With Eastern Exposure.
$149,900
Pickering Bch/Bayly-Ajax
3 Bedrooms, 3 Washrooms
Rare End Unit Townhome With
Separate Driveway Like
Detached.Desirable Floor Plan.
Separate Living & Dining Rooms
$237,000
Markham/Eglinton
2 Bedrooms, 2 Washrooms
Spacious Unit W/Ensuite 2Pc
In Master Bedroom.
Large Balcony
W/Eastern Exposure.
$109,900
Markham/Sheppard
2+1 Bedrooms, 1 Washroom
Ensuite Laundry &Rare Find
With 2 Parking Spots.
Close To Ttc, Shops, School,
Basil Food Sasque & 401
$169,000
Kennedy/Ellesmere
4+1 Bedrooms, 3 Washrooms
Four Bedroom Townhome In
A Very Good Location,
Close To Highland Farms,
Medical Doctors, Shops, School
$244,900
Middlefield/Finch
1 Bedroom, 1 Washroom
Upgraded Laminate Flooring,
Perfect Unit For Couple
Or A Bachelor. **589 Sq.Ft +
73 Deck. Eastern Exposure,
$152,900
Victoriapk/Ellesmere
Restaurant
Excellent Street Exposure.
Few Blocks South Of Hwy 401.
SpecializingIn Pakistani/Indian/
Canadian Cuisine.
$120,000 Plus Stock
Belleville
Excellent Location.
Detached Commercial
Bldg W/Main
Floor 3156 Sq Ft And 2nd Floor
2330 Sq Ft.
$400,000
Ananthi Selvasivam*
Neelan Thambiah*
Austin Flavius*
Ken Seyon*
Sunil Guneratne*
Kumar Varatharajah*
Raj Ariyam*
Ganesh Thangarajah*
Meera Ram*
Ramanan Ramachandran*
Vithi Thillainayaham*
Ragu Paramsothy*
Roger Kuhan Thambiah*
Saba Ganeash*
Kannan Kankesu*
Siva Ratheesan*
Jeya Atputharajah*
Sajanthan Shan*
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
Dir: 416-284-5555
BUS: 416-284-4751(24 HRS)
TOLL FREE: 1-888-766-4456

# கதவும் குமிழும்




மஞ்சுளா ராஜலிங்கம்

உங்கள் அயல்வீட்டுக்காரர்கள், உங்களை நன்கு அறிந்தவர்கள், உங்களைத் தங்கள் வீட்டில் நடக்கும் ஒரு விருந்துக்கு வருமாறு அழைக்கின்றார்கள். அதே தெரு, அக்கம் பக்க மனிதர்களும் இந்த விருந்தை ஒருகை பார்க்க வருகிறார்கள். சரி, வந்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாது, விருந்து நடக்கும் வீட்டின் வெளிக்கதவின் கைப்பிடியில் கையை வைத்துத் திருகிக் கதவைத் திறக்கப் போன நீங்கள், ஒரு கணம் திகைத்து நின்று விடுகிறீர்கள். முன்னர் ஒரு காலமும் நீங்கள் போகாத ஒரு வீடு அது. இதுதான் நீங்கள் அங்கு போவது முதல் தடவை. கதவின் கைப்பிடி மிகவும் அழுக்காகவும், பழசாய்ப் போயும் காட்சியளிக்கின்றது. கைப்பிடியே இந்தலட்சணத்தில் இருந்தால், விருந்தும், உள்வீட்டின் அமைப்பும் எப்படி இருக்கப்போகிறதோ என்ற சந்தேகம் உடனே உங்களை உலுக்காமல் இருக்காது.

கண்ணில் காட்சியளிக்கும் விடயங்கள் எப்படியெப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். அப்படியே அந்த வீட்டுக்குள் நுழையும்போது, நீங்கள் உடனே உங்கள் வீட்டுக் கதவின் கைப்பிடியையும் கொஞ்சம் யோசித்துப் பார்க்கத் தொடங்குகின்றீர்கள். இருக்காதா பின்னே? இப்படி மற்றவர்களும் உங்கள் வீட்டைப் பார்த்து எடை போட்டு விடக்கூடாதே என்ற சிந்தனை மேலோங்கும் இந்த வேளையில், அதைப் பக்குவமாக அழகு படுத்திப் பார்க்க வேண்டியது உங்கள் கடமையல்லவா? எனவே நல்ல அழகிய பலவித வடிவங்களைக் கொண்ட கைப்பிடிகளை நீங்கள் உங்கள் கதவுகளுக்குப் பொருத்தி அழகு பார்க்க நிச்சயமாய் நிறைய வழிகளும், தெரிவுகளும் உள்ளன.
சிலசமயம் நீங்கள் கவனிக்காத விஷயம் என்னவென்றால், கடைகளில் கண்ணைப் பறிக்கும் விதவிதமான, அழகிய வடிவமைப்புக்களைக் கொண்ட, உங்கள் வீட்டுக் கதவுகளுக்கு மேலும் மெருகூட்டக்கூடிய கைப்பிடிக் குமிழ்கள் நிறையவே விற்பனைக்கு உள்ளன. உதாரணத்துக்கு உங்கள் வீட்டு முன்வாசற் கதவு இறுக்கமான நிறத்தில், மரத்தினால்ஆன கதவென்று வைத்துக் கொள்வோம். இதற்கு எத்தகைய வடிவமுடைய கைப்பிடிக்குமிழ் பொருத்தமாக இருக்கும் தெரியுமா? அழகிய கலை வேலைப்பாடுகள் அமைந்த செப்பினாலான பிடியின் பின்புறம் தட்டையான நிலையினாலான அமைப்புடன் இருந்தால், மிகவும் எடுப்பாக இருக்கும். அதே கதவுக்கு எண்ணெய் மூலம் பளபளப்பாக்கப் பட்ட, செப்பில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட திருகும் முறை விசைக்குமிழாக இருந்தால், மிகவும் கவர்ச்சியாக இருக்கும். இதுவே உங்கள் குளியலறையின் கைப்பிடியாக இருப்பின், அழகிய ரோஜாப்பூ வடிவத்துடன், பின்புறம் நீலம் அல்லது ஊதா நிறத்தில் அமைந்தால் அதன் அழகே அழகு. இவை ஏகப்பட்ட தெரிவுகளில் சில வடிவங்களின் உதாரணங்களாம். ஆனாலும் நீங்கள் விரும்பிய வடிவங்களிலும், நிறங்களிலும், இக் கதவுக் குமிழ்களைக் கடைகளில் வாங்கலாம்.











ஒரு கதவுக் கைப்பிடியை வாங்கும் முன், எந்தவித கதவுக்கு (அதாவது இடத்தில் இருக்கும் கதவுக்கு) எந்தவிதக் குமிழ் எடுப்பான தோற்றத்தைக் கொடுக்கும் என்பதை முன்னரே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் எல்லாவிதக் குமிழ்களும், எல்லாவிதக் கதவுகளுக்கும் பொருந்தும் என்று சொல்வதற்கில்லை. உதாரணத்துக்கு, முன்வீட்டுக் கதவில் பொருத்தப்படும் திருகு குமிழானது, சாவி போட்டுத் திறக்கக் கூடியதான அமைப்பில் இருக்க வேண்டும். மற்றும் சில கைப்பிடிகளாவன ஒவ்வொருவரின் பிரத்தியேகத் தேவைக்கு மட்டும் சாவி போடாமலே உள்ளிருந்து பூட்டவும், திறக்கக் கூடியதாகவும், இருக்கும். இவை குளியலறை, படுக்கையறை போன்றவற்றிற்கு மட்டுமே பொருத்தமாக இருக்கும். மற்றுமொரு குமிழானது உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் வெறுமனேத் திருகித் திறக்கக் கூடியதாக இருக்கும். கடைசியாக சொல்லப் படும் வடிவமானது, சும்மா வெறும் அழகுக்காக மட்டுமே கதவுகளில் பொருத்தப் பட்டிருக்கும். அவற்றைத் திருகவும் முடியாது. பூட்டித் திறக்கும் திராணியும் அதற்கில்லை.

சரி,இப்பொழுது கதவுக்குமிழ்களை வாங்குவதென்று தீர்மானித்து விட்டாயிற்றா? பொறுங்கள், உடனே கடையைப்பார்த்து நடையைக் கட்டி விடாதீர்கள். உங்கள் மின்கணனியை ஒருமுறை உயிர்ப்பித்துக் கொள்ளுங்கள். Online shopping மூலம் நிறைய இடங்களை முதலில் நீங்கள் அலசி ஆராய்ந்தறிவது நலம். கணனியின் உதவியுடன், நல்ல தரமான பொருட்கள், மிகவும் குறைந்த, சீரான விலையில் எங்கே கிடைக்கும் என கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள். ஒரே தரமான பொருளுக்கு இரு வேறு விலைகளைக் கொடுத்து ஏமாந்து விடாதீர்கள்.

நம்மை மற்றவர் எடைபோடுவது நம்மில் தான் தங்கியுள்ளது. இந்த விடயம், நாம் எப்படி நம் வீட்டை அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்கின்றோம் என்பதற்கும் மிகவும் சாலப் பொருந்தும். கவர்ச்சியில்லாத, பார்க்க அழகில்லாத வீட்டுக்குமிழ்கள் உங்கள் முன்வீட்டுக் கதவுகளில் பொருத்தப் பட்டிருந்தால், அவற்றை அகற்றிவிட்டு, நல்ல அழகான குமிழ்களைப் பொருத்திக் கொள்ளுங்கள். நல்ல அழகான குமிழ்களைப் பொருத்தினால், உறவுகள் உரிமையுடன் குமிழ் பிடிக்கும். அண்டை அயலாரும் அன்டுவர், பாராட்டுவார்கள்.


வீட்டு முன்கதவுக் குமிழ் அழகற்று இருந்தாலே, அது ஒரு வீட்டின் முழு அழகையும் கெடுத்துவிடும். உள்புறம் என்ன அழகாகத்தான் இருந்து என்ன, உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும் ஒருவர், அதில் பொருத்தப் பட்டிருக்கும் குமிழைப் பார்த்தாலே, மிகுதியான வீட்டையும் நீங்கள் என்ன நிலையில் வைத்திருப்பீர்கள் என்பதை கணத்தில் எடை போட்டு விடுவார். ஊரில் செல்லுவார்கள் "வீட்டு நாயைப்பார்த்தால் தெரியும் விருந்தோம்பல் பூந்தோட்டத்தைப் பார்த்தால் தெரியும் குடும்பத்தின் குதூகலம்" என்று. அதுபோலதான் குமிழைப் பார்த்தால் தெரியும்...

ஆகவே மின்கணனியில் ஆராய்ந்து அழகிய வேலைப்பாடமைந்த கதவுக் குமிழ்களைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் வீட்டின் வயதிற்கேற்றவாறு பொருந்துமாப்போல் குமிழ்களைத் தேர்ந்தெடுங்கள். ஏனெனில் மிகவும் பழமை வாய்ந்த வீடுகளுக்குப் போய் மிகவும் அதி நவீனமான குமிழ்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்திக் கொண்டால் அதுவும் இன்னோர் விதத்தில் வீட்டை அழகற்றதாகக் காட்டிவிடும்.

சில குமிழ்கள் கண்ணாடிப் பிடியுடன், அழகிய அமைப்புக்களில் எண்ணெய் மினுமினுப்புடன் கூடிய உலோகத்தில் செதுக்கப் பட்டிருக்கும். மற்றைய அமைப்பு ceramic உடன் கூடிய செப்பில் வடிவமைக்கப் பட்டிருக்கும். உங்கள் வீடு சற்று நவீன வசதியுடன் கட்டப்பட்டிருந்தால், அவற்றிற்கு மரம், உலோகம், porcelain முதலானவற்றைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் குமிழ்கள் மேலும் அழகைத் தரும். மற்றும் இக்குமிழ்கள் வட்டம், நீள்வட்டம், மற்றும் பூக்கள் போன்ற அமைப்புக்களில் கடைகளில் கிடைக்கும்.

பிறகென்ன? புறப்படுங்கள் ஒரு அழகான வீட்டுக் குமிழைத் தேர்ந்தெடுக்க.

■ ■ ■



# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

**Harry** 416.856.4276 **Kannan** 416.854.6183 **Lingan** 416.830.2700

# COMMERCIAL MORTGAGE

- **Commercial Interest starts from 5.5%**
- **New Business Loans**
- **Bussiness Loans**
- **New Plazas**

## இலவச ஆலோசனையுடன் வீட்டுக்கான கடனுதவிபெற

- **Ist & 2nd Mortgage**
- **Commercial Mortgage**
- **Re-Finance to get rid of your loans**
- **Bridge Financing**
- **Cottage Properties Financing**
- **Up to 90% LTV**
- **Non-Permanent Residents**
- **Rental Properties Financing**
- **Self-Employed**
- **No Money Down Mortgage**



**K.N. KANNAN**
Mortgage Consultant
**Tel: 416-854-6183**
**Montréal: 1-514-787-9486**
Office: 416.273.8232
Fax: 416.214.1999
inviskana@gmail.com, www.invis.ca

invis

HSBC The world's local bank FIRST NATIONAL FINANCIAL LP INTERBAY FUNDING, LLC

90 Kennedy Rd. S., Unit C, Brampton
701 Evans Ave., Suite 600, Toronto, On M9C 1A3

Head Office:
GTA Square 256 & 257 - 5215 Finch Avenue East, Scarborough, ON. M1P 5H4
Branch: 16 – 2857 Lawrence Avenue East, Scarborough, ON. M1P 2S9

# அழகிய பூஞ்செடிகள்



சேகரி

## - வீட்டுத் தோட்டம் -2

சென்ற இதழில், டாலியாஸ் தாவரத்தின் அறிமுகமும், தாவரம் வளரும் சூழலும், கிழங்குகள் பதிக்கும் முறைபற்றியும் ஆராய்ந்தோம்..

இன்றைய இதழில், தாவரத்தை எப்படி நன்கு வளர்ப்பது பற்றிக் கவனிப்போம். இயற்கைப் பசளை கூடிய தரையில் டாலியாஸ் நன்கு வளர்ந்து வருவதைக் கவனிக்கக் கூடிய தாக இருக்கிறது. ஏறக்குறைய கிழங்குகள் ஊன்றி, ஆறு கிழமைகளில், வர்த்தகரீதி யான பசளைகளைத் தெரிந்து அதாவது நைதரசன் குறைவான 5-20-20 பசளையை, இரண்டு மூன்றுகிழமைகளுக் கொருதடவை உபயோகிக்கவேண்டும்.

### பாதுகாப்புத் தடிகள்:

தாவரம் ஒரு அடி உயரமாக வளரும்போது, பாதுகாப்புத் தடியினைச் சேர்த்து இலே சாகக் கட்டவேண்டும். ஏனெனில் காற்று வீசும்வேளை கிழங்கிலிருந்து வரும் பிர-தான தண்டு அடியோடு முறிய நேரிடும். அப்போது உங்கள் மனமும் சோரநேரிடும். வளரும் போது, இதே போன்று ஒவ்வொரு 8 அங்குலத்துக்கும், பிரதான தண்டினை, தடியோடு சேர்த்துக் கட்டி விடுங்கள். நிரையில் ஒழுங்கான முறையில் ஒரே இனத் தாவரத்தை வளர்க்கும் போது, தொடராகப் பந்து நூலை உபயோகிக்கலாம். ஆனால், ஒவ்வொரு எட்டு அங்குலத்துக்கும் தடிகளோடு சேர்த்து நூலை ஒருமுறை சுற்ற வேண்டும். சாதாரண உயரமாக வளரும் தாவரங்களுக்கு 4அடி உயரமான தக்காளிக் கூடுகளை உபயோகிக்கலாம்.

ஒழுங்கான முறையில் பாதுகாப்புத் தடிகள்

### நுனிமுளையைக் கிள்ளுதல்:

**ஏன் நுனிமுளையைக் கிள்ளவேண்டும்?**

- நுனிமுளையைக் கிள்ளுவதால், பக்கக் கிளைகள் வளர்ந்து போதிய பூக்களைத் தரும்.
- செடியானது அடர்த்தியாகவும் திடமாக-வும் இருந்து காற்றின் வேகத்தைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.
- தாவரம் வளர்ந்து, இரண்டு, மூன்று இலைகள் வந்ததும் பிரதான நுனியரும்-பைக் கிள்ளிவிடவேண்டும். இதனை, முடிவெட்டுதல் என்று சொல்லலாம். இதனால், கூடுதலான புதிய அரும்புகள் ஈடுசெய்யக் கூடியதாயிருக்கும். இதில் ஒரு நுட்பமும் இல்லை.
- மெதுவாகத் தாவரத்தின் மையமுளை-யைப் பிடித்து வளைத்து ஒடித்துவிடவும். பக்கக் கிளைகளுக்கு ஒருவித தாக்கமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



படம் 1 நுனியரும்பு முளைகிள்ளு முன்னர்



படம் 2 நுனியரும்பு முளை கிள்ளுதல்




படம் 1. ஆரம்பத்தில் காணப்படும் அரும்புகள்



படம் 3 நுனியரும்பு முளைகிள்ளிய பின்னர்

காலை அல்லது மாலை வேளை ஈரத்தன்மை இருப்பதால், இம்முறையினை மேற்கொள்ளவும்

படம் 1, 2, 3ஐ, நன்கு கவனிக்கவும்.

### அரும்புகள் அகற்றுதல்:

அடுத்து. தாவரம் நல்ல முறையில் அழகிய பூக்களைத் தருவதாக நினைத்து, சில அம்சங்களை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இது அரும்புகள் அகற்றுதல் முறையாகும். படம் 1ல் காட்டியபடி, வளரும் தாவரத்தைக் கவனிக்கும் போது, பக்கவாட்டான அரும்பிலிருந்து மூன்று பூஅரும்புகளையும் நுனியில் ஒரு பெரிய பூஅரும்பையும் கவனிக்கிறோம். எனவே நான்கு முகிழ்களும் ஆரம்பத்தில் வேறுபடுத்த முடியாமல் சேர்ந்ததாகவே தோற்றமளிக்கும். மூன்று சிறிய முகிழ்களையும் களைந்துவிடவேண்டும். இவ்வாறு பக்க அரும்புகள், மேலதிகமாக உண்டாகும் அரும்புகள், இதைத்தவிர பக்கவாட்டிகள் போன்றவற்றை நீக்குதல் அரும்பு அகற்றுதல் எனப்படும். தாவரத்தின் கணுவிற்கு மேலாக முகிளைக் களையவேண்டும். இவற்றை எடுக்காவிடின், எல்லா அரும்புகளும் பூக்களாக விருத்தியாகும். நன்கு கவனித்துவந்தால், மூன்று சிறிய அரும்புகளும் சிறிய பூக்களைக் கொடுக்கும். மைய அரும்பின் பக்கமான சிறிய அரும்புகளை நீக்கிவிட்டால், பெரிய அரும்பானது விட்டத்தில் ஒன்றரைமடங்கு பெரிய பூவினைத் தரும். எது உங்களுக்கு முக்கியம் என்பதை நீங்களே தீர்மானியுங்கள். அரும்புகள் நீக்கப்பட்டபின்னர், சில கேள்விகள் எழுகின்றன? போதிய பூக்களைத் தருவதற்கு தண்டு கணிசமான உயரமாக இருக்குமோ? உயரமாக அல்லது சுமாரான உயரமாக வைத்திருக்க வேண்டிமோ? என்ற பிரச்சனைகளை நீங்களே கவனியுங்கள். இதனை மனதில் வைத்து, தகுந்த வழியில் பூ அரும்புகளை நீக்கவும். அரும்புகள் நீக்குவது உங்களது கலையாக இருக்க வேண்டும். இங்கு. இன்னொரு தாவரத்தின் படத்தையும் நன்கு உற்றுக் கவனியுங்கள்.

நீங்கள் உயரமாகத் தாவரத்தை வைத்திருக்க விரும்பின், கூடுதலான பக்க அரும்புகளை நீக்கவேண்டாம். குறுகிய தாவரமாக வைத்திருப்பின், அடுத்தடுத்துள்ள கீழ்க் கணுக்களின் பக்க அரும்புகளை நீக்கவும். படத்தில் காட்டப்பட்ட பக்க அரும்புகள், உங்களது அரைமட்டத்திற்கு மேலாகவுள்ளவை. இவை ஓரளவு வளரக்கூடியவை. 2வது கணுவில், இவற்றை நீக்காவிடின் செடியானது உயரமாக வளரும்.

படம் 2 அரும்புகளைக்காட்டும் இன்னொரு தாவரம்

### பூச்சி புளுக்களின் தாக்கம்:

பூச்சி புழுக்களிலிருந்து தாவரத்தைக் காப்பாற்றுவது தோட்டத்திற்கு தோட்டம் வேறுபடும். தாவரம் நிலத்திற்கு மேலே வளர்ந்ததும், நத்தைகள், ஓடுகளற்ற நத்தைகள் இலகுவில் மணங்கொண்டுவிடும். பசியென்பது யாரை விட்டுவிடும். மென்மையான பகுதிகள் இரையாகிவிடும். உடனடியாக நத்தைகொல்லி மணிகளைத் தூவி விட வேண்டும். நல்ல பலன் கிடைக்கும். தாவரத்தை ஒவ்வொரு கிழமையும் அவதானிக்கவேண்டும். இலைகயின் கீழ்ப் பக்கங்களை உற்றுக் கவனிக்கவேண்டும். தாக்கம் இருக்குமாயின், உடனே பூச்சி கொல்லிகளை உபயோகிக்கவேண்டும். Aphids, Leaf hoppers, Plant bugs, Spider mites, Stalk borers, Thrips, Ear bugs. பொதுவாகக் காணப்படும் பூச்சிகள். Aphids, இலைகளின் கீழ்ப் பகுதிகளிலும், அரும்புகளின் நுனிகளிலும் இருந்து சாற்றினை உறுஞ்சுவதால், இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதையும் சுருள் அடைவதையும் காணலாம். Leaf hoppers தாக்கம், மண்ணிறமாக மாறுதல், இலையின் கரைகள் சுருளுதல். DiSyston, Malathion, Diaxinon உபயோகிக்கலாம். Plant bugs அரும்புகள், பூக்களின் ஒருபுறப் பக்கங்கள் போன்றவற்றை அரிக்கும். Malathian சிறந்தது. Spider mites இலைகளின் மேலே வலைபோன்ற பின்னல்களை ஆக்கியும் சுருள் இலைகளை மேற்கொண்டும் பாதிப்பைக் தரும். Dicofol உபயோகிக்கலாம். Stalk borers முட்டைகளைக் குளிர் காலத்தில் களைப் பூண்டின் மேல் இட்டுவிடும். இவை, சிறுபுழுக்களாக இளவேனிற் காலத்தில் தாவரத்தின் அடித் தண்டூடாக இடம் பெயர்ந்துவிடும். Carbaryl அடித்தண்டுகளுக்கு கிழமைக்கு ஒரு தடவை அடிக்கவேண்டும். Earbugs, Thrips விரிந்த பூக்களில், வெப்பமாக இருக்கும் வேளை குளிர்ச்சியான இடத்தை அடைகின்றன. பொதுவான பூச்சிகளின் தாக்கங்களுக்கு Malathian, Diazinon சிறந்தவை.

தொடரும்... ■ ■ ■

## வில்வமரம் (Family Rutaceae)

(Botanical Name: Aegle marmelos) (English Name: Bail tree)



வில்வமரம் பழங்கள் தரும் மரமாக, வெப்பமான காடுகளில், மட்டமான தரைகளிலும் மலை சார்ந்த இடங்களிலும் வளரக்கூடியது. மத்திய, தென்இந்தியாவிலும், கிழக்கு ஆசியா, இலங்கை, பாக்கிஸ்தான், பங்களாதேஸ், தாய்லாந்து போன்ற நாடுகளில் கணிசமான அளவு பயிரிடப்படுகின்றன. இந்துக்களுக்கு புனிதமான ஒரு மரமாகும். இது பொதுவாக வில்வம், பேல், கூவலம் என அழைக்கப்படும். பேரினத்தின் ஒரே இனமாக ஏறக்குறைய 18மீ உயரம் வளரக்கூடியது. மரமானது, பல முட்களையும், வாசனை தரும் பூக்களையும் கொண்டதாய் இருக்கும்.

வில்வமிலை சமயச் சடங்குகளிலும், சிவனது பூஜையிலும் பயன் படுத்தப்படும். சிவன் துதியில் “ஏக வில்வம் சிவா அர்ப்பணம்” எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. வில்வமரம், சிவனுறையும் இடமாகச் சிவராத்திரி தினத்தோடு தொடர்புபடுத்திக் குறிப்பிடுவார்கள். கனி தடித்த ஓட்டினால் மூடப்பட்டிருக்கும். கடினமான இரும்பினால் உடைத்து இனிப்பான சதையை உண்பார்கள். எனவே, இது “stone apple” எனப்படுகிறது. பட்டை, இலை, வேர் மருத்துவரீதியில் பயனுள்ளவை. இலை, ஆஸ்துமா, சளியினைப் போக்கும். பட்டை, தீவிரஇதயத்துடிப்பு, மனஎரிச்சி போன்றவற்றைக் குணப்படுத்தும். கனிகள், வயிற்றுழைவு, வயிற்றோட்டம், குடல் ஒட்டுண்ணிகள், கண்நோய், தீவிரமலச்சிக்கல், போன்றவற்றை நீக்கும். வேர் ருசியானது, காய்ச்சல், பசியின்மை, பிரசவம் பின்னர், உபயோகிக்கப்படும்.

# காசுமேலே காசுவரும் நேரமிது.



பெரி
முத்துராமன்
- நிதித்துறை ஆலோசகர் -

ஆர்.ஆர்.எஸ்.பி சீசன் முடிந்து வருமான வரி சீசன் கனடாவில் ஆரம்பமாகின்றது. பலபேருக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வளவுக்கு காசோலை கிடைக்கும் என்று தெரிந்து கொள்வதில் ஒரு ஆர்வம். ஊங்களுக்கான T4 பிப்ரவரி இறுதிக்குள் வந்திருக்க வேண்டும். அப்படி வந்திருக்கவில்லை என்றால் அதை உடனே பெற முயற்சி எடுங்கள். இந்த வருடம் ஏறத்தாழ எல்லோருக்குமே சென்ற ஆண்டை விட காசோலை அரசாங்கத்திடமிருந்து (ரெவின்யு கனடா)அதிகமாக வர வாய்ப்புள்ளது. உங்கள் வருமான வரி படிவத்தை கூட்டத்திற்கு முன்னதாக, சமர்ப்பித்தால் காசோலை இரண்டே வாரங்களில் கிடைக்கக்கூடும். பிறகு எல்லோரும் தாக்கல் செய்யும் நோக்கத்தில் தான் நீங்களும் உங்கள் வருமான வரி படிவத்தைத் தாக்கல் செய்தால் 4முதல் 6வாரங்கள் வரை காத்திருக்க நேரிடலாம்.

Basic Personal amount என்றழைக்கப்படும் வருமானவரிக்கு ஆளாகாத தனிநபர் தொகை 9600டாலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒருவரின் வரிக்கு ஆளாகும் வருமானம் 2007ல் 9600டாலர்களுக்கு மேல் இருந்தால் மட்டுமே வரி கட்ட வேண்டும்.

அதற்கும் குறைவு என்றால் வருமான வரி கட்டத் தேவையில்லை. அதேசமயத்தில் ஆரம்ப வரி விகிதம் 15-5 சதவீதத்திலிருந்து 15சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. உங்கள் மனைவியோ, கணவரோ வேலைக்குச் சென்று வருமானம் ஈட்டாமல் இருந்திருந்தால், 2007க்கு மேலும் 9600டாலர்களை வரியிலிருந்து விலக்காகப் பெற முடியும். உங்களுக்கான முழுமையான வரிச் சலுகைகளைத் தெரிந்துகொள்ள ரெவின்யு கனடா இணையத் தளத்துக்குச் செல்லலாம். அல்லது உங்கள் வரிப்படிவத்தைத் தயாரிக்கும் கணக்காளரைச் சந்தித்து விவரங்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

ஆமெரிக்காவில் வீட்டு விலைகள் மேன்மேலும் விழுந்து கொண்டேயிருக்கின்றது. இந்த நிலை கனடாவில் வசதிபடைத்த சில பல பேரை, தமிழர்களையும் சேர்த்தே, அமெரிக்காவில் வீடு வாங்கத் தூண்டுகின்றது. அல்லது சிந்திக்க வைக்கின்றது. கனடிய டொலரின் மதிப்பும் அமெரிக்க டொலரின் மதிப்பும் ஏறத்தாழ சமநிலையிலேயே இருந்து வருகின்றது. இதுவும் இத்தகைய சிந்தனைப் போக்குக்கு ஒரு காரணமே. மேலும் அமெரிக்காவில் வீட்டு விலைகள் முப்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைவாக உள்ளது. பலபேர் கடனைத் திருப்பிக் கட்டாத நிலையில் அமெரிக்க வங்கிகள் வீடுகளை மலிவாகவும் விற்கத் தயாராக உள்ளன. இவ்வாறு கனடியர்கள் அமெரிக்காவில் வீடு வாங்கும் மாநிலங்கள்: ப்ளோரிடா, அரிசோனா, டெக்ஸாஸ், கலிபோர்னியா. கனடாவில் குளிர் மிகுந்த மாதங்களில் அமெரிக்காவில் மிதமான தட்ப வெப்பத்தில் காசிருந்தால் வாழ்க்கை நடத்தலாமே!



இவ்வாறு அமெரிக்காவில் அவசரப்பட்டு ஒருசில காரணங்களுக்காக வீடு வாங்கினால் பிறகு நிதானமாக வேதனைப்பட வேண்டிய காலங்களும் வரலாம். சிந்தித்து செயல்பட வேண்டும். செயல்பட்ட பின் சிந்திக்கக் கூடாது. ஓரிடத்தில் வீடுவாங்கு முன் சில காலம் அங்கு வாடகைக்குக் குடி இருந்து பலவற்றையும் ஆராய்ந்து, எல்லாம் பிடித்திருந்தால் பிறகு விலைக்கு வாங்கலாம். குறிப்பாக இந்தவிதி அமெரிக்காவில் வீடு வாங்க நினைக்கும் கனடியர்களுக்குப் பொருந்தும். அமெரிக்க குடியுரிமை பெறாத மக்களுக்கு, வீடு இருந்தாலும், இல்லை என்றாலும் அமெரிக்காவில் ஆறுமாதங்கள் வரை மட்டுமே தொடர்ந்து வசிக்க பொதுவில் விசா வழங்கப்படுகின்றது. பனிப் பறவைகளும், மற்ற முதலீட்டாளர்களும் அமெரிக்க வரிச் சட்டங்களையும் புரிந்து கொண்ட பின்னரே செயல்பட வேண்டும்.

கனடாவிலோ நிலைமை முற்றிலும் மாறாக உள்ளது. வீட்டுவிலைகள் தொடர்ந்து ஏறிக் கொண்டுதான் இருக்கின்றன. வீட்டுவிலைகள் விழும் விழும் என்று எண்ணி காத்திருந்த முதல் தாம் வீடு வாங்கும் சில பேர் ஏமாற்றத்தில் இருப்பதும் தெரிகின்றது. முதல் முறை வீடு வாங்குபவர்கள், வாடகை வீட்டுக்குப் பதில் சொந்த வீட்டை வாங்குவதுதான் சிறந்தது. ஆதற்காக கனடாவில் வீட்டுவிலைகள் குறையாது என்று நான் உத்திரவாதம் தர இயலாது. குடியிருக்க ஒரு வீடு தேவை. அது ஏன் சொந்த வீடாக இருக்கக் கூடாது? வாடகை வீட்டை விட சொந்த வீட்டுக்குச் செலவு கூடத்தான் வரும். அது சமாளிக்கக் கூடியது என்றால் சொந்த வீடு வாங்குவதே உத்தமம். இரண்டாவது வீடு வாங்குபவர்கள் வேண்டும் என்றால் பொருளாதார ஏற்ற இறக்கங்களையும், லாப நட்டத்தையும் சற்றே கூடுதலாகக் கவனத்தில் கொண்டு முடிவு எடுக்கலாம்.

REMAX நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலின் படி கனடாவில் கடந்த பத்து ஆண்டுகளில் சராசரியாக வீட்டு விலைகள் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கின்றது. சதவீதத்தில் சொல்ல வேண்டும் என்றால் வீட்டு விலை கனடாவில் கடந்த பத்தாண்டுகளில் 98.7சதவீதம் உயர்ந்திருக்கின்றது. ரொறன்டோவில் இந்த காலகட்டத்தில் வீட்டு விலை ஏற்றம் 78.1சதவீதம் ஆகும். கனடாவிலேயே மிக உயர்ந்த விலை ஏற்றம் 20.3சதவீதம் எட்மண்டனில் இருந்திருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக அதிகப்படியான வீட்டு விலை ஏற்றமான 188.9 சதவீதம் கல்கரியில் இருந்திருக்கின்றது. அடுத்து வரும் பத்து வருடங்களில் எப்படி இருக்கும்? இன்றைய சூழ்நிலையில் அதைக் கணிப்பது சற்றே கடினம்.

பொருளாதாரம் முற்றிலும் மந்தப்படாத அளவில், புது குடிவரவாளர்கள் ஆண்டு தோறும் அதிகரிக்கும் வகையிலும் இனி வரும் ஆண்டுகளிலும் வீட்டுவிலைகள் தொடர்ந்து குறைந்த அளவிலாது கூடும் என்றே தோன்றுகின்றது.

முதன்மை வீட்டை விற்பதினால் கிடைக்கும் லாபம் வரிக்கு கனடாவில் ஆளாவதில்லை என்பது பலபேருக்கும் தெரிந்திருக்கலாம்.

உங்கள் ஆர்.ஆர்.எஸ்.பி. முதலீடுகளும் முதல் தரம் வீடு வாங்கும்போது கை கொடுக்கும். ■ ■ ■

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசகர்
நிதித்துறை ஆலோசனைகளுடன்
கூடிய சேவை

Scotiabank™

Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Financial Advisor
Direct Line: 416.439-3040 x: 2010

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL



▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416 • 291 • 3997



"The Home Team"
Shan Thayaparan
Sales Representative
Direct: 416.567.7675
"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"
Your peace of mind is our goal
Call Us First!
Kumar Muthusamy
Sales Representative
Direct: 416.518.0118
Viki Velauthan
Sales Representative
Dir: 416.457.7162
PIZZA STORE
PIZZA RESTAURANT
Very Good opportunity to Start Your Family Business Pizza Store for more than 30 Years. Possibility for Catering or Deli. Low Rent, Good Sale, No Royalty Fees, 40 Seats allowed
$59,900
PLAZA
TIMHORTONS & ESSO
EXCLUSIVE
VERY PROFITABLE PLAZA WITH TIMHORTONS, ESSO, AND NINE OTHER BUSINESS WITH LONG TERM LEASES.8%CAP RATE.
$3,750,000
14th/9th Line
Brand New House. Never Lived In. Hardwood Floor Throughout
14th/9th Line
$379,900
Location! Access To Public Transportation, Schools, New Plaza; Lot's Of $$$ Spent On Upgrades
Warden/St.Clair
$269, 900
Location! 3 Bed Rooms Close to Subway, Schl, Shp.
Meadowale & Sheppard
$239,900
Across Fr. School. Steps To Rouge Valley Conservation. Home Backs On To Forest Like Setting w/ 3+1 Bedrooms
McCowan & Sheppard
$144,900
Excellent Location! Close to Scar. Centre! 2 Bedroom Unit
Lawrence & Morningside
Well Maintained, Stunning,Good Condition; Close to Plaza
Elderbank/Bovard
All Brick 3-Bedroom With Built-In Garrage, Backing Onto Wonderful
Bayley/Pick Beach
$319,999
Fully Fenced Backyard, Potential For Separate Inlaw Apt. W/O To Garage
9th Line/16th Ave
$379,900
Great Location For This Cozy Detached 3 Br.
Close To Schools, Hospital, Go Train
Middlefield & Denison
Home In Prestigous Loc! Corner Lot. 4 Bdrm House With 1 B/R Basement Apart.
We will help you to get financing for your Business or Home
Visit Us @ www.shan123.com
HOMELIFE
GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
HomeLife GTA
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is independently owned and oprerated
Right house is a Sweet Home


நட்பான சேவைக்கும்
உங்கள் மனம் நிறைய
வீடு, வியாபார நிலையம்
வாங்க, விற்க...
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/ Future Realty Inc., Brokerage
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com
Pirabaa Nallathamby
Sales Representative
416-399-8093



சிகையலங்காரம் உங்களை
மெருகூட்டுகிறது,
எமது அலங்காரம் உங்கள்
இல்லத்தை உருமாற்றுகிறது!
visit or call
www.4168316397.com
digi Media
அயலவரையும் ஆச்சரியப்படுத்த அழையுங்கள்...
Best Way
BLINDS & SHUTTERS
DISCOVER THE WORLD FROM YOUR WINDOW
www. bestwayblinds.com
bestwayblinds@yahoo.ca
FREE ESTIMATE
8 Shaddock Cres, Toronto, ON
416.831.6397, 416.269.6117

# மக்டொனால்ட் உணவகம்

## (McDonald's Restaurant)

### அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

தகவல் தொடர் - 15



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

அமெரிக்காவில் உள்ள கலிபோர்ணியா மாகாணத்தில் ஆரம்பமாகி.... இன்று..!

- உலகின் 120 நாடுகளில் கிளை உணவகங்கள் எனப் பரந்து இன்று சர்வதேச ரீதியில் மொத்தம் 31,000 உணவகங்கள்.
- கனடாவில் 1200 உணவகங்கள், 77,000 ஊழியர்கள்.
- இந்தியாவில் 56 உணவகங்கள், 2000 ஊழியர்கள்
- இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.
- இரு சகோதரர்களின் ஆரம்பம் - ஒரு திறமைசாலியின் பிரவேசம்! வீழ்ச்சி என்பது இல்லாத ஒரு வளர்ச்சி. ஒரே கட்டிட வடிவமைப்பு, மஞ்சள் நிற பதாகைகள்! சகல நாடுகளிலும் ஒரே உருவக அமைப்பு. விரைவாகவும், துப்புரவாகவும் இலகுவாகவும் சுலபமான முறையிலும் தயாரித்து வழங்கப்படும் உணவு வகைகள், குளிர்பானங்கள். அதுவே இதன் வர்த்தகக் குறியீடு (Trade Mark).

### மக்டொனால்ட் உணவகத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்

அயர்லாந்தினைப் பூர்வீகமாகக் கொண்டு, அமெரிக்காவில் குடியேறிய தம்பதியினரின் இரு புத்திரர்கள். இவ்விரு அண்ணன் தம்பியர் தங்கள் குடும்பப் பெயரான மக்டொனால்ட் என்னும் பெயரில் 1940ம் ஆண்டில் இருந்து “மக்டொனால்ட் ஹம்பேர்கர்ஸ்”(Mc Donal's Hamburgers) என்னும் பெயரில் விரைவாக உருவாக்கப்படும் ஹம்பேர்கர் உணவு, உருளைக் கிழங்குப் பொரியல் (French Fries) குளிர்பானம் ஆகியவற்றைத் தயாரித்து விநியோகிக்கும் உணவகம் ஒன்றினை அமெரிக்காவில் உள்ள கலிபோர்ணியா மாகாணத்தில் நடாத்திவந்தபோது, அப்போருட்களை வாங்குவதற்காக நிற்கும் வாடிக்கையாளர் வரிசை நீண்டுகொண்டே போனது.

இவ்விரு சகோதரர்களும் தமது சொந்த உணவகத்தினை மட்டும் திறம்பட நடத்தினார்களே தவிர, அதனை ஏனைய இடங்களுக்கு விஸ்தரிக்கும் திறமையோ சக்தியோ அவர்களுக்கு அந்தக் காலத்தில் இருக்கவில்லை.

பல வருடங்கள் தொடர்ந்த அவர்களது வர்த்தகத்தில், 1954ம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு புதிய மனிதனின் பிரவேசமே இன்று இந்நிறுவனம் உலகம் முழுவதும் வீறுநடை போடவும், இந்நிறுவனத்தின் வர்த்தகத்தில் பல கோடீஸ்வரர்கள் உருவாகவும், இந் நிறுவனத்தின் வரலாற்றில் அம்மனிதனின் பெயர் பதிவாகவும் காரணமாயிற்று.

தமது 52ஆவது வயதில் மக்டொனால்ட் சகோரர்களுடன் இணைந்து செயல்பட ஆரம்பித்த திரு. றேமன்ட் அல்பேர்ட் கிறோக் (Mr. Raymond Albert Kroc சுருக்கமாக திரு.றே கிறொக் என அழைக்கப்பட்டார். (பிறப்பு 1902, மறைவு: ஜனவரி 14, 1984) என்பவர் முதலாம் உலக மகாயுத்த காலத்தில் அம்புலன்ஸ் வண்டியின் சாரதியாக, பின்னர் “பேப்பர் கப்” விற்பனை செய்யும் விற்பனையாளராக பணி புரிந்தவர். அதனைத் தொடர்ந்து, அவரது விற்பனை முகவர் தொழில் வேறு உருவில் மாறியது.

### 1954ம் ஆண்டு!

பால், பழங்கள், ஐஸ்கிறீம் போன்றவற்றைக் கலந்து குளிர்பானமாக உருவாக்கும் உபகரணத்தை (Milk Shake maker called the “Multi mixer”) அவர்களின் கம்பனியின் சார்பில் அமெரிக்கா முழுவதும் விற்பனை செய்யும் ஏகபோக உரிமையினை எடுத்து, துரித கதியில் அதனை விற்பனை செய்வதனை முன்னெடுத்துவந்த காலம்! இவ்வுபகரணத்தினை விற்பனை செய்வதற்காக கலிபோர்னியாவில் இருந்து இயங்கிவந்த மக்டொனால்ட் சகோதரர்களின் நிறுவனத்திற்கு வந்தபோது, அங்கு திரண்டு வரும் வாடிக்கையாளர் வரிசையினை அவதானித்தார். அமோகமான முறையில் வியாபாரம் நடக்கும் இந்நிறுவனத்தின் கிளை நிறுவனங்களை அமெரிக்காவின் ஏனைய இடங்களுக்கும் பரவலாக்கினால் ஒவ்வொரு கிளை நிறுவனமும் கொடிகட்டிப் பறக்கும் என்பது அவரது மனதில் சந்தேகத்திற்கு இடமில்லாது தெரிந்தது. ஒவ்வொரு கிளை நிறுவனத்திற்கும் எட்டு குளிர்பான கலப்பு உபகரணத்தினை விற்பனை செய்யலாம் என்பதும் அவரது தீர்க்கதரிசனமான மனதில் உருவாகியது.




Photo: Vincika Karuna

கிளை நிறுவனத்தினை விஸ்தரிக்கும் திறமை, ஆற்றல் மக்டொனால்ட் சகோதரர்களுக்கு இல்லாததால் இவர்களுக்கு இவருடன் ஏற்பட்ட நல்லுறவின் ஆரம்பம், திறமையுள்ள இவரைத் தமது நிறுவனத்தினுள் ஒரு பங்குதாரராகச் சேர்த்து, அமெரிக்காவின் ஏனைய இடங்களில் கிளை நிறுவனங்களை விஸ்தரிக்கும் முகவராக முழு அதிகாரத்தினையும் இவருக்குத் தங்கள் கம்பனி சார்பில் வழங்கியிருந்தனர்.

அந்த தனி மனிதனின் பிரவேசம்! அவரது தனிப்பட்ட ஆற்றல், அதி தீவிர முயற்சி! மக்டொனால்ட் சகோதரர்களின் வர்த்தகத்துடன் சேர்ந்து ஒரு கூட்டு முயற்சி. முதலில் கலிபோர்னியா மாகாணத்தில் விஸ்தாரமாகி, தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் வீறு நடைபோட்டு, தாமும் இவ் வர்த்தகத்தில் ஒரு செல்வந்தராகி, இன்று உலகம் முழுவதும் இவ்வர்த்தக நிறுவனத்துடன் சேர்ந்து நடாத்தியவர்கள் ஏராளமானோர் பின்னால் தொடர்ந்து கோடீஸ்வரர்கள் ஆவதற்கு வழிகாட்டிய ஒரு திறமைசாலியவர்!

1955ம் ஆண்டில் முதல் கிளை நிறுவனம் திறக்கப்பட்டது.. இந்நிறுவனத்தின் பெயரில் இதனை எடுத்து நடாத்தும் உரிமை (Franchise Rights) இவர்களின் கண்காணிப்பில், கம்பனியின் கட்டுப்பாடுகளுடன் ஏனைய உணவு நிறுவனங்களுக்கும், பல திறமையுள்ள தனியாருக்கும் வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்நிறுவனத்தின் உரிமையினை எடுத்து நடாத்த 950 அமெரிக்க டொலர் கட்டணமும், விற்பனையில் 1.9சத வீதம் பெயருக்கு உரிமையாக (Royalty) வழங்குதல் வேண்டும் என்ற உடன்படிக்கையில் இதனை நடாத்தும் உரிமைகள் பலருக்கும் பரவலாகவழங்கப்பட்டது. (ஆனால் ஒன்று! அன்று 950 டொலர்களுக்கு வழங்கிய உரிமை இன்று ஒரு மில்லியனுக்கு மேல்!)

அடுத்த நான்கு வருடங்களில் 228 கிளை உணவகங்கள் அமெரிக்காவின் பல இடங்களில் திறக்கப்பட்டு மாதம் 37.6 மில்லியன் அமெரிக்க டொலர் விற்பனையினை எட்டியது.

ஹம்பேகர், உருளைக் கிழங்குப் பொரியல், பால் ரச குளிர்பானங்கள் என இலகுவாகவும், தயாரிக்கும் உணவு வகைகளில் ஆரம்பமாகி மேலும் சில உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

விற்பனையும் நிகர லாபமும் சகல கிளை நிறுவனங்களிலும், அதிகரித்து, நடாத்துபவர்கள் மேலும் கிளை நிறுவனங்களை எடுத்து நடாத்தும் உற்சாகத்தினை அதிகரித்துக் கொண்டு போனதே தவிர, குறைந்ததாக இல்லை.

1965ம் ஆண்டு முதன் முறையில் நியூயோர்க் பங்குச் சந்தையினூடாக ஏராளமான பொது மக்களையும் தங்களிடம் இருக்கும் பணத்தினை இந்நிறுவனத்தில் பங்குகள் வாங்கி முதலீடு செய்ய அழைத்ததில் இருந்து, இதில் முதலீடு செய்பவர்களும் அதிகரித்துக்கொண்டே போனார்கள். 1975இல் முதன் முறையில் வாகனத்தில் இருந்தபடி உணவு வாங்கும் இலகுவான முறை (Drive thru) அரிசோனா மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இம்முறை ஏனைய மாநிலங்களுக்கும் பரவலாக்கப்பட்டது.

### கனடாவில் மக்டொனால்ட் உணவகத்தின் பிரவேசமும் வளர்ச்சியும்

1967ம் ஆண்டு, யூன் மாதம் 1ம் திகதி! கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் தலைநகரான ‘றிச்மண்ட்’ நகரில் அதே வடிவமைப்பில் முதல் கிளை நிறுவனம் ஆரம்பமாகி, இன்று இறுதியாக மார்ச் 2007 இல் எடுக்கப்பட்ட புள்ளி விபரப்படி, இந் நிறுவனத்தின் 1400 உணவகங்கள் கனடாவில் இயங்குகின்றன. 77,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். விற்பனை நிகரலாபம் என்பது குறைந்தபாடில்லை.

இந்நிறுவனத்தின் விற்பனையினை எடுத்து நடாத்தும் உரிமை பெற்றவர்கள் வளர்ந்து வரும் செல்வந்தர்கள்! கோடீஸ்வரர்கள்! கனடாவில் மிக மும்முரமாக விற்பனை நடாத்தும் கிளை நிறவனமாக ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள கேம்பிரிட்ஜ் நகரில் 401 அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு அருகில் உள்ள நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

### சோவியத் ரஷ்யாவில் மக்டொனால்ட் உணவகத்தின் பிரவேசம்

முன்னைய காலங்களில் அமெரிக்காவின் எந்த ஒரு அமைப்பும் சோவியத் ரஷ்யாவினுள் காலடி எடுத்துவைக்க நினைத்தே பார்க்க முடியாத காலம். ஆனால், இந் நாடுகளின் பனிப்போர் முடிவடைந்து பாதை நிறுத்தப்பட்டதுதான் தாமதம் 1990ம் ஆண்டு! சோவியத் ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோ நகரில் முதன் முதலில் இதன் நிறுவனம் திறக்கப்பட்டது.

30ம் பக்கம் பார்க்க...

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

# மக்டோனால்ட் உணவகம்...

29ம் பக்கத் தொடர்ச்சி...

அங்கு திரண்ட வாடிக்கையாளர்களும், விற்பனையும் கனடாவின் தொலைக்காட்சியிலும் பொதுசன தொடர்பு சாதனங்களிலும் பிரபல்யமாக காட்டப்பட்டது.

## இந்தியாவில் மக்டொனால்ட் உணவகத்தின் பிரவேசம்

1996ம் ஆண்டு அக்டொபர் மாதம். இந்தியாவில் உள்ள இரு கம்பனிகள் இந்நிறுவனத்துடன் 50:50 என்ற விகிதத்தில் கூட்டு முயற்சியா உடன்படிக்கை கைச்சாத்திட்டு, இக்கம்பனிகளிடம் இதனை ஆரம்பிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

மும்பாய் நகரில் முதலில் திறக்கப்பட்டு, இன்று 56 கிளை நிறுவனங்கள். 2000 ஊழியர்கள் என இந்தியாவின் பெரும் நகரங்களில் இயங்கிக்கொண்டே உள்ளன. இது இந்தியாவில் திறக்கப்பட்ட காலம் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி புரிந்த காலம். இந்து மத அமைப்புகள், மாட்டு இறைச்சியின் விநியோகம் இந்நிறுவனத்தின் பிரவேசத்தினால் இந்தியாவில் உருவாகப் போகின்றது என பயங்கரமாக எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த காரணத்தினால், அரசு அங்கு இயங்கும் உணவகங்களில் மாட்டு இறைச்சி, பன்றி இறைச்சி மட்டும் சேர்க்கக் கூடாது என சட்டம் விதித்திருந்தது.

## இலங்கையில் - கொழும்பு நகரிலும் மக்டொனால்ட் உணவகத்தின் பிரவேசம்

இலங்கையில் இயங்கும் கம்பனி ஒன்றுக்கும் கூட்டு முயற்சி உடன்படிக்கையில் உரிமை வழங்கப்பட்டு, 1998ம் ஆண்டு முதல் தலைநகரில் இப்பெயரில் உணவகம் ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாடுகளில் உள்ள அதே மஞ்சள் கலர் அமைப்பு! கட்டிட வடிவமைப்பு! உள் அமைப்புகள்! உணவின் தன்மைகள்! எதிலும் மாற்றம் இல்லை!

## கனடாவில் மக்டொனால்ட் நிறுவனம் செய்யும் சமூகப் பணிகள்

- நோயாளியாக உள்ள குழந்தைகளின் பெற்றோர் தங்க இலவச தங்கு மனைகள். (Ronald McDonald house charities of Canada)

1982ம் ஆண்டு இத் தங்குமனைகள் கனடாவில் ஆரம்பிக்கப்பட்டது. அனேகமாக குழந்தைகள் மருத்துவ மனைகளுக்கு அருகில் சேர்ந்து கனடாவின் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மருத்துவ மனைகளில் நோயாளியாக தங்கியிருக்கும் காலங்களில், அல்லது உடல் ஊனமுற்ற குழந்தைகளுடன் இருந்து மருத்துவ நிலையத்திற்கு தினமும் போய்வர வேண்டிய நிலையில் உள்ள பெற்றோர் இலவசமாக அல்லது மிகக் குறைந்த கட்டணத்தில் இங்கு தங்கும் வசதி மற்றும் ஏனைய பல வசதிகள் என வழங்கப்பட்டு வருகின்றது. ரொறன்ரோவில் உள்ள இதன் விலாசம் பின்வருமாறு:

**Toronto's Ronald McDonald House**
**26, Gerard Street East,**
**Toronto, Ontario M5B 1G3**
**Phone: 416 977 0458**
**Fax: 416 977 8807**

- பொது நிறுவனங்களுடன் சேர்ந்து இயங்கும் வருடாந்த நிதி சேகரிக்கும் வைபவம் (Mc Happy Day)

கனடாவில் இயங்கும் இந்நிறுவனத்தின் 1400 உணவகங்களில் சுமார் 65.5 வீத மானவை ஒவ்வொரு தனி நபராலும் (Franchisee) எடுத்து நடாத்தப்படுபவை ஆகும். இதனை நடாத்துபவர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள சமூக நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து "மக் மகிழ்ச்சி நாள்" (Mac Happy Day) என்னும் பெயரில் அநேகமாக கோடை காலங்களில் நிகழ்ச்சிகளை நடாத்தி நிதி சேகரித்து, பல்வேறு வகையான சமூக பணிகளுக்கு உதவுவது வழமையாகும்.

இவ்வுணவகத்தின் உரிமையினை எடுத்து கிளை நிறுவனம் நடாத்த விரும்பினால் (Franchising Rights) - இதனை முதன் முதல் பெற விரும்பினால் - இதன் ஆரம்ப செலவாக முதலில் கொடுக்க வேண்டிய தொகை 45,000 டொலர்களாகும். அதற்கு



மேலாக, இதனை ஆரம்பிப்பதற்கு பத்து லட்சம் தொடக்கம் பன்னிரண்டு லட்சம் டொலர் வரை நிறுவனத்தின் அளவினைப் பொறுத்து தேவைப்படும். இத்தொகை கட்டணத்தில் ஒரு முழு கிளை நிறுவனமே உருவாக்கிக் கொடுக்கப்படும். இதில் 40 வீதம் சொந்தப் பணமாக கொண்டுவருதல் வேண்டும். மிகுதி 60 வீதத்தினையும் வங்கிகளில் கடனாகப் பெறலாம்.

இவ்வுரிமையானது ஏராளமான நிபந்தனைகள், சட்ட ரீதியான உடன்படிக்கைகளுடன் கைச்சாத்திடப்பட்டு, 20வருடங்களுக்கு வழங்கப்படும்.

மொத்த வருமானத்தில் 4சதவீதம் மாதா மாதம் உரிமைக் கட்டணமாக கம்பனியின் பெயருக்காக செலுத்த வேண்டும்.

கட்டிடம், உபகரணங்கள் ஆகியவற்றின் மாத கட்டணமும் மொத்த விற்பனையில் ஒரு சிறு விகிதத்தில் அறவிடப்படும்.

ஏற்கனவே நடந்துகொண்டிருக்கும் நிறுவனத்தினை அதனை எடுத்து நடாத்திக் கொண்டிருக்கும் உரிமையாளரிடம் இருந்து வாங்கும்போது இதன் விலைகள் வேறுபடுகின்றன. ஆனால், இதன் தலைமையகம் இவ்வுரிமையினை வழங்கும்போது, புதிய நபர்களை விட ஏற்கனவே உணவகம் நடாத்திக்கொண்டிருப்பவர்களுக்கே உரிய சந்தர்ப்பங்களை அதிகம் கொடுப்பது வழமையாகும். (ஏனெனில், புதிய நபர்கள் கம்பனியின் பெயரை ஏதாவது தவறுகளினால் பாழாக்கிவிடுவார்களோ என்ற சந்தேகம் காரணமாக இருக்கலாம்.)

புதிதாக எடுத்து நடாத்தப் போகின்றவர்களுக்கு திறமையான பயிற்சி நெறிகளை இச் செலவினுள் வழங்கி ஆரம்பித்து வழி நடாத்துவார்கள்.

இவ்வுரிமையினை எடுத்து கனடாவில் நடாத்த விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம் பின்வருமாறு:

**McDonald's Restraurants of Canada Ltd.,**
**01, McDonald Place,**
**Toronto, ON, M3C 3L4**
**Tel: 416 443 1000**

மக்டொனால்ட் நிறுவனத்தில் பணத்தினை முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு: நியூயோர்க் பங்குச் சந்தை மூலம் பங்குகள் வாங்கி இந்நிறுவனத்தில் முதலீடு செய்யலாம். இக்கட்டுரை எழுதும்போது, ஒரு பங்கின் விலை 53.35 டொலர்களாகும்.

2007ம் ஆண்டின் ஆரம்பத்தில் இக்கம்பனியின் பங்கு ஒன்றின் விலை 45.00 டொலரிலிருந்தது. கனடாவில் உள்ள வங்கிகளில் இப்பங்குகளை வாங்கி விற்கும் கணக்கு ஒன்றினைத் திறந்து, அதில் பணத்தினை வைப்புச் செய்து, அவ்வங்கியினூடாக பங்குகள் வாங்கலாம். விற்பனை செய்யலாம். ஒவ்வொரு வாங்கல், விற்றலுக்கும் வங்கி-க்கு ஒரு சேவைக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இந்நிறுவனத்தின் பங்குகளின் வரலாற்றில் பாதிப்புகள் என பெரிதாக இருந்ததாகத் தெரியவில்லை.

## அமெரிக்காவில் இயங்கும் இந்நிறுவனத்தின் தொழில்துறை சார்ந்த பல்கலைக்கழகம் Hamburger University

அமெரிக்காவில் இயங்கும் கம்பனிகளின் தொழில்துறை சார்ந்த பல்கலைக்கழகங்களில் (One of the Corporate University) இதுவும் ஒன்றாகும். 1961இல் ஆரம்பிக்கப்பட்ட இது பின்வரும் விலாசத்தில் இயங்குகிறது.

**Hamburger University**
**2812, Jorie BLVD**
**OAK Brook**
**Illinois**
**1 - 800 – 244 - 6227**

- இந்நிறுவனம் தொடர்பான வர்த்தக கற்கை நெறிகள் யாவும் சுமார் இருபத்தியெட்டு மொழிகளில் மொழி பெயர்ப்புடன் பயிற்றுவிக்கப்படுகின்றது.
- வருடந்தோறும் உலக நாடுகளில் உள்ள பலரும் வந்து சேர்ந்து படித்து, பயிற்சிகள்பெற்று, ஒவ்வொரு வருடமும் சுமார் 5000 பேர் பட்டம் பெற்றுச் செல்கின்றனர்.
- முக்கியமாக இத்தொழிலை எடுத்து நடாத்த விரும்புபவர்களுக்கு இப் பல்கலைக் கழகத்தின் பட்டம் எந்த நாட்டிலும் உதவியாக இருக்கும்.

## மக்டொனால்ட் நிறுவனம் எதிர்கொண்ட சட்டரீதியான வழக்குகளும் பிரச்சினைகளும்:

அமெரிக்காவில் உருவாகி, உலகில் 120 நாடுகளில் இயங்கும் இந்நிறுவனம் பல நாடுகளில் பல நீதிமன்ற வழக்குகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டது.

1. மக்டொனால்ட் நிறுவனத்தினால் தொடரப்பட்ட அவதூறு வழக்குகள் - உதாரணமாக 1990ம் ஆண்டு, இங்கிலாந்தில் இயங்கும் இந்நிறுவனம் சூழல், சுற்றாடல் தொடர்பாக முகாம் நடாத்தியபோது, "மக்டொனால்ட்-டுக்கு என்ன நடந்தது?" (What's wrong with McDonalds?) என்னும் தலைப்பில் இருவரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பாக அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கு ஏழரை வருடங்களாக இங்கிலாந்து நீதிமன்றத்தில் நடைபெற்று இறுதியாக இந்நிறுவனத்திற்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

2. மக்டொனால்ட் நிறுவனத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்: இங்கிலாந்து, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பல சந்தர்ப்பங்களில் சிலசில வடிவங்களில் இவ்வழக்குகளும் பிரச்சினைகளும் ஏற்பட்டன.

- தொழிலாளர் உரிமைப் பிரச்சினைகள்
- விளம்பரங்களினால் ஏற்பட்ட பிரச்சினைகள்
- உடல்நிலை பாதிக்கப்பட்ட பிரச்சினைகள்

என ஏராளமான சம்பவங்களை இங்கு குறிப்பிடலாம்.

3. மக்டொனால்ட் நிறுவனத்தின் வர்த்தகக் குறியை (Trade mark & Copy right Disputes) உபயோகித்தவர்களுக்கு எதிரான வழக்குகள்:
'மக்' (Mac) என்னும் இவர்களின் பெயரினை அமெரிக்கா, இங்கிலாந்து, டென்மார்க், மலேசியா, தென்னாபிரிக்கா போன்ற இடங்களில் உபயோகித்த ஏனைய வர்த்தகங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகளை இங்கு குறிப்பிடலாம்.

■ ■ ■


EXPERT BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# “என்ன.... Mortgage Insurance Bankஇல செய்தாச்சு.

**Life Insurance** ஏற்கனவே இருக்கு. பிள்ளையளின்ர படிப்புக்கும் **RESP**கட்டுறம். பத்தாதுக்கு கொடிய நோய் வந்தா சுளையா தருவாங்களாம் எண்டு **Critical Illness Insurance**ம் கொஞ்சம் போட்டிருக்கு. பேந்தேனப்பா Phone பண்ணினவன்”

“ஏதோ **RRSP**யாம். Bankஐ விட **Mortgage Insurance**ம் **RRSP**ம் Insurance Companyல செய்யிறதுதான் நூறு வீதம் நல்லமாம்”

“அப்பிடியா? எங்க அந்த Numberஐ சொல்லு”

“அப்பிடியே அம்மா, அப்பாவோடை அலுவலையும் கதையுங்கோவன். அதுதானே எல்லாத்தேயும் விட முக்கியம். ...”

“ம்.. உழைக்கிறதில அரைவாசி இதுகளுக்கே சரியாப்போகுது. சரி அந்த Numberஐ தாருமன்”





**416.371.7776**

**Insurance Broker**

# Guna Selliah

digi Media

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com


Award 2005
Award 2003 - 2006
Award
இந்த மண்ணில் உங்களுக்கோர்!
சுய அடையாளம் தேவை!
அது தனித்துவமானதோர் வீடு
Award 2006
Award 2007
RAJEEF KONESWARAN
Broker
DIR: 416.568.1078
RE/MAX
#1 NEGOTIATOR
SASI KUNARATNAM
Sales Representative
DIR: 416.754.HOME
"The Names Friends Trust & Recommend"
Why Sell with Rajeef and Sasi
✔ As low as 1% commission*
✔ Buy a home with "0" Down
✔ Get up to $10,000 loan no interest for 60 to 90 days*
✔ Your house SOLD in 90 days or FREE commission*
✔ Buy or sell with us and use our moving truck FREE*
✔ You can't afford your payment? House needs renovation? Having a hard time selling? – We will sell or buy it!*
✔ #1 Tamil Realtor in Re/Max
✔ 2 Full-time top producing realtors
✔ Our team of professionals for the same price as hiring a single agent
✔ We know more because we sell more
✔ Your home listed in full page advertisement until SOLD
✔ 24 Hours Rogers TV advertisement
✔ Enter to win a brand new 2008 Ford Escape Hybrid*
WIN ME!
HYBRID
We are Going Green
WIN a Brand New 2008 Ford Escape HYBRID SUV!!
Join our happy family of buyers and sellers who close a deal with Rajeef and Sasi in 2008 and have your name entered on a ballot for a draw to WIN a Brand New 2008 Ford Escape HYBRID SUV.
Call Rajeef and Sasi Today!
RAJEEF & SASI SOLD OVER
110 HOMES IN 2007
90 HOMES IN 2006
$369,900
JUST LISTED & SOLD!
MORNINGSIDE/OLD FINCH
4 Bedroom, 4 Washroom, Stunning, Detached, Bright modern concept, New Hdwd floor, New roof.
$132,300
SOLD
NEILSON/ELLESMERE
4 Bedroom, 3 Washroom, Ideal for first time buyers, Spacious and Bright rooms, Close to School & Mall.
$339,900
SOLD
MORNINGSIDE/FINCH
3 Bedroom, 3 Washroom, Gorgeous, Detached, Open concept dream kitchen, You won't be dissapointed!
$339,900
JUST LISTED
KEELE/SHEPPARD
Great investment opportunity, Commercial Condo Unit for sale
$469,900
JUST LISTED
MEADOWALE/SHEPPARD
4+2 Bedroom, 4 Washroom, Immaculate Detached, Door thro garage, Oak Stairs, Sep ent to bsmnt.
$236,500
JUST LISTED
MARKHAM/SHEPPARD
Investors favorite! 4 Bedroom townhouse, High demand location.
$424,900
JUST LISTED
MEADOWVALE/SHEPPARD
4 Bedroom, 3 Washroom, Absolutely Gorgeous, Detached, Interlock Walkway, Maple Stairs, Tons of major upgrades!
$426,900
JUST LISTED
MEADOWVALE/SHEPPARD
4 Bedroom, 3 Washroom, Detached, Absolutely Stunning, Immaculate, 2-Storey, 9 Ft Ceiling, Jaccuzzi, Pot Lights, Eat-in Kitchen.
$384,900
REDUCED
MIDDLEFIELD/DENISON
4+1 Bedroom, 4 Washroom, Prestigious, Corner Location, Separate entrance to basement, Walk to School/Mall/Park
$394,900
JUST LISTED
HWY 2 & AUDLEY
4+2 Bedroom, 4 Washroom, Popular Lexington, Detached, Heathwood Home, 9' ceiling, Hdwd flrs, Oak Stairs.
$369,900
JUST LISTED
PHARMACY/SHEPPARD
Totally Renovated, 3 Room Bungalow, Newly Finished Bsmt, w/ 2 Bedrooms, Detached Garage, Prime LOcation
$424,900
JUST LISTED
MORNINGSIDE/SHEPPARD
4 Bdrm, 4 Washroom, Detached Presitigious, Premium Corner Lot, Double door entry, Hardwood Flr, Large eat-in kitchen, Ent to Bsmnt
$284,900
JUST LISTED
NEILSON/FINCH
3+2 Bedroom, 2 Washroom, Completely Renovated! Huge Bungalow, Finished Bsmnt, Close to schools and transit.
$167,900
SOLD
MCLEVIN/NEILSON
2 Bedroom, 1 Washroom, Wonderful starter home, Open Concept Living, Bright & Cozy.
$369,900
JUST LISTED
9TH/REEVES WAY
3 Bedroom, 3 Washroom, Detached, Golf Home, Bright, Spacious, Oak Stairs, Walk Out Lot.
RE/MAX EXECUTIVE REALTY INC. (1996), BROKERAGE
1125 KENNEDY ROAD, SUITE 2000, TORONTO, ON, M1P 4Y1
FAX: 416.285.7327
OFFICE: 416.285.8555
WEB: WWW.TEAMMAXPROS.CA
*Some conditions may apply *Not intended to solicit buyers and sellers currently under contract

# பெண் குழந்தை பிறப்பதின் இரகசியம் என்ன?

- சிவா சுப்ரா -

ஒவ்வொரு மனிதருக்கும் 20,000 முதல் 25,000 ஆயிரம் ஜீன்ஸ் (Genes) உள்ளது. இவை மரபணுக்கள் என்று தமிழில் அழைக்கப்படுகின்றன. இந்த மரபணுக்கள் ஐம்பதாயிரத்தில் இருந்து ஒரு இலட்சம் வரை இருக்கலாம் என்றும் ஒரு கணிப்பீடு கூறுகின்றது.

தலைமயிரின் நிறம் என்ன என்பதில் இருந்து, மார்பில் மயிர் இருக்க வேண்டுமா? இல்லையா? தோலின் நிறம் என்ன? மூக்கின் நீளம் என்ன? கால் குட்டையா? நெட்டையா? ஆணா? பெண்ணா? என்பதையெல்லாம் இந்த மரபணுக்களே தீர்மானிக்கின்றன.

இந்த மரபணுக்கள் எல்லாமே, உடற் கலங்களில் இருக்கின்ற நிறமூர்த்தங்களில் (Chromosomes) அடக்கப்பட்டுள்ளன. மனிதருக்கு 46 நிறமூர்த்தங்கள் உள்ளன. மனித உடலில் உள்ள ஒவ்வொரு கலத்திலும் இந்த 46 நிறமூர்த்தங்களும் உள்ளன. இந்த 46 நிறமூர்த்தத்தில் பாதி 23 நமது தாயிடம் இருந்தும், மறுபாதி 23 தந்தையிடம் இருந்தும் புதிதாகப் பிறக்கின்ற குழந்தைக்கு வந்து சேர்கின்றது.

மனித உடலில் ஒரு புதிய கலம் உருவாக முன்னர், முதலில் இந்த 46 நிற மூர்த்தங்களும் அச்சுப்பிசகாமல் பிரதி எடுக்கப்பட்டு புதிய பிரதியாக 46 நிற மூர்த்தங்கள் உருவாக்கப்படும். இந்த வேலையை நடாத்தி முடிக்க ஒவ்வொரு கலத்திலும் முப்பதுக்கு மேற்பட்ட ஓமோன்கள் ஓடியாடி வேலை செய்கின்றன. பிரதியாக்கம் முடிவடைந்த பின்னரே புதிய கலம் உருவாக்கப்படும்.

மனிதருக்கு 46 நிறமூர்த்தங்கள் உள்ளன. வீட்டெலிக்கு 40, கோழிக்கு 78, எறும்புக்கு இரண்டு மட்டுமே. இந்த நிறமூர்த்தங்கள் தனித்தனியாக இருப்பதில்லை. அவை தாயில் இருந்து ஒன்று, தந்தையிடம் இருந்து வந்தது ஒன்று சோடி சோடியா உள்ளன. அதனால் தான் மனிதருக்கு 23 நிறமூர்த்தம் உள்ளது என்று கணிப்படப்படுகின்றது. எனவே எலிக்கு 20, கோழிக்கு 34 என்று வரும்.

### ஏன் இவை சோடி சோடியாக உள்ளன?

அதற்கு காரணம் உள்ளது. பிறக்கின்ற குழந்தையின் தலைமயிர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக தாயிடம் இருந்து ஒரு நிறமூர்த்தம், தந்தையிடம் இருந்து ஒரு நிறமூர்த்தம் குழந்தைக்கு செல்லும். இவை இரண்டும் ஒரு சோடியாக ஒழுங்குபடுத்தப்படுகின்றது. ஒவ்வொரு சமயத்திலும், தாயின் நிறமூர்த்தத்தால் மட்டும் தீர்மானிக்க முடியாது. அது போல தந்தையின் நிற மூர்த்தத்தால் மட்டும் தீர்மானிக்க முடியாது. இரண்டு பேரின் நிறமூர்த்தத்தில் எது பலமானதாக உள்ளதோ அதுவே அவர்களுக்கு பிறக்கின்ற குழந்தையின் தலைமயிர் எப்படி இருக்கும் என்பதை தீர்மானிக்கும். இது போலவே குழந்தையின் ஒவ்வொரு அங்கமும் தீர்மானிக்கப்படுகின்றது.



தோலின் நிறம், காலின் நீளம், கண்ணின் நிறம், கைவிரலின் எண்ணிக்கை என ஒவ்வொரு விடயத்திலும் எந்த நிற மூர்த்தம் ஆதிக்கத்தில் உள்ளதோ அதுவே குழந்தைக்கு கிடைக்கின்றது. இதனால் தான் இரத்த உறவுக்குள் திருமணம் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றது.

ஏன் என்றால் இரத்த உறவுகளை உடையவர்கள் பெரும்பாலும் ஒரே வகை மரபணுக்களை கொண்டிருப்பார்கள். குறைபாடு உடைய மரபணுக்களை இவர்கள் கொண்டிருந்தால் பிறக்கின்ற குழந்தையும் குறைபாட்டுடன் பிறக்கும் வாய்ப்பு அதிகம்.

(ஒரு நிறமூர்த்தம் உண்மையில் ஒரு விடயத்தை மட்டும் தீர்மானிப்பதில்லை. தலைமயிரை தீர்மானிக்கும் நிறமூர்த்தத்தில் வேறு பல விடயங்களை தீர்மானிக்கும் சக்தியும் உள்ளது. அவை தான் ஜீன்ஸ் என்று அழைக்கப்படுகின்றன.)

புதிதாகப் பிறக்கின்ற ஒரு குழந்தைக்கு எவ்வாறு நிறமூர்த்தங்கள் கடத்தப்படுகின்றன என்பது ஒரு சுவாரசியமான விடயம்.

தாயின் கருப்பையில் முட்டை உருவாகும் போது இந்த முட்டைக்குள் நிறமூர்த்தங்கள் உருவாகிவிடும். அது போல தந்தையின் விந்திலும் இந்த நிறமூர்த்தங்கள் உருவாகின்றன. இவை இரண்டும் இணையும் போது சோடி சோடியாக இணைந்து புதிய உயிர் உருவாகின்றது.

35ம் பக்கம் பார்க்க...


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912

Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



**கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின்**

**Monthly Networking Meeting**

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின்

மார்ச் மாதத்துக்கான Networking Event 7ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6:30 மணிக்கு மிசிசாகா வாழ் வர்த்தகர்களுக்காக இடம் பெற இருக்கின்றது.

புதிய பழைய வர்த்தகர்கள் அனைவரும் திரண்டு வந்து இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**Kool Katz Restaurant,**
**6981 Millcreek Dr #1 (Millcreek and Derry),**
**Mississauga**

கென் கிருபா 416-294-9322

**or CTCC office at 416-335-9791**

# கஸ்ரோவும் கியூபாவும், பற்றையும்

## Fidel Alejandro Castro Ruz



- ரதன் -

1ம் பக்கத் தொடர்ச்சி...

ஹவானாவின் வீதிகளில் நடக்கும்பொழுது, இரண்டாம் உலகப் போரின் அழிவுகளில் இருந்து இந்த நகரம் இன்னமும் மீளவில்லை என்ற எண்ணமே தோன்றும். அதி காலை அத்திலாந்திக் கரையோரம் நடந்த பொழுது என்னுடன் நடந்து வந்தவருடன் கதைக்க ஆரம்பித்தேன். அவரது உரையாடல் சில ஆச்சரியங்களை முதலில் எனக்கு ஏற்படுத்தியது. ஆங்கிலம் சரளமாக கதைத்தார்; அடுத்து, அவர் ஓர் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் என்பதும்; மூன்றாவது ஹவானாவின் அதி உயர் கட்டிடம் ஓர் வைத்தியசாலை என்பதுமாகும்.


கியூபாவில் ஊதியம் ஓரளவிற்கு அனைவருக்கும் ஒரே தளத்தில் வைத்திருக்கப்படும். இதனால் தொழில் நிலை மாற்றங்கள் - ஏற்ற இறக்கங்கள் குறைவு. எங்கு சென்றாலும் சேகுவராவின் படங்களைக் காணலாம். ஹவானாவிற்கு செல்வதற்கு முன்பாக ஜமெக்காவுக்கும் சென்றுள்ளேன். பாழடைந்த தண்டவாளங்கள். எங்கு பார்ப்பினும், உல்லாச விடுதிகள். அமெரிக்க டொலரைத் தான் எங்கும் பயன்படுத்த வேண்டும். அதி உயர் வளங்கள் கொண்ட ஜமேக்கா தீவு, இன்று அமெரிக்கர்களின் அந்தப்புர உல்லாச விடுதியாகிவிட்டது. அமெரிக்கா விற்கு மிக அருகில் உள்ள (90 கி.மீ) கியூபா தன் னிறைவுள்ள நாடாக மாறிவிட்டது. என்னுடன் நடந்து வந்த வைத்தியர் கூறிய கூற்று "இன்னமும் நாலு சந்ததிகளுக்குத் தேவையான வசதிகள் இப்பொழுதே ஏற்படுத்தியாகிவிட்டது" என்பதேயாகும்.

1970களில் இலங்கை சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில், இலங்கை தெற்கு ஆசியாவிலேயே மிகவும் அதிகளவு சமூக, பொருளாதார திட்டங்களையும், கொடுப்பனவுகளையும் கொண்ட நாடாகத் திகழ்ந்தது. அதேபோன்று தன்னிறைவுடன் திகழும் நாடாக கியூபா திகழ்கின்றது.

கியூபா சென்ற பல நண்பர்கள் கியூபா மிகவும் ஏழ்மையான நாடு எனக் கூறுவார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் வெளிப்பூச்சுக்கு தெரிபவை, வான் உயர் கட்டிடங்கள், ராஜ, ராஜ சோழர் காலத்துக் கட்டிடங்கள், அந்தப்புரங்கள், புஷ்பக விமானங்கள். உள்ளே சென்று மிச்சிகனின் அந்தப்புரங்களையும், சிக்காகோவின் வெளி வட்டங்களையும் பார்ப்போருக்கு அமெரிக்கர் பலர் வறுமையால் வாடுவது தெரியும். உடுக்க உடை, உண்ண உணவின்றி, "தனியொருவனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினையே அழித்து விடுவோம்" எனக் கூறி, ஈராக்கிய மக்கள் மீது குண்டு மழை பொழியும், வெற்றி பெறாத ஜனாதிபதின் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டு பேஸ்போல் விளையாடித் திரியும் மக்களது அவலங்கள் தெரியும்.

அமெரிக்காவிற்கு அருகில் தொடர்ச்சியான, பயமுறுத்தல்களைச் சந்தித்தும், தொடர்ந்து 12 அமெரிக்க ஜனாதிபதிகளால் பயமுறுத்தப்பட்டும்கூட தலை நிமிர்ந்து வாழும் நாடு கியூபா! சோவியத் யூனியன் போன்ற பலம் பொருந்திய நாடுகளே, அமெரிக்காவிற்கு எதிரான போரில் வீழ்ச்சி கண்ட பொழுதும், கியூபாவை அமெரிக்காவால் வீழ்த்த முடியவில்லை. வியட்நாமில் தோல்வி கண்டு விட்டு, ரம்போ போன்ற படங்களுக்கூடாக ஆத்ம திருப்திக் காணும் அமெரிக்காவால் திரையில் கூட கனவுகாண முடியவில்லை. கியூபாவின் இந்த ஏற்றமான வாழ்விற்கு காரணகர்த்தாக்களுள் ஒருவரான பிடல் கஸ்ரோவை, அமெரிக்காவின் பிரபல இயக்குனர்களுள் ஒருவரான ஒலிவர் ஸ்ரோன், ஹவானா சென்று இரண்டு விவரணத் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டார். இவற்றை அமெரிக்க தொலைக் காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்ப மறுத்து விட்டன. வழமை போல் சி.பி.சி தஞ்சம் கொடுத்து ஒளிபரப்பியது. இதனை பல அமெரிக்கர்களும் கண்டுகளித்தனர்.

காஸ்ரோ, ஒலிவருடனான பேட்டியின் போது "நான் ஒரு நல்ல தகப்பனாக இருக்கவில்லை" எனக் கூறியுள்ளார். தனது மனைவிகள், தனது முதல் காதல், மது அருந்துதல், போன்ற பல தனிப்பட்ட விடயங்களைத் தெரிவித்துள்ளார். இதே நிலை 'சே'க்கும் இருந்தது. 'சே' அங்கோலாவில் இருந்து திரும்பிய பொழுது, 'சே' யின் பிள்ளைகளில் நால்வருக்கு 'சே'ஜ "மாமா ரொமன்" எனவே அறிமுகப்படுத்தப்பட்டது.



1959ல் கியூபாவை கஸ்ரோ வென்ற பின்னர் சுமார் 15 (1959-1962) தடவைகள் அமெரிக்கா அவரைக் கொலை செய்ய முயன்றது. "Alpha 66" என்ற அமைப்பு புளோரிடாவை மையமாகக் கொண்டது. இந்த அமைப்பினர், தொடர்ச்சியாக கியூபாவிற்கும், கஸ்ரோ விற்கும் எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவற்றுடன் Radio Martí and TV Martí போன்ற ஒலி, ஒளிபரப்பு சேவைகளையும், புளோரிடாவில் இருந்து கியூபாவிற்கு எதிராக செயற்படுத்தினார்கள். இந்த அமைப்பினருக்கு, அமெரிக்க அரசாங்கமே நிதி உதவி வழங்கியது.

Taíno and Ciboney பூர்விகக் குடிகள் வாழ்ந்து வந்த இடத்தை 27, ஐப்பசி 1492ல் கொலம்பஸ் வந்தடைந்தார். அன்று தொடங்கி 1902ல் ஸ்பானிய படைகள் வெளியேறும் வரை ஸ்பானியக் குடியரசாக இருந்த கியூபா விடுதலை பெற்றது. 1959ல் பிடல் அதிபராக வரும் வரை கியூபா அமெரிக்க கூலிகளால் ஆட்சி செய்யப்பட்டது.

பிடலின் ஆட்சியின் போது பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆவணி 1960ல் கியூபாவில் இருந்த அமெரிக்க நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்டன. படிப்படியாக பல தனியார் நிறுவனங்கள் அரசமயமாக்கப் பட்டன. 1961ல் சி.ஐ.ஏ.யினால் பயிற்றுவிக்கப்பட்ட 1500 முன்னாள் கியூப பிரசைகள் கியூபாவின் பன்றிக்குடா(Bay of Pig)வை அடைந்தனர். ஆனால் இவர்களால் கியூப படைகளை எதிர் கொள்ளமுடியவில்லை. சுமார் 115பேர் கொல்லப்பட்டனர், 1189பேர் கைது செய்யப்பட்டனர். அப்போதைய அமெரிக்க அதிபர் கென்னடி, இந்த சி.ஐ.ஏ.யின் முயற்சிக்கு ஆதரவாக இராணுவ, கடற்படை உதவிகள் செய்ய மறுத்துவிட்டார். கென்னடியின் கொலைக்கு இதனையும் காரணமாக கூறுவார்கள் இதனால் இம் முயற்சி பெரும் தோல்வியில் முடிந்தது.

Iranian Prime Minister Mohammed Mossadegh (1953) Guatemalan President Jacobo Arbenz Guzmán (1954) போன்றோரை அகற்றிய சி.ஐ.ஏ.க்கு இதில் தோல்வியே கிடைத்தது. ஆனால் பின்னர் 'சே'ஜ பொலிவியாவில் வைத்து சி.ஐ.ஏ கொலை செய்தது.

பிடல் பொறுப்பேற்று இரு வருடங்களில் கியூபாவில் உள்ள பெரும்பாலானோர் படித்தவர்களாக மாற்றப்பட்டார்கள். இந்த நிலை 1970களில் இலங்கையிலும், இந்தியாவில் கேரளா, மேற்குவங்காளத்திலும் காணப்பட்டது. (இக்காலகட்டத்தில் அடடுசாரிகளின் அரசு ஆட்சிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது) 1962ல் ரேஷன் முறை நடைமுறைப்படுத்தப் பட்டது. தேவையான உடையும் உணவும் சகலருக்கும் கிடைக்கும் வழி செய்யப் பட்டது. தங்குமிட வாடகை 70 வீதத்தால் குறைக்கப்பட்டது. வைத்தியர்கள் முதல் இரு வருடங்களில் கிராமங்களில் சேவை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகள் நிறுத்தப்பட்டன. புரட்சிக்கு முன்னர் பாலியல் தொழிலாளிகளாக கடமைபுரிந்தோர், புரட்சியின் பின்னர் கல்வி கற்று, சமூக நிலை மாற்றப்பட்டார்கள். வாழ்நிலை வருடங்கள் 1959ல் 59 வருடங்களாக இருந்தது. 1993ல் இது 76 வருடங்களாக அதிகரித்திருந்தது. சோவியத் யூனியனுடனான நெருக்கமான உறவு, சர்வதேச வர்த்தகத்துக்கு வழி கோலியது. விவசாயம் பெரும் முன்னேற்றம் கண்டது. குறிப்பாக சீனி உற்பத்தி உச்ச நிலையை அடைந்தது.

ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகள் சோவியத் யூனியன் வசமும், இடதுசாரி ஆட்சியாளர்கள் வசமும் மாறியமை, அமெரிக்காவிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. மூன்றாம் உலக நாடுகள் பல இவற்றை பின்பற்றின.

பிடலின் முதலாவது அமைச்சரவையில் இருந்த 15அமைச்சர்களில் 6பேர் அமெரிக்காவில் தஞ்சம்அடைந்தனர். இதனைக் கண்டு கஸ்ரோ அசையவில்லை. 1926 ஆவணி 13ல் ஒரு கிராமத் தோட்டத்தில் பிறந்த கஸ்ரோ, கட்டுப்பாடுகள் மிகுந்த கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்றார். இவரது தந்தை அமெரிக்க பழத் தோட்டத்தில் வேலை பார்த்தார். ஏழு பிள்ளைகளில் ஒருவராக பிறந்த இவர் ஆதிக்கம், அதிகாரத்தை எதிர்த்தார். சட்டம் படித்து வழக்கறிஞரான கஸ்ரோ அப்போதைய அரசின் கடுங்கோளாட்சிக்கு எதிராக போராடினார். இதனால் இரு வருட சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு, வெளியேறி ஒளிந்து வாழ்ந்த காலத்தில் முதன் முறையாக 'சே'யை சந்தித்தார். பின்னர் இரு மாதங்கள் 'சே' யுடன் ஒன்றாக சிறையில் இருந்துள்ளார்.

'சே'யும் கஸ்ரோவும் இன்றைய கியூபாவின் சிற்பிகளாவார்கள். உலகமயமாதலுக்கு எதிராக செயற்பட்டுவரும் ஒரேயொரு நாடு கியூபா தான். "சோசலிசத்தை அறிந்தவர்கள் அதற்குள் உறைந்து, எதிராக இயங்கும் முதலாளித்துவத்தை நன்கு அறிவார்கள். ஸ்ராலின் போன்ற தலைவர்கள் தத்துவவாதிகள் அல்லர். இயல்புநிலை அறிந்துசெயல்படும் தலைவர்கள். அதனால் தான் அவரது காலத்தில் சோவியத்யூனியன் வெகு வேகமாக முன்னேறியது. இன்றைய புஷ்ஷின் அரசு மிகவும் மோசமான அரசு. உலகத்தையே அழிக்கப் போகின்றது. மூன்றாம் உலக நாடுகளை உலக வங்கி ஆட்சி செய்கின்றது. உலக வங்கியை அமெரிக்கா ஆட்சி செய்கின்றது. மூன்றாம் உலக நாடுகளின் தேசிய உற்பத்தி இந்த சங்கிலியூடாக அமெரிக்காவை அடைகின்றது. கியூபா இவை அனைத்தையும் உணர்ந்துள்ளது. அதற்கான எதிர்ப்புச்சக்தி எங்களிடம் உள்ளது. ஈராக்கில் நுழைந்த அமெரிக்கா உலகின் சந்து பொந்துகளைத் தேடுகின்றது. மிகவிரைவில் பல சந்துகளுள் அமெரிக்காவைக் காணலாம்" இவ்வாறு கஸ்ரோ தெரிவித்துள்ளார்.

தென், லத்தீன் அமெரிக்காவின், பெரும்பாலான நாடுகள் இடது சாரி நாடுகளாக மாறுவதற்கு இவர் பக்கபலமாக இருந்தாலும், அமெரிக்காவே காரணகர்த்தா.

கியுப புரட்சிக்கு பிரதான காரணகர்த்தா சேகுவரா. சேயுடன் கஸ்ரோ இணைந்து செயற்பட்டதனால் கியுப புரட்சி சாத்தியமாயிற்று. சே பின்னர் கியுப பொருளாதார வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றினார். சே கியூபா விட்டு வெளியேறி, பின்னர் மீண்டும் கியூபா திரும்பிய பொழுது கஸ்ரோவுடன் நீண்ட உரையாடலில் ஈடுபட்டார். இவர்கள் இருவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது என்பதனை கஸ்ரோ மறுத்துள்ளார். சே யும் எத் தருணத்திலும் வெளிப்படுத்தவில்லை. சே யின் கொலைக்கு சி.ஐ.ஏ யே காரணம். இக் கொலை பற்றி கஸ்ரோ அறிந்திருக்கவில்லை என ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

கஸ்ரோ இன்றைய கியூபாவின் வளர்ச்சிக்கு உத்தரவாதமிட்டதுடன், நாளைய கியூபாவையும் வளர்த்தெடுத்துள்ளார். ஜோர்ஜ் புஷ் இன்றைய உலகை மாத்திரமல்ல, நாளைய உலகையும் அழிக்கும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியுள்ளார். அடுத்த அமெரிக்க அதிபராக ஒரு பெண்மணியோ, கறுப்பினத்தவரோ வரமுடியாது. அமெரிக்க பெரும் வணிக முதலைகள் அதற்கு தயாராக இல்லை. அதனால்தான் மக்கெய்ன் தன்னை இப்பொழுதே புஷ்ஷின் வாரிசாக நினைக்கத் தொடங்கிவிட்டார். கஸ்ரோவும், புஷ்ஷும் ஒரே கால கட்டத்தில் விடைபெறுகின்றார்கள். கஸ்ரோ நாளைய வாழ்விற்கு அத்திவாரமிட்டுள்ளார். வெற்றி பெறாத ஜனாதிபதி புஷ் உலகை பற்றையாக்கி விட்டு சென்றுவிட்டார்.

கஸ்ரோவின் மறுபக்கத்தை பிறிதொரு கட்டுரையில் விரிவாக பார்ப்போம்.

உசாத்துணை நூல்கள்
My life – Fidel Castro – Penguin Books
Che Guerva by Eric Luther and Ted Henken
Cuban Revolution Reader by Julio Garcia Luis
Latin America 2003
Castro and Cuba by Angelo Trento
Castro's Daughter by Alina Fernandez

■ ■ ■

# பெண் குழந்தை பிறப்பதின் இரகசியம்...


33ம் பக்கத் தொடர்ச்சி...

இதில் ஒரு முக்கிய விடயம் உள்ளது. ஒவ்வொரு மனிதருக்கும் 46 நிறமூர்த்தங்கள் உள்ளன. அப்படியாயின் அவை பிரதி எடுக்கப்பட்டு தாயிடம் இருந்து 46ம், தந்தையிடம் இருந்து 46ம் வருமாயின் பிறக்கின்ற குழந்தைக்கு 92 நிற மூர்த்தங்கள் அல்லவா வரவேண்டும். பிறகு அதற்கும், இன்னோர் குழந்தைக்கும் ( பின்னர்) பிறக்கின்ற இன்னோர் குழந்தைக்கு 194 நிற மூர்த்தங்கள் அல்லவா வரவேண்டும்... இப்படியே போனால் இன்றைக்கு ஒரு மனிதனுக்கு மில்லியன் கணக்கான நிற மூர்த்தங்கள் இருக்க வேண்டும். ஆனால் இயற்கையில் அப்படி நடப்பது இல்லை. எப்போதும் பிறக்கின்ற குழந்தைக்கு 46 நிற மூர்த்தங்கள் (23சோடி) மட்டுமே உள்ளன.

## இது எவ்வாறு நிகழ்கின்றது?

தாயின் வயிற்றில் முட்டை உருவாகும் போது தாயிடம் உள்ள 46 நிறமூர்த்தத்தில் பாதி (23) மட்டுமே பிரதி எடுக்கப்பட்டு முட்டைக்குள் வருகின்றது. அது போல விந்து அனுக்களிலும் 23 மட்டுமே வந்து சேருகின்றன. இந்த முட்டையும், விந்துவும் சேரும் போது மறுபடி 46 நிறமூர்த்தங்கள் ஆகின்றன. இந்த நிறமூர்த்தங்களில் இயற்கையின் விதிப்படி எவை எவை ஆதிக்கமானவையாக உள்ளனவோ அவையே புதிய குழந்தையின் உடலை தீர்மானிக்கின்றன.

நமது உடலில் நிறமூர்த்தங்கள் பிரதி எடுக்கப்படும் போது தவறுகளும் நிகழ்கின்றன. இப்படியான தவறுகள் நிகழும் போது நல்ல விடயங்களும் நிகழ்கின்றது. அது கூர்ப்பு என்று அழைக்கப்படும். இத்தகைய ஒரு தவறினால் தான் குரங்கில் இருந்து மனிதன் பிறந்தான். அதே சமயம் இந்த தவறுகளினால் ஏராளமான பாதிப்புகளும் ஏற்படுகின்றன. பதின் மூன்றாவது நிறமூர்த்தமும், பதின்எட்டாவது நிறமூர்த்தமும் பிரதியெடுக்கப் படும் போது தவறுதலாக மேலதிக பிரதி எடுக்கப்பட்டால் பிறக்கின்ற குழந்தை ஒரு மாதத்தில் இறந்து விடும்.



இது போல தவறுகள் ஏற்பட்டு X என்று அழைக்கப்படும் குரோமசோன், அல்லது Y என்று அழைக்கப்படும் குரோமசோன் இவை இரண்டுமே இல்லாமல் ஒரு குழந்தை பிறக்குமாயின் அந்தக் குழந்தைக்கு பாலியல் உறுப்புகள் விருத்தியடையாமல் போய் விடும். ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை என்ற வகைக்குள் இருப்பவர்கள் இந்த X, y குரோமசோன்கள் இல்லாதவர்களே.

## பெண்குழந்தை பிறப்பதற்கு காரணம் கணவனா? மனைவியா?

பெண்கள் 22 சோடி Autosome நிறமூர்த்தங்களையும், அத்தோடு ஒரு சோடி X நிறமூர்த்தங்களையும் கொண்டுள்ளனர். ஆண்கள் 22 சோடி Autosome நிறமூர்த்தங்களையும், அத்தோடு ஒரு X குரோமசோனையும், ஒரு y குரோமசோனையும் கொண்டுள்ளனர்.

பெண்குழந்தையை மட்டுமே பெற்றெடுக்கின்ற பெண்ணை மாமியார் மட்டுமல்ல இந்த சமூகமே ஏளனமாகப் பார்க்கின்றது. ஆண்வாரிசு வேண்டும் என்பதற்காக இரண்டாவது திருமணத்தை மகனுக்கு நடத்திய தாய்மாரும் உள்ளனர்.

கருக்கட்டலுக்கு முன்னர் தாயின் ஒரு சோடி நிறமூர்தங்களான Xஇல் இருந்து ஒன்று மட்டுமே முட்டைக்கு கடத்தப்படும். அது போல தந்தையின் ஒரு சோடி நிற மூர்த்தத்தில் இருந்தும் ஒன்று மட்டுமே கடத்தப்படும். அது சமயத்தில் X ஆக இருக்கும் . இன்னொரு சமயம் y ஆகவும் இருக்கும்.

தாயின் X நிறமூர்த்தத்துடன், தந்தையின் y சேர்ந்தால் பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருக்கும். தாயின் X உடன் தந்தையின் X சேர்ந்தால் பிறக்கின்ற குழந்-தை பெண்குழந்தை.

தாயின் முட்டையில் எப்போதும் X இருக்கும் போது தந்தையின் விந்தில் X உள்ளதா? அல்லது Y உள்ளதா என்பதைப் பொறுத்தே பிறக்கின்ற குழந்தை என்ன என்பது தீர்-மானிக்கப்படுகின்றது. ஆக மொத்தத்தில் பிறக்கின்ற குழந்தை ஆணா? பெண்ணா? என்பது தீர்மானிப்பது தந்தையின் விந்தே.

சரி இதை விடுங்கள் கருக்கட்டும் போது இன்னொரு பயங்கரம் நிகழ்கின்றதே? அது என்ன என்று அடுத்த இதழில் பார்ப்போமா?

■ ■ ■

***தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

**E-mail:thaiveedu@gmail.com**
**Fax: 416-849-0594**
**Tel: 416-646-3422**

குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



RESP SPECIAL!
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

தனா மாணிக்கவாசகர்
Broker


Life Insurance
Critical Illness Insurance

Home Equity Line of Credit
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)



INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

At least our children don't have to roll up the rim.
எங்கள் பிள்ளைகளும் கோப்பி கப்பை
உறுட்டி பார்க்க வேண்டிய தேவை இல்லை.



**$500,000**

**10 Year Term Insurance costs only**

**31.95** monthly for a 30 yrs old Male, Non-Smoker

**23.40** monthly for a 30 yrs old Female, Non-Smoker

**Life Insurance financially protects your loved ones.**



**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
Liland Insurance Inc,
759 Warden Avenue,
Toronto, ON. M1L 4B5.
Office 416.759.5453
Cell 416.830.8191

www.familyprotection.ca

E&OE

# நீங்கள் ஆபத்தான வாகன சாரதியா?

**- செந்தூரன் புனிதவேல் -**

மாசி மாத நடுப்பகுதியில் பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரமாகியிருந்தது. 17 வயதுள்ள இளைஞர் தனது 15வயது சிநேகிதியை காரின் பின் இருக்கையில் இருத்தி குடிபோதையில் வேகமாகச் செலுத்தி கட்டுப்பாடு இல்லாமல் விபத்துக்குள்ளாகி அச்சிறு பெண் இறந்ததாக தெரிவித்தது. இவ்விபத்துக்கு காரணம் மதுபோதையும் வேகமுமாகும்.



நாம் அனைவருமே ஏதாவது ஒரு வேளை ஆபத்தான சாரதியாக செலுத்தியிருப்போம் என்றால் அது மிகையாகாது. எங்கள் கவனத்தை வாகனத்தை செலுத்துவதைவிட வேறு விடயங்கள் ஈர்ப்பதற்கு இடம் கொடுத்திருக்கிறோம். ஒரு அழும் குழந்தை, CDஇனை மாற்றுவது, செல்லவேண்டிய இடத்திற்கு அவசரமாக செல்ல விருப்பம் போன்ற எல்லாமே எமது கவனம் எனும் கவசத்தை இழந்துவிட ஏதுவாகும்.

இன்றைய வாகனங்களில் உள்ள தொழில் நுட்பம் அவற்றை வேகமாக, வசதியாக செலுத்துவதற்கு கூடியதாய் உள்ளது. பழைய கார்கள் இவ்வளவு வேகமாக ஓடாது. இன்று ஒவ்வொரு நாளும் கனடாவில் ஏழுக்குமதிகமாக விபத்துக்களால் உயிரிழக்கிறார்கள். இந்த மரண விகிதம் வன்முறை மரண விகிதத்திற்கு எத்தனையோ மடங்கு அதிகமாகும். இவ்வளவு மரணங்கள் நடப்பினும் வன்முறை மரணங்கள்தான் செய்திச் சாதனங்களில் இடம்பெறுகின்றது.

மேற்படி வாகன விபத்துக்கள் பெருமளவு தவிர்க்கக்கூடியவை என எண்ணும் வேளையில் வேதனையாயுள்ளது. செல்போனை தவிர்ப்பதால், சாப்பிடுவதை தவிர்ப்பதால் செல்ல வேண்டிய இடத்திற்கு சற்று பிந்தி செல்ல தயாராயிருப்பதால், கட்டுப்பாட்டுடன் செலுத்துவதால் அர்த்தமற்ற அனர்த்தங்களையும் மரணங்களையும் தவிர்க்கலாம்.

எவ்வளவு தான் எடுத்துச் சொன்னாலும் அவையாவும் கழுதையின் முதுகில் நீர் வார்த்த கதையாக முடிகிறது. எனவே சில மாதிரி விபத்துக்களை இங்கு கவனிப்போம்.

பிரிட்டிஷ் கொலம்பியா காப்புறுதி கூட்டுத்தாபனம் நடத்திய ஆய்வின்படி இளைஞர்களின் வாகன விபத்து மரணங்களில் 60விதம் வேகத்தால் ஏற்பட்டுள்ளது என்று கணித்துள்ளார்கள். சித்திரை 2003ல் Jimmy Lee Reycolos எனும் 16 வயது இளைஞர் வேகமிகுதி காரணமாக அவர் செலுத்திய 1989 Mustang (இவ்வாகனம் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது) கட்டுக்கடங்காது 120 கிலோமீட்டர் மணித்தியாலத்துக்கு செலுத்தப்பட்டு விபத்துக்குள்ளான வேளை வாகனம் மூன்று துண்டுகளாக பிளவுபட்டே தெறிக்கப்பட்டுள்ளது.

பங்குனி 2003ல் நான்கு 19 வயதுக்குக் குறைந்த இளைஞர்களும் 24வயது இளைஞரும் வேகமாக செலுத்தப்பட்ட வாகனம் விபத்துக்குள்ளானதால் மரணமடைந்துள்ளார்கள்.

பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். மாசி 2008 டொரண்டோவில் இடம்பெற்ற விபத்தும் இவ்வகையில் ஒன்று. மதுபோதையில் மிகவேகமாக செலுத்தியதால் 15 வயது இளம் மங்கை மாண்டுபோக நேர்ந்துள்ளது. வேகம் விபத்துக்களை உண்டுபண்ணும் என்பது தான் இதிலிருந்து பெறப்படும் தகவல்.

## செல்போன் கதைத்தல்.

வைகாசி 7ம் திகதி 2001ல் ரிச்சட் ஸ்குவி செல்லிடத் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்ததால் வாகனம் தொடருந்துவில் மோதியதில் அவரும் அவருடைய இரண்டுவயது குழந்தையும் உயிரிழந்தனர்.

ஸ்குவி செல்லிடத் தொலைபேசியில் கதைத்தவண்ணம் வாகனத்தை ஒரு தொடருந்து பாதையை கடக்க முயலுகையில் கவனக்குறைவால் கனேடியன் பசுவிக் பொதி தொடருந்துவில் இடித்து பலநூறு மீட்டர் தூரம் இழுத்துச்செல்லப்பட்டு உயிரிழந்தார்கள்.

இந்த விபத்தை விசாரித்த அதிகாரி, வாகனம் செலுத்தும்போது செல்போன்களை சாரதிகள் பாவிப்பதை சட்டவிரோதமாக்க பரிந்துரைத்தார். இந்த விசாரணையில் சாட்சியளித்த டொரான்டோ பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி பொனால்ட் ரெட்லிமியர் செல்போன்கள், அருகில் இருப்பவருடன் கதைத்தல், வானொலி கேட்பதிலும் அதிக கவனத்தை ஈர்ப்பதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

இந்த பேராசிரியர் 1997ம் ஆண்டில் 'செல்போன் கதைப்பதற்கும், விபத்துகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆராய்ச்சியில் செல்போனில் கதைத்துக்கொண்டு வாகனம் செலுத்துபவர்கள் நாலுமடங்கு அதிகம் விபத்துக்குள்ளாக சந்தர்ப்பமுண்டு என்று முடிவெடுத்துள்ளார். பேராசிரியர் கருத்துப்படி செல்போன்கள் சாரதியின்

38ம் பக்கம் பார்க்க...


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க

புத்தம் புது வாகனத்தை வெல்லுங்கள்

WIN



எனது அனுசரணையோடு
2008 ஆம் ஆண்டு
(01-01-2008 முதல் 31-12-2008 வரை)
முடிவிற்குள் வீடு ஒன்றை
வாங்கும் அல்லது விற்கும்
(Resale Homes Only)
அதிஸ்டசாலி ஒருவருக்கு
புத்தம் புதிய Toyota Cruiser
ஒன்று பரிசாகக் காத்திருக்கிறது.




Win a brand New TOYOTA - fj - CRUISER

நம்பிக்கை நேர்மை நட்பானசேவைக்கு அழையுங்கள்

*Some condition apply

Century 21
Affiliate Realty Inc.
Brokerage

சத்தி மருதப்பா
Sales Representative

416-816-1500

208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

brightsun print 416-845-6565

# நீங்கள் ஆபத்தான வாகன...

37ம் பக்கத் தொடர்ச்சி...

கவனத்தை பெரிதும் திசைதிருப்புவதால் அவற்றைத் தடைசெய்ய வேண்டும் என்றார். சிலர் வாகனத்தில் உடனிருக்கும் நண்பருடன் கதைப்பதற்கு இனையானதே எனலாம். ஆனால், பேராசிரியர் 'உடனிருக்கும் நண்பர் கதைத்து கவனத்தைத் திருப்பினாலும், சாரதி கவனியாத தடைகளை, தவறுகளை சுட்டிக்காட்டுவதால் பயன் அதிகம்" என்கிறார்.

பேராசிரியர் ரெடிலிமிஸ்ரின் ஆய்வை முன்மாதிரியாகக் கொண்டு செல்போன் பாவனையை தடைசெய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அது இன்னும் பகற்கனவாகவே இருக்கின்றது.

## சாரதியின் கவனத்தில் திசை திருப்பம்

வைகாசி 2003ம் ஆண்டில் அலேட்டா மாகாணத்தில் ஒரு சாரதி வாகனத்தை செலுத்துகையில் பக்கத்தில் DVDயில் கவனம் திசைதிருப்பப்பட்டதால் விபத்துக்குள்ளாகி ஒருவர் மரணித்துள்ளார். இவ் விபத்தில் சாரதிக்கு 2nd degree கொலைத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இன்று வாகனங்கள் தயாரிக்கப்படும் வேளையிலேயே DVDக்கள் பூட்டப்பட்டு தயாரிக்கப்படுகிறது. அப்படி வராதவேளைகளில் அங்காடிகளில் பிரத்தியோகமாக விலைகொடுத்து வாங்கி பொருத்தக்கூடிய வாய்ப்பும் உள்ளது. இப்படியான சாதனங்களை தயாரிப்பவர்கள் வாகனத்தை செலுத்தும் வேளைகளில் படம்பார்க்க வேண்டாம் என எச்சரிக்கை தருவதுடன் முடிந்து விடுகிறது. இன்னும் சில Parking Bookஇல் இருக்கும் வேளைகளில் மட்டும் இயங்கக் கூடியதாக இச்சாதனங்களை விற்பனைக்கு தரப்பட்டாலும் பலரும் இந்த காப்பினை தவிர்த்து பெறவே விரும்புவதை காணக் கூடியதாயுள்ளது. இத்தகைய DVDக்கள் $300 இற்கும் குறைவாக பெறக்கூடியதாயுள்ளதால் பலரும் இவற்றை தமது வாகனங்களில் பொருத்துகிறார்கள். அண்மையில் நடைபெற்ற ஆய்வுப்படி 25 விகிதமான விபத்துக்கள் கவனத்திசைதிருப்புதலால் ஏற்படுகிறது.

> “ வியப்பான விடயம் என்னவெனில் 20வீதமானவர்கள் தமது தொடைகளினால் கார் திரும்பாமல் பார்த்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்கள். ”

## நீங்கள் என்ன செய்கிறீர்கள்

இப்பகுதி மிக நகைச்சுவையானது. வானத்தை செலுத்தும்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால் நீங்கள் வாகனத்தை செலுத்துகிறோம் என்பீர்கள். எங்கே தொடர்ந்து வாசியுங்கள் பல சாரதிகள் வாகனத்தைச் செலுத்திக்கொண்டு 1. சாப்பிடுகிறார்கள். 2. வாசிக்கிறார்கள் 3. சவரம் செய்கிறார்கள் 4. மேக்கப் போடுகிறார்கள்... இப்படியே பட்டியலை நீட்டிக் கொண்டு செல்லலாம். இவை எல்லாமே கவனத்தை திசைதிருப்பும் என்பது உண்மை. அண்மையில் நடந்த கணக்கெடுப்புப்படி கனடாவில் 80விகிதமானவர்கள் வேறு வேலைகள் செய்ததை ஒத்துக் கொண்டுள்ளார்கள். இன்னும் சுவையான விடயம் என்னவென்றால், 90விகிதமானவர்கள் மற்றவர்கள் இப்படி செய்வதை கவனிக்கும் வேளைகளில் தமக்கு சலிப்பு அதிகரிக்கிறது என குறிப்பிட்டுள்ளார்கள். 84விகிதமானவர்கள் தாம் அவசரமாக ஆபத்தாக வாகனத்தை செலுத்தியுள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். உண்மை என்னவென்று கேட்டால், மிகுதி 16 விகிதமானவர்கள் பொய்சொல்லியுள்ளார்கள் என்று குறிப்பிடுவேன். இவர்களில் 75%மானவர்கள் இப்படி தாம் வாகனத்தை செலுத்துவது சலிப்பும் களைப்பும் தான் காரணம் என்று குறிப்பிட்டார்கள்.

அவசரமான இவ் உலகில் நாம் எல்லோரும் அதிகம் செலவுசெய்யும் இடத்தில் இயலுமான வேலைகளை செய்து முடிக்க முனைவது இயற்கை. ஒரு நாட்பொழுதில் இரண்டு மணித்தியாலத்திற்கு (வேலைக்கு செல்வது, திரும்புவது) செலவிடுவதால் நாள் பொழுதின் 10% நேரத்தை வாகனத்தில் செலவிடுபவர்கள் அப்பொழுதை சில்லறை வேலைகளை செய்துமுடிக்க பாவிக்கிறார்கள்.

## கண்கள் காப்பியில்

2002ம் ஆண்டு அமெரிக்காவின் காப்புறுதி நிறுவனம் விபத்து காரணமான பத்து உணவு வகைகளை தந்துள்ளார்கள். இவை கனடாவுக்கும் பொருந்தும். முதலாவது இடத்தை காப்பி குட்டிக்கொண்டு சென்றுவிட்டது. அதைத்தொடர்ந்து சூடான சூப், சில்லி, ஹம்பேகர், BBQ உணவுகள், பொரித்த கோழி என்று நீண்டுகொண்டே செல்கிறது. கனடாவில் கணிப்பெடுத்தால் மட்டின் ரோல்ஸ் உம் வெஜி பண்ணும் கூட வரலாம். வாஷிங்டம் போஸ்ட் செய்த கணிப்புப்படி 57 விகிதமானவர்கள் வாகனத்தை செலுத்தும் வேளையில் உணவு உட்கொள்வதாக தெரிவித்துள்ளார்கள். இவற்றிலும் வியப்பான விடயம் என்னவெனில் 20%மானவர்கள் தமது தொடைகளினால் கார் திரும்பாமல் பார்த்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலே தரப்பட்ட கணிப்புகளை கவனிக்கையில் விபத்துக்கள் நடப்பதல்ல அதிசயம் நடக்காமல் இருப்பது தான் அவசியம். எனவே நீங்கள் அவதானமாக வாகனத்தை செலுத்துவதவசியம். ஒருவரின் மரணத்துக்கு நீங்கள் காரணமாக அல்லது நீங்கள் மரணித்து உங்கள் குடும்பம் வேதனைப்பட காரணமாகாதிருங்கள். உங்களை காண்பதற்கு வர எனக்கு விருப்பமுண்டு. உங்கள் மரண வீட்டில் அல்ல!


■ ■ ■

**பேஸ்மன்ற் புனரமைப்புக்கு ஆட்கள் தேவை**

பேஸ்மன்ற் புனரமைப்பு, மற்றும் வீடு திருத்தவேலைகள் செய்யக்கூடியவர்கள் தொடர்புகொள்ளவும்

416 473 9199


**For All Your Real Estate Needs..**




- 3 Bedroom Semi Detached House
- Steps to TTC and School
- Few Years New
- Call for details.....




- Warden/Finch
- 3 Bedrooms/Finished Basement
- Well Maintained Property
- Steps To TTC,Schools,Shopping..
- Call for Details...




- 2 Bedroom Condominium
- Well Maintained Building
- Few Years New
- Call **Sasi** for Details.




**Sasi Chelvaratnam**
**Sales Representative**
**416.858.4828**




- 4 Bedroom House in Brampton
- Well Maintained Property
- Only Few Years Old
- Call **Sasi** for details.....




- Less Than Three Years Old
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Appox 2300 Sq.Dt
- Family Rm W/Cathedral Ceiling




- Almost New Town House
- Bright And Sunny
- Unique Lay Out
- Quiet Street
- Close To All Amenities....




- Immaculate Detached Home
- Only One Year Old
- 4 Spacious Bedrooms
- 9'Ceiling On Main Floor
- Primium Lot...

**HomeLife GTA Realty Inc., Brokerage***

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

# உங்கள் வீட்டுக்கான ஈட்டுக்கடன் தேவைகளுக்கு

அனுபவம் - நம்பிக்கை - நாணயம் - சேவை

"Debt is the Slavery of the Free. Our Ambition is Your Freedom"

**ஈட்டுக்கடன் முகவராக விரும்புகிறீர்களா?**

வீட்டுக்கான ஈட்டுக்கடன் முகவராக வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் பற்றியும் அனைத்து ஆலோசனைகயையும், கல்வியும் தொடர்ச்சியான பயிற்சியும் எம்மால் வழங்கப்படுகின்றன. இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**Want to become a Mortgage Consultant?**
We provide you free workshops, training and seminars to become a certified Mortgage



digi Media Creation

**BonaFide** Mortgage Solutions

1920 Ellesmere Road, Suite 111, Toronto, ON M1H 2V6
Tel: **416.548.7475**, Fax: 416-548.7496
Toll Free: 1.800.952.1366
www.bmsic.com, info@bmsic.com

- Mortgages
- Re-Finance
- Seminar
- Workshops

www.bmsic.com
one stop solution for all your mortgage needs



# S.P. IMPORTERS

ஒரே பிளாசாவில் நான்கு தனிப்பெரும் ஸ்தாபனங்கள்

மிகப்பிரமாண்டமான *(15,000 சதுர அடி)* காட்சியறை கொண்ட தளபாட மாளிகை



கண் கவர் தளபாடங்கள் Solidwood Bedroom set, Solidwood Diningroom Set, Leather Sofa Set, Kids Bedroom sets and more..

அனைத்து வயதினருக்கும் தேவையான மெத்தை வகைகள் (orthopedic, CiroPedic, Poster Pedic mattress andmore..)

**$100 OFF**
with purchase of $1500 of furniture

**416-266-3077**

www.spimporters.ca

**NO PAYMENT INTEREST for 1 YEAR***



# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.



Buy your Dream House or Sell your House for Top Dollars....

வீடு வியாபார ஸ்தாபனம் வாங்க விற்க

LOW COMMISSION

Century 21

Percy Fulton Ltd. Brokerage*

BEST SERVICES



**Logan** Manikavasagar
Broker
Direct : 416.708.9903

2911 Kennedy Rd, Toronto, ON. M1V 1S8. Tel : 416.298.8200 (24Hr) Fax : 416.298.6602
Email : sales@loganhotproperties.com - www.loganhotproperties.com

**Kalai** Logan
Sales Representative
Direct : 416.697.9903




VEEDU REALTY INC. BROKERAGE

1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

- Building permit
- Zoning info.
- Site plan approval
- Rezoning approval

**Gop Kalaieswaraan**
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467





வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

CENTURY 21 SERVICES PLUS
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca

SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881



I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- Residential
- Industrial
- Commercial

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**
- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**
- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

**Joy is yours**
**Pride is ours**





அகிலா செந்தில்

**Akila Senthil**, AMP
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t



KARUNA PHOTOGRAPHY

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

416.467.4952

# நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்...



தேவகாந்தன்

மண்ணுக்கும் மனித மனங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாய்க் காலங்காலமாகவே சொல்லப்பட்டு வருகிறது. மண்ணின் வளம் பயிர்களுக்கு மட்டுமில்லை, மனங்களுக்கும் ஏற்படுமென்பதை சொல்லித் தெரியாமல் உணர்வதற்கான தருணம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதபடி நிகழும். 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று சொல்லப்பட்டது சும்மா இல்லை. உணர்ந்துதான்.

ஒரு தசாப்தத்துக்கும் மேலான ஆண்டுகளை நான் தமிழ்நாட்டிலே கழித்திருக்கிறேன். இந்திய உபகண்டத்தின் பல்வேறு நிலப் பகுதிகளுக்கும் பயணித்திருக்கிறேன். இந்தியாவின் தென்கோணம் தொடங்கி வடகோணம் ஈறாக, கீழ்த் திசையிலிருந்து மேற்றிசைவரை என் பயணம் பல தடவைகளில் நிகழ்ந்திருக்கிறது. ஆனாலும் தமிழ் நாட்டில் திருநெல்வேலிபோலவும், கேரளாவில் தலைச்சேரி போலவும் மிக அரிதான இடங்களையே என்னால் பார்க்க முடிந்திருக்கிறது.

திருநெல்வேலி எனக்குச் சின்ன வயதிலேயே பெயர்ப் பரிச்சயமான ஊர். திருநெல்வேலியிலேதான் பாஞ்சாலங்குறிச்சி இருக்கிறது. கட்டபொம்மனைப்பற்றிய சினிமா ஐம்பதுகளின் நடுப்பகுதியில் வெளிவந்த போது ஞாபகத்தில் விழுந்த சொல், பின் எப்போதும் என் நினைவைவிட்டு அகலவில்லையென்றே தோன்றுகிறது.

தமிழ்நாட்டின் பல்வேறு ஜில்லாக்களில் திருநெல்வேலியை மட்டுமே திருநெல்வேலிச் சீமையென்று அழைக்கும் வழக்கு இந்தியாவில் பிரிட்டிஸ்காரரின் காலத்திலிருந்து தொடங்கியதுதான். ஆனாலும் காரணமில்லாமலில்லை. தாமிரபரணி ஆறு பாய்ந்தோடும் வளம் கொழித்த பூமி திருநெல்வேலி. பாரதி பிறந்தது அங்கே தான். புதுமைப்பித்தன் பிறந்தது அங்கே தான். இன்னும் வண்ணதாசன், வண்ணநிலவன், தி.க.சி., சிதம்பர ரகுநாதன், ராஜமார்த்தாண்டன், வல்லிக்கண்ணன் எனப் பல்வேறு படைப்பாளிகளும், விமர்சகர்களும் பிறந்த ஊரும் அது.

மாரி காலம் முடிந்து, தாமிரபரணி பொங்கிப் பாயும் அழகைப் பார்க்கவேண்டும். கண் கொள்ளாக் காட்சி.

இந்தப் பெருக்கு இவர்களின் மனங்களில் இருக்கிறது. இது ஒரு தீவிரத்தின், கலகத்தின் அம்சமாகவே எனக்குத் தெரிகிறது.

அண்மையில் சென்னைச் சங்கமம் நடந்து முடிந்திருப்பதாகவும், கிராமிய கலைகளுக்கான அவ்விழாவில் கவிதை வாசிப்பு போன்ற பல்வேறு இலக்கியக் களங்கள் நடைபெற்றதாகவும் அறிய முடிந்ததிலிருந்து திருநெல்வேலி பற்றிய நினைப்பு மீண்டும் என்னுள் அலையடிக்க ஆரம்பித்துவிட்டது.

எமது திண்ணைவேலிபோல திருநெல்வேலி இருப்பதாலும், இந்த மாவட்டத்திலிருந்தே பல தமிழ்க் குடும்பங்கள் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக இலங்கை மலை நாட்டில் குடியேற்றப்பட்டார்கள் என்ற அறிகை இருந்ததாலும் என்னுள் விழுந்த ஒரு பிரியம், இன்று பேரினவாதத்தால் இலங்கையில் திருநெல்வேலி பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் குறிவைத்து அழிக்கப்படும் அவலத்தினால் அக்கறையாகியிருந்த தருணமாதலாலும் இந் நினைவின் அலையடிப்பு வெகு தீவிரம்பெற்று இருந்தது.

அதனால் திருநெல்வேலியும், அவ்வூர் சார்ந்த சில நண்பர்களும், அவர்களுக்கும் அந்த மண்ணுக்குமிடையில் இருந்த பண்புத் தொடர்புகளும் என்னில் இடையறா நினைப்புக்களாயின. அதுபற்றித்தான் இங்கே தெரிவிக்க வருகிறேன். இது தனிமனித சம்பவத்தின் பதிவு மட்டுமில்லை, இலக்கியப் பதிவுமாகும்.

சென்னைச் சங்கமத்தில் நடந்த கவிதை அமர்விற்குத் தலைமை வகித்தவர் கவிஞர் விக்கிரமாதித்யன் என்று அறிந்தபோது, மிக்க மகிழ்ச்சிப்பட்டேன். விக்கிரமாதித்யன் நல்ல கவிஞர் மட்டுமில்லை, எனது நண்பருமாவார். 'சிம்மாசனம் இல்லாத ராஜா' என்று இவரைப்பற்றி ஒருமுறை ஜெயமோகன் குறிப்பிட்டது உடனடியாக ஞாபகம் வருகிறது.



கவிதை உலகில் விக்கிரமாதித்யனின் நடை தனித்துவமானது. ஆனாலும் ஒரு கலகக்காரராக அவரை வாசக உலகம் அறிந்திருந்ததே தவிர, அவரது கவிதை ஆற்றலை அது பெரிதாகக் கண்டு கொள்ளவேயில்லை. அதனால்தான் ஜெயமோகன் அவ்வாறு கூறியிருந்தார். இப்போதாவது அரச எடுப்பின் அக் கிராமிய கலைவிழாவில், நூறு கவிஞர்கள் கவிதை வாசித்த அமர்வுக்கு அவர் தலைமை தாங்கியது ஒரு 'சிம்மாசனம்' கிடைத்ததுபோலத்தான் என நினைத்ததே என் மகிழ்வுக்குக் காரணம்.

ஏறக்குறைய தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து எனக்கு கவிஞர் விக்கிரமாதித்யனை அறிமுகம். தொண்ணூற்றைந்துக்கு மேலே மிகநெருக்கமாகப் பழகியிருந்தோம். திருநெல்வேலியிலிருந்து சென்னை வந்தும், நேரே வீடுவந்து என்னைச் சந்திக்கிற நண்பர் அவர். ஊரிலிருந்தாலும் கிழமைக்கு ஒருமுறையாவது கடிதமெழுதிவிடுவார். பெரும்பாலும் சுகதுக்கங்கள் விசாரிக்கிற கடிதங்களாக அவை இருப்பதில்லையென்பதுதான் அவற்றின் விசேஷம். தான் அப்போது தங்கியுள்ள ஊர்பற்றி, அங்குள்ள நண்பர்கள்பற்றி, அண்மையில் வெளிவந்த அல்லது வெளிவரவிருக்கும் நூல்கள் பற்றியதாகவே அவை இருக்கும். அவரது இயற்பெயர் நம்பிராஜன். நம்பியென்றே நான் அழைப்பேன்.

விக்கிரமாதித்யன் கலகக்காரர். .அதுபோலவே சிறீரெங்கனும். விக்கிரமாதித்யன் அளவு சிறீரெங்கன் பிரபலமில்லை. ஆனாலும் கலகக் குணம் இருவருக்கும் பொது. இது தான் பாரதியிடமிருந்தது. இதுதான் புதுமைப்பித்தனிடமும் இருந்தது.

சிறீரெங்கன் எனக்கு எண்பதுகளின் நடுப் பகுதியிலிருந்தே நண்பர். சென்னையில் ஒரு காம்பவுண்ட்டுக்குள் வெவ்வேறு வீடுகளில் நாம் குடியிருந்தோம். இடது சாரிச் சிந்தனையாளர், நல்ல இலக்கிய வாசகர் என்ற இந்த அம்சங்களே நம் நட்புக்குக் காரணம். அவர் தனியார் கல்லூரியொன்றில் கணித ஆசிரியராக இருந்தவர். பல்வேறு தகைமைகள் இருந்தும் அவர் தன்னையொரு கணித ஆசிரியனாகவே எண்ணிக்கொண்டிருந்தார். எம்.ஏ. பட்டதாரியான அவரின் சிறப்புப் பாடம் கணிதம்தான். ஒரு 'கீறு' இருக்கிற சமயத்தில், தன்னை ஒரு கணிதவியலாளன் (Mathematician) என்றே அவர் சொல்வார். நான் நன்கு பழகிய நண்பர்களுள் மார்க்ஸீயத்தை மிக நுணுக்கமாய்த் தெரிந்தவர் அவர் மட்டும்தான். மூலதனத்தின் சிற்சில பகுதிகளையே அதுவரையில் நான் கற்றிருந்தேன். ஒரு பத்து வருஷ காலத்தில் அவரிடமிருந்தே மீதிப் பகுதியை நான் படித்தறிந்தேன். அவரது படிப்பித்தல் முறை அபாரமானது. அவரது சொந்த இலக்கிய நயம் தேரும் திறமை, படிப்பித்தலில் கூடுதல் பலமாக இருந்து தொழிற்பட்டது. இப்போதும் மூலதனத்தை முற்றாக விளங்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லமுடியா விட்டாலும், அதைப் பெருமளவுக்கு அவரின் துணைகொண்டே நான் வாசித்தறிந்தேன் எனல்வேண்டும்.

கணிதம் தெரியாவிட்டால் மூலதனத்தை முழுவதுமாகப் புரிய முடியாது என்று வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறிய மனிதர் அவர். இன்றைய அரசியல் சதுரங்கக் களத்தில் காய் நகர்த்தல்களை நான் மார்க்ஸின் துணைகொண்டே புரிந்துகொள்கிறேன். அப்போதெல்லாம் சிறீரெங்கனை நான் நினைத்துக்கொள்கிறேன்.

மிக அண்மைக் காலம்வரை தமிழில் மார்க்ஸின் மூலதனம் மொழிபெயர்க்கப் பட்டிருக்கவில்லை. தொண்ணூறுகளின் நடுப்பகுதியில்தான் அதன் தமிழ் மொழி பெயர்ப்பு நியூ சென்சரி புக் கவுஸின் மூலம் முதன்முதலில் வெளிவந்தது. அது திரு. தியாகு சிறையிலிருந்து ஆயுட்தண்டனையைக் கழித்த காலத்தில் செய்த மொழி பெயர்ப்பாகும். அது வெளிவந்த சிறிது காலத்திலேயே இன்னுமொருவர் செய்த மொழிபெயர்ப்பு நூல் ஒன்றும் வெளிவந்தது. இரண்டையும் வாசித்து, அவர்கள் மூலதனத்தைப் புரிவதில் செய்த தவறுகளை மூலதனத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு, தமிழ் மொழிபெயர்ப்புக்களை ஒருசேர வைத்து எடுத்துக்காட்டியிருக்கிறார் சிறீரெங்கன். நான் மட்டுமில்லை, பலரும் பயன் பெறவேண்டும், இதை நீங்கள் ஏன் எழுதக்கூடாது? என்று நான் கேட்டபோது, எழுதத்தான்வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். பின் ஏனோ செய்யாது விட்டுவிட்டார்.

லதா ராமகிருஷ்ணன் போன்றவர்கள் பங்கு கொண்டிருந்த 'சூர்யோதயா' என்றொரு பெண்கள் பத்திரிகை சிறிதுகாலம் வெளி வந்துகொண்டிருந்தது சென்னையிலிருந்து. அப் பத்திரிகை சிறீரெங்கனின் வழிகாட்டலில்தான் நடந்தது. எனது 'தீர்ப்பு' சிறு கதை வெளிவந்தது அச் சஞ்சிகையில் தான். அதை வேற்றுமொழிப் பெண்கள் சஞ்சிகைகளுக்கு ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்து அவ்வாசிரியர் குழுவேதான் அனுப்பி, இந்தியா பூரா அது அறியப்பட்டதாய்ப் பின்னர் அறிந்திருக்கிறேன்.

அது நின்று போய்ச் சிறிதுகாலத்தில் ஒரு சிறுபத்திரிகை தொடங்கும் என் எண்ணத்தை சிறீரெங்கனுக்கு நான் சொல்லி சில வாரங்களுக்குள்ளேயே 'புதியன' என்றொரு சிறுபத்திரிகையை நண்பர் ஆரம்பித்து விட்டார். என் 'இலக்கு' அதற்கு ஒரு மாதம் கழித்தே வெளிவந்தது. ஒரே அச்சகத்தில் அவை அச்சாக்கமானது மட்டுமில்லை, ஒரே முகவரியிலிருந்தும் வெளிவந்தன. ஒரு பத்திரிகைக்கு மற்றவர் உதவி ஆசியர்போல் வேலைசெய்தோம். வேறு எங்காவது இதுபோலச் சாத்தியம் நிகழ்ந்திருக்குமா என்பது சந்தேகமே.

'புதியன'வில் எஸ்.என்.நாகராஜனின் 'மார்க்சீயம்: கிழக்கும் மேற்கும்' என்ற நூலுக்கு ஓர் ஆழமான விமர்சனம் எழுதியிருந்தார் சிறீரெங்கன். சில தொடர்களாக அது வெளிவந்தது. பரவலான கவனிப்பைப் பெற்றது. என்னோடு கலந்தாலோசித்து, விவாதித்துத்தான் அந்த விமர்சனக் கட்டுரையை அவர் எழுதினார். அதில் அவர் காட்டிய பொறுப்புணர்வு என்னை இப்போதும் பிரமிக்கவைக்கும்.

அந்த நண்பர் இப்போது உயிரோடு இல்லை. மிகவும் ஆற்றல் வாய்ந்த, மிக்க வாசிப்புப் பழக்கமுடைய, எவரோடும் அளவுக்கு அதிகமாக வார்த்தையாடாத அந்த நண்பர் நான் சென்னையிலிருக்கும்போது தான் காலமானார். ஆனாலும் என் கடுமையான சுகவீனம் காரணமாய் நான் சிறிது காலம் ஒதுக்கத்திலிருந்த காரணத்தால், அச் சாவுபற்றி அறியக்கூட முடியாமல் போனது. அறிந்த சிறிதுகாலத்தில் நானும் இந்தியாவைவிட்டு இலங்கை சென்று விட்டேன்.


சிறீரெங்கனின் ஆவியே வந்து சஞ்சலம் செய்துகொண்டிருந்ததுபோலத்தான் அவரின் நினைவு என்னை வதைத்துக்கொண்டிருந்தது. அவர் சாகிற காலத்தில் ஒருவகை மனநிம்மதியை இழந்திருந்தார் என்று பின்னர் அறிந்தேன். கிழமையின் பலநாட்களிலும் சேர்ந்துதான் குடிப்போம். ஆனாலும் இலக்கிய, அறிவார்ந்த, இடதுசாரி அரசியல், உலக நடப்புகள் தவிர உரையாடல் வேறு சாதாரண விஷயங்களில் சஞ்சரித்ததில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். அவரின் உருவம் அடிக்கடி என் மனக்கண்ணில் விழுந்துகொண்டிருந்தது. நீண்ட தலைமயிர். சடைத்த தாடி. காலையில் எண்ணெய் பூசி தோய்ந்துவிட்டு தலையை அழுந்த வாரிவிட்டாரென்றால், இரவுவரை அது கலையாது. விக்கிரமாதித்யனுக்கும் அதுமாதிரித் தோற்றம்தான். ஆனாலும் அது அவ்வப்போது நீண்ட தலைமுடி கட்டையாகவும், தாடி மீசை மட்டுமாகவும் மாறிக்கொண்டிருக்கும். ஆனால் சிறீரெங்கன் முதல் பார்த்த கோலத்திலேயே கடைசிவரை காட்சியாகியிருந்தார்.

எந்த விஷயத்திலுமுள்ள முரண் முதற் பார்வையிலேயே இவருக்கு எப்படித் தட்டுப் பட்டு விடுகிறதென்று பலமுறையும் எண்ணி நான் வியந்திருக்கிறேன். அது அவரது கலக மனத்துக்கு மட்டுமே சாத்தியமாவது என்றுதான் பின்னர் தெளிந்தேன். மண்ணின் குணம், மனிதர்களுக்கும் சேரும்தான்.

சிறீரெங்கன் ஒருவகையில் என் நண்பர். ஒருவகையில் பல விஷயங்களில் ஆலோசனை சொன்ன மந்திரி. ஒருவகையில் மார்க்ஸீயம் போதித்த ஆசிரியர். அவர் நினைவை நான் அலட்சியம் பண்ணிவிட முடியாது.

இந்தப் பதிவின் பின்னராவது அந்த என் மனச் சஞ்சலம் ஓரளவேனும் தணியும் என்று நம்புகிறேன்.

■ ■ ■


வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் ரஞ்ஜனாஸ் சில்க் வழங்கும்
மாபெரும்
மலிவு விற்பனை
March 15ஆம் முதல்
April 15ஆம் திகதி வரை
R
RanjanaSilk
ரஞ்ஜனாஸ் சில்க்
820 Markham Road - Unit # 5 & 6, Scarborough, ON. M1H 2Y2
(Markham Road & Painted Post)
Tel: 416-289-2232

# பிரதான பராமரிப்பாளர்

குமார் புனிதவேல் பக்கம்

உலகில் மிக வியப்புக்குரிய விடயம் என்ன வென்றால், நாளாந்தம் மரணங்கள் நடப்பதைப் பார்த்தும் மனிதன் மரணத்தை மறந்திருப்பதுதான் என்று மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரணம் ஒருவரும் விரும்பாத ஆனால் தவிர்க்க முடியாத விடயம்.

புத்த பகவான் மனிதவாழ்வில் மூப்பு, பிணி, சாக்காடு தவிர்க்க முடியாத ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார். எனவே எல்லாருக்கும் மரணத்தின் கொடுமைக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு நிலை வருவது இயற்கை. அதிலும் உங்கள் அன்புக்கு உரியவர் நோய்வாய்ப்பட்டு மரணத்தை எதிர்நோக்கும் வேளைகளில் அந்தவேதனை மரணிப்பவருக்கா அல்லது அவரை பராமரிப்பவருக்கா என்று சொல்ல முடியாது. அவர்கள் படும்வேதனையை பார்ப்பவர் அனுபவிக்கும் வேதனையும் கொடியது. அவரைக் காக்க முடியவில்லையே, முடிவை மாற்றமுடியவில்லையே என்று பல கோணங்களில் வேதனையை அனுபவிக்க வேண்டிவரும். அதுமட்டுமல்ல இதுதான் கடைசி மரணத்துக்கு முகம் கொடுக்கிறீர்கள் எனவும் கூற முடியாது.

உங்களுடைய அன்புக்கு உரியவர் இறக்கும் போது உங்களில் ஒரு கூறும் இறக்கிறது போன்ற உணர்வு வரும். அவர் இல்லாமல் வாழ்வு எப்படி இருக்கும்? உங்களுக்கு என்ன நாளை நடக்கும்? உங்களுடைய நீண்ட உறவின் நிலை என்ன? இப்படி பல கேள்விகள் சுனாமிபோல் கொந்தளிக்கும்.

அதேவேளை உயிருக்கு போராடுபவருக்கு எதை சொல்வது? அவர்களுடன் எதைப் பற்றி கதைப்பீர்கள்? அவர்களுக்கு எதனை சொல்ல கூடாது? நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவர்களுக்கு என்ன செய்தால் கூடிய அளவு உதவியாய் இருக்கும்? அத்துடன் உங்களுக்கு எப்படி உதவுவது? என பல கேள்விகள் ஊற்று எடுப்பதியற்கை.

நீங்களும் உற்சாகம் குறைந்து, ஓய்வு குறைந்து நேரம் முழுவதும் பராமரிப்பில் செலவிடுவதாக இருக்கலாம். அதுபற்றி ஆழ்ந்த தெள்வு இருந்தால் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்பதை எளிதாக தீர்மானிக்கலாம். அறிவு போன்ற ஆயுதாம் வேறு எதுவுமே கிடையாது.

அறிவு உங்களுக்கு ஒரு வழிகாட்டி அன்றி வாகனம் அல்ல. நீங்கள் தான் அந்தப் பாதையில் நடப்பவர். ஆனால், ஏற்பட்ட அனுபவங்களுடன் உங்களுக்கு உள்ள அறிவு உதவும் என்று நம்புகிறேன். அதனால் தான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

> “ பிரச்சினைகள் ஒரு கல் போன்றது. அதனை கண்ணுக்கு அருகில் பிடித்தால் உலகத்தையே மறைத்துவிடும். உங்கள் அன்பக்கு உரியவர் மரணிக்கப்போகிறார் என்பது பெரும் அதிர்ச்சியான செய்தி, அதனால் வேதனைப்படுவது இயல்பானதே. ஆனால் இத்துடன் உலகமே முடிந்து விட்டது என்று நினைப்பதில் அர்த்தமில்லை... ”

### மூன்று அறிவுரை

உங்கள் அன்புக்கு உரியவர் மரணப் படுக்கையில் இருக்கும் வேளை உங்கள் வாழ்வின் முன் எப்போது இல்லாத முகம் கொடுக்காத வேதனை மிக்க வேளையாக இருக்கும். நீங்கள் உங்கள் அன்புக்கு உரியவரை இழப்பதுடன் உங்கள் வாழ்க்கையில் பெரும் மாறுதல்களை முகம் கொடுக்க வேண்டிய வேளை இது. மாற்றங்கள் எப்போதுமே எளிதாக வருவதில்லை. அதிலும் விருப்பமில்லாத மாற்றங்களை ஏற்பது கடினம். அதுவும் விருப்பமில்லா மாற்றம் உங்கள் ஆரோக்கியமான வாழ்வுக்கு உலைவைப்பதானால் அது இன்னும் கொடியது. இந்நிலையில் ஒருவர் செய்வதறியாது திகைத்து நிற்பதில் வியப்பு ஏதுமில்லை.

உங்கள் மனநிலையில் ஏற்படும் போராட்டங்களுடன் உங்கள் நாளாந்த வாழ்விலும் இடையூறுகளை முகம் கொடுப்பீர்கள். நீங்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ பல அனுசரனை கடமைகளை பொறுப் பெடுக்க வேண்டிவரலாம். வைத்தியரை காண்பது, வைத்திய பரிசோதனைகள், வைத்தியசாலைக்கு செல்லுதல், அவசர வைத்திய சிகிச்சை என பலவிடயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம். நாளுக்கு நாள் செய்யும் பராமரிப்பு கடமைகளும் உங்களுக்கு பெரும் சுமையாக வரலாம். இவைமட்டுமல்லாமல் பொருளாதார சுமைவேறு உங்களை வந்து அழுத்தலாம். எதிர்காலமே கேள்விக்குறியாக வந்து நிற்கும்.

இவ்வளவுக்கு மத்தியில் உங்கள் கவனத்திற்காக வேறு விடயங்களும் வரலாம். வேலை நேரங்களில் இத்தேவைகள் உங்களை ஏற்பதுடன், ஏனைய அன்புக்குரியவர்கள் உங்கள் நேரத்தை வேண்டி நிற்கலாம். உங்கள் குடும்பம் முறிந்துபோகா விட்டாலும் பெரும் மாறுதலுக்கு உள்ளாவது நிச்சயம். உங்களுக்கு பொழுது போக்கு தனிமை ஆகியவற்றிற்கு ஒதுக்கும் நேரம் குறைந்துகொண்டே போக சந்தர்ப்பமுண்டு. மேலும் வெளியாட்கள் உங்கள் வீட்டிற்கு வருவது சர்வசாதாரணமாக இடம் பெறும். சிலர் உங்களுக்கு என்னத்தை சொல்வது. அல்லது என்ன உதவிசெய்யலாம் என்பது தெரியாமல் உங்களிலிருந்து விலகிச் செல்லலாம்.

உங்கள் அன்புக்குரியவருக்கு நடப்பது மிக மிக வேதனையானது. நோய் அவர்களுக்கு பெரும் அசௌகரியங்களைக் கொடுக்கலாம். அவர்களுக்கு தரப்படும் வைத்தியமே அவர்களுக்கு வாந்தி, பேதி போன்ற பக்க விளைவுகளை கொடுக்கலாம். மேலும் மரணப்படுக்கையில் உள்ளவர் மிக கவலையுடன் காணப்படலாம். உங்களால் புரிந்து கொள்ள முடியாத மாற்றங்கள் அவர்களில் ஏற்படலாம். உங்கள் உறவு முறையின் ஆணிவேரையே ஆட்டிவிடலாம்.

மரணப்படுக்கையில் உள்ள ஒருவரைப் பராமரிப்பது மிகவும் சிரமமான ஒரு விடயம். அதிலும் அவர் உங்கள் அன்புக்குரியவரெனில் அது இன்னும் கடினமானது. மேலும் இந்த அனுபவம் உங்களுக்கு புதியது. எனவே கடினமாகத்தான் இருக்கும்.

நீங்கள் சுமக்கும் சுமையை குறைத்து கூறாத அவேளை அது முடியாத விடயம் அல்ல என்பதனை மறக்க வேண்டாம். உங்களுக்குமுன் பலர் இத்தகைய பொறுப்புகளை சுமந்து உள்ளார்கள். இது உங்கள் வல்லமைக்கு ஒரு சந்தர்ப்பம். ‘உங்களால் முடியும்’ இது உங்கள் சுமையை குறைக்க உதவும் என்னும் நம்பிக்கையில் மூன்று வழிமுறைகளை முன்வைத்துள்ளேன்.

இயன்ற அளவு கற்றுக் கொள்ளுங்கள். வள்ளுவர் கூறியபடி ‘கற்க கசடற’ ஆம் உங்கள் பிரச்சினைக்கு முகம்கொடுக்க உங்கள் அன்பக்கு உரியவருடைய நோயைப் பற்றி ஒரு தெளிவான அறிவு மிக மிக அவசியம். அது மட்டுமல்ல எப்படி உதவி வழங்குவது, மன அழுத்தத்தை எப்படி கட்டுப்பாட்டில் வைத்திருப்பது எப்படி கெட்டித்தனமாக உதவிகளை செய்வது என்று எல்லாம் தெரிந்து வைத்திருந்தால் மிக எளிதாகும். சந்தேகங்களை கேட்டுத் தெளியுங்கள். நோய் பற்றிய புத்தகங்களை வாசியுங்கள். அதே நோயுடன் போராடுபவருடன் தொடர்புகொண்டு செய்திகளை விளக்கங்களை பரிமாரிக்கொள்ளுங்கள். நீங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை பற்றிய தெளிவு உங்கள் சுமையை பெரிதும் குறைக்கும். அதிகம் செய்வான் ஏன். இந்த கட்டுரையை நீங்கள் வாசிக்கும் வேளையில் நீங்கள் அறிவை பெறுகிறீர்களல்லவா?

### உங்களிடம் கருணை காட்டுங்கள்

பலர் அளவுக்கதிகம் சென்று கடைசியில் பயனற்றவராகிவிடுகிறார்கள். சுமைதாங்கி சாய்ந்தால் சுமை என்ன ஆவது? எனவே உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவை செய்யுங்கள். உங்கள் சக்திக்கு மேலாக எதிர்பார்த்து ஏமாற்றமடைய வேண்-டாம். உங்களின் செயல்களில் திருப்தியாக இருந்தால்தான் நீங்கள் மற்றவர்களுடன் திருப்தியாக இருப்பீர்கள்.

### தற்காலிகமானது என்பதை மறந்துவிடாதீர்கள்.

பிரச்சினைகள் ஒரு கல் போன்றது. அதனை கண்ணுக்கு அருகில் பிடித்தால் உலகத்தையே மறைத்துவிடும். உங்கள் அன்பக்கு உரியவர் மரணிக்கப்போகிறார் என்பது பெரும் அதிர்ச்சியான செய்தி. அதனால் வேதனைப்படுவது இயல்பானதே. ஆனால் இத்துடன் உலகமே முடிந்து விட்டது என்று நினைப்பதில் அர்த்தமில்லை. காலம் ஒரு நாள் மாறும், நீங்கள் வாழ்வை தொடர்ந்து செல்வீர்கள். வாழ்வில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், வாழ்வு தொடரும், தொடர வேண்டும். இது இயற்கையின்

49ம் பக்கம் பார்க்க...

J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.

Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

# A1 TOP QUALITY FLORIST





**உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு**


**தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**


# A1 TOP QUALITY FLORIST



## Funeral Services




**Floral Arrangement for Funeral Needs**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**




# ஆக்க எழுத்து என்பதன் பொருள்

எல்லா மனிதர்களும் ஆக்குநர்களே என்பது தத்துவ ஞானிகள் சிலரின் கருத்து. ஆக்குதலை, பழைய பொருள்களை – ஒழுங்குபடுத்தும் ஒரு புதிய முறை என்று, இவர்கள் விளக்குகின்றார்கள். ஆக்குதலை ஒழுங்குபடுத்தும் திறன் என இன்னும் சிலர் வரையறை செய்கின்றனர். அது மட்டு மல்ல, ஆக்கவேண்டும் என்கின்ற ஓர் உள்ளுணர்வு மனிதனைத் தூண்டிக் கொண்டே இருக்கின்றதாம்!

இத்தத்துவஞானிகளின் கூட்டு மொத்தமான விளக்கம் இதுதான்:

***ஆக்குதல் என்பது, பழையனவற்றை ஏதாவதொரு வகையில் புதிய, உவப்பான, பயனுள்ள சேர்க்கையாக ஒழுங்குபடுத்தும் திறன்.***

பழைய பொருட்கள் என்று இவர்கள் குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கின்றது. புதிது என்று ஒன்று உலகில் இல்லையாம். இருக்கிறதை வைத்துக்கொண்டு வேறொன்றைச் செய்தலையே ஆக்குதல் என்பர்.

புதிதாக ஒழுங்குபடுத்தும் திறன் எழுத்தாற்றலாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. ஓவியம், சிற்பம், நடனம், தொழில், கைத்தொழில் முதலாய கணக்கற்ற, பல்வகை மனித முயற்சிகள் இத்திறனின் வெளிப்பாடேயாம். ஆலோசனை வழங்குதல் கூட ஒருவகையான ஆக்கத்திறனாம்.

மனிதன் தான் நினைப்பதையும் காண்பதையும் சொல்ல முயல்கின்றான்; படிப்பதையும் கேட்பதையும் மற்றையோருக்குக் கூறவிரும்புகின்றான்; தனது அநுபவங்களை யாருடனே-னும் பகிர்ந்து கொள்ள விழைகின்றான்.

இவ்விதமான விருப்புகளை, உள்ளத்து உணர்வுகளைப் பிறருக்குச் சொல்வதற்குப் பல முறைகளைக் காலங் காலமாக மனிதர் கையாண்டு வந்திருக்கின்றனர். பேசப் பழகுவதற்கு முன், சைகை முறை, நடிப்பு முறை, ஓவிய முறை, சிற்ப முறை போன்றவற்றைப் பயன்படுத்தினர். பேசப் பழகிய பின் உரையாடல், பாடல், கதைகூறல் போன்ற முறைகளால் தம் உணர்வுகளை வெளிப்படுத்தத் தொடங்கினர். அதே வேளையில், பழைய வெளிப்பாட்டு முறைகளான நடிப்பு, ஓவியம், சிற்பம் ஆகியவற்றையும் பயன்கருதி வளர்த்-துக் கொண்டே வந்திருக்கின்றனர்.

எழுத்துமுறை வளர்ந்த பின், அதுவும் முக்கியமானதொரு வெளிப்பாட்டுக் கருவியாக மாறியது. எழுத்தைக் கருவியாகப் பயன்படுத்துபவர் எழுத்தாளர் ஆகின்றார்.

மற்றைய வெளிப்பாட்டு முறைகளுக்கு இல்லாத பல சிறப்புகள் எழுத்துக்கு உள்ளன. கிட்ட இருப்பவருக்கு மட்டுமல்லாது, எட்ட உள்ளவருக்கும் எழுத்தாளர் தமது உணர்வுகளைக் கூறிக்கொள்ள முடியும். இந்தச் சந்ததியுடனன்றி அடுத்து வரும் சந்ததிகளுடனும் உறவாட எழுத்து வாய்ப்பளிக்கின்றது.

மேலும், பாட்டு, நாடகம் போன்ற பிற வெளிப்பாட்டுக் கலைகளுக்கும் எழுத்து உதவியாக இருக்கின்றது. அதனால், தனது உணர்வுகளை எழுத்தில் இடுகையில் தனது ஆக்கத் திறனை எழுத்தாளர் மிகச் சிறப்பாகவும் கவனமாகவும் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது.

### ஆக்கி எழுதுதல் இரு வகைப்படும்:

(1) உள்ளதை உள்ளவாறு அல்லது சுருக்கி எழுதுதல். உண்மை நிகழ்வு, தகவல், கருத்துக்கள் அல்லது அபிப்பிராயங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் முயற்சியாக இ∴து இருக்கும். அதனால் இது வெளிப்பாட்டு எழுத்து (expressive writing) எனப்படும்.

(2) உள்ளதை மிகைப்படுத்திக் கூறுதல் அல்லது இல்லாததை உள்ளது போலக் கூறுதல்; மனப்பான்மை, உணர்ச்சி, உணர்வு ஆகியவற்றுடன் உறவாடும் செயற்பாடாக இ∴து இருக்கும். அதனால் இதனைப் பாதிப்பு எழுத்து (affective writing) என்பர்.

இந்த இரண்டாவது வகையே மேலான ஆக்க எழுத்து எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இவ்வகைப் படைப்புக்கள் வாசிப்பவர்களின் உள்ளத்தில் ஏதோ ஒரு வகையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

ஆக்க எழுத்துக்கு மற்றொரு பெயர் இலக்கியம்.

இலக்கியம் ஓர் உன்னதமான கலை. இந்த ஒப்பற்ற கலையின் இயல்பை நன்கு விளங்கிக் கொள்வதற்கு, கலை என்றால் என்ன என்பதனை அறிய வேண்டியது அவசியமாகின்றது.

# கலை என்றால் என்ன?

எழுத்து என்ற சொல்லைப் போலவே, கலை என்ற சொல்லும் தமிழில் பல்வேறு பொருள்களிற் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

***ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்***
***ஏய உணர்விக்கும் என்னம்மை...***

என்ற அடிகளில், கலைகள் - படிப்புத்துறைகள் (Field of studies or activities) என்ற பொரு-ளில் வந்தன. இவ்விதமே திறன், தொழில், அழகு, தனித்துவம் முதலிய பொருள்களைக் குறிக்கவும் கலை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*செய்வன திருந்தச் செய் என்பது முதுமொழி. செய்யும் வேலைகளைச் செம்மையாகச் செய் என்பது இதன் பொருள். செம்மை = முழுமை.*

திறன் (skill) வளர்ந்து முழுமை பெறும்பொழுது கலை (art) பிறக்கின்றது.

ஓர் எழுத்தாளரின் எழுத்துத் திறன், முயற்சியாலும் பயிற்சியாலும் வளர்ச்சியடைந்து முதிர்ச்சி பெறுகின்றது. இந்த முதிர்ச்சியே முழுமை. முழுமையடைந்த அவரது எழுத்துத் திறன் கலையாகின்றது. இது காய் முற்றிப் பழுப்பதைப் போன்றது.

கனிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகைச் சுவையுடையன. எழுத்துக் கலையும் ஆளுக்-காள் வேறுபடும். *விருத்தத்துக்குக் கம்பன், வெண்பாவுக்குப் புகழேந்தி* என்று நாம் கூறுகையில், விருத்தம் யாப்பதில் கம்பனும், வெண்பா யாப்பதில் புகழேந்திப் புலவரும், ஓர் உச்சத்தை எட்டி விட்டார்கள் - ஒரு முழுமையை நாட்டிவிட்டார்கள் என்பதையே குறிப்பிடு-கின்றோம்.

எனினும், முழுமைக்கு எல்லை கிடையாது. கிட்டத் தோன்றும், வானம் நடக்க நடக்க எட்டப் போவது போன்ற தோற்றப்பாடுடையது இந்த முழுமை.



**வி. கந்தவனம்**

ஒரு விளையாட்டு வீரனின் சாதனையை இன்-னொரு வீரன் முறியடிப்பதைப் போல், ஓர் எழுத்தாளரின் எழுத்து வல்லமையை வேறொருவர் விஞ்சலாம். சேக்ஸ்பியர் நல்லதோர் உதாரணம். நாடகத்துறையில் அவர், சமகாலத்து நாடக ஆசிரியர்களினதும் தனக்கு முன் இருந்தவர்களினதும் சாதனைகளை முறியடித்து ஒப்பற்ற நாடக எழுத்தாளரானார்.

முழுமைக்கு எல்லையில்லாததால் அளவுகோலும் இல்லையாம். அப்படியாயின், ஓர் எழுத்தாளரின் எழுத்துக் கலையின் திறமை எங்ஙனம் நிர்ணயிப்பது? யார் தீர்மானிப்பது?

வாசகர்கள் நிர்ணயிக்க வேண்டியது; கல்விமான்கள் கணிக்கவேண்டியது; திறனாய்வு, ஒப்பீட்டு விமர்சனங்களால் தீர்மானிக்க வேண்டியது.

மேல்நாடுகளில் எழுத்தாளர் ஒருவரின் கலை வண்ணம், அவரது படைப்பின் விற்பனைத் தொகை கொண்டும் மதிப்பிடப் படுகின்றது. அதாவது வாசகர்களின் தீர்ப்பிற்கே முக்கியத்-துவம் கொடுக்கப்படுகின்றது.

இவ்வகை மதிப்பீடுகள் ஒன்றுக்கொன்று வேறுபடலாம், அல்லது எல்லாமே பிழையாகலாம். குறிப்பிட்ட சில கல்விமான்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு படைப்புக்கு, வாசகர்கள் மத்தியிற் பெரும் மதிப்பிருக்கலாம். ஒரு சந்ததியாலே போற்றப்பட்டது இன்னொரு சந்ததியால் தூற்றப்படலாம்.

கலைத்துவம் மிகுந்த எழுத்து, காலத்தை வென்று நிற்கும். அதனால் எழுத்தாளரின் திறமையை நிர்ணயிக்க வல்ல சிறந்த கருவி காலமேயாகும்.

கலையின் மற்றோர் இயல்பு அழகு. திறன் - முழுமை – கலை – அழகு.

# அழகின் அழகு

தமிழ் மொழியிலேயே மிகவும் சொல் அழகு. எழுத்துக்களுக்கெல்லாம் முதலாய அகரத்தையும் ஒப்பற்ற சிறப்பெழுத்தாகிய ழகரத்தையும் மெய்யெழுத்துக்களில் முதலான ககரமெய்யுடன் ஏறிய வியப்பினைக் குறிக்கும் உகரத்தையும் கொண்டு அழகினைக் குறித்து நிற்கும் அழகின் அழகே தனி.

எந்த மொழியிலும் அழகினைக் குறிக்கும் சொல்லுக்குத் தனிச் சிறப்புண்டு; தனி மதிப்புண்டு. சொல்லுக்குச் சிறப்பு அச்சொல்லின் பொருளால் வருவதே வழக்கம். ஆனால், தமிழில் அழகு என்ற சொல்லே அது குறித்து நிற்கும் பொருளுக்குச் சிறப்புத் தருவதைப் பார்க்கின்றோம்.

அழகு. எங்கும் அழகு. எதிலும் அழகு. எப்பொழுதும் அழகு.

இந்த அழகைப் பிடித்து வரைவிலக்கணக் கூண்டில் அடைக்க முயன்றவர் பலர். இன்றல்ல நேற்றல்ல, இந்த முயற்சி மனிதன் அழகைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய காலத்தி-லிருந்தே நடைபெற்று வருவதொன்று. கிரேக்க ஞானிகள் முன்னோடிகளாக இருந்தார்கள். இன்றும் தத்துவ எழுத்தாளர்கள் இதன் பின்னால் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். அழகு அகப்படாது தப்பித்துக் கொண்டே இருக்கிறது. அதுவே அதன் அழகு. பிடிபட்டிருந்தால் அது கெட்டுப்போய் இருக்கும்.

உண்மை இதுதான்: அழகை விளங்குவது எளிது. விளக்குவது கடினம்.

ஏன்?

அழகுக்குக் கணித அளவுகோல் எதுவும் கிடையாது. இரசிப்பவரின் மனமே அளவுகோல். இதனால் ஆளுக்காள் அழகு வேறுபடுகின்றது.

சேலைக் கடைக்குள் ஒரு பெண். எத்தனையோ சேலைகளை விரித்து விரித்துப் பார்த்துக் கடைசியில் ஒன்றை தேர்ந்தெடுக்கின்றாள். அவள் கழித்தவற்றில் ஒன்றை மறுகணமே இன்னொருத்தி வந்து அழகாக இருக்கிறதென வாங்கிச் செல்கின்றாள்.

ஒருவன் பெண் பார்க்கச் செல்கின்றான். அவனுக்குப் பெண்ணைப் பிடிக்கவில்லை. சில நாள்களின் பின் அதே பெண்ணின் அழகில் வேறொரு இளைஞன் மயங்கி அவளைக் காதலித்து மணம் முடிக்கின்றான்.

இவ்விதம் ஒருவருக்கு அழகற்றதாகத் தோன்றுவது இன்னொருவருக்கு அழகானதாகப் படுகின்றது. அழகுக்கு ஆயிரத்தெட்டு முகங்கள். இந்த முகங்கள் அவரவர் மனநிலை-களுக்கேற்பத் தோன்றுகின்றன.

ஆளுக்காளன்றி, நாட்டுக்கு நாடும் அழகு பற்றிய கோட்பாடு வேறுபடுகின்றது. இவன் கருப்பு, அழகே இல்லாதவன் என்று எமது நாட்டில் கூறலாம். கருப்பர் வாழும் ஆபிரிக்க நாட்டில் இப்படிச் சொன்னால் அடிக்க வருவார்கள்.

அப்படியென்றால் எல்லா இடங்களுக்கும் பொருந்தக் கூடிய, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அழகு என்ற ஒன்று இல்லையா?

இருக்கின்றது.

தொடரும்...

■ ■ ■

மூதறிஞர் கந்தமுருகேசனார்
தமிழ் பண்பாட்டு இணையம்
நடாத்தும்

**பொது அறிவுதிறன் போட்டி**

பங்குனி 08 2008
காலை 8.30

**Scarborough Civic Centre**
**McCowan & Ellesmare**
**150 Borough Drive**

**NEW TOWN HOUSE FOR SALE**

**BROCK / ROSSLAND**

3 ROOM, 2 WASH ROOM,
HARD WOOD FLOOR,

**Read for May 31**
**Kanthan - 416 291 3997**

# பாசமொழிகள்



சுதா
இராஜசிங்கம்


பாசத்தை, நேசத்தை நாம் வெளிப்படுத்தும் முறைகள் பல. ஒவ்வொருவரும் தனிமனித வித்தியாச அடிப்படையில் வெவ்வேறு பாச மொழிகளை உணர்ந்தோ, உணராமலோ கையாளுகின்றனர். எனக்குப் புரியும் பாச மொழியில் பாசம் காட்டப்படும் போது, அது என் மனதை நிறைக்கிறது. முயற்சி எடுத்தும், என் மொழி என் துணைவருக்கோ, என் பிள்ளைகளுக்கோ விளங்காவிட்டால், என் பாசம், அன்பு அவர்களுக்குப் புரியாது. மொழி புரியாதபோது, அனுபவிக்கும் ஏமாற்றம், கவலை, கோபம், இயலாமை பாசத்தைக் காட்டுவதிலும் ஏற்படுகின்றது. பாசத்தை எவ்வாறு பிறருக்கு புரியக்கூடிய வகையில் காட்டலாம்? எவ்வாறு எமது பாசமொழிகள் என்ன என்று அறியலாம்?


குழந்தை உளவியலாளர், ஐந்து பாச மொழிகளைப் பிள்ளைகள் கையாளுவதோடு, பிறர் தம்மேல் காட்டும் பாசத்தை ஐந்து மொழிகளால் புரிந்து கொள்கிறார்கள் என்று அடையாளம் கண்டுள்ளனர்.

### உற்சாகமூட்டும் வார்த்தைகள்:

குழந்தைப் பருவத்தினருக்கு உற்சாக மூட்டும் வார்த்தைகள் நாம் கூறுவது மிகவும் இலகு. "அழகான கைகள்", "குட்டிக்குட்டி விரல்கள்", "கெட்டிக்காரன், கெட்டிக்காரி"என்பன இதற்கு உதாரணம். ஆனால் சிறிது வளர்ந்ததும், "எத்தனை தரம் சொல்ல வேணும்", "ஒருநாளும் ஞாபகம் வராது", "மாடு போல", "தலைக்குள்ள மண்ணா" போன்ற வார்த்தைகளைக் கூறுவது மனதைப் புண்படுத்தும்.

பாசத்தைக் காட்டும் முறையாக உற்சாக மூட்டும் வழியைக் கையாளும் பிள்ளை, மேற்கூறிய வார்த்தைகளால் கூனிக்குறுகிப் போகும். குறைய மார்க்குகளுடன் வீட்டுக்கு வரும் பிள்ளைக்கு, "நீ நிறைய முயற்சி எடுத்தது தெரியும். கவலைப்பட வேண்டாம். அடுத்த முறை இதைவிடச் சிறப்பாகச் செய்யலாம்" எனக்கூறுவது மனதுக்கு மிகுந்த ஆறுதலைத் தருவதோடு, பாசத்தை வெளிப்படுத்தும் வழியாக அமையும்.






### பெறுமதியான நேரம்:

சில பிள்ளைகளுக்கு பெற்றோருடன் தனித்துக் கழிக்கும் நேரம் மிக விஷேடமானது. உதாரணமாக, புதிய குழந்தையின் வரவால், கவனிப்பு இழந்துவிட்டேன் என்று ஏங்கும் 4 வயதுக் குழந்தை, சின்னத்தம்பி தூங்கியவுடன் தன்னை மடியில் வைத்து தாய் கொஞ்சும் நேரத்துக்காக ஏங்கும். இந்தக் குழந்தையின் பாசமொழி பெறுமதியான நேரம் அல்லது தனியாக ஒதுக்கும் நேரமாகும். பல பிள்ளைகளையுடைய பெற்றோர், ஒவ்வொரு பிள்ளையுடனும் சிறிது நேரமாவது தனித்து ஒதுக்குவது நல்லது. வளர்ந்து பெரியவரானாலும், மனதில் நீங்கா இடம் பிடிக்கும் நினைவுகள் இவைகள் தாம்.

### பரிசுகள் பெறுதல்:

சிலசமயம் பெற்றோர், பாட்டா, பாட்டிமார் இந்த மொழியை அளவுக்கதிகமாகப் பிரயோகிக்கிறார்கள். சில பெற்றோர் பரிசுகள் கொடுப்பதே அன்பைக் காட்டும் ஒரே வழியென்றும் எண்ணலாம். பரிசுகள் பெறுவது ஒரு பிள்ளையின் பாசமொழியில்லாவிடின், அந்தப்பிள்ளை அந்தப் பரிசை ஏனோ தானோவென்று தான் பெற்றுக் கொள்ளும். பரிசுகள் பெறுவது ஒரு பிள்ளையின் பாச மொழியெனின், ஒவ்வொரு சிறு பரிசும் பொக்கிஷமாகப் பாதுகாக்கப் படும். எல்லாப் பரிசுகளும் கடையில் வாங்கப்பட வேண்டியவை அல்ல. எமது கைப்பட செய்யும் சில பரிசுகள் பாசத்தைத் தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

### தொடுதல்:

தலையைத் தடவுதல், மடியில் வைத்தல், அணைத்தல், உருவிவிடுதல் (massage) ஆகிய உடலியல் தொடுகைகள் இந்த வகையைச் சாரும். சில பெற்றோர் இந்த மொழியைக் கையாளாதவராயும், பிள்ளை அம்மொழியில் பாசத்தை வெளிப்படுத்துபவராயும் இருப்பின், பாசத்தைக் காட்டும் அறிந்து கொள்ளும் வழி தடைப்படுகின்றது. பிறந்த நேரம் முதல் குழந்தையை அரவணைத்தல் குழந்தையின் மனோவியல் வளர்ச்சியை வளம்படுத்துகின்றது என்று விஞ்ஞான ஆய்வுகள் காட்டுகின்றன. அன்பு, பாசம் என்ன என்று விளங்கும் முன்னே அணைத்தல், வருடுதல், முத்தமிடல் போன்ற தொடுகைகள் மூலம் குழந்தை தான் நேசிக்கப் படுவதை உணர்கின்றது. அடிக்கடி உங்கள் குழந்தை உங்களை முத்தமிடல், அரவணைத்தல், மடியில் இருக்க முனைதல் ஆகியவற்றைச் செய்தால், அப்பிள்ளையின் பாசமொழி அது தான் என்று அறியலாம்.

### சேவை செய்தல்:

பிறந்த நேரம் முதல் பெற்றோர் பிள்ளை பராமரிப்புச் "சேவை" செய்கிறார்கள். பால் கொடுத்தல், நனைந்த உடையை மாற்றல், குளிப்பாட்டல், ஊட்டிவிடல், உடையணிதல் ஆகியவற்றைச் செய்கிறார்கள். வளரும் போது பாடசாலைக்குத் தேவையானவற்றை எடுத்து வைத்தல், பிடித்த சிற்றுண்டி தயாரித்தல், புத்தகப் பையைக் காவுதல், உடைந்த விளையாட்டுப் பொருளை சரிபார்த்து வைத்தல் போன்ற சேவைகளைச் செய்வதன் மூலம் தம் பாசத்தை வெளிப்படுத்துகின்றனர். உங்கள் இச்சிறு சேவைகளை பிள்ளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு நன்றியோ களிப்போ தெரிவிப்பதோடு தானும் உங்களுக்கு சிறு சிறு சேவைகளைச் செய்தால், இந்தப் பிள்ளையின் பாசமொழி, சேவை செய்தல் எனக்கொள்ளலாம்.

- அவதானித்துப் பாருங்கள். உங்கள் பாசமொழி என்ன?
- உங்கள் துணைவரின் பாசமொழி என்ன?
- உங்களின் குழந்தைகளின் பாசமொழி (கள்) என்ன?
- நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைகளில் எமது பாசத்தை வெளிப்படுத்துகிறோம்.

மூலம்: ஐந்து பாசமொழிகள் - கரி சப்மன் The five Languages of Love – Gary Chapman
தமிழாக்கம்: சுதா இராஜசிங்கம்

■ ■ ■

HiTech
Home Inspection

"A Professional Home Inspection Service for Your Protection"

We offer the following Services;

- Mold Inspection
- Air Quality Inspection
- Pre-Purchase Inspection
- Pre- Listing, Sale and Renovation Inspections
- Problem Solving Inspection
- Inspection of relatively new homes as warranty expire (1st, 2nd and 7th year, from the day you moved in)

உங்கள் புதிய வீட்டின் 1ம், 2ம், 7ம் வருட உத்தரவாதம் முடிவதற்கு முன் வீட்டைப் பரிசோதிப்பதால், உத்தரவாதத்திறகுட்பட்ட பிழைகளை அறிந்து, செலவின்றித் திருத்திக் கொள்வதற்கு, தகுதியான பரிசீலினையைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.



The World's Elite Inspectors
NACHI National Association of Certified Home Inspectors

Andrew Marioselva C.H.I
Member of National Association of Certified Home Inspectors (NACHI)
Member of International Association of Certified Indoor Air Consultants (IAC2)

T: 416 829 0082 C: 416 822 8876 F: 905 948 9216
E: amarioselva@on.nachi.org

## சர்வதேச மகளிர் தினம்

இவ்வருடம் வலிமையான பெண்கள் வலிமையான உலகம் எனும் கருப்பொருளுடன் கனடிய சர்வதேச மகளிர் தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

**"பெண்களின் வலிமையைக் போற்றுவோம்"**

எனும் கருப்பொருளில் தமிழ் சேவைவழங்குனர் சம்மேளனமும் கனடிய தமிழ் பேரவையும் இணைந்து துன்புறுத்தல்லுக்கெதிரான தமிழ் பெண்கள் குழுவின் உந்துசகத்தியுடன் தமிழ் சமூகம் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றது.
இந்நிகழ்வு ஒரு சந்தோச கழிப்பு நிறைந்த நிகழ்வாக அமைக்கப்படுகின்றது.
அத்துடன் வலுவளர் சங்க அக்கத்துவ பெண்மணிகளினால் தமிழர் பாரம்பரிய மேடைநிகழ்வான வில்லும்பாட்டும், (கன்ரைட்) தமிழ் இழையோர் முன்னேற்ற நிலைய இளைஞர்களின் அதிநவீன இசை நிகழ்ச்சியும் நாட்டிய நாடகம் என்பனவும் நிகழ்வுகளாக நடைபெற உள்ளதுடன் ரொரன்ரோ பெரும்பாகத்தின் சமூக சேவை நிறுவனங்களின் தகவல் மேடையும் நவீன புரட்சி சித்திரக் கண்காட்சியும் இடம்பெற உள்ளது.
தமிழ் சமூகத்தினர் அனைவரும் திரண்டு வந்து இந்நிகழ்வில் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மார்ச் 7ம் திகதி வெள்ளிக் கிழமை**
**ஸ்காபரோ நகர சபை மண்டபத்தில்**

416 240 0078

# பிரதான பராமரிப்பாளர்...

45ம் பக்கத் தொடர்ச்சி...

நியதி. அனுபவத்தால் கட்டாயம் முதிர்ச்சியடைவதுடன் இன்னும் சிறந்த மனிதராய் பரிணமிப்பீர்கள். இந்த யதார்த்தத்தை நீங்கள் எற்க மறுத்தாலும் அதுதான் சத்தியம். உங்கள் நிலை கடினமானது. ஆனால், கட்டாயம் நீங்கள் சுமையை தாங்குவீர்கள். நம்பினார் கெடுவதில்லை. நான்கு மறை தீர்ப்பு..

## அணையைக் காப்பாற்ற வடிகால் வையுங்கள்.

மரணப்படுக்கையில் இருக்கும் உங்கள் அன்புக்குரியவரை பராமரிப்பது பல புதிய அனுபவங்களை தருவதுடன் அதனால் உங்கள் மனநிலையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துவது நிச்சயம்.

முதல் முக்கிய தாக்கம் வேதனை அல்லது துக்க உணர்வு. சொல்ல முடியாத அளவு வேதனை எற்படுவதற்கு இது ஒரு சந்தர்ப்பம். அன்புக்கும் மதிப்புக்கு உரியவர் மரணத்தை எதிர்கொண்டு இருக்கும் வேளை மிக மிக துன்பகரமானது. உங்கள் இதயமே வெடித்துவிடும் போல் இருக்கும். அவருக்கு நடக்கப்போவதன் அச்சத்துடன் உங்களுக்கு நேரப்போக்கும் கதியும் சேர்ந்து இரட்டிப்பு வேதனை தருவதுடன், சில தினங்களில் அச்சம் உங்களை கௌவிப் பிடித்துவிடும். சிலவேளைகளில் உங்கள் ஒவ்வொருவருக்கும் எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சமும் கவலையும் நிறைந்தே இருக்கும்.

நீங்கள் செய்த அல்லது செய்யாத ஒன்றிற்காக குற்ற உணர்வு உங்களை சூழலாம். அது பல காலத்துக்க முந்தியதாய் இருக்கலாம். அல்லது நேற்று நடந்தவிடயமாயிருக்கலாம். சில பராமரிப்பாளர்களுக்கு செய்யும் பொறுப்பில் வெறுப்பு அல்லது அருவறுப்பினால் குற்ற உணர்வு ஏற்பட இடமுண்டு. அன்புக்குரியவர் நோய்வாய்ப்பட்டிருக்க தாம் ஆரோக்கியமாய் இருப்பதையிட்டும் குற்ற உணர்வு தோன்றலாம். இது எப்போ முடியும், இந்த வேதனைக்கு முடிவுவராதா எனும் ஏக்கத்தாலும் குற்ற உணர்வு வரலாம். நிலைமையை மாற்ற முடியாத நிலையில் ஏற்படும் குற்ற உணர்வு வேதனையாக பரிணமிப்பது இயல்பு.

> **“ பராமரிப்பவர்களுக்கு ஏற்படும் உணர்வுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக அமைவதுண்டு. உங்கள் மனநிலை ஊசலாடுவதினால் உங்களுக்கு உங்கள் மன நிலையிலேயே சந்தேகம் தோன்ற காரணமுண்டு. இப்படி இருந்தால் நீங்கள் கவலைப்படவேண்டாம். இது இயல்பானதே. ”**

நீங்களே நம்பமுடியாத ஒரு உணர்வு கோபம். உங்கள் அன்புக்கு பாத்திரமானவர்க்கும் உங்களுக்கும் இது நடக்கிறதே என கோபஉணர்வு ஏற்படலாம். இது நியாயமில்லை என உங்கள் உள்ளம் பிதற்றலாம். எங்களுக்கு ஏன் ஏற்பட்டது என அழவும் கூடும். ஏன் என்று புரியாமலே வைத்தியர், தாதிமார் உங்களில் இருந்து ஒதுங்கி இருக்கும் நண்பர், உறவினர் என பலர் மேலும் கோபம் வரலாம். இதன் விளைவாக உங்களுடன் நெருங்கியவர்கள் உங்கள் கோபத்திற்கு முகம்கொடுக்க வேண்டி வரலாம். அல்லது மரணப்படுக்கையில் உள்ளவர் மேல் இக்கோபம் திரும்பலாம். சிலவேளைகளில் உங்களுக்கு உள்ள மேலதிக வேலைகள் உங்களுக்கு வெறுப்புணர்வை கொடுக்கலாம்.

பல சமயங்களில் உங்களுக்கு ஒரே குழப்பமாய் இருக்க நேரிடலாம். இன்னும் சில சமயங்களில் உங்களுக்கு ஒரு மலைப்பை உண்டு பண்ணி ஒருவித உணர்வுமில்லாமலும் இருக்கக்கூடும். இத்தகைய உணர்வு அதிகமாக ஆரம்பக் கட்டத்தில் தான் ஏற்படுவதுண்டு.

## உங்களுக்கு தோன்றும் உணர்வுகள்

சில சமயங்களில் பயனுள்ளதாய் உறுதியானதாய் அமைவதுண்டு. உதாரணத்திற்கு மரணப்படுக்கையில் உள்ளவரிடம் அதிக அன்பும், அவர் முன்ப செய்த நல்ல காரியங்களுக்காக மதிப்பும் ஏற்படலாம். உங்களுக்கு வேறுபட்ட காரணங்களுக்காகமகிழ்ச்சியும் எற்படலாம். ஒன்றுமில்லாவிடி-னும் இன்னும் ஒருநாள் வாழக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சி ஏற்படலாம்.

பராமரிப்பவர்களுக்கு ஏற்படும் உணர்வுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக அமைவதுண்டு. உங்கள் மனநிலை ஊஞ்சல் ஆடுவதினால் உங்களுக்கு உங்கள் மன நிலையிலேயே சந்தேகம் தோன்ற காரணமுண்டு. இப்படி இருந்தால் நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்களில் ஒரு தவறும் இல்லை. இது இயல்பானதே. வழக்கத்துக்கு மாறுபட்ட சூழ்நிலையில் மாறுபட்ட உணர்வுகள் வருவது இயல்பு.

உங்களுக்கு எத்தகைய மனநிலை எற்படினும் அதனை வெளிக்கொண்டு வருதல் அவசியம். அதை அடக்கிவைப்பதில், உங்கள் சக்தியை அமுக்கிவைப்பதில் அர்த்தம் ஏதுமில்லை. உங்கள் சக்தியை வேறு நல்ல காரியத்திற்கு விரயம் செய்யலாம். மேலும் முயன்றாலும் மூடிவைக்க முடியாத ஒன்று இத்தகைய மன உணர்வுகள். எனவே குறைந்தபட்சம் ஒருவரையோ அல்லது முடியுமானால் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களுடன் கதையுங்கள். உங்கள் உள்ளத்து உணர்வுகளை கடிதமாக எழுதுங்கள். அல்லது ஒரு டயரியில் எழுதுங்கள். உங்களுக்கு எது எளிதாக படுகிறதோ அதனை செய்யுங்கள். சிலர் இசையில் இணைந்திருப்பர். வேறுசிலர் தியானத்தில் மறந்து இருப்பர். தைப்பது, பின்னுவது, வரைவது என பல்வேறு வழிகளில் உங்கள் உள்ளக் குமுறல்களுக்கு வடிகால் அமைக்கலாம். இவ்வடிகால்கள் உள்ளம் / மனம் எனும் அணை உடையாதிருக்க உதவும்.

உங்கள் உணர்வுகளை வேதனைகளை, வெறுப்புகளை கவனியாதிருக்காமல் அவற்றிற்கு முகம் கொடுங்கள். மனம் உள்ள வரை மனிதர் என்கிறோம். இந்த மனம்தான் உங்களை பராமரிக்க உந்தும் காரணி அது கெட்டுவிடாமல் பார்ப்பதவசியம்.

■ ■ ■

FILE YOUR TAX RETURN THRU' US
AND
TAKE YOUR MONEY IMMEDIATELY

NO WAIT FOR YOUR REFUND!!!
"INSTANT CASH"

Our Services Include:

- Income Tax Returns E-filing for Individuals, Self-Employed, Small Businesses, Corporate, Etc.
- Bookkeeping, GST/PST filing, Payroll, Etc.s
- Company Registration, Incorporation, Business Plans, Bank Loans, Etc.
- Cheques Cashing, Payday Loans, Money Transfer, Etc.
- Mortgages & Insurances

For Details Call:
GLOBAL MONEY SHOP
1025 MARKHAM ROAD, SCARBOROUGH, ON
(North East Corner Plaza of Brimorton Dr. & Markham Rd.)
Phone: 416-273-9293 & 416-289-9820

INCOME TAX RETURN

Starting From
$19.99

E-File

Discounts for:
- New Immigrants
- Students
- Seniors

# வயதுமுதிர்ந்தோரின் மனநலம் ( Mental Health of the Elderly)

ஜீவா திசைராஜா



வாழ்நாள் முழுவதும் மனநலமானது ஆரோக்கியமானதாக இருந்த போதிலும் வயதான காலத்தில் மனவழுத்தம் (Depression), அல்ஹியர்மஸ் நோய் (Alzheimer's Disease), மனவிசாரக் கோளாறுகள் (anxiety disorders), இதனை விட வேறும் பல கோளாறுகள் இருக்காது என்பதை இது உறுதிப்படுத்தாது. உண்மையில் சில ஆய்வு களின்படி வயதான மக்கள், அவர்களை விட இளமையானவர்களின் மனநலக் குறை பாடுகளால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும் இத்தகைய அநேகமான சுகயீனங்கள் சரி யான முறையில் கண்டறியப்பட்டு குணப் படுத்தப்படக் கூடியவை.

## வயதுமுதிர்ந்தோரின் மனநலம் தொடர்பான சில புள்ளிவிவரங்கள்

- வட அமெரிக்காவில் 15% -25% மான வயதான மக்கள் மனநல சுகயீனம் தொடர்பான அநேகமான அறிகுறிகளைக் கொண்டுள்ளனர்.
- அமெரிக்காவில் அதிகூடிய தற்கொலை வீதம் 65 வயதும் அதற்கு அதிகமானவர் களிடையேயும் காணப்படுகின்றது. 1985 இல் இந்த வயதுக் குழுவினர் அமெரிக்கக் குடித்தொகையின் 12% மானவர் களைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதும் நாடுமுழுவதும் 20%மான தற்கொலை வயது முதிர்ந்தவர்களே மேற்கொள்கின் றனர். அதாவது 6000 வயது முதிர்ந்த அமெரிக்கர்கள் ஒவ்வொரு வருடமும் தமது உயிரைத் தாமே மாய்த்துக் கொள்கின்றனர்.
- உலகெங்கும் வயதானவர்களே புதிதாக மனநல சுகவீனத்திற்கு உட்படுவர் களின் பட்டியலில் முன்னணியில் உள்ள னர். 1985இல் 100,000 பேரில் 236 வயது முதிர்ந்தவர்கள் மனநல நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். இது இதற்கு அடுத்த வயதுக் குழுவான 45 -64 வயது டையோருடன் ஒப்பிடுகையில் 100,000 பேருக்கு 93 ஆக உள்ளது.
- கடுமையான மனக்கோளாறுகள் அமெரிக்காவில் 1மில்லியன் வயதானவர் களைப் பாதித்துள்ளதுடன் இன்னோர் 2 மில்லியன் மக்கள், ஓரளவான மனக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துயரமான விடயம் என்னவெனில், அநேக மான வயதானோர் உளவியல் சிகிச்சை யைப் பெறத் தயக்கம் காட்டுவதாகும். இச் சிகிச்சைகள் இவர்களது நோய் அறிகுறி களை நீக்கி முன்னைய செயற்படு தன் மைக்கு இவர்களைக் கொண்டுவரக் கூடிய தாக இருந்த போதும் அநேகமான வயது முதிர்ந்தவர்கள மனநலக் குறைபாடு உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மனநல சுகவீனத்தை விளங்கிக் கொள்ளாதவர்களாகவோ இருக்கின்றனர். இவர்கள் தமது அறிகுறிகளைப் பற்றி வெட்கப்படுபவர்களாகவோ அல்லது அந்த அறிகுறிகள் வயதாவதன் தவிர்க்க முடியாத பகுதியென்றோ நம்புகின்றனர்.

வயது முதிர்ந்தவர்களும் அவர்களது அன்புக்குரியோரும், நண்பர்களும், கூட, வயது முதிர்ந்தோரின் குணமாக்கக்கூடிய மனநல சுகவீனங்களின் அறிகுறிகளை இனங்கண்டு கொள்ளத் தவறுகின்றனர். இவர்கள் இதற்கு முதிர்வயது தான் காரணம் என குற்றம் சாட்டுகின்றனர் அல்லது இந்தப் பிரச்சனையைத் தீர்க்க எதுவும் செய்ய முடியாது என எண்ணுகின்றனர்.

இதன் விளைவாக கிட்டத்தட்ட 25% மான வயது முதிர்ந்தோர் மனநல சுகவீன அறி குறிகளால் துன்பப்பட்ட போதும் இவர்கள் சிகிச்சையை நாடுவதில்லை. சமூகமனநல மருத்துவ மையங்களில் (Community mental Health Centre) உள்ள நோயாளிகளில் 4%மானோர் மட்டுமே வயது முதிர்ந்தோர் களாவர்.

தனிப்பட்ட மருத்துவர்களின் அலுவலகங் கள் அல்லது வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகளில் 2%மானவர்கள் மட்டுமே வயது முதிர்ந்தோர்களாக உள்ளனர்.

மனநலசுகவீனத்திற்கான சிகிச்சைக்காக ஒதுக்கப்படும் நேரடிச் செலவில் 1.5%இற் கும் குறைவான பங்கே சமூகத்தில் வாழும் வயது முதிர்ந்தவர்களுக்காகச் செலவிடப் படுகின்றது.

வயது முதிர்ந்தவர்களின் நடத்தையில் (Behaviour) அல்லது மனநிலையில் (Moods) குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் காணப்பட்டால் அலட்சியம் செய்ய வேண் டாம். இந்த மாற்றங்கள் மனஅழுத்தம் (Depression), புத்திமழுங்குதல் (dementia), அல்ஸ்சிமர்ஸ் நோயின் (Alzheimer's Disease) அறிகுறிகளாகவோ அல்லது நீங்கள் உதவி பெறக் கூடிய ஏனைய நிலைமைகளின் அறிகுறியாகவோ இருக்கலாம். மருத்துவ மற்றும் மனநல (Psychiatric) மதிப்பீடு களை நாடுவதன் மூலம் வயதானவர்கள் மீண்டும் செயற்திறன் வாய்ந்தவர்களுடன் சந்தோஷமான வாழ்க்கைக்குத் திரும்பவும் உதவமுடியும்.

## மனஅழுத்தம் (Depression)

மனஅழுத்தமானது மிகவும் பொதுவான மனநல கோளாறாகும். 65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களிலும் 5%மா னோர் இதன் பாதிப்பிற்கு உட்படுகிறார்கள். அநேகமான ஆய்வாளர்கள் இது குறைந்த மதிப்பீடு எனக் கருதுகின்றனர். ஏனெனில் மனஅழுத்தமானது Dementia நோயைப் போலத் தோற்றமளிக்கலாம். Dementia என நோய்கண்டறியப்பட்டவர்களில் 10%மானோர் உண்மையில் மன அழுத்தத்தால் பாதிக்கப் பட்டவர்களே. இவர்களுக்கு சிகிச்சை அளிப்பது சிறந்த பலனைக் கொடுக்கும் எனக் கண்ட றியப்பட்டுள்ளது.

நீங்களோ அல்லது உங்களது அன்புக் குரியவர்களோ இந்த மனஅழுத்தத்தின் அறிகுறிகள் எவற்றையேனும் 2 கிழமைக்கு மேல் அனுபவித்தால், நீங்கள் உதவியை நாடவேண்டும். இவ் அறிகுறிகள் பின்வரு மாறு:

- தான் தகுதியற்றவர் என எண்ணுதல்,
- நம்பிக்கையிழந்து போயிருத்தல்,
- உதவியற்றவர்களாக உணர்தல்,
- தேவையற்ற குற்ற மனப்பான்மை,
- நீண்ட காலம் நீடித்திருக்கும் துக்கம் அல்லது விளக்க முடியாத அழுகை ஏற்படல்,
- எரிச்சலடைதல்,
- முன்பு சந்தோஷமாக ஈடுபட்ட நடவடிக் கைகள், வேலை அல்லது பாலுறவில் இருந்து பின்வாங்குதல்.
- விளக்கமுடியாத வகையில் நினைவாற் றலை இழத்தல்,
- கிரகித்தல் தன்மை குறைவடைதல்,
- மனக்குழப்பம், தீர்மானமெடுக்க முடி யாமை போன்ற அறிவு சார்ந்த பிரச்சி னைகள் ஏற்படல்
- சாகவேண்டும் அல்லது தற்கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணமேற்படல், தற்கொலை முயற்சிகள் (உடனடியாக உதவியை நாடுங்கள்)
- உணவில் விருப்பமின்மை அல்லது கவனிக்கக் கூடியளவில் உணவில் விருப்பம் அதிகரித்தல், தொடர்ச்சியான களைப்பு, சோம்பல், நித்திரையின்மை, அல்லது நித்திரை தேவைப்படும் அளவை விட அதிகரித்தஅளவு நித்திரை தேவைப் படல், உடல் நோவுகள், வலி, மலச்சிக் கல், விளக்க முடியாத ஏனைய உடல் உபாதைகள் ஏற்படல் போன்ற உடலி யல் பிரச்சனைகள்.

## அறிவுமழுங்குதல் (Dementias)

மனக்குழப்பம், ஞாபகசக்தி இழப்பு, தீர்மா னிக்கும் திறனற்றுப்போதல் போன்ற அறிவு மழுங்கும் குணவியல்புகள் வயதாவதன் தவிர்க்க முடியாத பகுதியல்ல. உண்மை யில் வயதான அமெரிக்கர்களில் 15%மான-

51ம் பக்கம் பார்க்க...

> “ வயது முதிர்ந்தவர்களின் நடத்தையில் (Behaviour) அல்லது மனநிலையில் (Moods) குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் காணப்பட்டால் அலட்சியம் செய்ய வேண்டாம். இந்த மாற்றங்கள் மனஅழுத்தம் தொடர்பான நோய்களின் அறிகுறிகளாகவோ அல்லது நீங்கள் உதவி பெறக் கூடிய ஏனைய நிலைமைகளின் அறிகுறியாகவோ இருக்கலாம். ”

தட்டச்சு
Typing
தமிழில்
ஆங்கிலத்தில்
மலிவாக
தட்டச்சு
வடிவமைப்பு
செய்து தரப்படும்.
உடனடியாக...
10 பக்கத்துக்கு மேல் உள்ள ஒப்பந்தங்களுக்கு (8 1/2" X 11" அளவுக்கு ) வடிவமைப்பு உட்பட
3 டொலர்கள் மட்டுமே
தட்டச்சு மட்டும் செய்வதற்கு
2 டொலர்கள் மட்டுமே

416 274 9669

வர்கள் மட்டுமே இந்த நிலையால் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த எண்ணிக்கையில் ஓர் மதிப்பிடப்பட்ட 60%மானோர், "அல்ஸ்-ஹெய்மர்ஸ்" நோயினால் பாதிக்கப்படுகின்றனர். தொடர்ந்தேர்ச்சியான மனசிதைவையே (Mental Deterioration) இந்நோய் குறிக்கின்றது. இதற்கு எந்தவித காரணமோ அல்லது சிகிச்சைமுறைகளோ இதுவரை கண்டறியப்படவில்லை.

ஏனைய 40%மான அறிவுமழுங்குதல் நோயிற்கு தொடர்ந்தேர்ச்சியான உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் சிக்கல்கள், இரத்தக் கலங்களில் ஏற்படும் நோய், அல்லது முன்பு ஏற்பட்ட பாரிசவாதம் என்பன காரணமாகலாம்.

**பார்க்கின்ஸன் நோய் (Parkinson's disease)** சிறிய நடுக்கங்களுடன் ஆரம்பிக்கும். இந்த நோய் கடுமையாகும்போது அல்லது இந்நோயின் முற்றிய பருவத்தில் அறிவுமழுங்குதல் (Dementia) ஏற்படும்.

**ஹன்ரிங்டன் நோய் (Huntington's disease)** ஹன்ரிங்டன் நோய் என்பது நடுத்தரவயதில் ஆரம்பிக்கும் ஓர் பரம்பரை கோளாறாகும். ஆளுமைத் தன்மை மாற்றமடைதல் (Changed Personality) அறிகுறிகள், மனநிலை சிதைவடைதல், உண்மைத் தன்மை பற்றிய உணர்வு முற்றிலுமாக அற்றுப் போகும் புத்திசுவாதீனமற்றுப் போதல் (Psychosis) என்பவற்றுடன் இயங்குவதில் குழப்பம் ஏற்படல் (Movement disturbances) போன்ற அறிகுறிகளுடன் இந் நோய் ஆரம்பிக்கின்றது.

**Creutzfeldt -Jakob நோய்** இது ஓர் வைரஸ் தொற்றின் காரணமாக ஏற்பட்டு விரைவானதும் தொடர்ச்சியானதுமான அறிவு மழுங்குதலுக்குக் காரணமாகின்றது.

வயதானவர்கள் நினைவாற்றல் குறைதல், தீர்மானமெடுக்க முடியாமை, அல்லது மனக்குழப்பத்திற்கு உட்படுகின்றனர். எனினும் இது அறிவுமழுங்குதலுடன் முற்றிலுமாக தொடர்பற்ற, விரைவாக மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பக் கூடிய நிலையாகும். உதாரணமாக மருந்துகள் எடுத்தல், அளவுக்கதிகமான மருந்துப் பாவனை, போஷாக்கு குறைவான உணவை உட்கொள்ளல், ஏனைய உடலியல் மற்றும் மனவியல் பிரச்சனை என்பன அறிவு மழுங்குதல் நோயைப் போன்று தோற்றமளிக்கக் கூடிய தன்மைக்குக் காரணமாகின்றது. மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட முன்னர் ஈடுபட்ட செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கல், கிரகிக்க முடியாமை, குழப்பமுற்றவர் போல் தோன்றுதல் போன்ற மனஅழுத்த அறிகுறிகள் அறிவுமழுங்கியது போன்றே தோன்றச் செய்யும்.



அறிவுமழுங்கும் நோய் (Dementia) போன்று தோற்றமளிக்கும் நோயானது இவற்றின் காரணங்கள் கண்டறியப்பட்டு சிகிச்சை கொடுக்கப்படும்போது குணமாகக் கூடியன. எனவே ஓர் மனநல சிகிச்சை நிபுணர் ஓர் பூரணமான மருத்துவ பரிசோதனையை செய்ய வேண்டுமென்பது முக்கியமானதாகும். இந்த மதிப்பீடானது ஏனைய காரணிகளால் ஏற்படும் அறிவுமழுங்குதல் போன்று தோன்றக் கூடிய நோயை, உண்மையான அறிவுமழுங்குதல் நோயில் இருந்து பகுத்தறியக் கூடியதாக இருக்கும்.

## மருந்துகள்

வயது முதிர்ந்தவர்கள் ஏனைய வயதுக் குழுவினரைவிட அதிக மருந்துகளை எடுப்பதுடன் மருத்துவரின் சிபார்சில்லாமல் மருந்துக் கடைகளிலும் மருந்துகள் பெறுகிறார்கள். வயதானவர்களின் உயிரணுக்களில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் (Metabolism) மிகவும் மெதுவானவாக இருப்பதால், இம் மருந்துகளின் இரசாயனங்கள் உடலில் நீண்ட காலத்திற்கு தங்கியிருந்து மிக விரைவாக நச்சுத்தன்மையை அடைகின்றன. மேலும், அநேக வயதானவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகள் எடுப்பதுடன், மதுபானங்களையும் அருந்துவதால், இந்த மருந்துகள் மதுபானத்துடன் கலந்து, மனக்குழப்பம், மனநிலை மாற்றங்கள் மற்றும் அறிவுமழுங்குதலின் ஏனைய அறிகுறிகளையும் தோன்றச் செய்யும்.

## தவறான உணவுப் பழக்கங்களால் போஷாக்கற்ற நிலை ஏற்படல் (Malnutrition caused by poor eating habits)

சரியான போஷாக்குகள் போதுமானவளவில் தொடர்ந்து மூளைக்கு கிடைப்பது அத்தியாவசியமாக இருப்பதால், தவறான உணவுப் பழக்கங்கள் அல்லது உணவு சமிபாடடைவதில் ஏற்படும் பிரச்சனைகள் மூளை இயங்கும் முறையில் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றது. உதாரணமாக விற்றமின் Bஜ பயன்படுத்த முடியாத நிலையில், ஏற்படும் அழிவை ஏற்படுத்தும் இரத்தக் கோளாறான இரத்தசோகை நோயானது எரிச்சலூட்டும் நிலையுடன், மனஅழுத்தம், அறிவுமழுங்குதல் போன்ற நிலைமைகளையும் ஏற்படுத்தும். இரத்தோட்டம் மிகவும் குறைதலின் போதும், சர்க்கரை இரத்தத்தில் காணப்படும்போதும் மனக்குழப்பம் (Confusion), மற்றும் ஆளுமைத் தன்மையில் மாற்றம் (Personality Change) போன்றவற்றை ஏற்படுத்தும். பற்களின் நிலை பாதிக்கப்படும்போது, உணவுப்பழக்கங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். வயதானவர்கள் சில முக்கியமான உணவுவகைகளை மென்று உண்ண முடியாமை காரணமாக தமது உணவில் இருந்து இவற்றை ஒதுக்கலாம். இந்நிலை போஷாக்குக் குறைபாட்டிற்கு வழிவகுத்து மூளைப் பாதிப்பிற்கும் இறுதியில் இட்டுச் செல்லுகின்றது.

## இருதயம் அல்லது நுரையீரல் நோய்கள் (Diseases of the heart or lungs)

சரியாக வேலை செய்வதற்கு மூளைக்கு அதிகளவு இரத்தம் தேவையாகும். நோயுற்ற நுரையீரல்கள் இரத்தத்தினுள் போதுமான ஒட்சிசனைக் கொண்டுவரமுடியாவிட்டால் அல்லது, ஓர் நோயுற்ற இருதயம், மூளைக்கு போதியளவு இரத்தத்தை செலுத்த முடியாதிருந்தால், ஒட்சிசன் போதாமை மூளையைப் பாதிப்பதுடன் நடத்தையையும் பாதிக்கும்.

## நாளச்சுரப்பிகளால் ஏற்படும் நோய்கள்

இந்தச் சுரப்பிகள், உணர்வுகள் (Emotions), நினைவாற்றல் (Memory), தொட்டுணர்தல் (Perception), சிந்தனை (Thought) போன்ற செயல்முறைகளை ஒழுங்கமைக்கின்றன. இவை இயங்காதபோது, இந்த மனநல செயல்முறைகள் பாதிக்கப்படுகின்றன.

■ ■ ■




Cell Tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO,
TELUS MOBILITY, BELL MOBILITY
Unlimited Calling !!!
Anywhere in USA & CANADA
Unlimited Outgoing USA & CANADA
Unlimited Incoming USA & CANADA
Unlimited SMS USA & USA
Unlimited Date browsing in USA
No contracts
No credit check
Free caller ID
FREE voicemail
WE UNLOCK
GSM PHONES
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.
Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# யோகம் தரும் ஆரோக்கிய ரகசியம்



N.T. கருணாகரன்
- யோகா ஆசிரியர் -

சென்ற இதழின் தொடர்ச்சி

## ஆரோக்கிய ரகசியம் - 2

### அட்டாங்க யோகம்

அட்டாங்க யோகப்படிகளை யோகத்தின் தந்தையாகிய அருட்கஷி திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்:

*"இயம்ம நியம்மே எண்ணிலா ஆதனம்*
*நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்*
*சயமிகு தாரணன தியானம் சமாதி*
*அயமுறும் அட்டாங்கம் ஆவதுமாமே"*
*(திருமந்திரம் 552)*

என சதயோகப்படிமுறைகளை திருமூலர் கூறுகிறார். அன்றாடப் பேச்சு வாக்கில் யோக இருக்கை என அழைப்பதைவிட யோக ஆதனம் என திருமூலர் சுந்தரத் தமிழில் கூறியிருக்கிறார் எனவே இனிவரும் பகுதிகளில் எல்லாம் யோகாசனம் எனும் சொல்லுக்கு பதிலாகயோகாதனம் - என்றே அழைப்போம்.

இயம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணன, தியானம், சமாதி என யோகத்தின் படிகள் உள்ளன. இவ்வுரையில் நாம் இந்த எட்டுபடிமுறைகளையும் சுருக்கமாக நோக்குவோம்.

### இயமம்

*"கொல்லான் பொய்கூறான் களவிலான்*
*எண்குணன் நல்லான் அடக்கம் உடையார்*
*நடுச்செய்ய - வல்லான் பகுந்துண்பான்*
*மாசிலான் கள்காமம் இல்லான் இயமத்*
*திடை நின்றானே"*
*(தி.ம.554)*

இவ்வாறு எப்பொருளும் எந்த வேலையிலும் எல்லோருக்கும் நன்மை தரும் செயல்களைச் செய்பவனும் மற்றும் அச் செயல்களுக்கேற்ப நல்ல எண்ணங்களை மட்டும் எண்ணுபவனே இயமம் எனும் முதலாவது கதயோகப்படியை கடைப்பிடிப்பவன் ஆகும்.

இவற்றை உடனடியாக பின்பற்றிய பிறகு தான் யோகம் பயிலவேண்டும்என எண்ணத் தேவையில்லை. இருந்த இடத்தில் உடனடியாகவே பயிற்சையை தொடங்க காலப் போக்கில் எல்லாவற்றையும் பின்பற்றக் கூடிய வகையில் அக புற மாற்றங்கள் ஏற்படும்.

### நியமம்

இயமத்தில் கூறப்பட்ட விடயங்களை தனக்கு ஒரு சட்டம் போல் ஏற்றுக் கொண்டு அதன் படி எப்பொழுதும் வாழ்பவன் நியமப்படி இருப்பவன் ஆகும். மற்றும் ஆன்மீகம் சார்ந்த இதிகாச புராணங்களை கற்பதில் ஆர்வத்துடன் இருப்பவனும் நியமத்தவன் ஆகும்.

எமது எண்ணங்களும் செயல்களுமே எதிர் காலத்தை எமக்கு உருவாக்கித் தருகின்றன. எனவே மனதில் எழும் எண்ணங்கள் மிகவும் சக்தியுள்ளவை. உதாரணமாக, "எதை எண்ணுகிறாயோ நீ அதுவாவாய்" எனும் கோட்பாட்டிற்கேற்பவே எமது உள் மனம் வேலை செய்து கொண்டிருப்பதனால் தீர்க்க தரிசனமாக சிந்திக்க வேண்டி இருக்கிறது.

மேற்கூறிய நவீன மனோதத்துவ மேதைகள் கண்டறிந்த இந்த பேருண்மையை பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே எமது தமிழ் ஞானிகள் உணர்ந்து விட்டனர். இந்த யோக வழிமுறைகள் எல்லாம் ஒருவர் இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்காகவே தான் எமது முன்னோர்கள் உருவாக்கித் தந்தார்கள். அவர்கள் தமது மெஞ்ஞான ஆராட்சிக்காகவே தனிமையை நாடினார்கள் அதற்காக, யோகம் பயில்வோர் சன்னியாசிகள் ஆகவேண்டும் என யாரும் எண்ண வேண்டியதில்லை.

இயற்கை எமக்களித்த அந்த உணர்வை யோ, இன்பத்தையோ புறக்கணிக்க வேண்டியதில்லை. மாறாக அவற்றை நெறிப்படுத்தி உச்ச பயன்பாட்டை பெறக்கூடிய வழிகளைத்தான் யோகம் தருகிறது.

### ஆதனம்

இயமத்தைப் பற்றி கூறும் திருமந்திரப் பாடலில் "எண்ணிலா ஆதனம்" என திருமூலர் கூறியதை மேலே பார்த்துள்ளோம். யோக ஆதனம் என்பது ஆதிகாலத்தில் எண்பத்து நாலு இலட்சம் பயிற்சி முறைகள் பாவனையில் இருந்ததாக பயிற்சி யோக நூல்களில் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் சுமார் ஐயாயிரம் பயிற்சி முறைகள் பாவனையில் உள்ளது.

இவ்வுரையில் ஆதனங்களையும் அதனதன் பயன்களைப் பற்றியே நாம் அதிகம் பார்க்க உள்ளதால் இதைபற்றி பின்னர் பார்ப்போம்.

### பிராணாயாமம்

கதயோகத்தின் படிகளில் நான்காவதாக உள்ளது. பிராணாயாமம் எனப்படும் மூச்சுக் கலையாகும். யோகப்பயிற்சில் ஆசனங்களை நாயகனாகவும் மூச்சுப்பயிற்சியை நாயகியாகவும் கொள்ளலாம். பூமியில் மூச்சைத் தவிர வேறொன்றும் முக்கியம் அல்ல என்பதை பச்சைக் குழந்தையும் அறியும். எனவே மனிதனது ஆழ்மனதின் மூலம் தன்னிச்சையாகவே நடைபெறும் மூச்சிலும் அனைவரிலும் மிகவும் சரியாக நடைபெறுகிறது என சொல்ல முடியாது. எதையும் திறம்படச் செய்வதற்குப் பயிற்சி, கல்வி போன்றவை தேவைப்படுகிறது. எனவே பிராணாயாமம் எனும் ஒப்பற்ற உபாயம் பூமியில் உங்கள் வாழ்வை மேம்படுத்தும். எள் அளவும் சந்தேகம் தேவையில்லை.

24 மணிநேரமும் நாம் எண்ணாமலே தன்னியக்கமாக நடைபெறும் மூச்சுக்கு பயிற்சி அழிப்பதன் மூலம் அதை ஆழமாகவும் முழுமையாகவும் நடைபெறச் செய்யலாம். அதன்மூலம் நிறைவான பிராணசத்தியையும் பிராண வாயுவையும் பெறுவதுடன் வெளிச்சுவாசத்தின் மூலம் காபநீரெட்சையிடு எனும் கழிவையும் முழுமையாக வெளியேற்றி உடலை புதுப்பிக்கும். ஆரோக்கியமுள்ள மனிதனின் செயற்றிறன் மிக உயர்வாக இருக்கும். எனவே தற்கால வாழ்க்கை முறையில் உடற்பயிற்சி முறைகளைக் கடைப்பிடிப்பது, மிக அவசியமாகும்.

மற்றும் பிராணாயாமம் எனும் சொல்லிற்கு பொருளாக பிராணன் என்றால் உயிர்ச்சக்தியாகும். யாமம் - என்றால் கட்டுப்படுத்துவது அல்லது உள்வாங்குவது எனப் பொருள் கொள்ளலாம்.

அறியாமையின் இருளை உடைத்து வாழும் வரை ஆரோக்கியம் தரும் யோகக்கலையை கற்றுப் பயனடைவது காலத்தின் தேவையாகும். இவ்வுரையில் நீங்களாகவே பயின்று பயனடையக் கூடிய மிக எழுமையான ஆனால் சிறந்த பயன்களைத் தரக் கூடிய யோகப பயிற்சிகளை நீங்கள் கற்றுக் கொள்ளலாம்.

மூச்சுக் கலையின் மகத்துவத்தை அருட்கவி பின்வருமாறு கூறுகிறார்.

*"புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்-*
*டால் கள் உண்ண வேண்டாம் தானே*
*கனிதரும் துள்ளி நடப்பிக்கும் சோம்பு*
*தவிர்ப்பிக்கும் உள்ளது சொன்னோம்*
*உணர்வுடையோர்க்கே"*
*(தி.ம.566)*

*"வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்*
*பளிங் கொத்துக் காயம் பழுக்கினும்*
*பிஞ்சாம் - தெளியக் குருவின் திருவருள்*
*பெற்றால் வளியினும் வேட்டு அளியனும்*
*ஆமே"*
*(த.ம.569)*

*"எங்கே இருக்கினும் பூரி இடத்திலே*
*அங்கே அதுசெய்ய ஆக்கைக்கு*
*அழிவில்லை அங்கே பிடித்து அது*
*விட்டளவும் செல்லச் சங்கே குறிக்கத்*
*தலைவனும் ஆமே"*
*(தி.ம.570)*

எனவே அன்பர்களே! இவ்வாறு ஒப்பற்ற நன்மைகளை நமக்குத் தரும் மூச்சுப்பயிற்சியை நாம் எனி காண்போம்.

### நாடிசுத்தி

பத்மாதனம், வைச்சிராதனம் அல்லது முதுகை நேராக இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். இவ்வாறு கதிரையிலும் இருந்து இதைப் பயிலலாம். மற்றும் ஐந்து வயது முதல் ஆண், பெண், ஆரோக்கிய மானவர்கள், நோயாளர்கள் என அனைவரும் பயிலலாம்.

### நாடிசுத்தி செய்முறை

- நேராக நிமிர்ந்து இருக்கவும்.
- வலது கையின் கட்டை விரலையும் மோதிர விரலையும் பாவிக்கவும்.
- இப்பொழுது கட்டை விரலை வலது நாசியை அடைத்து இடது நாசியால் உள் இருக்கும் காற்றை வெளிவிடவும்.
- பின்னர் இடது நாசியாலேயே காற்றை ஐந்து வினாடி மெதுவாக உள்ளே இழுத்து இடது நாசியை மோதிர விரலால் மூடி வலது நாசியால் ஐந்து வினாடி வெளிவிடவும்.
- அடுத்து வலது நாசியாலேயே காற்றை ஐந்து வினாடி மெதுவாக உள் இழுத்து வலது நாசியை மூடி இடது நாசியால் வெளிவிடவும்.
- மீண்டும் இடது நாசியால் காற்றை உள்ளே இழுத்து மேற்கூறப்பட்டது போல் செய்யவும்.

ஆரம்பத்தில் இரண்டு அல்லது மூன்று நிமிடம் எனச் செய்து பின்னர் தினசரி பத்து நிமிடம் செய்யலாம்.



### கவனிக்க வேண்டியவை:

- மூச்சை மெதுவாக உள்ளே, வெளியே போய்வருமாறு செய்யவும்.
- ஏதாவது இடையூறு தோன்றினால் ஓய்வெடுத்து மீண்டும் பயிலவும்.
- மூச்சை உள்ளே எவ்வளவு வினாடி இழுத்துக் கொண்ட அளவே வெளியேயும் விடவேண்டும்.

இதன் நன்மைகள் பற்றி அடுத்த இதழில் காண்போம்!

தொடரும்.


■ ■ ■




வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

Prudential Properties Plus Brokerage
Bus: 416.962.8113
Fax: 416.962.4615, Res: 416.502.8939
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



Alfred Soosaipillai
Broker

# காலத்தின் கோலங்கள்

- பொன் குலேந்திரன் -

பெரும் வெடிப்பு தத்துவம் பிரபஞ்சத்தின் பிறப்பையும், காலத்தின் தோற்றத்தையும் விளக்கும் விஞ்ஞான கோட்பாடாகும். வெடிப்பு ஏற்படுவதற்கு முன்னர் தனிச்சிறப்பு நிலையில் ( State of Singularity) பிரபஞ்சம் இருந்தது. இந்த நிலையில் திண்மங்களும் சக்திகளும் ஒரு புள்ளியில் குவிந்திருந்தன. பிரபஞ்சத்தினை ஒரு கோளத்தின் மேற்பரப்பாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இப்பிரபஞ்ச கோள வடிவத்தினுள்ளும் வெளியேயும் ஒன்றுமில்லை. வேதகால ரிஷிகள் பிரபஞ்சத்தை ஒரு முட்டை வடிவமாகக் கருதினர். சக்தி அதிகரிப்பால் வெடிப்பு தோன்றி பிரபஞ்ச சக்தி வெளியேறியது. E=MC2 என்ற சக்தி E திண்மம் ஆ, ஒளியின் வேகம் C ஆகியவற்றை இணைக்கும் அயன்ஸ்தீனின் சமன்பாட்டின்படி, சக்தியில் இருந்து திண்மத்திற்கும், திண்மத்தில் இருந்து சக்திக்கும் மாற்றலாம். இந்த மாற்றத்தால் ஒளி பிறக்கிறது. ஆகவே பிரபஞ்சத்தில் சக்தி வெளியேற்றத்தால் ஒளி தோன்றியது, காலம் ஆரம்பித்தது. காலத்தின் ஆரம்பம் 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் என்பது ஒரு கணிப்பு. பிரபஞ்சத்தின் முன்னைய நிலையை காலத்தின் தோற்றத்தின் போது கணக்கில் இங்கு எடுக்கவில்லை. வான் வெளியில் பல்லாயிரக் கணக்கான நட்சத்திரங்கள், கிரகங்கள் தோன்றின. இதில் நாம் வாழும் பூமி சூரியனின் நட்சத்திரக் குடும்பத்தில் ஒரு சிறு அங்கத்தினர். இது போன்று பிரபஞ்சத்தில் பல நட்சத்திரக் குடும்பங்கள் உள்ளன.

பெரும் வெடிப்பினால் தோன்றிய பூமியின் சுற்றுப்புறச் சூழல் (Environment), அதில் வாழும் எல்லா உயிரினங்கள் யாவும் கண்ணுக்குப் புலப்படாத பிரபஞ்ச சக்தியையே நம்பி வாழ்கின்றன. சுற்றுப்புறச் சூழல் சக்தியினை பிரபஞ்சத்தில் இருந்து பெற்று உயிரினங்களை வாழவைக்கிறது, சூரியனிடம் இருந்து பூமி பெறும் சக்தி சூழலையும் உயிரினங்களையும் வாழ வைக்கிறது. அதனால்தான் பண்டைய காலத்தில் இந்தியா, ஜப்பான், எகிப்து, தென் அமெரிக்கா, கிரேக்கம் போன்ற நாடுகளில் ஆதவனை தெய்வமாக வணங்கி வந்தனர். எகிப்தில் 'ரா' என்ற பெயருடன் ரவியை வணங்கினர். தாய் குழந்தைக்குப் பால் ஊட்டுவது போல, ஆதவன் பூமிக்கு சக்தியைக் கொடுக்கிறது. ஆகவே இயற்கை என்ற பெரும் பிரபஞ்ச சக்தியே இறைவனாகும். இச்சக்தி தூணிலும் இருக்கும், துரும்பிலும் இருக்கும். காலத்தோடு சூழலானது படிப்படியாக மாற்றங்கள் அடைந்துள்ளது. மலைகள், நதிகள், குளங்கள், கடல்கள், காடுகள், மேகங்கள், நிலம் ஆகியவை சூழலின் அங்கங்கள். ஐம்பூதங்கள் என இந்து மதம் கூறுகின்றது.

இரு புள்ளிகளுக்கிடையேயான குறுகிய இடைவெளியை தூரம் என்கிறோம். அதே போன்று, இரு சம்பவங்கள் நடந்த இடைவெளியினை நேரம் என்கிறோம். காலம் அல்லது நேரம் மாற்றத்துடன் அல்லது இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது. பிரபஞ்சம் இயங்காதிருப்பின் நேரம் அல்லது காலம் என்ற தத்துவத்திற்கு இடமில்லை. இங்குதான் பெரும் வெடிப்பு என்ற தத்துவம் காலத்தோடு இணைகிறது. பிரபஞ்சம் சிறு முட்டை வடிவில் இருந்து வெடித்து, விரிவடைந்து, சுருங்கி மறைந்து, பின்னர் திரும்பவும் வெடித்து, விரிவடைந்து, சுருங்கி ஒரு சுழற்சி முறையில் இயங்குகிறது. இதைத்தான் இந்துமதம் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற தொழிலுக்கு பிரம்மன், விஷ்ணு, சிவன் ஆகியோரை உருவாக்கி காலத்தை செயல்படவைக்கிறது. ஆகையால் பிரபஞ்ச இயக்கம் காலத்தோடு தொடர்புகொண்டது. எப்போது பிரபஞ்சம் இயங்கத் தொடங்கியதோ அப்போது காலம் பிறந்தது என்பார்கள் சில விஞ்ஞானிகள். எப்போது காலம் பிறந்தது என்பதற்குச் சரியான விடைதெரியாது விஞ்ஞானிகள் தவிக்கிறார்கள். ஆனால் பிரபஞ்சத்தில் ஏற்பட்ட பெரும் வெடிப்பு 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற்கு முன்னர் பிரபஞ்சம் இருண்டு இருந்ததா?

> ***"தமிழர் கலாச்சாரத்தில் நேரத்துக்கு மதிப்புக் கொடுத்து ஒரு நிகழ்ச்சிக்குச் செல்ல கற்றுக் கொள்ள வேண்டும். திருமணத்தில் இந்த நேரம் தாலிகட்டப்படும் என்றால், அழைப்பு வந்தவர்கள் அந்தநேரம் அங்கு குழும வேண்டும். சாப்பாடு பரிமாறும் நேரம் பார்த்து திருமணத்துக்குப் போவதைத் தவிர்க்க வேண்டும்.."***

காலம் பல கோலங்களாகப் பரிமளிக்கிறது. மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும்வரை இருக்கும் காலத்தை வயது என நாமமிட்டு அக்கால எல்லைக்குள் மனிதன், தான் பிறந்த குறிக்கோளினை எவ்வாறு அடைகிறான் என்பதைக் கணிக்கக் கூடியதாக இருக்கிறது. சில உயிர்கள் பிறந்து சில நிமிடங்களில் மரணத்தைத் தழுவுகின்றன. இன்னும் சில உயிர்கள் இளமைப் பருவத்தில் தமது கடமைகளை முடிக்காமல் பிரிந்து விடுகின்றன. இன்னும் சில உயிர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து விரைவில் மரணம் தம்மைத் தழுவாதா என எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றன. பிறக்கும் போதே பிறந்த இடம், நேரம் என்பவற்றை வைத்துக் காலத்தின் அடிப்படையில், சாதகத்தைக் கணித்து மனிதனின் வாழ்வு எப்படியிருக்கும், அவனின் குணம் எப்படி, என்பதை எடுத்துச் சொல்லும் சாஸ்திரிமார்கள் உண்டு. ஆனால் எவராலும் மரணம் எப்போது எற்படும் என்பதை சரியாகக் கணிக்கமுடிவதில்லை.

மனிதன், தான் செய்யும் தவறான செயல்களாலோ அல்லது எடுக்கும் முடிவுகளினாலோ வாழக்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள் அல்லது தோல்விகளுக்கு காலத்தை குறை சொல்வது வழமை. நல்லது அல்லது கெட்டது நடந்தால் அதற்கு நல்ல காலம், கெட்ட காலம் என முத்திரை குத்தி விடுவார்கள். "சென்ற காலத்தில் நடந்ததை மறந்துவிடு, வருங்காலத்தில் நடக்கப்போவதையிட்டு கற்பனை காணாதே. நிகழ்காலத்தில் நடப்பதை எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதை பற்றி சிந்தி" என்கிறார் ஆன்மீகவாதி. இதற்குக் காரணம் நடந்தது திரும்பவும் நடக்கப்போவதில்லை, அதை நினைத்து காலத்தை வீணடிக்காதே. வருங்காலத்தில் நடக்கப்போவதை நினைத்து கற்பனைகள் பல செய்து உன் நேரத்தை விரையம் செய்யாதே. ஏன் என்றால் வருங்காலத்தில் நடக்கப்போவதை உன்னால் ஊகிக்க முடியாது. அதனால் தற்போது நடக்கப்போவதைப் பற்றிச் சிந்தித்து செயலாற்று. இது மனித வாழ்வில் காலத்தின் இன்னொரு ஒரு கோலம். காலத்தில் நடப்பவை மாறிக்கொண்டே இருக்கிறது. உதாரணத்துக்கு இன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் பலரைக் காண நேரிடுகிறது. அதில் தெரிந்தவர்கள் பலர். தெரியாதவர்கள் பலர். அதில் பலரை எதிர்பாராதவாறு சந்தித்திருப்பீர்கள். அதே சந்திப்பு, அதே இடத்தில் திரும்பவும் நிகழுமா நிகழாதா என்பது நிட்சயமில்லை. அவர் இருப்பாரா என்பதும் உறுதியில்லை. காலத்தோடு நிகழ்வுகள் மாறுகிறது. நிகழும்போது அதைப் பயன்படுத்திக்கொள். பின்னர் பார்க்கலாம் எனத் தள்ளிப்போடாதே

வணிகத்தில் காலத்திற்கு முக்கிய இடமுண்டு. சந்தர்ப்பங்கள் கிடைப்பது காலத்துடன் இணைந்தது. எல்லா நேரங்களிலும் அவை வருவதில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை ஒரு சிறந்த வணிகன் தவற விடமாட்டான். வணிகத்தில் காலத்தின் கோலம் ஆன்மீகவாதியின் கருத்தில் இருந்து வேறுபட்டது. உதாரணமாக - பத்து வருடங்களாக வணிகம் செய்யும் ஒரு நிறுவனம், கடந்த ஆண்டுகளில் தனது உற்பத்திப் பொருளின் விற்பனையின் அடிப்படையிலும், நிகழ்காலத்து சந்தை நிலையையும், வருங்காலத்தில் அரசியல் நிலமை, பொருளாதார நிலமை, மனிதவளத்தின் மதிப்பு, வாடிக்கையாளர் சந்தை ஆகியவற்றில் எற்படக்கூடிய மாற்றங்களை வல்லுனர்களின் உதவியுடன் ஊகித்தும் கணித முறைப்படி வருங்கால விற்பனையைக் கணிப்பது வழக்கம். இதில் நேற்று, இன்று, நாளை என்ற காலத்துடன் இணைந்த தத்துவம் செயல்படுகிறது. இதில் முன்னைய அனுபவம் கணிப்புக்குத் துணையாக இருக்கிறது. காலத்துடன் மக்களின் தேவைகள் மாறுகிறது; தொழில் நுட்பம் மாறுகிறது; விருப்பு வெறுப்புகள் மாறுகின்றன; கலாச்சாரம் மாறுகிறது. இதில் காலம் ஒரு புதிய பரிணாமம் எடுக்கிறது. இதனை தமிழ் சினிமாவில், பாடல்களில் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த சினிமா பாடல்களுக்கும் தற்போதைய பாடல்களுக்கும் இசையில், பாடலின் கருத்தில் எவ்வளவோ வித்தியாசங்கள் உள்ளன. கலாச்சார கலவையினாலும் மாற்றத்தினாலும் இந்த மாற்றங்கள் வந்துள்ளன. கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றிலும் மாறுதல்கள் உள்ளன.

காலத்தோடு எழுத்தாளர்களின் கற்பனை, கவிதை, சிறுகதை எழுதும்முறை மாறுகிறது. கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த நாவலையும் தற்போது வெளிவந்த நாவலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எழுதும் பாணியில் பெரும் வித்தியாசமுள்ளதை அவதானிக்கலாம். இதற்கு முக்கிய காரணம் காலத்தோடு மனித வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களே. சிறுகதைகளின் கருக்களும் யதார்த்தமாக தோன்றுகின்றன. கவிதைகள் கூட நான்கு வரி ஹைக்கூ கவிதைகளாக மாறிவிட்டன. இது இலக்கியத்தில் காலத்தின் பாதிப்பு.

காலத்திற்கு மதிப்புண்டு. அதனால்தான் கால பரிபாலனம் ( Time Mangement) என்ற சொற்றொடர் மேற்கத்திய நாடுகளில் பிரபல்யமாக இருந்துவருகிறது. ஜப்பானியர்கள் "அந்த நேரத்துக்கு ஏற்ப" (Just in time - JIT) என்ற தத்துவத்தை உற்பத்தித் துறையில் அறிமுகப்பபடுத்தினார்கள். நேரத்துக்கு முன்பாகவே வந்து நேரத்தை வீணடிக்காதே. தாமதித்து வந்து உற்பத்தி நேரத்தை விரையமாக்காதே. குறித்த நேரத்துக்கு வருவதற்கு கற்றுக்கொள். இந்த தத்துவத்தின் மூலம் தேவையான உப பொருட்களை பண்டகசாலையில் சேகரித்து வைக்க வேண்டிய நிலைமையைத் தவிர்த்து உற்பத்திச் செலவினைக் குறைக்கலாம். நேர்முகப் பரீட்சைக்கு குறித்த நேரத்துக்குப் போகாதுவிடின் கிடைக்க இருக்கும் வேலை தவறி விடும். அதே போன்று பரீட்சைக்குத் தாமதித்துப் போனால் இழந்த நேரம் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒரு தினத்தின் 24மணி நேரத்தை 8மணிகளாக மூன்று பகுதியென வகுத்து, தூக்கத்துககு 8மணித்தியாலங்கள், வேலைக்கு 8மணி நேரம், குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ 8மணி நேரம் என குறிப்பிட்டனர். ஆனால், உழைப்புக்காக இதில் இரண்டு 8மணிப் பகுதிகளையும் ஒன்றிணைத்து 16மணி வேலைக்கும், 8மணி தூக்கத்துக்கும் செலவுசெய்து நோயாளியானவர்கள் பலர். இவர்களுக்கும் காலத்தைப் பரிபாலனம் செய்வது எப்படி என்பது தெரியாது. 'எனக்கு நேரமில்லை' என்று சாட்டுகள் சொல்பவர்கள் நேரத்தைப் பரிபாலனம் செய்யத் தெரியாதவர்கள்.



அயன்ஸ்தீனது 'சார்புக்கொள்கையும் காலமும்' என்ற தத்துவம் ஒரு புரட்சியை உண்டு பண்ணிவிட்டது எனலாம். தமிழர் கலாச்சாரத்தில் நேரத்துக்கு மதிப்புக் கொடுத்து ஒரு நிகழ்ச்சிக்குச் செல்ல கற்றுக் கொள்ள வேண்டும். திருமணத்தில் இந்த நேரம் தாலிகட்டப்படும் என்றால், அழைப்புவந்தவர்கள் அந்தநேரம் அங்கு குழும வேண்டும். சாப்பாடு பரிமாறும் நேரம் பார்த்து திருமணத்துக்குப் போவதைத் தவிர்க்க வேண்டும். திரு வேர்ணன் அபயசேகர என்பவர் இதைப்பற்றி தான் எழுதிய நூலில் வேடிக்கையாகக் குறிப்பிட்டிருந்தார். எழுபதாம் ஆண்டில் அவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் வடமாகாணத்துக்கு அதிபராக இருந்தார். ஒரு நாள் பாசையூரில் மாலை நான்கு மணிக்கு அரசாங்க கட்டிடம் ஒன்று திறந்தாக வேண்டும். சரியாக மாலை 3.55க்கு அவர் அங்குபோனபோது கட்டிடத்துக்கு அருகே இரு நாய்களும், சில காகங்களும் தான் அவரை வரவேற்றன. தேடினார் தனது உத்தியோகத்தர்களை, காணவில்லை. சிறிது நேரம் சென்றபின்னர் ஒவ்வொருவராய் வரத் தொடங்கினர். அந்தப் பகுதி உதவி ஏஜன்ட் 4.20க்கு வந்து சேர்ந்தார். 'ஏன் சுணக்கம்' என்று கேட்ட போது "மாலை வாங்கி வர சுணங்கிவிட்டது" என்று பதில் வந்தது. 'மாலை வரும் வரை தான் காத்திருக்க வேண்டுமா' என்றார் நகைச்சுவையாக அபயசேகரா அவர்கள். யாழப்பாணத் தமிழரின் கலாச்சாரம் "அந்த நேரமளவில" என்பது தான். இந்த கலாச்சாரம் கனடா வந்தும் எம்மக்களிடையே தொடர்கிறது.

■ ■ ■

***தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும் என்பதை உறுதியாக நம்புகின்றோம்.***

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

# மாசியில் மறைந்த இலக்கிய ஆளுமைகள்


**ஓவியர் ஆதிமூலம்:**
தமிழில் நவீன ஓவியத்தின் அடையாளமாக இருந்தவர் ஓவியர் ஆதிமூலம். மரபார்ந்த ஓவியப் பாணியில் தொடங்கி, கோட்டோவியத்தின் அதிபிதாமகனாக அவர் வளர்ந்தவர். கோட்டோவியப் பாணியில் இவர் வரைந்த காந்தி ஓவியம், இந்தியா முழுவதும் வலம் வந்து தமிழின் நவீன பாணி ஓவியத்தை அடையாளம் காண்பித்தது. ஓவியர் ஆதிமூலம் நவீன இலக்கிய ரசனையும் மிக்கவர்.

**எழுத்தாளர் சுஜாதா:**
தமிழில் வெகுஜன எழுத்தாளராக தன் எழுத்துலக வாழ்வைத் தொடங்கிய திரு.சுஜாதா, 'கரையெல்லாம் செண்பகப் பூ' போன்ற படங்கள் மூலம் சினிமாப் பிரவேசமும் செய்து அத் துறையில் மிகுந்த பங்களிப்பை ஆற்றியவர். தமிழில் விஞ்ஞானப் புனைகதைகளை வளர்த்தெடுத்ததிலும் அவருக்கு நிறையப் பங்கிருக்கிறது.

**எழுத்தாளர் செ.யோகநாதன்:**
ஈழத்தவரான எழுத்தாளர் செ.யோகநாதன் முற்போக்கு எழுத்தாளர் அணியைச் சேர்ந்தவர். நீண்ட காலம் தமிழ்நாட்டில் வாழ்ந்த இவர் பின்னாளில் வெகுஜன எழுத்தாளராய் மாறிவிட்டிருப்பினும், 'இரவல் தாய்நாடு', 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' போன்ற நாவல்கள் மூலம் தமிழ்நாட்டில் நன்கறியப் பட்ட ஈழ எழுத்தாளராக விளங்கினார். சுமார் எழுபத்தைந்து நூல்களின் ஆசிரியர். இரண்டு பாகங்களாக வெளிவந்த ஈழத்துச் சிறுகதைகளின் தொகுப்பு இவரின் அடையாளமாக நீண்டகாலம் நிற்கக் கூடியது.

இம் மூவரையும் 2008இன் முதல் இரு மாதங்களில் தமிழுலகம் இழந்திருக்கிறது. இம் மூவருக்கும் 'தாய்வீடு' தன் மனதார்ந்த நினைவாஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

■ ■ ■

APPLIANCES REPAIR & SERVICE
Commercial & Residential



• Electrical Repair • Stoves • Plumbing • Washers
• Fridges • Dryers • Freezers • Dishwashers

vq;fs; tPl;bd; kpd;ghtidg; nghUl;fspd; jpUj;j
NtiyfSf;Fk; guhkupg;Gj; NjitfSf;Fk; mioAQ;fs;

Sada
Certified Technician

416 • 773 • 1451


Connectiong tutors & students in the GTA

BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

EQAO Preparation



Over 100 Tutors

Over 1500 Students

Call Kuna Today
Tel: 416-291-4684, 905-507-8470, 647-295-5862, Fax: 416.264.6306
E-mail: info@brillianttutor.com

We will visit your home

JK to GRADE 8 $80^{00}/MONTH | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year $90^{00}/MONTH

79 Eastvale Drive, Markham, ON, L35 4R9

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan

digi Media - 416-467-4952

# குழந்தைகளும் தொலைக்காட்சியும்

- மஞ்சுளா ராஜலிங்கம் -



கூடுதலாகத் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகள், உணவைக் கூடுதலாக உட்கொள்ளுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இக்குழந்தைகள் சுறுசுறுப்பின்றியும் காணப்படுகின்றன. இந்நிலையில் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகள் ஆரோக்கியம் மற்றும் சத்து இல்லாத உணவு வகைகளை உட்கொள்ளுகின்றன. அதாவது potato chips மற்றும் இரசாயன நிலையில் பதப்படுத்தப்பட்ட குளிர்பான வகைகள் (soft drinks) முதலியவற்றை உட்கொள்ளுகின்றன.

அதேவேளை, கூடுதலான படிப்பு சம்பந்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்ட நேரத்தைவிட கூடுதலாகப் பார்க்கும் குழந்தைகளுக்கும் எதிர்மாறான விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. குழந்தைகள் 4மணிநேரமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் தப்பில்லை என்ற போதும், அதில் உள்ள தீமை என்னவெனில், குழந்தைகள், உடற்பயிற்சி, வாசித்தல், மற்றவர்களுடன் பழகுதல், அப்புறம் வெளியில் நேரத்தைச் செலவழித்தல் போன்ற காரியங்களை அறவே மறந்து விடுகின்றன. இதேவேளையில், குறைவான நேரங்களே தொலைக்காட்சியைப் பார்க்கும் குழந்தையானது, அந்த வயதுக்கு இருக்க வேண்டிய உடல் எடையைவிடக் குறைவான எடையைக் கொண்டிருக்கின்றதென்றும் அதே ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆமெரிக்கக் கணிப்பின்படி, அந்நாட்டுக் குழந்தைகள் வருடத்தில் 40ஆயிரம் விளம்பரங்களைத் தொலைக்காட்சியில் பார்க்கின்றன. என்ன மாதிரியான விளம்பரங்கள் குழந்தைகள் கண்ணில் படுகின்றன? அனாவசிய உணவுப் பண்டங்கள், cartoons, காலை உணவுப் பொருட்கள் அடைத்து வரப்படும் பெட்டிகளிலுள்ள கவர்ச்சியூட்டும் பரிசுப் பொருட்கள், போன்றவை குழந்தைகளைப் பாழ்படுத்தும் ஒரு கூடாத சம்பவமாகும். அதைப் பார்க்கும் குழந்தைகள் தாம் அதை அடைந்தே ஆகவேண்டும் என்று எதிர்பார்க்கும். தொலைக்காட்சியில் அந்த மாதிரிப் பொருட்கள் தான் உலகிலேயே திறமானவை என்ற மனப்பிரமையை அவர்களுக்குள் ஏற்படுத்திவிடும் அபாயமும் உண்டு.

எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் விளம்பரங்கள் பொருட்களை விளம்பரப் படுத்தத் தான் தொலைக்காட்சியில் காட்டப் படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதில்லை. ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு விளம்பரத்துக்கும், நிகழ்ச்சிகளுக்கும் உள்ள வித்தியாசம் தெரிவதில்லை. அதிலும் அவர்களுக்குப் பிடித்த பாத்திரங்கள் அந்த விளம்பரத்தில் வந்தால், அவர்களுக்கு மிகவும் கொண்டாட்டமாகிவிடும். ஏன், இதைவிட பெரிய வயதுடைய குழந்தைகளுக்கே விளம்பரத்தின் பின்னணி என்ன என்பதை நாம் தான் அவர்களுக்கே விளக்கிச் சொல்ல வேண்டும்.

தொலைக்காட்சியில் விளம்பரம் வரை குழந்தைகள் நிகழ்ச்சியின் இடைவெளியில் பார்ப்பதை எம்மால் தடுக்க முடியாது தான். ஆனால் தொலைக்காட்சியைக் கொஞ்ச நேரத்துக்கு அணைத்து விடுவதன் மூலம் குழந்தைகளின் பார்க்கும் நேரத்தை ஓரளவு கட்டுப்படுத்தலாம். ஆனாலும் இவை எங்கிருந்தாவது அடிக்கடி காதில் விழத்தான் செய்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

இம்மாதிரி விளம்பரங்கள் வருவதைப் பற்றி குழந்தைகள் கருத்து என்ன என்று நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் இருந்து இதே விளம்பரங்களைப் பார்க்கும்போது கேட்கலாம். “இது ஏன் உங்களுக்குப் பிடித்திருக்கிறது?” எனக் கேளுங்கள். அல்லது “தொலைக்காட்சியில் பார்ப்பது போலவே, நாம் வாங்கி விளையாடும்போதும் இருக்குமா, இது ஒரு ஆரோக்கியமான பொருளென்று நீங்கள் நினைக்கின்றீர்களா?” என்பது போன்ற கேள்விகளை உங்கள் குழந்தையிடம் நீங்கள் கேட்கலாம்.
நீங்கள் உங்கள் குழந்தையிடம் விளம்பரங்களில் காட்டப்படும் பொருட்கள் கட்டாயம் உங்கள் வீட்டிலும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். விளம்பரங்கள் நம்மை வெறுமனே சந்தோஷப் படுத்துவதற்குத்தான் காட்டப்படுகின்றன என்பதைக் குழந்தைகளிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

எப்படி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை குழந்தைகள் விஷயத்தில் கட்டுப்படுத்துவது என்று AAP கோடிட்டுக் காட்டுகின்றது:

பொதுநிகழ்ச்சிகளை பெரும்பாலும் நீங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து பாருங்கள். அடிக்கடி தொலைக்காட்சியில் காணமுடியாத நிகழ்ச்சிகளை குழந்தைகளுடன் இருந்துப் பார்ப்பதில் தப்பில்லை.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விளம்பரங்களைத் தவிர்த்து பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் இருக்கும் தொலைக்காட்சிப் பிரதிகளை மற்றும் இறுவட்டுப் பிரதிகளை வாடகைக்கு எடுத்துப் போட்டுப் பாருங்கள்.
கீழே கொடுக்கப் பட்டிருக்கும் சில குறிப்புக்களைக்கொண்டு எப்படி நல்ல ஆரோக்கியமான முறையில் தொலைக்காட்சி பார்ப்பது என்று சிறிது ஆராய்வோமா?

தொலைக்காட்சி பார்க்கும் மணித்தியாலங்களை கட்டுப்படுத்தவும்

தொலைக்காட்சி வைத்திருக்கும் அறையில் தொலைக்காட்சி சம்பந்தப்படாத பொருட்களான புத்தகங்கள், குழந்தைகளின் வார இதழ்கள், விளையாட்டுப் பொருட்கள், இதர விளையாட்டுச் சாதனங்கள் போன்றவற்றைப் போட்டு வையுங்கள். தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தில் அவற்றையும் பயன்படுத்தும்படி குழந்தைகளைப் பணியுங்கள்.

குழந்தைகளின் அறையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைப்பதை அறவே தவிருங்கள்.
சாப்பாட்டு நேரத்தின் போது, தொலைக்காட்சியை முற்றிலும் அணைத்து விடுங்கள்.

வீட்டுப் பாடங்கள் செய்யும்போது, குழந்தைகளைத் தொலைக்காட்சி பார்க்க அனுமதிக்காதீர்கள்.
தொலைக்காட்சி பார்ப்பது குழந்தைகளின் தினப்படி நடவடிக்கையில் தான் உள்ளது என்பதை அவர்களுக்குப் புரிய வையுங்கள். தொலைக்காட்சி பார்ப்பது அன்றாட நடவடிக்கைகளில் ஒன்று என்ற எண்ணத்தை அவர்களுக்குள் வளர விடாதீர்கள். வீட்டுப் பாடங்கள், வீட்டு வேலைகள் முடித்தால் மட்டுமே அவர்கள் விரும்பிய நிகழ்ச்சியை ஒரு குறிப்பிட்ட நேரம்வரை பார்க்கலாம் என்ற வரைமுறையைக் குழந்தைகள் மனதினுள் ஆழமாகப் பதிய வையுங்கள்.

கிழமையில் ஒரு நாளாவது, தொலைக்காட்சி அருகில் குழந்தைகள் போகக்கூடாது எந்த சட்டத்தை வையுங்கள். பள்ளிப் பாடங்கள், விளையாட்டுத்துறைகள், வேலைகளைத் திறனே பொறுப்பேற்கும் தன்மை போன்றவைகளால், குழந்தைகளால் ஒரு ஆரோக்கியமான நேரத்தை குடும்பத்துடன் செலவிட முடிவதில்லை என்பது வருந்தத்தக்க உண்மை. இந்த இடத்தில் அவசியமான சில நிகழ்ச்சிகளை முன்கூட்டியே ஒளிப்பதிவு செய்து வையுங்கள். இதை வாரவிடுமுறை நாட்களில் குழந்தைகள் பார்க்கக் கூடியவாறு திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இப்படி செய்யும் பொழுது, உங்களுடன் குழந்தைகள் சாப்பிடுதல், விளையாட்டுக்களில் ஒன்றிப் போதல், வாசித்தல் போன்ற விடயங்களில், வாரநாட்களில் ஒன்றி விடக்கூடும். அது ஒரு நல்ல விடயம் தானே?

பெற்றோர்களான நீங்களே முதலில் உங்கள் தொலைக்காட்சி பார்க்கும் மணித்துளிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள்.


குடும்பமாக இருந்து பார்க்கக் கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை முன்னரே அவதானித்து வைத்துக் கொள்ளுங்கள். வன்முறையல்லாத, படிப்பினை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை அட்டவணைப் படுத்திக் கொள்ளுங்கள். ஏதாவது நிகழ்ச்சிகளைப் பார்த்து குழந்தைகள் எதையாவது புதிதாக, கல்வி சம்பந்தமாக கற்றுக் கொள்ள ஏதாவது பிரயோசனம் உள்ள நிலை இருப்பின் இன்னும் நல்லது.

குழந்தைகள் பார்க்க முன்னரே, ஒரு நிகழ்ச்சி எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே நீங்கள் பார்த்து வைத்திருப்பது மிக முக்கியம்.

குடும்பமாய்ச் சேர்ந்து பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகளைக் குடும்பமாகவே இருந்து, முன்னதாகவே தீர்மானம் செய்து கொள்ளுங்கள். அதை ஒரு அட்டவணைப்

57ம் பக்கம் பார்க்க...




MEGA CARPET & DUCT CLEANING LTD.

உங்கள் இல்லத்தினுள்ளே சுழலும் காற்றோட்டத்தை சுத்தமாக்கி சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்கின்றோம். அனுபவம் மிக்கவர்களினால் தரமாகவும் ஆலோசனைகளுடன் கூடிய நிதானமான சேவை

• Heavy duty equipment • Real high presure cleaning • Remove mold yest and bacteria • We use state of art technique • Individually cleaning all vents

NATHAN: Dir: 416.893.8363, Tel: 416.286.2416, www.megaduct.com

படுத்தி, வீட்டில் உள்ளவர் கண்களில் படுமாறு ஒரு பொதுவான இடத்தில் மாட்டி வையுங்கள். குளிர்சாதனப் பெட்டி இவற்றை மாட்டிவிட ஒரு நல்ல வசதியான இடமாக இருக்கும். இதில் யார் எந்த நிகழ்ச்சியை எப்பொழுது பார்ப்பது என்ற குறிப்பும் எழுதப்பட்டிருக்க வேண்டும். குறிக்கப் பட்ட நிகழ்ச்சி பார்த்து முடித்தவுடனேயே தொலைக்காட்சியை அணைத்துவிட மறந்து விட வேண்டாம். அதன்பின்னர், வேறு என்ன நிகழ்ச்சிகள் இருக்கிறது என்று தொலைக்காட்சியைத் திருகிக் கொண்டிருக்காமல், குழந்தைகளை இதர அலுவல்களில் ஈடுபடப் பழக்குங்கள்.

குழந்தைகளுடன் நீங்களும் கட்டாயம் இருந்து தொலைக்காட்சி பார்க்க வேண்டும். முழுமையாக இருந்து ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு உங்களுக்கு நேரம் இல்லையென்ற போதும், இயன்றளவு தொடக்கக் காட்சிகளையாவதுப் பார்த்து அது குழந்தைகளுக்கு உகந்த நிகழ்ச்சி தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அப்புறம் அடிக்கடி தொலைக்காட்சியில் ஒரு கண்ணை இருத்திக் கொண்ட உங்கள் வேலைகளை நீங்கள் பார்க்கலாம்.


குழந்தைகள் கருத்து, உங்கள் கருத்து, இதை பேச்சுப் பரிமாற்றம் செய்து கொள்ளுங்கள். ஏதாவது தகாத காட்சிகள் வரின், தொலைக்காட்சியை அணைத்துவிட்டு உங்கள் குழந்தைகளின் எண்ணம் பற்றி ஆராய முற்படுங்கள். அவர்களைக் கேளுங்கள்! “அந்த மனிதர்கள் சண்டை பிடித்து, ஒருவரை ஒருவர் காயப்படுத்துகிறார்களே, அது சரியா? வேறு என்ன அவர்கள் செய்யக்கூடும்? நீங்கள் அந்த இடத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்?” என்றெல்லாம் உங்கள் கேள்விக் கணைகளைத் தொடுங்கள். “அந்த இளம் வயதினர், அந்த விருந்தில் அப்படி நடந்து கொண்டது தப்பா? அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?” என்றெல்லாம் அவர்களைக் கேளுங்கள். ஒரு நிகழ்ச்சியில், ஒருவர் மற்றவரை எகத்தாளம் செய்வது போல் காட்டப்பட்டால், அது தவறு என்பதை எடுத்துக் காட்டி, உலகத்தில் எல்லாரும் சரிசமம், ஒருவர் மற்றொருவருக்கு மரியாதை கொடுத்துப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் மனதில் ஆழமாகப் பதிய வையுங்கள். எல்லோரும் சமமாகப் பாவிக்கப் பட வேண்டியவர்கள் தான் என்பதைத் தெரிவியுங்கள். அதிலும் குழந்தைகளுடன் கதைக்கக் கூச்சப்படும் சில விடயங்களை (பாலுறவு, போதை வஸ்துக்கள், காதல், மது, புகைபிடித்தல், வேலை, பழக்கவழக்கங்கள், குடும்ப வாழ்க்கை) ஒரு கட்டத்தில் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் இம்மாதிரிக் காட்சிகள் வரும்போதாவது, மனம் திறந்து நீங்கள் அவர்களுக்கு அவைகளைப் பற்றி விளக்க வேண்டும். ஒரு நிகழ்ச்சியைப் பார்த்து ஏதாவது சந்தேகம் இருந்தால், உங்களைக் கேட்குமாறு உங்கள் பிள்ளைகளிடம் சொல்லி வையுங்கள்.

மற்ற குழந்தைகளின் பெற்றோர்கள், உங்கள் மருத்துவர், உங்கள் பள்ளிக் குழந்தைகளின் ஆசிரியர்கள் போன்றவர்களிடமும் உங்கள் குழந்தைகள் எதை வரையறைக் கொண்டு பார்ப்பது என்ற முறைகளைக் கேட்டறியுங்கள்.

தொலைக்காட்சிக்குப் பதிலாக வேறு வித விதமான விளையாட்டுக் கலைகளைக் குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்துங்கள். உங்கள் குழந்தை தொலைக்காட்சி பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறது. உங்களுக்கு அது அந்த நேரத்தில் அவர்களுக்கு அவசியமில்லை என்பது புரியும் பட்சத்தில், அவர்களை வீட்டை விட்டு வெளியில் ஒளிந்துப் பிடித்து விளையாடுவது, வெளியிலேயே விளையாடுவது, கைவினைப் பொருட்கள் செய்வது. பொழுதுபோக்கு சாதன விளையாட்டுக்களில் ஈடுபடுவது மற்றும் பாடல், ஆடல் போன்றவற்றில மனதைச் செலுத்துவது போன்ற இடங்களில் அவர்களைத் திசை திருப்புங்கள். எவ்வளவு விதவிதமான பொழுது போக்கும் வேறு சாதனங்கள் இவ்வுலகத்தில் தொலைக காட்சியைத் தவிர உண்டு. அவற்றை சரியான நேரத்தில் பயன்படுத்துங்கள். குழந்தைகள் உங்களைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்பார்கள்.

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

www.PowerofSaleHome.com

Value....!
VALUE....!
Value....!

Finch & Tapscott

ONLY
$1198.10/month
WITH NO DOWN PAYMENT

Detached
2 Storey Home
3 Bedroom
3 Washroom

Finished Basement with Kitchen Seperate Entrance
Rented for 500$
Tenant will stay or leave.

Suresh Sellathurai
Sales Representative
Dir. : 416.356.7330



Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
Bus. : 416.290.1200 (24Hr.)
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

# வீட்டின் செலவைக் கவனிப்பது எப்படி?



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

வீட்டு உரிமையாளராக இருப்பது என்பது ஒரு செலவு அதிகரித்த பெரிய பொறுப்பா கும். ஆனால், சரியான திட்டம் இருந்தால் இது ஒரு பெரிய பொறுப்பாக அமையாது.

முக்கியமான பொறுப்பு என்பது சரியான Budgetஐப் போடுவதாகும். அதாவது உங்க ளது Spending plan சரியாக அமைதல் வேண்டும். கூடுதலானவர்கள் தமது வீட்டுச் செலவைக் கட்டுப்படுத்த முடியாது கஷ்டப் படுவது அவர்கள் தங்களது செலவைக் கட்டுப்படுத்த முடியாது இருப்பதாலாகும்.

முதலில் உங்களது தற்போதைய மாதாந்த, வருடாந்த செலவுகளைக் கணக்கில் கொண்டு அத்துடன் வரப்போகும் புதிய செலவுகளையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். தற்போதைய செலவுகளுக்கு, உதாரணமாக, Car செலவுகள், Credit card செலவுகள், Basic expenses (உணவு, உடை, மருந்துகள்) என்பனவற்றைச் சொல்லலாம். வீட்டு Insurance, Property tax, Mortgage payments என்பன புதிய செலவுகளில் அடங்கும்.

மாதாந்தச் செலவாக, உங்களது மூன்று மாதச் செலவின் சராசரியை எடுத்துக் கொள்ளுங்கள். அத்துடன் அவசரமாகச் செல்லும் Super market செலவு, Car repairs, Holidays, பிறந்தநாள் Giflt செலவு- கள், Coffee, Newspaper, மதிய உணவுச் செலவு என்பனவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் குழந்தைப் பராமரிப்பிற்காக Baby sitter ற்குக் கொடுக் கும் மாதாந்தக் கட்டணத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அத்துடன் உங்களது Credit card

இனது நிலைமையையும் அறிந்து கொள் வது நல்லது. அப்படியாக Credit Card அதிக கடன் இருந்தால் அதை வேறு ஏதாவது வழியாக கட்டி முடிப்பது நல்லது. சில Credit Card Company கள் உங்களது Credit Card கடன்களை ஒரு Cardல் போடு வதால், குறைந்த வட்டிவீதத்தால் ஒன்று சேர்ப்பதற்கு அனுமதியளிப்பார்கள். அவ் வழியால் உங்களது Credit Card கடனை ஒரு மாதாந்தக் கட்டணமாகக் கட்டி முடிப் பதற்கு உதவியாக இருக்கும். இல்லாவிடில் உங்களது வீட்டில் இருந்து கடனை எடுப் பதால் (அதாவது Home equity loan) குறைந்த வட்டியுடன் Credit Card ஐக் கட்டி முடிக்க முடியும்.

ஆகவே இந்த Budget ஆனது உங்களது வருமானத்திற்கு ஏற்றவாறு உங்களது செலவுகளை அமைப்பதற்கு உதவியாக இருக்கும்.

### ஏன் எப்போது வீட்டை விற்க வேண்டும்

சாதாரணமாக நான்கு முக்கியமான காரணத்திற்காக வீட்டு உரிமையாளர்களை வீட்டை விற்பார்கள்.

1. Financial and Market நிலைமைகள்
2. வேலைகளில் மாற்றம்
3. வீட்டுப் பிரச்சினைகள்
4. வாழ்க்கை முறையில் மாற்றம்

அதேநேரத்தில தற்போது புதிய காரணம் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது குறைந்த வட்டி வீதம். கூடுதலாக Finan- cial and Market Conditions களுக்காக வீட்டு உரிமையாளர்கள் வீட்டை விற்பது வழக்கம். அவர்கள் தங்களது வாழ்க்கை யில் கஷ்டப்பட்டு உழைத்த பணம், நேரம் என்பவற்றை இந்த வீட்டில் செலவழித்து இருப்பார்கள். ஆகவே அதைச் சரியாக விற்பதற்கு தகுதியான ஒரு Real Estate agentஐ அணுகுவது அவசியம். நாங்கள் கூடுதலாகக் Buyer’s and seller’s Market என்பதைக் கேட்பது வழக்கம். அதாவது கூடுதலான வீடுகள் Marketல் விற்பதற்கு இருந்தால் அது Buyer’s Market. அதே நேரத்தில் அதிகமான வீடுகள் வாங்குபவர்- களுக்கு Marketல் வீடு இல்லாவிட்டால் அது Seller’s Market ஆகவே நீங்கள் பணத்தைக் கூடப் பெற விரும்பினால் Seller’s Marketல் விற்பதால் கூடுதலான பணத்தை உங்கள் வீட்டில் இருந்து எடுத் துக் கொள்ளலாம். அதே நேரத்தில் நீங்கள் வீட்டை விற்றுப் பின்பு வாங்குவதாக இருந் தால் உங்கள் Financeல் எதுவித மாற்ற மும் வரமாட்டாது. Seller’s Marketல் உங்க ளது வீட்டை விரைவாகக் கூடுதலான விலைக்கும் விற்கக்கூடியதாக இருக்கும்.

**Employment Changes:**
உங்கள் வேலையில் மாற்றம் வரும்போது அதாவது வேறு வேலையோ அல்லது பதவி உயர்வோ வரும்போது வீட்டை விற்று புதிய இடத்திற்குப் போகத் தேவை ஏற்படும். அத்துடன் Family issues ஒரு காணம் ஆகவும் இருக்கும். அதாவது, வீட்டில் ஒரு குழந்தை பிறப்பதாலோ பிள்ளைகள் வளர் வதால் கூடிய இடம் தேவைப்படலாம். ஆகவே இந்த நேரத்தில் வீட்டை விற்பது ஒரு அத்தியாய தேவையாக மாறுகின்றது.

அத்துடன் Life Style Changes அதாவது நீங்கள் ஓய்வு எடுக்கும் காலம் நெருங்கு வதாக இருந்தால் நீங்கள் சரியான நேரத்- தில் வீட்டை விற்றுவிட்டுப் புதிய இடத்திற் குப் போவதற்கு உதவியாக இருக்கும்.

என்ன காரணமாக இருந்தாலும் தற் போதைய நிலையில் வீட்டை விற்பதால் வீட்டு உரிமையாளர்களுக்கு நட்டம் வரு வதற்கு வாய்ப்பு இல்லை. தற்போதைய காலகட்டத்தில் வட்டிவீதம் குறைவாக இருப் பது ஒரு முக்கிய காரணமாக இருக்கின் றது. ஆகவே நான் முதலாவது கட்டுரை யில் கூறியது போல உங்கள் செலவுகள் உங்களது வருமானத்திற்கு மேலாக வரும் போது உங்களது கடன் கூடிக்கொண்டே போய்க்கொண்டு இருக்கும். அப்படியான நிலையில் கூட நீங்கள் உங்களது வீட்டை விற்று விட்டுக் குறைந்த விலையில் வீடு ஒன்றை வாங்குவதால் உங்களது கடனைக் கட்டி முடிப்பதோடு உங்களது வருமானத் திற்கு ஏற்ற செலவில் வீட்டையும் வாங்கிக் கொள்ளலாம்.

■ ■ ■


உலகத் தமிழர் சமூக நூலகம்
உங்களை அழைக்கிறது!

புலம்பெயர் நாடுகளிலேயே மிகப் பெரிய நூலகம்!
15,000க்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள்!
சிறுவர் முதல் பெரியோர்வரை பயன்பெறக்கூடிய நூல்கள்!
வருடமொன்றிற்கு 200க்கும் மேற்பட்ட புத்தகங்களை
வாசிக்கக்கூடிய அதிர்ஸ்டம்!
இணையத்தளம் www.tamillibrary.ca ஐப் பார்வையிடுங்கள்.
இன்றே அங்கத்தவராகிப் பயன் பெறுங்கள்.

தொடர்புகளுக்கு:
39, Cosentino Dr. Scarborough, ON
M1P 3A3
Midland & Progress

Tel: (416) 335 0622



வீடு வாங்க விற்க



Sutton

Alen Sivasambu
Sales Representative
Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617



alen@sutton.com






A TEAM Towing
"Affortable and Trusted Services"

Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars

Call Esan or Donald
Direct: 416-835-1700

525 Bloor St W
Toronto, ON , M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)



tvi
Tamil Vision Int.
tvi ON LINE DEMAND
www.tviondemand.com
To order Call
Tel: 416-593-9300 Ext. 400
Or Toll-free: 1-888-836-6834
www.tamilvision.tv
ROGERS
Channel: 621
Tvi + Basic Channels for only $42.99
Tvi 50% off for 2 months
Bell ExpressVu
Channel: 707
Tvi + Basic Channels for only $54.99
2 months free
புத்தம் புதிய இசை நிகழ்ச்சி
புதுராகம்
சனி இரவு 7:30க்கு
மறு ஒளிபரப்பு திங்கட்கிழமை பகல் 12:30க்கு
இன் நிகழ்ச்சியில் நீங்களும்
பங்கு பற்ற விரும்புகிறீர்களா?
இன்றே அழையுங்கள் 416-888-7626
வெள்ளி (Mar07/08) இரவு 9:00 மணிக்கு
பொல்லாதவன்



உங்களின் வீட்டுக் கடனை குறைந்த
வட்டி வீதத்தில் பெற்று உங்களின் மாதக்
கட்டுப் பணத்தைக் குறைத்து
கொள்ள அழையுங்கள்...

Interest Rate as low as
5%*
Call me now for more
info at
416.936.5200

CENTUM™
One Financial Group Inc.

Myuran Ramachandran
Mortgage Consultant

Direct: 416-936-5200
Bus: 416-548-8000 • Fax: 416-548-8001
880 Ellesmere Road. Suite 203, Scarborough. Ontario



தேடல் குறித்த புதிய பயணம்
TAMIL ONE
21 ம் நூற்றாண்டின் முன்னணி
நுட்பங்களுடன் ஒளிபரப்புத்துறையின்
புதிய புரட்சி
புத்தம் புதிய திரைப்படங்கள்
முற்போக்கு நிகழ்ச்சிகள்
பல்கோணச் செய்திகள்
கலாச்சார விழுமியங்களின் காவலன்
TAMIL ONE
TR one
24 Hrs Tamil Radio
24 மணிநேரமும் உங்களுடன்... அதிரவைக்கும் அலைவரிசை
இணைப்புகளுக்கு 416-817-7977
தொடர்புகளுக்கு 416-299-0118

SERANDIBTRAVEL1

AROUND THE WORLD WITH SERANDIB




For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

M and M CONSULTANTS

Serving 22years in Canada
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathurst & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

# சக்கரை வியாதியும் சரியாகும்...



திரு மகேசன்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று முன்னோர்கள் சொன்னது எவ்வளவு தூரம் உண்மை என்பது புரிகின்றது. கேரளா ஆரிய வைத்தியசாலையின் மாண்பு கள், மருத்துவ முறைகள் போன்றவற்றை எழுதியதன் பயனாக ஏதோ பூர்வ புண்ணிய பலனோ என்றே மனநிலை தோன்றிவிட்டது. நேரடியாகவே எமது அலுவலகத்திற்கு வந்து தமது குடும்பத்திலுள்ள நோயுற்றவர்களின் குறிப்புகளோடு (Records) எம்மை சந்தித்து ஆரிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற வழி அமைத்துத் தருமாறு பலர் கேட்டபோது ராமர் அணைகட்ட அணில் மண் சுமந்ததுபோல் நமக்கும் ஏதோ புண்ணிய காரியங்களில் ஈடுபட கொடுப்பனவு இருக்கிறதே என்பதை எண்ணியபோது, வானத்தை நோக்கி கைகளை விரித்து ஆண்டவனே என்று ஒருமுறை பிரார்த்தித்து ஆத்ம திருப்திப்பட்டுக்கொள்ள முடிந்தது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்னும் சிலரோ நாம் எழுதியவை நூற்றுக்குநூறு உண்மை, அதுமட்டுமல்ல தாமும் இச்சிகிச்சைக்கு சென்று பலன் அடைந்தவர்கள் என்றபோது நமது எழுத்தில் நாம் எவ்வளவு தூரம் உண்மையை உண்மையாகவே எந்தவித திரிபுமின்றி படைத்திருக்கிறோம் என்ற பெருமிதம் ஏற்பட்டது.

இக்கட்டுரையை இந்தவாரம் எழுதாது தவிர்த்து அடுத்த மாத இதழில் எழுதலாம் என்ற எண்ணமே இருந்தது. காரணம் இக் கட்டுரையை இந்தியாவில் டெல்லியிலிருந்து அனுப்பவேண்டிய நிலமை. அமெரிக்காவிலிருந்தும், கனடாவிலிருந்தும் சென்ற மருத்துவர்கள் அடங்கிய குழுவை டெல்லியிலிருந்து சுற்றுப்பயணம் செய்ய வேண்டிய ஒழுங்கை நேரடியாகவே கண்காணிக்க சென்றிருப்பதால் எழுத முடியாத நிலமை ஏற்படலாம் என்று தோன்றிற்று. ஆனாலும், ஆச்சரியமாக கனடாவிலிருந்து டெல்லி வந்த மருத்துவர்களில் சிலர் தமது கேரளா மருத்துவக் கட்டுரையை பாராட்டி தொடருங்கள் உங்களுக்கு தெரிந்தது மக்களுக்கு பயன்படட்டும் என்று உற்சாகமூட்டி இக் கட்டுரையை டெல்லியிலிருந்து அனுப்ப உத்வேகமூட்டினார்கள்.

கேரளாவில் மக்களின் வாழ்வை எடுத்துப் பார்த்தால் அவர்கள் தேகாரோக்கியத்தோடும், பளபளப்போடும் இருப்பதைக் காணலாம். காரணம், அவர்களின் வாழ்வோடு கலந்துவிட்ட இயற்கைதான். அவர்களின் ஒவ்வொரு பாவனையிலும் இயற்கையோடு கலந்த மூலிகைகள் ஒன்றுபட்டுக் கிடக்கின்றது. இந்தியாவின் மற்றைய பகுதிகள் போல் இவர்கள் மேற்கத்தைய நாகரீக மோகத்தில் நுழையவில்லை. நோய் நொடியென்பது இவர்களை இலகுவில் அண்டுவதேயில்லை. இதனால்தான் தற்போது மேற்கத்தைய நாடுகளிலிருந்து பலர் தமது ஓய்வுக்காலத்தை கழிக்க நிலபுலன்களை கேரளாவில் வாங்கி வருவதை காணமுடிகின்றது.

ஒவ்வொரு வீட்டின் முன்னேயும் பின்னேயும் பச்சைப் பசேலென்ற தாவர வகைகள் கண்ணை கவருகின்றன. இயற்கை சுவாசமென்பது அள்ளிக் கொட்டிக் கிடக்கிறது. மூலிகைகள் என்பது தமது வீட்டின் கோடிப் புறத்தில் கொட்டிக் கிடப்பதாலோ என்னவோ அவர்கள் தமது வைத்தியத்தில் எந்த வித மேற்கத்திய மருந்து வகைகளையும் கலப்பதேயில்லை. கேரளாவில் மட்டுமே நாம் தூய கலப்படமற்ற இயற்கை மூலிகை மருத்துவத்தை பெறமுடியும். இது நூற்றுக்கு நூறு அப்பட்டமான உண்மை

கேரளா கோட்டக்கல் ஆரிய வைத்திய சாலையில் நீங்கள் இங்கிருந்து எடுத்துச் செல்லும் மருத்துவக் கோப்புகள் (Medical Records) கட்டாயமாகக் காட்டப்பட வேண்டும். அதனை வைத்தே அவர்கள் நோய் பற்றிய EVALUATION செய்ய முடியும். தேவையற்ற பொய்களைச் சொல்வது தவிர்க்கப்பட வேண்டும். மனதில் பட்டதையெல்லாம் சொல்லி தேவையற்ற மருத்துவ முறைக்கு உட்படுத்தப்படக்கூடாதென்பதற்காகவே நாம் இவ்வறிவுறுத்தலைச் செய் கின்றோம். கர்ப்பிணிப் பெண்கள், (PREGNANT WOMEN) 7 வயதிற்கு குறைந்தவர் கள், அதிகம் வயதானவர்கள் போன்றவர்களுக்கு சிகிச்சைகள் தவிர்க்கப்படுகின்றது.

மிக முக்கியமாக ஆரிய வைத்தியசாலைக்கு செல்லுமுன்பாக நீங்கள் உங்கள் முன் பதிவை (ADVANCE RESERVATION) கட்டாயமாக செய்து கொள்ள வேண்டும். இதனை நாம் மன நிறைவுடன் புண்ணிய காரியமாகவே செய்து தருகின்றோம்.

நாம் சென்றமுறை சொன்ன வைத்திய முறைகளை விட பஞ்சகர்ம சிகிச்சை (PANCHAKARMA TREATMENT) முறைகளையும் சிறப்பாக செய்து கொடுக்கின்றார்கள். அவையாவன கசாயவஸ்தி (KASHAYAVASTHY) ஸ்னேகவஸ்தி (SNEHAVASTHY), நாஸ்யம் (NASYAM), விரீச்சணம் (VIRECHANAM), ரத்தமோட்சம் (RAKT AMOKSHAM).



## உல்லாசப் பயணக் கட்டுரை - 2

### ஸ்னேகவஸ்தி:

இச்சிகிச்சைமுறையானது கசாயவஸ்திக்கு முன்பாக செய்யப்படுகிறது. மதியநேர உணவிற்கு பின்பு நோயாளி இடப்பக்கமாக படுக்க வைக்கப்படுவார். இதனை OIL ENEMA என்றே அழைக்கின்றார்கள். வலது கால் அசைக்கக்கூடிய நிலையில் இருப்பதற்காகவே நோயாளி இடப்பக்கமாக படுக்க வைக்கப்படுகின்றார். 60 ml (202) எண்ணெய்யானது VASTHIYANTHRAவில் நிரப்பப்பட்டு அடைக்கப்படுகிறது. பின்னர் VASTHI NETHIERAவின் முன்பகுதிக்கு இந்த எண்ணெய் தள்ளப்படுகிறது. பின்னர் இந்த VASTHI NETHRA நோயாளியின் ஆசன வாசலினூடாக மெதுவாக வைத்தியரினால் செலுத்தப்படுகிறது. இம்முறைக்கு பின்னர் நோயாளி குப்புற படுக்க வைக்கப் படுகின்றார். கால்கள் இரண்டும் இருக்க மாக வைக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட 9மணி நேரத்தின் பின்பே இந்த எண்ணெய் நோயாளியிடமிருந்து அகற்றப்படுகின்றது. வாதநோய், உடல் நடுக்கம், முதுகு நோ போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

### கசாய வஸ்தி (KASHAYA VASTIAY)

இந்த சிகிச்சையானது வெறும் வயிற்றிலேயே (EMPTY STOMACH) செய்யப்படுகிறது. காசாய வஸ்தியின்போது தேன், எண்ணெய் இவற்றோடு மூலிகை கலந்த பசை ஆசன வாயினூடாக செலுத்தப்படுகிறது. இவ்வெண்ணெய் ஆனது ஒரு குறிப்பிட்ட சூட்டோடு இருக்க வேண்டும் என்பதற்காக பலரின் கழுகுப்பார்வை கண்காணிப்பில் சூடேற்றப்படுகிறது. மிக அவதானத்துடன் நோயாளியின் உடல்நிலை கவனிக்கப் படுகிறது. 45நிமிடத்தின் பின், செலுத்தப்பட்ட எண்ணெய் வெளியேற்றப்படுகிறது. அப்படி வெளியே வராவிட்டால், மீண்டும் ஒருமுறை எண்ணெய் உட்செலுத்தப்படும். இதன் பின்னர் எண்ணெய் வெந்நீர் குளியலின் பின்னர் மெல்லிய உணவு வகை வழங்கப்படும். இதன்மூலம் நோயாளியின் உடலில் இருக்கும் அமிலத் தன்மை வெளியேற்றப்பட்டுவிடும். இதுமட்டுமல்ல இச்சிகிச்சையின் முக்கிய நோக்கமே உங்களின் உடலில் இருக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை (BODY'S IMMUNITY) அதிகரிப்பதே ஆகும். இதன்மூலம் உங்கள் உடலில் புதிய இரத்தம் பாய்ச்சப்பட்ட உணர்வு நிலை தோன்றும். தேகாரோக்கியம் பேணப் படும். வயதானவர்களாக இருந்தாலும் பளபளப்பாக காணப்படுவீர்கள். முக்கியமாக தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களான ரஜனிகாந்த், விக்ரம் போன்றவர்கள் தமது புதிய திரைப்படத்திற்கான படப்பிடிப்பு ஆரம்பிக்குமுன் கோட்டக்கல் சென்று கசாய வஸ்து மூலம் உடலை மெருகேற்றிக்கொள் கின்றனர். ARTHRITIS நோயால் பாதிக்கப் பட்ட பல வெளிநாட்டவர்கள் இச்சிகிச்சை மூலம் பூரண குணம் பெற்றிருக்கின்றனர்.

### நாஸ்யம் (NASYAM)

நாஸ்யம் இரண்டு வகைப்படும். அவையாவன மாஸ நாஸ்யம் (MARSA NASYAM), பிரத்திமாஸ நாஸ்யம். இச்சிகிச்சையானது மூக்கு, தொண்டை, SINUSES, மண்டை இவற்றோடு சம்பந்தப்பட்டது. முகம், தோள்கள், நெஞ்சு இவைகள் விசேடமாக 'வாரியார்களின்" ஆண்டவனின் பிரார்த்தனையுடன் தயாரிக்கப்பட்ட மூலிகை எண்ணெய் மூலம் மசாஜ் செய்யப்படுகின்றன. மூக்கினூடாக விசேடமாக தயாரிக்கப்பட்ட மூலிகை எண்ணெய் (HERBAL OIL) செலுத்தப்பட்டு பின்னர் வெளியேற்றப்படுகிறது. அதேநேரம் தொடர்ச்சியாக மேற்குறிப்பிட்ட உடலின் பாகங்களும் பாதங்களும் எண்ணெய் கொண்டு உருவப்படுகின்றன. இதன்மூலம் நாடி, நாளங்களின் இரத்த ஓட்டம் சீராக்கப் படுவதோடு அடைக்கப்பட்ட பகுதிகள் சீராக் கப்படுகின்றன. மொட்டை தலையோடு கவலையாக இருப்பவர்களுக்கு இச்சிகிச்சை ஒரு வரப்பிரசாதம். தோல் சுருக்கம், தலைமயிர் கொட்டுதல், தலை நரைபடுதல் இவற்றுக்கும் இச்சிகிச்சை விசேடம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக கழுத்துப்பிடிப்பு, தோள்பட்டை வலி, மண்டைக்குத்து SINUSITIS, MIGRAINE போன்றவற்றுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றது. FACIAL PARALYSISஆல் பீடிக்கப்பட்டு இச்சிகிச்சை மூலம் முகப்பொலிவு பெற்றோர் ஓராயிரம்.

நீங்கள் ஆரிய வைத்தியசாலையில் தங்கி இருக்கும் காலத்திலேயே WHEEL CHAIR இல் வந்த பலர் நடந்து செல்வதை காணலாம். பலர் தாங்கமுடியாத நோய் நொடிகளோடு வந்தவர்கள் முகம் மலர வீடு திரும்பியதை நான் தங்கியிருந்த காலத்தில் நேரடியாகவே கண்டிருக்கிறேன். குணமடைந்து திரும்பியபலர் அடிக்கடி தமக்கு சிகிச்சை வழங்கியவர்களை காண வந்து செல்கின்றார்கள்.

### பனாசகர்மாவின் தொடர்ச்சியான சிகிச்சையான வீரிச்சாணம் (VERECHANAM)

இச்சிகிச்சை உள்ளுறுப்புகள் சம்பந்தமான அல்சர் (ULCERD) போன்ற நோய்களை தீர்த்து வைக்கிறது. இச்சிகிச்சை அதிகாலை நேரத்தில் வெறும் வயிற்றில் (EMPTY STOMACH) கசாயம் அருந்த வைக்கப்படு கிறது. இக்கசாயத்தை குடித்தவுடன் அவை வயிற்றை சுத்திகரிக்கிறது. காய்ந்த இஞ்சி, மிளகு, கறுவா, பழவகைகள் சேர்ந்த பெயர் குறிப்பிட முடியாத மூலிகைகளுடன் சேர்த்து வடிகட்டி எடுக்கப்படும் கசாயம் குடிப்பதற்கு கொடுக்கப்படுகிறது. இது மிகக் கடுமையான சிகிச்சை ஆகையால் மாதத்தில் ஒரு முறை மட்டுமே நோயாளி இச்சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றார். அதுமட்டுமன்றி இச்சிகிச்சை நேரத்தில் முக்கிய 'வாரியார்" குடும்பத்து வைத்தியர் ஒருவர் விளக்கேற்றி வைத்து சிகிச்சை முடியும்வரை உடனிருந்து நோயாளியை கண்காணிக்கின்றார். இதன்மூலம் உடல் புண்கள் பூரண குணமாவதோடு பசி எடுப்பது அதிகமாகும். ஆனாலும், கட்டுப்பாடான உணவு வகைகளே வழங்கப்படுகிறது. அசைவ உணவு என்பதே கிடையாது.

ஆயுர்வேத வைத்திய முறையானது ஆண்டவன் எமக்குக் கொடுத்த வரம். ஈழத்தில் பெயர் பெற்ற, சில்லாலைப் பரியாரியார், ராசையா பரியாரியார் போன்றவர்கள் ஆயுள்வேத வைத்தியத்தில் கொடிகட்டிப் பறந்தார்கள். காலம் செய்த கோலத்தில் இவையெல்லாம் அநியாயமாகக் காணாமல் போய்விட்டன. ஆனாலும் கைதடியில் இயங்கி வந்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் பயின்ற பலர் இன்னமும் தமது மூதாதையர் களின் ஏடுகளை பயன்படுத்தி இச்சிகிச்சை முறையை செய்து வருகின்றனர்.

கேரளா மண்ணில் கொட்டிக் கிடக்கும் ஆயுர்வேத மூலிகைகளின் மகத்துவத்தையும், அதன் மூலம் சீரிய பணி செய்து எமக்கெல்லாம் சிறப்பான வாழ்வை வழங்கும் வாரியாரின் வழித்தோன்றல்கள், வாழ்த்தப்படவேண்டியவர்கள். எனவே 'வாரியார்" என்ற பெயரோடு யாராவது சந்திக்க நேர்ந்தால் அவர்களை நீங்கள் குறைவாக எடை போடாதீர்கள். தொல்லை தீர்த்து அல்லல் பிணியகற்றும் ஆரிய வைத்தியசாலையின் பணி சிறப்பானது.

எனவே உங்கள் உதவிக்கு நாம் கரம் கொடுக்கத் தயார் நோய் நொடியின்றி வழ அனைவருக்கும் நலம் பல நல்க நவபிருந்தாவனத்தை வேண்டிநிற்கின்றேன்.

■ ■ ■

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**DONMILLS & FINCH**
1 B/Room Basement for Rent
Call: 416 756 4365

**BRIMLEY & LAWRENCE**
2 B/Room, 11/2 W/R
416 265 3352 / 416 704 8534

**MARKHAM & DENISON**
2 Room for Rent (Upper House)
905 294 7801

**NEILSON & FINCH**
2 B/Room Basement for Rent
416 609 8654

**NEILSON & FINCH**
1 Room for Rent (Upper House)
416 412 7468

**MEDULLA & SHEPPARD**
1 Room for Rent (Upper House)
416 724 7877

**MCCOWAN & SHEPPARD**
3 B/Room Walk-out Basement Washer & Dryer + Park Facilities
905 642 2569

**MARKHAM & EGLINTON**
1 Room for Rent
Call: 416 269 4918

**WARDEN & STEEL**
2 B/R Basement for Rent
Near All facilities
905 944 9982

**MARKHAM & STEEL**
1 Bed Room for Rent (Upstairs)
416 917 5974 (6:00 PM only)

**BRIMLEY & LAWRENCE**
2 B/R Basement for Rent
Separate Entrance
416 264 9421

**MARKHAM & ELLESMERE**
1 Room for Rent with Parking
416 430 0140

**NEILSON & FINCH**
2 B/Room Basement for Rent
416 609 8654

**MARKHAM & DENISON**
2 B/Room Basement for Rent
TTC Facilities
905 201 7760

**PHARMACY & LAWRENCE**
2 B/Room Basement (Separate Entrance)
416 750 4077

**BRIMLEY & STEEL**
2 B/Room Basement
Separate Entrance,
905 947 8018

**MCCONE & STEEL**
1 Room for Rent with food (In House)
905 472 1913 / 416 930 7628

**MCGOWAN & SHEPPARD**
3 B/Room + Big Hall for Rent
905 640 2287 / 416 917 1530

**DON MILLS & STEEL**
1 B/Room Basement $325
416 491 9364

**SCARBOROUGH GOLF CLUB**
1 Room for Rent in Basement
416 847 9802

**MARKHAM & FINCH**
Office Room for Rent
416 994 8432

**BIRCH MOUNT & MCNICOLL**
1 B/Room Basement for Rent
416 335 8055

**MARKHAM & ELLESMERE**
1 Room for Rent (APT)
416 335 0140

**MARKHAM & SHEPPARD**
1 B/Room Basement for Rent
416 332 8804

**HAMBERWOOD**
New 2 B/Room /2 W/Room Condo
647 438 8224

**NEILSON & FINCH**
2 B/Room Basement for Rent
416 331 0136

**MARKHAM & DENISON**
2 B/Room Basement for Rent
Near All Facilities
905 201 7760

**MCCOWAN & STEEL**
1 B/Room for Rent(Upper House)
905 472 1413 / 416 930 7628

**BIRCH MOUNT & ELLESMERE**
2 B/Room Basement for Rent
416 804 3520

**BRAMPTON & WILLAMPARKWAY**
1 Room for Rent (With food)
&400.00
416 886 3820

**MCCOWAN & STEEL**
2 B/Room Basement for rent
905 471 9016

## HOUSE / CONDO FOR SALE

**MIDDLEFIELD & FINCH**
a B/Room + Den Condo for Sale
416 312 8026 / 416 901 0877

**KENNEDY & EGLINTON**
2 B/Room Condo Den for Sale
416 303 7425

**KENNEDY & 401**
2 B/Room condo for Sale
416 723 3610

**KENNEDY & MIDLAND**
2 B/Room + Den Condo for Sale
Call: 416 303 7425

**BRAMPTON**
Dixie & Boor
4 B/Room House for Sale
Call: 905 494 0220

**AJAX**
2500 Sq. feet 4 B/Room House for Sale
$335
647 244 3799

**SHEPPARD & MARKHAM**
2 B/Room + 2 W/Room + s Car Park + 1 Locker
Condo for Sale
647 201 5993

**JAFFNA PERIYAVILLAN**
1 House with land for Sale
3 B/Room, Kitchen & Dining room
$30.000.00
905 723 1543

**MARKHAM & DENISON**
New Condo for Sale
2 B/R, 1200Sq. feet
905 201 8614

**KENNEDY & MIDLAND**
2 B/Room Condo for Sale
416 303 7425

**MCCOWAN & SHEPPARD**
3 B/Room Walk out Basement for Rent
(Car park, Washer, Dryer, School, shops All facilities)
905 642 2569 / 416 917 1500

## AUTO FOR SALE

**HONDA ACC.** 94 120 Km
Auto, 4 Door for Sale
416 451 6895

**2005 DODGE CARAVAN**
Full Loded for Sale
416 731 8453

**94 TOYOTA CAMRY**
(235KM) for Sale
905 761 5205

**95 TOYATA CORELLA**
230 KM
647 338 7316

**2003 SEPTUM**
53KM.
647 338 7316

CTR
கனடியத் தமிழ் வானொலி
416.264.8798

**97 NISSAN ALTMAN**
210 KM 416 786 3163

**92 TOYOTA COROLLA**
251 KM
905 471 7373 / 416 402 1124

**92 TOYOTA CAMRY**
270 KM Fully Lorded, 4 New tires
905 846 4316 / 647 896 4316

## OTHERS

**5.5" KUTHUVIZKU**
416 939 2260

**FREEZER**
(for Restaurant)
416 298 1306

**RADIO SET**
$600.00
416 438 2442

**DRYER**
6 pc. Dining table, Machine
416 724 6311

**OFFICE CHAIRS**
Folding Chairs 416 671 9122

**DAY CARE FOR KIDS SWING WORK AVAILABLE**
416 431 8655

**WEIGHT LOSE**
647 261 0281 / 416 577 9737

**TV REPIRE**
Call: 905 472 2534

**TUITIONS /TRANSLATION**
416 282 0951 / 416 570 6920

**TUITION CLASS**
Middlefield & Finch
Tuition Class for Student
Call: 416 830 7078 / 416 609 9043

**YOGA**
Birch mount & Eglin ton)
Yoga (Thiyanam) Class (Free)
Call: 416 642 4883

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


**NEW TOWN HOUSE FOR SALE**

**BROCK / ROSSLAND**

3 ROOM, 2 WASH ROOM,
HARD WOOD FLOOR,

**Read for May 31**
**Kanthan - 416 291 3997**

# இனிய குரலைப் பெற...



**இராஜசேகர் ஆத்தியப்பன்**

***சித்தவைத்தியம் மற்றும் சித்தர்கள் பற்றி அறிய விரும்புகிறேன்.***

பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாக சித்தர்களால் ஏற்படுத்தப்பட்ட மருத்துவ முறைக்கு சித்த வைத்தியம் என்று பெயர். இம்முறையில் வாதம், ஞானம், யோகம், மாந்திரீகம், சோதிடம் எல்லாம் அடங்கும். பதினெட்டு சித்தர்களில், போகர், புலிப்பாணி, இராமதேவர் என்ற மூவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தமிழர்களே. எல்லா சித்த நூல்களும் தமிழிலேயே உள்ளதால் இதனை தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கலாம்.

கீழ்க்கண்டவர்கள் 18 சித்தர்கள் என்ற அழைக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| 1. திருமூலர் | 2. புலஸ்தியர் |
| 3. நந்திதேவர் | 4. இடைக்காடர் |
| 5. அகத்தியர் | 6. அண்ணாக்கீசர் |
| 7. போகர் | 8. புலிப்பாணி |
| 9. கொங்கணவர் | 10. அழுக்கண்ணி |
| 11. பாம்பாட்டி | 12. குதம்பை |
| 13. கரூரார் | 14. அகப்பேய் |
| 15. தேரையர் | 16. சட்டைமுனி |
| 17. பூனைக்கண்ணர் | 18. காலங்கி |

இவர்களைத் தவிர இன்னும் 7 பேர் சித்தர்களாகக் கருதப்பட்டு சோழ மன்னர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். 25 சித்தர்களின் சமாதிகளுக்கு சோழ மன்னர்கள் கோவில்களைக் கட்டினர். அவை கீழே வருமாறு

| | |
|---|---|
| திருமூலர் | - சிதம்பரம் |
| கொங்கணர் | - திருப்பதி |
| போகர் | - பழனி |
| சட்டைமுனி | - சீர்காழி |
| மச்சமுனி | - திருப்பரங்குன்றம் |
| கருரார் | - தஞ்சாவூர் |
| இராமதேவர் (யாக்கோபு) | - அழகர் மலை |
| இடைக்காடர் | - திருவண்ணாமலை |
| கமலமுனி | - திருவாரூர் |
| பாம்பாட்டி | - திருக்கடையூர் |
| புண்ணாக்கீசர் | - நாங்கனார்சேரி |
| கோரக்கர் | - பொய்யூர் |
| அழுக்கண்ணி | - நாகப்பட்டினம் |
| சுந்தரனாந்தர் | - மதுரை |
| குதம்பை | - மாயவரம் |
| கடுவெளி | - காஞ்சிபுரம் |
| நந்திதேவ | - காசி |
| வால்மீகி | - எட்டுக்குடி |
| நாரதர் | - திருவிடை மருதூர் |
| பதஞ்சலி | - இராமேஸ்வரம் |
| காசிபர் | - உருத்திரகிரி |
| விஸ்வாமித்திரர் | - திருவாடுதுறை |
| காலங்கி | - காஞ்சிபுரம் |
| தன்வந்திரி | - வைத்தீஸ்வரன் கோவில் |
| கும்பமுனி | - கும்பகோணம் |

சித்த வைத்திய சிகிச்சை முறைகள் கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| • தெய்வ சிகிச்சை | • மாந்திரீக சிகிச்சை |
| • திரிதோஷ கிசிக்சை | • மானத கிசிக்சை |
| • தோஷ நிவிர்த்தி | • ராட்சஷ கிசிக்சை |
| • மருந்து கிசிக்சை | • தடை கிசிக்சை |
| • சுத்த கிசிக்சை | • பத்திய கிசிக்சை |
| • ஒப்புறை கிசிக்சை | • சுகாதார கிசிக்சை |
| • தாதுபுஷ்டி கிசிக்சை | • உபசாந்தி கிசிக்சை |
| • தைல கிசிக்சை | • வேது கிசிக்சை |
| • அட்டைவீடு கிசிக்சை | • இரத்தம் வீடு கிசிக்சை |
| • எதிருறை கிசிக்சை | • உடன் கிசிக்சை |
| • தற்கால கிசிக்சை | • பலவிருத்தி கிசிக்சை |
| • நோய் பரிமாண கிசிக்சை | |

***பெண்களுக்கு மட்டும்***

| | |
|---|---|
| • சூதக கிசிக்சை | • கருப்பை கிசிக்சை |
| • பிரசவ கிசிக்சை | |

***குழந்தைகளுக்கு மட்டும்***

- பால கிசிக்சை – அதாவது குழந்தைகளுக்கு ஏற்படும் இழுப்பு, பல்முளைக்கும் போது ஏற்படும் சுரம், பேதி, வலிப்பு முதலியவற்றுக்கான வைத்தியம்.

***குரல் இனிமையாக என்ன செய்ய வேண்டும்? நான் ஒரு பாடகி. நல்ல பதிலைத் தருவீர்கள் என்று எதிர் பார்க்கின்றேன்.***

அதிமதுரம் என்று ஒரு மூலிகைத் தூள் உண்டு. சில தமிழ்க் கடைகளில் விற்கின்றனர். அரைத்தேக்கரண்டி அதிமதுரத்துடன் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து வெது வெதுப்பான நீர் ஒரு கோப்பையுடன் காலை, மாலை இருவேளை தொடர்ந்து 48 நாட்கள் எடுத்து வர வேண்டும். அத்துடன் பாடல் பயிற்சி குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் ஒரு நாளைக்கு பாட வேண்டும். கழுத்தளவு தண்ணீரில் இருந்து கொண்டும் பாடிப் பழகலாம்.

***எனக்கு முடி அடர்த்திய இருந்தாலும் நிறம் செம்பட்டையாக உள்ளது. கருமையாக மாற் மூலிகை (Herb) ஏதாவது இருந்தால் சொல்லு வீர்களா?***

ஒரு தேக்கரண்டி உளுந்து மாவு அத்துடன் 10 கரிவேப்பிலை இலைகள் இவைகளை மோரில் ஊறவைத்து 8 மணிநேரம் கழித்து அரைத்து தலையில் தேய்த்து ஊறவிடவும். பின்னர் குளிக்கவும். சீயக்காய்த்தூள் பயன்படுத்துங்கள். வாரம் இருமுறை தொடர்ந்து செய்யுங்கள். உங்கள் கூந்தல்தான் உண்மையான கரு கரு கூந்தல்.

***முகத்தில் தழும்பு மாற என்ன செய்ய வேண்டும்?***

எலுமிச்சை ஒன்று எடுத்துக் கொள்ளுங்கள். வாய் அகன்ற பாத்திரத்தில் கொதிக்க கொதிக்க சுடுநீரை விடுங்கள் அதில் எலுமிச்சை சாறு விடவும். இப்பொழுது துணியால் மறைத்து முகத்திற்கு ஆவி பிடிக்கவும். தொடர்ந்து செய்து வந்தால் நல்ல பலன் உண்டு

***நெய் சாப்பிடுவதால் கொலஸ்ட்ரால் வருமா? மூலிகை நெய் உண்டா?***

நெய் சாப்பிடுவதால் தேக ஆரோக்கியம் மேம்படும். சூடான சோறு, இன்று சதைத்த கீரை, பருப்பு ஆகியவற்றுடன் சேர்த்து சாப்பிட வேண்டும்.

வைத்திய முறையில் மூலிகை சாறு, கசாயம், பால், கற்கம் இவைகளை நெய்யுடன் சேர்த்து காய்ச்சி வற்றவைத்து, பக்குவமாக வடிகட்டி வைத்துக்கொள்வதற்கு நெய் என்று பெயர். 1ஆண்டு வரை கெடாமல் இருக்கும்.

***ஆடாதொடை நெய்:*** நாள்பட்ட சுரம், எலும்புருக்கி, நெஞ்சுவலி, ஈளை, இருமல், இரைப்பு, காசம், மூலம், கண் எரிச்சல், தொண்டைக்கட்டு, பசியின்மை, மாந்தம் இவைகள் தீரும். 3-5 கிராம் வெந்நீருடன் இருவேளை உட்கொள்ள வேண்டும்.

***பிரமி நெய்:*** பித்தம், சூதக சன்னி தீரும். 10-15 மி.லீ. காலை வெறும் வயிற்றில் உட்கொள்ள வேண்டும்.

***சேங்கொட்டை நெய்:*** தோல் நோய்கள், காசம், சுவாசம், நீங்கி உடல் பலம் பெறும். எயிட்ஸ் நோயாளிகளுக்கு நல்லது. 10. மி.லி. இருவேளை.

**தூதுவளை நெய்:** இருமல், ஈளை, காசம் முதலிய கப நோய் 96, மேகம், இரைப்பு, வாய்வு முதலியன தீரும். 10-15 மி.லி. காலை மட்டும் 48 நாட்கள்.

***வல்லாரை நெய்:*** மாந்தம், மேகம், காசம் நட்பட்ட ஈளை, இரைப்பு, வாந்தி, இருமல் முதலியன தீரும்.

***வெண்பூசணி நெய்:*** வெள்ளை, சூடு, எரிச்சல், காந்தல், ஆண்/பெண் குறி எரிச்சல், வெட்டை, பித்தம் ஆகியவை தீரும்.

***தண்ணீர் விட்டான் நெய்:*** நரம்புத் தளர்ச்சி, சிறுநீரக கோளாறுகள், வெள்ளை படுதல், சலரோகம், இருமல் மற்றும் இளைப்பு தீரும். 5-10 மி.லீ. காலை மட்டும்.

***எனது தகப்பனாருக்கு 65 வயது உடல் தலை நடுக்கம் இருக்கின்றது. Parkinson என்று சொல்கிறார்கள். சித்த வைத்தியத்தில் தீர்வு ஏதாவது உண்டா?***

'சிவனார் அமிர்தம்' என்று ஒன்று உண்டு. இதைப்பற்றி விளக்கங்களை நேரடியாகக் கேட்டு அறிந்து கொள்ளுதல் அவசியம். நடுக்குவாதம், நசித்தலைவாதம், பக்க வாதம், பாரிசவாதம் என 80 வகை வாத நோய்களையும் தீர்க்கலாம். இத்துடன் உளுந்து தைலத்தை வெளிப்பூச்சாகத் தேய்த்து வர வேண்டும். நல்ல பலன் கிட்டும்.

***சென்றமாதம் தமிழகம் சென்றபோது குற்றாலத்தில் 'சந்தானாதி தைலம்' வாங்கிவந்தேன். இதன் உபயோகம் என்ன என்று விள்ளக இயலுமா?***

ஆண்மைக்குறைவு, மலத்தன்மை, உடல் துர்நாற்றம், அதிக வியர்வை, தலைவலி, கண் எரிச்சல் போன்ற நோய்களுக்கு நல்லது. வெளி உபயோகமாக தலைக்கு தேய்த்து குளிக்கவும். ஆண்மை குறைவிற்கு ஆண்குறியில் தடவி வர வேண்டும்.

***அஸ்வகந்தா எதற்கு நல்லது?***

உடல் - நரம்பு பலவீனம் நீக்கவல்லது. மன அழுத்தம் போன்ற குறைபாடுகளையும் நீக்கும்.

**நான் *Grade* 12 முடித்துள்ளேன். மருத்துவம் சார்ந்த படிப்புகள் (aramedical Courses) படிப்பதற்கு டொரோண்டோவில் ஏற்ற இடம் ஒன்று சொல்வீர்களா?**

உங்களைப் போன்றோருக்கும், இலங்கை, இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கும் இது போன்ற படிப்புகள் நல்ல உதவியாக அமைகின்றது. அனைத்து கல்வி நிலையங்களையும் ஒப்பிடும்போது எண் 150, Laird Drive ல் அமைந்துள்ள. Robertech institute சிறப்பாக செயல்படுகின்றது. கட்டணக் குறைப்பு தேவைப்பட்டால் எமது உதவியை நீங்கள் நாடலாம்.

***நான் மூலிகை மருந்து எடுத்து வருகின்றேன். பன்றி இறைச்சி சாப்பிடலாமா?***

சித்த, ஆயுர்வேத, மூலிகை (Herbal) மருந்துகள் எடுக்கும்போது முட்டை, மீன், மாடு, கோழி, பன்றி என்று எந்த இறைச்சியும் உட்கொள்ளக் கூடாது. எலுமிச்சை, புளி, ஆரஞ்சு போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும். அகத்திக்கீரை, வேம்பு போன்ற கசப்பான உணவையும் தவிர்க்க வேண்டும். மது, புகையிலை போன்றவை கூடவே கூடாது.

நலம் பெறுக! வளம் பெறுக!

■ ■ ■


புற்றுநோய் மற்றும் தோல்நோய் ஆராய்ச்சி மையம்



416-995 0416

- முகப்பரு
- எக்ஸிமா
- சொரியாஸிஸ்
- வெண்புள்ளி
- கரும்புள்ளி
- கண்களில் கருவளையம்
- மூளையில் கட்டிகள்
- இரத்த சோகை
- மெலனோமா
- தேமல்
- படர்தாமரை
- அரிப்பு, அலர்ஜி
- பொடுகு
- கட்டிகள்
- குடல் புற்று நோய்
- கர்ப்பப்பை கட்டிகள்

எந்தப்பிரச்சனையாக இருந்தாலும் எங்களுக்கு எழுதுங்கள் ஆலோசனைக் கட்டணம் $ 50. மட்டுமே. மருந்து மற்றும் சிகிச்சை இந்தியாவிலும், வெளிநாட்டிலும் பெறமுடியும்.

விபரங்கள் அறிய
Dr. Rajasekar,
SKIN & CANCER RESEARCH
253/103, KENNEDY STREET, NAGERCOIL - 1,
TAMILNADU, INDIA - 629 001.
e-mail : thirukoti@yahoo.co.in

# இந்திய சினிமாவில் ஒரு திருப்புமுனை

# பதர் பஞ்சலி



P. விக்னேஸ்வரன்

1955ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கு வங்காளத்தில் திரையிடப்பட்ட பதர் பஞ்சலி திரைப்படம் இந்திய திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்து, உலக அரங்கில் சினிமாத்துறையில் இந்தியாவின் புகழை உயர்த்தியது. இந்திய சினிமாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இத் திரைப் படத்தைப் பற்றி 'ரைம்ஸ் ஒ∴ப் இந்தியா" வில் அதன் சினிமா விமர்சகராக இருந்த அபீப் 'இந்திய சினிமாத்துறையில் ஒரு புரட்சி நடந்திருக்கிறது. இதை இந்தியாவின் எந்தவொரு திரைப்படத்துடனும் ஒப்பிட முடியாது. இந்திய திரைப்படங்களில் காணப்படும் மேடை நாடகத் தன்மையின் சிறு அறிகுறிகூடத் தென்படாத இத்திரைப் படம் சினிமா என்ற கலையின் பரிசுத்தமான வடிவம்' என்று குறிப்பிட்டார்.


புராண, இதிகாச மற்றும் வலிந்து மிகைப்படுத்திப் புனையப்பட்ட நீதி போதிக்கும் சமூகக் கதைகளையும் கொண்டிருந்த இந்திய சினிமாத்துறையில் தயாரிக்கப்பட்ட முதல் யதார்த்தத் திரைப்படம் பதர்பஞ்சலி. சினிமாவில் எப்படியொரு பரபரப்பை ஏற்படுத்தியதோ அதேபோலவே பதர்பஞ்சலி நாவலாக 1930களின் ஆரம்பத்தில் வங்காள இலக்கிய உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நாவலை எழுதிய பிபுதிபூஷன் பெனார்ஜி அவர்கள் இதை பிரசுர கர்த்தாக்களிடம் எடுத்துச் சென்ற பொழுது அவர்கள், இதில் ஒரு கதை இல்லையே, இது எப்படி நாவலாகும் என்று பிரசுரிக்க மறுத்துவிட்டார்கள். இறுதியில் ஒரு பிரபல சஞ்சிகை தனது இதழ்களில் தொடராக வெளியிட ஒப்புக்கொண்டது. அதுவும் வாசகர்களுக்கு போரடித்தால் இடைநிறுத்தப்படும் என்ற நிபந்தனையுடன். ஆனால், எடுத்த எடுப்பிலேயே அது வாசகர்களிடையே பிரபலமாகியதுடன் இறுதியில் முழு நாவலும் புத்தகமாக வெளியிடப்பட்டபோது மிகுந்த அளவு விற்பனையாகி வங்காள இலக்கிய உலகில் சாதனை படைத்தது.

இந்நாவலின் பெரும்பகுதி கிராமத்தில் பிறந்து வளர்ந்த பிபுதிபூஷனின் சுயசரிதம் என நம்பப்பட்டது. மிகப் பெரிய இந்த நாவல் மூன்று திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டது. முதலாவது பதர்பஞ்சலி, அடுத்து அபராஜிதோ, மூன்றாவது அபுசன்சார். பதர்பஞ்சலி திரைப்படத்தில் சிறுவனாக இருக்கும் அபுதான் இந்த நாவலின் கதாநாயகன். இந்த மூன்று திரைப்படங்களையும் இயக்கிய சத்தயஜித்ரே சர்வதேசத் திரையரங்குகளில் படைத்த சாதனைகள் எழுத்தில் அடங்காதவை. உலக மகா இயக்குனர்களில் ஒருவராகப் போற்றப்படும் சத்தியஜித்ரே அவர்களால் இந்தியா பெருமையடைந்தது. மேலை நாட்டவர்களிடையே சத்தயஜித்ரே இந்தியாவின் ஒரு குறியீடாக விளங்குகிறார்.









பதர்பஞ்சலியைத் திரைப்படமாக்குவதற்கு தான் தெரிவுசெய்தமைக்கான காரணம் அதில் இருந்த மனிதத்துவமும் கவித்துவமும் உண்மையும் தான் என்று கூறுகிறார் ரே. பதர்பஞ்சலியை முழுமையாக ரசிப்பதற்கு அதை பல தடவைகள் பார்க்க வேண்டும். அனேகமாக உலகின் தலை சிறந்த இயக்குனர்களின் படைப்புகள் எல்லாமே அப்படித்தான். ஒவ்வொரு முறையும் பார்க்கப் பார்க்க பலநுட்பமான விபரங்களை(Minute Details)அறியவரும் பொழுது மனதில் ஏற்படுகின்ற இனம்புரியாத ஒரு சந்தோஷம், பிரமிப்பு இவைகளை அனுபவிக்க வைப்பன ரேயின் திரைப்படங்கள். ஒரு கிராமத்து வாழ்க்கையை, பேதமையை, வக்கிரங்களை, அறியாமையை, அப்பாவித்தனத்தை, கிராமப்புற அழகை மிக விபரமாக ஏதோ நாம் அந்தக் கிராமத்திலே வாழ்ந்து அனுபவிப்பது போன்ற பிரமையை எப்படி ஒரு இயக்குனரால் அதுவும் தனது முதல் திரைப்படத்திலேயே ஏற்படுத்த முடிந்தது என்பது வியப்புக்குரிய விடயம். கல்கத்தாவில் ஒரு மத்தியதர வர்க்கக் குடும்பத்தில் பிறந்து இந்திய, மேலைத்தேய இலக்கியம், இசை முதலிய வற்றில் ஊறித் திழைத்த குடும்ப சூழ்நிலையில் வளர்ந்து விஞ்ஞானம், பொருளியல் ஆகியவற்றில் பட்டங்கள் பெற்று குடும்ப நண்பர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் சாந்திநிகேதனில் ஓவியம் பயின்று கல்கத்தாவில் ஒரு பிரிட்டிஷ் விளம்பரக் கம்பனியில் ஆர்ட் டிரக்டராகப் பணிபுரிந்த ரே, முதல்முதலில் இயக்கி சாதனைபடைத்த திரைப்படம் அவருக்கு சற்றும் பரிச்சயமில்லாத கிராமப் பின்னணியில் அமைந்தது என்பதை அறியவரும்போது வியப்படையாமல் இருக்க முடியாது. இதைப்பற்றி Film Makers on Film Making என்ற நூலில் அவரே கூறுகிறார்.

"While far from being an adventure in the physical sense, these explorations into the village nevertheless opened up a new and fascinating world. To one born and bred in the city, it had a new flavor, a new texture, and its values were different. It made you want to observe and probe, to catch the revealing details, the telling gestures, the particular turns of speech. You wanted to fathom the mysteries of atmosphere. Does it consist in the sight, or in the sounds? How to catch the subtle difference between dawn and dusk, or convey the grey humid stillness that precedes the first monsoon shower? Is sunlight in spring the same as sunlight in autumn?.."

இத்தகைய ஆழமான அவதானிப்பும் அணுகுமுறையும் தான் இரவது திரைப்படங்கள் ஓர் உயர்ந்த இலக்கிய அந்தஸ்தைப்பெறக் காரணமாக அமைந்தன. திரைப்படத்தின் உள்ளடகத்திலோ திரைக்கலையின் தொழில் நுட்பத்திலோ போதிய அறிவு, ஆற்றல், படைப்புத்திறன், கற்பனைவளம், அழகுணர்ச்சி என்பன இல்லாது வர்த்தகத் திரைப்படங்களை இயக்கும் இயக்குனர்களுக்கும் மேதாவி இயக்குனர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். சத்தியஜித்ரேயின் இந்த மேதாவிலாசம் அவரது முதல் திரைப்படத்திலேயே பிரதிபலிக்கிறது. இவ்வளவிற்கும் அத்திரைப்படத்தில் பணியாற்றியவர்களில் ஆர்ட் டைரக்டரைத் தவிர மற்றைய எவருமே முன் அனுபவம் அற்றவர்கள். எல்லோருக்குமே அது முதல் திரைப்படம். இருந்த போதிலும் அந்தத் திரைப்படம் ஏற்படுத்துகின்ற அழகுணர்வு அபரிமிததானது. ரேயின் ஓவியத்திறன் அவரது திரைப்படங்களின் ஒவ்வொரு ∴பிறேமிலும் பிரதிபலிக்கும். ∴பிறேம் கொம்பசிஷன் என்று சொல்வார்கள். ஒரு ∴பிறேமில் எது எது எந்த இடத்தில் எந்தக் கோணத்தில் எத்தகைய பருமனில் எவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும், அந்தக் காட்சியின் இயற்கைத் தன்மை கெடாமல் எவ்வாறு ஒளியூட்டப்பட வேண்டும், கதையின் காட்சியின் தன்மைக்கேற்ப எதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பன போன்ற பல விடயங்களைக் கருத்திற்கொண்டுதான் ஒரு ஷொட் அமைக்கப்படுகிறது. இதனைக் கற்றுக்கொள்ள விரும்புவோர் ரேயின் திரைப்படங்களை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

திரைப்படக்கலையில் உள்ளூரப் பெருவிருப்புக்கொண்டிருந்த ரேயை அவரது விளம்பர நிறுவனம் மேலதிக பயிற்சிக்காக இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்திருந்த தருணத்தில் அங்கு இத்தாலிய திரைப்பட மேதை விக்ரோறியோ டிசிக்காவின் 'த பைசிக்கிள் தீ∴வ்" என்ற திரைப்படத்தைப் பார்க்க நேர்ந்தது. இந்த திரைப்படத்தினால் மிகவும் கவரப்பட்ட ரே, தனது திரைப் படத்திலும் சாதாரணமானவர்களையே நடிக்கவைப்பது என்று தீர்மானித்தார். அதன்படி பதர்பஞ்சலியில் வரும் அந்த முதாட்டியைத் தவிர மற்றவர்கள் தொழில்முறை நடிகர்கள் அல்ல. அந்த மூதாட்டி அப்படத்தில் நடிக்கும்போது அவருக்கு எண்பது வயது. பழைய நாடக நடிகையான அவர் முப்பது வருடங்களுக்கு மேலாக நாடக உலகை விட்டு ஒதுங்கி கல்கத்தாவின் சிவப்புவிளக்குப் பகுதியில் ஓப்பியம் என்னும் போதைவஸ்துக்கு அடிமையாகி வாழ்ந்து வந்த வரை அழைத்து இப்படத்தில் நடக்கவைத்த ரே, நடிகர்களை இயக்குவதில் மிகத் திறமைவாய்ந்தவர் என விமர்சகர்களால் பாராட்டப்பட்டவர். எவரிடமிருந்தும் அவர்களின் இயல்பான வெளிப்பாட்டைக் கொண்டு வரக்கூடியவர். சிறுவர்களை மிக இயல்பாக நடமாடவிடுவார். அதற்கு பதர்பஞ்சலியில் வரும் சிறுவர்களே சான்று. இப்படி நடிகர்களை இயக்குவதில் வல்லவர்கள் என்று சர்வதேச அரங்கில் இவரும் ஜோன் ஹுஸ்ரன் என்ற திரைப்பட இயக்குனரும் பிரபலம்பெற்று விளங்கினார்கள்.

பதர்பஞ்சலி திரைப்படத் தயாரிப்பில் பங்கு பற்றிய அனைவரும் உத்தியோகத்தர்கள். வார இறுதி நாட்களில் மட்டும் படப்பிடிப்பை நடத்திக்கொண்டு போதிய பணமின்றி மிகுந்த சிரமத்தின் மத்தியில் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களில் இத்திரைப்படத்தைத் தயாரித்து முடித்தார்கள். மேற்குவங்க அரசின் உதவிபெற்றே இத்திரைப்படத்தைப் பூர்த்தியாக்க முடிந்தது. ஆனால் இத்திரைப் படம் அரச அதிகாரிகளுக்குத் திருப்பதியைத் தரவில்லையாம். ஒரு கிராமத்தில்

67ம் பக்கம் பார்க்க...

பூர்வீகமாக வாழ்ந்துவந்த ஒரு குடும்பம் வாழ்வதற்கு மிகவும் திண்டாடி, இறுதியில் மகளும் இறந்துவிட காசிக்குப் போய் வாழ்வது என்ற முடிவோடு கிராமத்தைவிட்டுப் போகிறார்கள். அரச அதிகாரிகள், அப்படி முடித்திருக்கக்கூடாது: அவர்கள் கிராமத்திலேயே இருந்து சமூக முன்னேற்றத் திட்டமொன்றில் இணைந்து முன்னேறுவதாகக் காட்டியிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்களாம். இது எள்ளளவும் கலையுணர்வோ யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் தன்மையோ அற்ற நம்மூர் வரட்டு விமர்சகர்களின் விமர்சனங்களை ஞாபகமூட்டுகிறதல்லவா?

திரைப்படத்தைப்பற்றி விமர்சனமாக எதையும் நான் இங்கு எழுதவில்லை. காரணம், விரிவாக எழுதக்கூடிய எத்தனையோ சிறு சிறு நுணுக்கமான விடயங்கள் இத்திரைப் படத்தில் இருக்கின்றன. கிராமத்து முதியவர் கள், ஆசிரியர், தாய் தகப்பன், மூதாட்டி, பக்கத்து வீட்டுப் பணக்காரப் பெண், குழந்தைகள், தாயின் நண்பி, கல்யாண வீடு, திருவிழா, மழை, ட்ரெயின், நாய், மாடு என்று சகலதைப் பற்றியுமே சிலாகித்து எழுதவேண்டிவரும். ஆனால், இத்திரைப்படம் தரும் கலையுணர்வை எழுத்தில் எழுதிவிட முடியாது. அதைப் பார்த்து, அனுபவித்து, ஒத்த ரசனையுள்ளவர்களுடன் அதைப்பற்றி விரிவாக அளவளாவுவதன் மூலம்தான் இத்திரைப்படம் தரும் முழுமையான உணர்வை அனுபவிக்க முடியும்.

பதர்பஞ்சலி மக்களிடையேயும் விமர்சகர்களிடையேயும் மிகுந்த வரவேற்பைப் பெற்றும் அது இந்தியாவைப்பற்றி குறைவான அபிப்பிராயத்தை வெளிநாட்டவரிடையே ஏற்படுத்திவிடும் என்று இந்தியத் திரைப்படத் தெரிவுக் குழுவினர் சிலர் கருதிய பொழுதிலும், இந்தியாவின் உத்தியோகபூர்வ திரைப்படமாக 1956ம் ஆண்டு பிரசித்திபெற்ற 'கான்" திரைப்பட விழாவிற்கு இத் திரைப்படம் அனுப்பப்பட்டது. முந்திய இந்தியத் திரைப்படங்களைப் பார்த்த அனுபவத்தின் காரணமாக விமர்சகர்கள் இத்திரைப் படத்திலும் அதிக அக்கறை காட்டவில்லை. ஆனால், அங்கு போயிருந்தவர்களிடம் இத்திரைப்படம் பெரும் பாராட்டைப் பெற்றதுடன் அந்த ஆண்டின் சிறந்த மானுட விவரணத்திரைப்படம் என்று பரிசு பெற்றது. (Human Documentary)

ஆனால், உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சுத் திரைப்பட இயக்குனர் ஃபிரான்கோ ட்ரூஃபோ (Francois Truffaut) இரண்டு றீல்கள் ஓடியதுமே, இது ஐரோப்பியத்தனப்படுத்தப்பட்ட மோசமான திரைப்படம் எனக்கூறி எழுந்து வெளியே போய்விட்டாராம். ரேயின் திரைப்படங்களை யுனெஸ்கோ திரைப்படங்கள் என்று கேலிசெய்யும் விமர்சகர்களும் இருந்தார்கள். பதர்பஞ்சலி திரைப்படத்தைப் பார்த்த நியூயோர்க் ரைம்ஸின் பிரசித்தி பெற்ற சினிமா விமர்சகர் பொஸ்லே க்றவுத்தர் (Bosley Growther) இது ஒரு சிறு பிள்ளைத்தனமான திரைப்படம். ஹொலிவூட்டில் இது Rough Cut என்று சொல்லப்படுகின்ற முதலாவது கட்ட எடிற்றிங்கையே தாண்டியிருக்கமுடியாது என்று விமர்சித்தார். இதைப்பற்றி ரேயிடம் வினவியபோது 'க்றவுத்தரின் விமர்சனத்தை முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. திரைக்கலையின் தொழில் நுணுக்கங்களைப் பொறுத்த வரையில் பல பிழைகள் உள்ளன (Judged on the Level of Craftsmanship There was much that was Wrong with my film) என்று ஒப்புக்கொண்டார். ஆனால், இந்த விமர்சனத் தளம் வேறு. இதை வைத்துக்கொண்டு, அரைகுறைத்தனமான படைப்புக்களைச் செய்யும் திரைப்பட இயக்குனர்கள் தம்மை நியாயப்படுத்திவிட முடியாது.

சினிமாக் கலையில் தீவிர ஆர்வமுள்ளவர்கள் பதர்பஞ்சலி திரைப்படத்தையும் ரேயின் மற்றைய திரைப்படங்களையும் கட்டாயம் பார்க்க வேண்டும்.

■ ■ ■

**MISSISSAUGA, BRAMPTON, ETOBICOKE**

வாழ் தமிழ் மக்களுக்காக

**THE LAW OFFICE OF**

# VANEE HARICHANDRAN

**Barrister, Solicitor & Notary Public**
**LL.B., LL.M., B.Ec.**

**தமிழ் சட்டத்தரணி**

**Specializing in Corporate/Commercial Law, Business Law**
**Legal Practitioner in Canada & Australia**

**Offering Quality Legal Service in:**

- Corporate and Commercial Law
- Real Estate Law
- Immigration Law
- Estate Planning (e.g.Wills, Power of Attorney)
- Family Law
- Accident Benefits
- Statutory Declarations & Affidavits
- Commissioning & Notarization



**வீடு, காணி, வர்த்தகச் சட்ட ஆலோசனைகள்**

**Ph: 905 270 5454**
**Toll Free: 1 877 826 3301**

**Fax: 905 270 7305**
700 Dundas Street East, Suite 2, 2nd floor:
(corner of Dundas & Cawthra)
Mississauga, Ontario, L4Y 3Y5
In Scarborough by appointment

**Email: vanee@vaneelaw.com** **Visit www.vaneelaw.com**



**Computek College**
**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

*Good news !*
**for Real Estate Agents**

**Computek College is approved as a continuing education provider**

**by the**
**REAL ESTATE COUNCIL OF ONTARIO ( RECO)**

**for the following Courses**

Windows XP
Ms Excel
Ms Word
Ms Access
Ms Power Point

Study at
Computek College
&
Earn your credits

for details :
**416-321-9911**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
(N/W Corner, Above Library)
**Tel : 416-285-9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

# இந்தக் குருசேத்திரத்தில் வெல்லப்போவது யார்?

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -



ஒரு 45 – 55 வயதை அடைந்த ஆண்களுக்கு வீட்டில் ஒரு சிக்கல் ஏற்படுவதுண்டு. பிள்ளைகள் சொல்லுக் கேளாமல் காரைக் கொண்டு போய்விடுவார்கள். மனைவிமார் சமைத்துப் போட்டுவிட்டு கோவில் குளம் அல்லது நண்பர்கள் என்று கும்மாளமடிக்கப் போய்விடுவார்கள். இவர்களை தனிமையும், கௌரவக் குறைவால் வந்த ஒரு தாழ்வு மனப்பான்மையும் வாட்டும். இதை Middle Age Crisis என்பார்கள்.

இது இப்படி இருக்க கணனிகளில் உபயோகம் உங்களின் மேசையில் இருந்து இணையத்தளத்திற்கு சென்றுகொண்டிருக்கிறது. இதனால் கணனி உலகின்முடிசூடா மன்னனாக இருந்த Microsoftக்கு தன் இடத்தைவிட்டுக் கொடுக்க மனமில்லை. புதிதாக விரைவாக மாறிவரும் இணையத் தளத்தின் மேலாதிக்கத்தை Google நிறுவனம் அடைந்துள்ளது.

இதனால் Microsoft Yahoo நிறுவனத்தை வாங்க 44.5 Billion doller கொடுத்து வாங்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளது. இந்த மாற்று விவகாரம் வெற்றிபெற்றால் கணனி இணையத்தளத் துறையில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும். வெற்றி பெறாவிடிலும் மேற்சொன்ன மூன்று நிறுவனங்களினதும் நிலையில் பாரிய மாற்றதத்தைக் கொண்டுவரும்.

இணையத்தளத்தில் யாவருக்கும் தெரிந்த பெயராக Yahoo இருந்தபோதும் அந்தப் பெயரை வருமானமாக மாற்ற முடியாத நிலையும், பாரிய Microsoft இணையத்தளத் துறையில் போட்டியிட முடியாத நிலையும், இணையத்தளத்தில் Google பெற்றிருந்த முதன்மை நிலையும் தெளிவாக இருக்கிறது.

Microsoft ஒரு பாரிய நிறுவனம், அதனுடைய பெறுமானம் 270 Billim Dollars; ஆகும். Googleஇன் பெறுமானம் 160 Billion Dollars ஆகும். ஆனால் Microsoft மேலாதிக்கம் செலுத்திவரும் கணனித்துறையில் இனிவரும் காலங்களில் வளர்ச்சி வீதம் குறைவாகும்.

ஆனால் Googleன் நிலை அப்படியல்ல. இணையத்தள தேடல் சந்தையில் விளம்பரங்களின் வருமானம் அதிகரித்து செல்வது Microsoft உள்பட பலரையும் அதிரவைத்துள்ளது. இந்தச் சந்தையில் Google இன் பங்கு 62% வீதம் ஆகும்.

இணையத்தளத்தில் மென்பொருட்கள் (Software) விளம்பர்ஙகளுடன் இணைக்கப்பட்டு விநியோகிக்கப்படத் தொடங்கினால் Microsoftஇன் சந்தை மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்படும். தற்போது Google இப்படி சிலசேவைகளை வழங்கத் தொடங்கியுள்ளது. இந்த சேவைகளின் மூலம் Microsoft இன் சாம்ராச்சியத்துள் Google ஊடுருவல் செய்துள்ளது. இதனைத் தடுக்க Microsoft நடத்திய முயற்சிகள் பெரிய பலனை அளிக்கவில்லை. Microsoftஇன் இணையத்தளத் தேடல் சந்தை 2.9%ஆகும். ஆனால் Yahoo 2வது இடத்தில் 16% சந்தைப்பங்குடன் விளங்குகிறது.

Microsoftஉம் Yahooவும் 2006இல் இணைவதைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தன. ஆனால் அந்த நேரத்தில் Yahoo Panama என்றொரு புதிய மென்பொருளை (Software) பயன்படுத்த விருந்தது. அதன் மூலம் சந்தையில் ஒரு பெரும் பகுதியைப் பிடித்து விடலாம் என நம்பிக்கொண்டு இருந்தது. அதனால் Google உடன் போட்டியிட முடியும் என்றும் நம்பியது.

ஆனால் Yahooவின் நினைவுக்கு அமைய Panama பெரும் வெற்றியைத் தரவில்லை. அதனால் வருமானம் குறையவே Yahoo வின் பங்குச்சந்தை விலை Jan. 30இல் அடிமட்டத்தைத் தொட்டது.

Microsoft இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்துக் கொண்டது. இந்தத் தருணத்தில் தனது 44.6 Billion விலைக் கொடுத்து Yahooவை வாங்கும் முயற்சியை மேற்கொண்டது.

Yahoo இதை முழுமையாக எதிர்பார்க்காத நிலையில் Microsoftஇனால் விழுங்கப்பட விரும்பவில்லை. அதனால் Google, News Corp போன்ற நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. News Corp என்பது Wall Street Journalஇன் உரிமையாளரான ஒரு பாரிய செய்தி நிறுவனம்.

இந்த நிறுவனங்களின் பேச்சு வார்த்தைகள் எப்படிப் போனாலும் Microsoft கொடுக்க இருந்த விலை மறுக்கப்பட முடியாத ஒன்று. அதற்கு இணையான ஒரு விலையை மற்ற நிறுவனங்கள் கொடுக்க முடியுமா என்பது ஐயமே.

இப்படி நிலைவரம் இருந்தால் Microsoft அதிகமாக தனது பரிசைப் பெற்றுக் கொள்ளும்.



இந்தப் புதிய இணைவு எப்படிச் சந்தையைப் பாதிக்கும் என்று பார்த்தால், Instant Message, Weh based email என்ற சந்தைகளில் Microsoft – Yahoo ஆளுமையைச் செலுத்தும். ஆனால் இந்தச் சந்தையால் வருமானம் குறைவு. உண்மையில் வருமா-னம் இருப்பது இணையத்தள தேடலிலும் அங்குள்ள விளம்பர சந்தையிலுமாகும். இங்கு Miscorsoft – Yahooவை விட Google முன்னணியிலேயே இருக்கும்.

அத்துடன் Google அண்மையில் வாங்கிய Double Click என்ற நிறுவனத்துடன் இணைவதன் மூலம் இந்த தேடல் சந்தையில் அதனுடைய மேலாதிக்கம் உறுதி செய்யப்படும். Microsoftஇனுடைய கணனி மேலாதிக்கம் இணையத்தளத்தை கையகப்படுத்த இதுவரை உதவவில்லை, இனியும் உதவாது. அத்துடன் Moicrosoft இப்படி ஒரு பெரியநிறுவனத்தை வாங்கியதில்லை. ஆகவே வாங்கப்பட்ட நிறுவனங்களை தமது செயல்பாடுகளுடன் இணைப்பதற்கு பாரிய தடங்கல்களை எதிர்பார்க்க நேரிடும். இது எல்லாம் இப்படி இருக்க தொழில் ரீதியாக பெரும் ஆற்றல் கொண்ட Microsoft, Google மோதலின் போது வெற்றி யாருக்கு என்று நுகர்வோர்தான் முடிவு செய்வார்கள். இனி முதலில் பேசிய Middle Life Crisis பற்றி கதைத்துவிட்டு கட்டுரையை முடிப்போம். முதலாளித்துவத்தின் ஒரு பாரிய சாதனையாகக் கருதப்படும் Microsoft 1986 March 13ம் திகதி பங்குச் சந்தைக்கு வந்த போது விலை 0.09 சதமாகும். அன்று யாராவது ஒரு 10,000 Dollarஐ Microsoftல் முதலிட்டிருந்தால் அந்தப் பணம் இப்போது 3,000,000 Dollarக்கு மேலாக மாறியிருக்கும்.

ஆனால் ஆரம்பத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல மடங்காக மாறிவந்த Microsoftஇன் பங்கின் விலை கடந்த சில ஆண்டுகளாக பெரிய மாற்றமேதும் இன்றி 25 தொடக்கம் 35 வரையிலான இடைவெளிக்குள்ளேயே மாறிக்கொண்டிருக்கிறது. இந்தப் பங்கின் விலையில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் ஏதாவது செய்தாக வேண்டும். அதனால்தான் இந்த Yahooவை வாங்கும் முயற்சி.


இந்த Middle Age Crisis என்பது இயற்கையின் சட்டம். இது மனித இயற்கைக்கு பொருந்துவது போல மனிதச் செயற்பாடுகளான அரசியல், வரத்தகம் போன்றனவற்றுக்குப் பொருந்தும். சிலநேரத்தில் இந்த பிரச்சினை ஒரு விவாகரத்து ஒரு புது கலியாணம் எனவும் முடியலாம்.

இயற்கையால் விளைந்த இந்த பிரச்சினையிலிருந்து தப்ப Microsoft எடுக்கும் முயற்சி வெற்றியளிக்குமா என காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ■ ■ ■

கூர்

கனடா நவீன கலை, இலக்கியத் தொகுப்பு
வெளிவரவிருக்கிறது.
தெகுப்பிற்கான சிறுகதை, கவிதை, விமர்சனக் கட்டுரை, நூல் மதிப்புரை, மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் வரவேர்க்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு 416 458 9426, 416 551 0087, 416 500 9016.

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்க்கவும் குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும் அழையுங்கள்
Ravi. Paramu
Broker
Direct: 416-262-4176
Bus: 416-321-6969
HomeLife GTA Realty Inc. Real Estate Brokerage
1711 Mc Cowan Road, Suite #206, Scarborough.




இசைத்தட்டு வெளியீட்டு விழா
from the creators of 'சதி'
அப்பா
சங்கமம்
Tuxedo Sangamam Banquet Hall
42 Tuxedo Court.
Scarborough.
28 March 2008
6:30 PM
Friday
Tel: 647-239-7284, 647-299-7404, 647-204-0251


PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE................
One Stop for
TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS
2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.
புதிய அறிமுகம்
On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards & Promotions Ltd
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5


The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு
மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்
சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL
80 Nasdane Rd Unit C-59 416-898 4846

# புலம் பெயர்வும் சடங்குகளின் ஆடம்பரமும்



பார்வதி கந்தசாமி



சடங்குகள் மனிதர்களால் ஆக்கப்பட்டவை. உலகில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரிடமும் சடங்குகள் வழக்கில் உள்ளன. இனத்திற்கு இனம், இடத்திற்கு இடம் சடங்குகள் வேறுபட்டவையாக உள்ளன. யூதர் கள் மிக நெருங்கியவர்கள் இறந்ததும் 7 நாட்களுக்குச் "சிவ் இருத்தல்" எனத் தங்க ளுடன் கூட இருப்போர் அதிதிகள் இருக்கும் ஆசனத்தை விட நிலத்துக்கு அண்மை யதாக இருக்கும் பதிந்த ஆசனத்தில் மெத்தையை நீக்கி இருப்பர் மெத்தையின்றிப் படுப்பர். இந்தச் செயல் தமிழர்களிடம் வேறுவிதமாக இருக்கின்றது. இறந்து எட்டுநாள் வரையும் கொள்ளி வைத்தவர் வீட்டிலிருந்து வெளியேறாமல் இருப்பது மரபு. எட்டாம் நாள் விருந்துக் கொண்டாட்டம் நிகழ்த்துவார்கள். இன்று, குறிப்பாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் இந்த மரபு ஒரே மாதிரியாகப் பேணப்படுவதில்லை. இந்தியா வில் இன்று 16ம் நாளிலேயே 'துடக்குக்' கழிக்கும் மரபைப் பிராமணர் அல்லாதார் மத்தியிலும் காண்கின்றோம்.

பல சடங்குகள் பண்டைக் காலத்தில் பெண்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தன. இன்று பல்வேறு சடங்குகளுக்கு புலம் பெயர்ந்த நாட்டிலே புதிய பரிணாமம் கொடுக்கப் பட்டுள்ளதை அவதானிக்கலாம். சடங்குகள் சிறியவையாகச் செய்யப்பட டவை இன்று பெரியவையாகவும், பல புதிய நிகழ்த்துதல்களை உள்ளடக்கியவையாகவும் மாறுவதைக் காணலாம். புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர் நிகழ்த்தும் சடங்குகளில் முக்கியமான திருப்பங்களைக் கண்டுநிற்பது சாமத்தியச் சடங்கு. இதனைப் பூப்பூ நீராட்டு, பூப்புனித நீராட்டு, ருதுசோபனம் எனவும் கூறப்படுகின்றது.

'பெண்ணாகப் பிறந்த மாயம்' என சித்தர் ஒருவரும் கூறும் பெண், மனித சமுதாய வளர்ச்சியில் முக்கியமானவளாகக் கருதப்பட்டவள். மனித பரிணாம வளர்ச்சியில் இறப்பு நிச்சயமானது என உணரப்பட்டு மனிதக் கூட்டம் பெண்ணின் மனித உயிரை மதித்தது. குழந்தைப் பெறும் அவளது உடலை அபூர்வ சக்தி உடையதாக மதித்தனர். பிறப்பைக் கொண்டாடினர். இறப்பை யும் கொண்டாடினர். பூப்பெய்துவது அவளது பெண்மைப் படிநிலைகளில் முழுமை பெறுவதான நிலையாகப் போற்றப்பட்டது உயிர் ஒன்றை உற்பத்தியாக்கும் அதிக சக்தி வாய்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் படிநிலையாகக் கொள்ளப்பட்டது.

தென்னிந்தியாவில் சில சமூகங்களிடையே பூப்பூ நீராட்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப் படும். தாய்மாமன் முறையானவர்கள் பூப்படைந்த பெண்ணுக்கு புடவை கொடுத்து, மாலை அணிவித்து, சாப்பாடு போட்டு மகிழ்வார்கள். இதனைப் பதினாறாம் நாளில் செய்வார்கள். 'பெரிய சடங்கு, நலங்கு, பூப்புனித நீராட்டு, மஞ்சள் நீராட்டு' என்றும் '16ம் நாள் தண்ணி ஊத்து' என்றும் அழைக்கப்படுகிறது. ஈழத்தவர் பருவமெய் திய சில நாட்களின் பின் நல்ல சகுன நேரம் பார்த்து 'தண்ணி வார்ப்பு' நடை பெறும். தண்ணீர்வார்ப்பு நெருங்கிய உறவுகளுடன் நிகழும். தமிழகத்தில் சில கிராமங்களில் தண்ணீர் தலையில் ஊற்றும் வரை பாடுவார்கள்.

*எண்ணை தலை முழுகி பரங்கிளி*
*எலந்தப் பொட்டும் இட்டு*
*வண்ணக் கவிபாடி பரங்கிளி*
*வாரங்கப்பலிலே*
*ஏழுகட்டுக் கரும்பு பரங்கிளி*

71ம் பக்கம் பார்க்க...



70ம் பக்கத் தொடர்ச்சி...

*ஏழாயிரமாம்*
*அந்தக் காட்டுக் கரும்பே பரங்கிளி*
*ஏத்தும் கப்பலிலே"*
*"வந்திரங்க வந்திரங்க சிறு மாமனிட்ட*
*பந்தலிலே*
*பந்த பளபளக்க பந்தக்கால் சோதி மின்ன*
*மாமனிட்ட பந்தலுக்கே ராஜாக்கவாராக*
*காலமடக்கம்மா*
*கையெடுத்தே கும்பிடம்மா"*

என வாழ்த்துமானம் பாடுவார்கள். சொந்தங்கள் உறவாடும் நிகழ்வாக இருக்கும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் சடங்குகள் பல ரகங்கள். புதிய விதிகள் ஆக்கப்படுகின்றன. நாளாந்தம் சடங்குகளில் இடம்பெறும் நிகழ்வுகளின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டு செல்கின்றது. சடங்கு நிகழ்வு மூலம் பணம் சம்பாதிக்கும் இலாபநோக்கில் மண்டபங்களை ஏலத்தில் வாடகைக்குப் பெற்றிருப்பவர்கள் பணம் சேகரிக்கும் புதிய உத்திகளைக் கையாண்டு வருவதை அவதானிக் கலாம்.

சுமங்கலிகளாக இருக்க வேண்டுமென்று சுடர்விடும் விளக்குகளைக் கோவில்களிலிருந்து காற்றில் அணைந்து விடாதவாறு வீடுகளுக்கு எடுத்துச் செல்வது சிலரிடம் இருப்பதை அவதானிக்கலாம். சுமங்கலிப் பூசையை ஏற்படுத்தி நிகழ்த்தி வைக்கும் பூசாரியார் ஏன் ஆண்களுக்கு அத்தகைய நிகழ்வைச் செய்வதில்லை? பெண்ணின் வாழ்வில், ஆளுமையில், எண்ணத்தில் சுமங்கலி என்ற பதம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. சுமங்கலிகள் விளக்குகள் ஏந்திச் செல்வதுபோல புலம்பெயர்ந்த நாட்டுப் பூப்பு நீராட்டு வைபவங்களிலே இளம் பெண்கள் விளக்குகளை வரிசையாக நின்று ஏந்திச் செல்கின்றனர். பல வைபவங்களில் இப்பெண்கள் எல்லோரும் தோழி - உடைகளாக ஒரேவிதமான அலங்கார உடைகளும் அணிவிக்கின்றனர். வைபவத்தில் மண்பட உரிமையாளர் கிழக்கு ஐரோப்பியப் பெண்களைச் சேலை அணியவைத்து, பூவாணம் கொளுத்துவிப்பர். அல்லது அகல் விளக்குகள் ஏந்தும் கல்கித் தொடர்கதைகளில் வரும் பாவைகள் போல கைவிளக்குகள் ஏந்தி வரிசையில் நிற்பர். பெண்ணுக்கு மாறி மாறி உடையலங்காரம் செய்வதும், கேக் வெட்ட வைப்பதும், ஊஞ்சலில் இருத்தி ஆட்டுவதும் என நிகழ்வுகள் ஒருபுறம். குதிரையில் ஏற்றி மண்டபத்தில் வலம் வந்து இறக்குவது, ஹெலிகொப்டரில் பூச்சொரிவது, ஹெலிகொப்டரில் வந்து பெண் மண்டபத்தருகே இறங்குவதும் நிகழத் தொடங்கிவிட்டது.

மண்டபங்கள் குறிப்பிட்ட நிகழ்வுப் பொதிகளை வைத்திருப்பர். மக்டொனால்ட், பேகர் கிங் போன்ற விரை உணவுக் கூடங்களில் விற்பனைத் தந்திரமாக கொம்போ (Combo), ஒன்றில் இரண்டைப் பெறுங்கள் (Two in one), ஒன்றை வாங்கி இன்னொன்றை இனாமாகப் பெறுங்கள் (Buy one, get one free) போன்றவற்றைப் பிரசுரிக்கின்றன. அதேபோன்ற விற்பனைத் தந்திரங்களை நம்மவர் மண்டபங்களில் கையாளுகின்றனர். சில நிகழ்வுகளைத் தாமாகவே மக்கள் செய்ய முடியாதவாறு மண்டபத் தரகர்களின் 'பக்கேஜ்' (Package) இருக்கும். வீடியோ உங்களிடம் இருந்தாலும் பணம் கழிக்கப்பட மாட்டாது. 10,000 முதல் நூறாயிரம் டொலர்கள் வரை செலவு செய்து ருதுசோபனம் நடக்கின்றது. ஆனால் அந்த வயதுக் குழந்தைகள் வாழ்வில் ஒளிவீச பல்கலைக்கழகங்களிலோ, நிறுவனங்களிலோ சேர்ந்து பயனுறு திட்டங்களில் சேர வாய்ப்பு உண்டு. அத்தகைய வாய்ப்புக்களில் தமிழ் குழந்தைகள் பங்கு கொள்வதைக் காணமுடியாது. அவைபற்றிப் பெற்றோர் கரிசனை காட்டுவதும் அபூர்வம்.

'மண்வாசனை' என்ற படத்தில் பாரதிராஜா தென்னிந்தியக் கிராமத்துப் பூப்பெய்தும் சடங்குச் சிக்கல்களைக் காட்டியுள்ளார். எனினும் 'பெண்' என்பவள் ஓர் 'அலங்காரப் பொருள்' என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதாகப் புலம்பெயர்ந்த நாட்டுப் பூப்பூவிழா ஒழுங்குகள் காட்டுகின்றன. ஒரு பெண்ணின் உடற் கூற்றியலில் ஏற்படும் இயல்பான மாற்றங்கள் பருவமடைதல் ஆகின்றது. பட்டாம் பூச்சிகளாகச் சுற்றித் திரிந்த இப்பெண்ணின் உடலியல் மாற்றம் ஏற்பட்டதும் உளவியலில் பெரும்பாதிப்பை ஏற்படுத்த வைக்கிறது சமூகம். அவளைச் சூழ உள்ள சமூகம் தீண்டாமை பற்றியும், பெண்ணென்றால் எப்படி ஒழுக வேண்டும், எப்படியான வேலிகளை அவளைச் சுற்றி அடைக்க வேண்டும் எனக் கவனித்துக் கொள்கின்றது. கழுத்தில் சங்கிலி போட்டு அழைத்துச் செல்லப்படும் நாய்க்குக் கூட குரைக்கும் உரிமையுண்டு. ஆனால் பூப்படைந்த பெண்ணுக்கு அந்த உரிமையும் மறுக்கப் படுகின்றது. அவள் மீதான சமூகத்தின்திணிப்பு சமூகப் பெறுமதிகள் சார்ந்தவையாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் பூப்பு நீராட்டு ஆடம்பரம் என்பது பெண்ணை மீண்டும், அதிகாரங்களுக்கு உட்பட்ட பெண் என்ற அடிமை நிலையை அதிகாரங்களுக்கு மீள் உருவாக்கும் சடங்குகளாகும்.

■ ■ ■

பிளமிங்டன் தமிழ்க் கல்வி நிலையம்
பெருமையுடன் வழங்கும்

## சிறுவர்தினவிழா- 2008

சிறுவர்களின் படைப்புகளாக
நடனம், நாடகம், இன்னிசைக் கச்சேரி,
மெல்லிசை விருந்து, சொற்பொழிவு, பட்டிமன்றம் ஆகிய சகல
நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

அத்துடன் கடந்த மார்கழி 15ம் திகதி பாடசாலையால் நடாத்தப்பட்ட தமிழ்ச்சிறார்களுக்கான பொது அறிவுப்போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் நடைபெற உள்ளது. பங்குபற்றிய சிறார்கள் அனைவரும் பரிசில் வழங்கிச் சிறப்பிக்கப்பட உள்ளனர். அன்பர்கள் ஆதரவாளர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

முத்தமிழ் விருந்தை உங்களுக்காக வழங்கக் காத்திருக்கிறார்கள்
சின்னஞ்சிறு குழந்தைகள்.

**இடம்:- 2327 சென்கொலம்பியா தேவாலய மண்டபம்**
**காலம்:- மார்ச்மாதம் 9ம் திகதி மாலை 5மணி**

பிளமிங்டன் தமிழ்க் கல்வி நிலையம்.

416 318 3770

LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS
"Dedicated and determined to provide the best results for your personal injury claims"

**30 மில்லியன் டொலர்கள்**
2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்




- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?

Rocky Lofranco
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
**LOFRANCO CHAGPAR**
Personal Injury Lawyers
வாகன விபத்து கோரிக்கைகளில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
**இலங்கதாஸ் பத்மநாதன்**

TORONTO OFFICE
Yonge / Norton Centre
5255 Yonge Street,
Suite1300 North York

MISSISSAUGA OFFICE
Dundas / Hurontario
257 Dundas St. East,
Unit 1

416 223-8333 905 275-8806

FREEE CONSULTATION
LANKATHAS PATHMANATHAN
**416 774-8122**
DIRECT LINE
TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

# நலம் நாடுவதும் அதுவே

**உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு
என்னை அழையுங்கள்**



Finch & Neilson
$ 208,900



Mclevin & Sewells
$ 218,000



Neilsen & Sheppard
$ 229,000



**Morningside & Shep.**
**$ 315,000**



Mccowan & Denison
$ 429,000



Shepp.& Port Union
$ 629,786

**Also Commercial & Investment Properties**



Kathir S Kathirgamanathan P. Eng.
**www. kathirsubramaniam.com**
Email: kathirs@rogers.com
*Call me for a change*
Sales Representative

**24 Hrs 416 856 6900**
**HomeLife / GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Road, #206,Toronto, ON, M1S 3Y3
Tel: 416-321 6969 Fax: 416 321 6963
Independently owned and operated

# வைரசை விரட்டுவோம்!



சிவவதனி பிரபாகரன்

‘தடிமனும், காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்’ என்பார்கள்.

பனிக்காலங்களில் தடிமன் காய்ச்சல் என்பனவற்றால் பரிதவிக்கவேண்டியிருக்கின்றது. சிலருக்கு தடிமன், காய்ச்சல் வருவதும் தெரியாது; சுகமாவதும் தெரியாது. ஆனாலும் சிலருக்கோ உயிர் பிரியும் வலியையும் துன்பத்தையும் கொடுத்து விடும். ‘எப்படியாவது குணப்படுத்திவிட மாட்டார்களா’ என்று வைத்தியரிடம் மாறிமாறி ஓட நேரிடும்.

உண்மையில், தடிமன் காய்ச்சலைக் குணப்படுத்த முடியாது. வராமல் தடுக்க முடியும். ஆனால், தடிமன் காய்ச்சலுக்குக் காரணமான வைரஸ் உங்களைப் பீடித்துவிட்டால் உங்களுக்கு இருக்கும் ஒரே தெரிவு - வைரசின் தாக்கத்தினால் வெளிப்படும் நோய் அறிகுறிகளின் தொல்லையிலிருந்து விடுபடும் வழிமுறைகளை நாடுவதுதான்.

‘பனிக்குள்ள புரண்டுட்டு வாறான், மழையில நனைஞ்சிட்டு வாறான், காய்ச்சல் வரப்போகுது’ என தம் பிள்ளைகளைத் திட்டும் அம்மாக்களைப் பார்க்கிறோம். உண்மையில் குளிர் பிடித்து காய்ச்சல் வருகிறது என்னும் எங்களின் பரவலான கருத்து தவறானது. தடிமன், காய்ச்சலை உருவாக்கும் வைரசிற்கு குளிர் பிடித்தமான சூழலாகிறது என்பதுவே உண்மையாகும்.

தடிமன் என்பது சுவாசக் குழாயில் ஏற்படும் வைரசு தொற்றால் ஏற்படுகின்றது. இதன் விளைவாக மூக்கடைப்பு, மூக்கில் நீர்வடிதல், தொண்டை அழற்சி, இருமல் போன்றன உருவாகும். ஆரம்பத்தில் மூக்கு, தொண்டை என நோய் குறிகள் காட்டும். உடல் சற்று சூடாக இருக்க நேரிட்டாலும் காய்ச்சல் என்பது வைரசு தொற்றின் குணம் குறியல்ல. வைரசின் தாக்கத்தால் ஏற்பட்ட நோய்க் குறிகள் பொதுவாக 4 –10 நாட்களில் நீங்கிவிடும்.

சிலர் தடிமன் தொல்லை வந்தவுடனேயே வைத்தியரிடம் ஓடி தாமே வாய்விட்டு அன்ரிபயோட்டிக் தாருங்கள் எனக் கேட்கின்ற குட்டி வைத்தியர்களாகி விடுவர். தடிமன் பக்றீரியா நுண்கிருமியால் உண்டாகும் நோயல்ல அன்ரிபயோட்டிக் எடுத்து குணமாக்குவதற்கு என்பதை எம்மில் பலர் அறிவதில்லை. தேவையின்றி அன்ரிபயோடடிக் எடுப்பதனால், சாதாரண வைரசு தொற்றால் உருவாகி சில நாட்களில் மறையவல்ல தடிமனும் antibiotic – resistant super-buys எனப்படும் பக்ரீறியாக்களை (மருந்துக்கு பழக்கப்பட்ட, அழிக்க முடியாத) எம் உடல் வளர்க்க காரணமாகிவிடுவதால் தேவையற்ற நோய்களுக்கு ஆளாக நேரிடுகிறோம்.

“கனியிருக்க காய் எதற்கு?” என்று பழமொழி உண்டு. எம் உடலில் இயற்கையாகவே நோயை எதிர்த்துப் போரிடவல்ல போர்வீரர்கள் உள்ளனர். நோய் எதிர்ப்பு சக்தி எனப்படும் இயற்கையான எம் immune system பொதுவான நோய்த் தொற்றுகளை எதிர்த்து போரிட்டு எம்மைப் பாதுகாக்கின்றது.
எமது அன்றாட உணவில் விற்றமின்கள், மினரல்கள் என்பவற்றைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் பச்சை உணவு வகையை அன்றாடம் உட்கொள்வோமேயானால் எமது நோய் எதிர்ப்பு சக்தியானது வலிமை பெற்று, தடிமன் போன்ற நோய்களிலிருந்து இயற்கையாகவே எம்மைப் பாதுகாக்க இயலுமாகின்றது.

தொண்டைக் கரகரப்பு ஆரம்பிக்கையிலேயே உப்புத் தண்ணீரில் அல்லது 3% Hydrogen peroxideஇனால் வாய் கொப்புளித்து (விழுங்கக்கூடாது) வந்தால் தடிமனை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தலாம். தொண்டை நோவென ஆரம்பிக்கும் வைரஸின் தாக்கத்தின் ஆரம்ப தொற்று நிலையில் வேப்பெண்ணை தடவினால் குணம் பெறலாம் என நம் நாட்டுவைத்தியம் கூறுவதன் பலனை உணர்ந்தவகையில் அதையும் இங்கு குறிப்



பிட விரும்புகிறேன். தடிமன் தொற்று ஏற்பட்ட நாட்களில் விற்றமின் சீ யினை உட்கொள்ளலை அதிகரிப்பினும் எம் நோய் எதிர்ப்பு சக்தியை வலுவூட்டும் ஒரு யுக்தியாகத் திகழ்கிறது.

மூக்கடைப்பினால் துன்பப்படுபவர்கள் எலுமிச்சை, தோடை இலை அவித்த நீரில் அல்லது விக்ஸ், யூகலிப்டஸ் எண்ணெய் ஆகியன சேர்ந்த கொதிநீரில் ஒரு துணியால் தலையை மூடி ஆவி பிடிப்பதன் மூலம் சுகம் பெறமுடியும். இது தவிரவும் saline நீரில் மூக்கைக் கழுவுவதும் ஒரு எளிய மூக்கடைப்பை நீக்கும் முறையாக பின்பற்றப்பட்டு வருகின்றது.

சாதாரண தடிமன் வேறு தடிமன் போன்றே வந்து ஆட்டிப்படைக்கும். காய்ச்சல் வேறாகும்.

காய்ச்சல் வரும்போதும் தொண்டைக் கரகரப்பு, அடைப்ப, மூக்கில் நீர் வடிதல், தலைவலி, வறட்டு இருமல், உடற்தசை உளைவு போன்ற நோய்க்குறிகள் காட்டும். காய்ச்சலை (Flu) உருவாக்குவதும் ஒரு வகை (influenza) வைரசுதான்.

வைரஸ் தடிமனைப் போலன்றி, flu வரும்போது காய்ச்சல் (உடல் வெப்பம்) அதிகரிக்கின்றது. உடற்றசைகளில் வலிதோன்றுவதும், தலை பாரமாக இருந்து வலிப்பதும் காய்ச்சலுக்கான நோய் அறிகுறிகளாக இருக்கும். சிலருக்கு வயிற்றுப் புரட்டல், வாந்தி என்பனவும் இருக்கும். திடீரென்று நோய்க் குறி காட்டும். ஆரோக்கியமானவர்களுக்கு 3நாட்களுக்குள் நோய்க்குறி நீங்கிவிடும். சிலருக்கு 10 நாட்கள் வரையும் நீடிக்கலாம். நோய் நீங்கினாலும் நோயின் பாதிப்பு நீங்காததுபோல் இனம் புரியாத களைப்பு சில நாட்களுக்கு நீடிக் கும். பிறந்த குழந்தைகள், தள்ளாத முதி-யோர், இதய நோயுள்ளவர்கள், சுவாச நரம்பு நோய்கள் உள்ளவர்களுக்கு காய்ச் சல் கூட உயிர் பறிக்கும் எமனாக மாறும் அபாயமாவதும் உண்டு. எனவே, இங்ஙனம் உடற் பலவீனமானவர்கள் காய்ச்சலைக் குணப்படுத்த மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியமாகும்.
வைரசுகளில் அநேகமானவை தொடுகையால் பரவுபவை. அடிக்கடி கையைக் கழுவுவது நோய் வராமல் தடுக்க உதவும் தடுப்பு முறை வழக்கமாகும். எமது பாட்டி வைத்திய முறையில் மல்லிக் குடிநீர் குடிப்பது காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் ஒரு முறையாகும்.

குழந்தைகளுக்கு காய்ச்சல் கூடினால் பொதுவாக தாய்மாருக்கு மனம் பதறும். காய்ச்சலால் அதிகரிக்கும் உடல் வெப்பம், உண்மையில் ஒரு நோய்க் குறியல்ல. உடலைத் தாக்கிய பக்ரீறியாவை எம் உடலின் எதிர்ப்புச்சக்தியானது எதிர்த்துப் போரிடுவதால் அதிகரிக்கும் வெப்பமே காய்ச்சல் வெப்பநிலை அதிகரிப்பாகும். உடல் வெப்பம் அதிகரிக்கையில் பக்ரீறியாக்கள் அழிக்கப்படுகின்றன. எமது immune system அதிக வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை அன்ரிபயோட்டிக் மற்றும் அவற்றின் நோய்த் தொற்று – எதிர்க்கும் அணுக்களை (infection – fighting agents) உருவாக்க ஊக்குவிக்கின்றது.

பொதுவாக காய்ச்சல் நோயுள்ள 2வயதுக்கு மேற்பட்ட சிறார்களையோ வளர்ந்தவர்களையோ காய்ச்சல் கண்டவுடன் வைத்தியரிடம் கொண்டு ஓடத் தேவையில்லை. அவர்களால் தாங்கமுடியாத நிலை உருவானதேயொழிய 38c(100f)க்குள் காய்ச்சல் இருப்பின் பெரிதாக வருந்த வேண்டியதில்லை. எனினும் காய்ச்சல் அதிகரித்தால் மூளை நரம்புகள் பாதிக்கப்படலாம் என்னும் கவலை எமக்குள் இருப்பதால் வருந்துவதும் நியாயம்தான். எனினும் 41.7c(107f)க்கு மேல் உடல் வெப்பம் அதிகரிக்கையில் இத்தகைய அபாயம் நேரிடலாம். எனவே, வீணே வருந்தத் தேவையில்லை.


புதிதாகப் பிறந்த குழந்தைகளாயின் 38c (100f)க்கு மேல் காய்ச்சல் அதிகரிப்பின் வைத்திய உதவி நாடுவது அவசியம். வளர்ந்த குழந்தைகளோ நடுத்தர வயதுடைய வளர்ந்தவர்களோ 40c(104f)க்கு மேல் காய்ச்சல் அதிகரித்தால் அல்லது 48-72 மணித்தியாலத்துக்கு அவ்வாறாக அதிகரித்த காய்ச்சல் நிலை நீடித்தால் மருத்துவரை நாடுவது உகந்தது.

இவை தவிர, நீர் வரட்சி, கழுத்துப் பிடிப்பு, குழந்தைகளாயின் தொடர்ந்து அழுது கொண்டிருத்தல் போன்றன தென்பட்டால் வைத்திய உதவியை நாடுவது நல்லது.

காய்ச்சல் வந்தவுடன் தடித்த போர்வையால் மூடிக் கட்டி உறங்குவது சிலரது வழமை. இது தவறு. மெல்லிய ஆடை அணியவேண்டும். அறை வெப்பநிலையைக் குறைத்து வைத்திருக்க வேண்டும். (உடலுக்கு ஏற்றாற்போல) உடல் வெப்பநிலையை அதிகரிக்கும் எந்த முயற்சிகளையும் தவிர்க்க வேண்டும். அதேபோல் உடல் வெப்பநிலையை குறைக்கும் வகையில் இதமான நீரால் மேல்கழுவுதல், பனிக்கட்டி பையிலிட்டு தலையில் வைத்தல் போன்ற வழிமுறைகளைக் கையாளலாம். Acetaminophen அல்லது ibuprofen போன்ற மருந்துகளை எடுத்து காய்ச்சலைக் குறைக்கவேண்டும். Tylenol போன்ற மருந்துகளில் இந்த

*75ம் பக்கம் பார்க்க...*


திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்



**Thavaraj Logasundaram**
Sales Representative
*thavarajl@yahoo.ca*
***Cell: 416 277 1453***

**HomeLife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated, REALTOR ®
262 Markham Road, Scarborugh
Ontario, M1J 3C5
Tel: **416.264.0101**
Fax: **416.261.1519**

# CALL ME @ 416-873-5780 I CAN ARRANGE



## MORTGAGE NEEDS

- Pre-Approvel, First Mortgage, Second Mortgage
- Buying a Second and a Third Home,
- New Immigrants, Self-Employed, 0% Down Payment Mortgage
- Re-Finance (To pay off outstanding debts or Personal needs)
- Equity line of Credit (If you have Equity in your Home)
- Renew your Mortgage with lower interest rate

| MORTGAGE RATES | |
|---|---|
| Variable | Prime - 1.00% |
| Fixed | Call me |

## PERSONAL NEEDS

- Line of Credit, Loan, Credit Card
- Secured Credit Card ( To Re-Estabilish your Credit)
- No Credit History, I can arrange a Credit card to start your Credit

## BUSINESS NEEDS

- Mortgage for the Commercial Properties
- Money to start the Business, Buy the Existing Business
- Money to buy the Inventory, Improvements (lease Hold)
- Line of Credit, Credit Card

Apex Creations - 416-297-0707



ViaFinancial Services Inc.

**Kethes Sivasubramaniyam**

Mortgage Consultant

**Cell : 416.873.5780**

**Our Office :** 5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

RBC BMO Bank of Montreal TD Canada Trust Scotiabank

**வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை**

**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-548-8005** Fax : 416-548-8006
Email : ketvar@gmail.com

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Serving Advice

Tax Problems?
Penalties?
Haven't Field?
We can help you...

# வைரசை விரட்டு...

73ம் பக்கத் தொடர்ச்சி...

மருந்துவகை உண்டு) எக்காரணம் கொண்டும் காய்ச்சலைக் குணப்படுத்த சிறுவர்களுக்கு அஸ்பிரின் கொடுக்கக்கூடாது.

மருத்துவ அறிவுறுத்தலின்படி இதனால் Reyes syndromeஎனும் குறைபாடு உருவாகலாம் என எச்சரிக்கப்படுகின்றது.

**இனி, தடிமன், காய்ச்சல் வராமல் தடுக்கவல்ல உணவு வகைகள் சிலவற்றைப் பார்ப்போம்.**

**தயிர்:** தினமும் தயிரை உட்கொண்டுவரின் எம் உடலில் பக்ரீறியாக் கிருமிகளுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. இதிலுள்ள probiotic culture எனப்படும் நன்மை பயக்கும் பக்ரீறியாக்கள் எமது எதிர்ப்பு சக்தியைக் கூட்டவல்ல கலங்களைத் தூண்டி நோயெதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கின்றன.

**உள்ளி/பூடு:** பன்னெடுங்காலமாக பன்னாட்டு பழங்கால வைத்திய முறைகளுக்கான மருந்துகளில் பூடு சேர்க்கப்பட்டு வந்துள்ளது. பல நன்மைகள் பயக்கும் மருந்து மூலிகையான பூடு உடலின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு, எமது பாரம்பரிய உணவில் சுவையூட்டியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வெங்காயக் குடும்பத்தைச் சேர்ந்த உள்ளியால் அதீத மருத்துவ பயன்கள் உள்ளன. அதேபோல் வெங்காயம், லீக்ஸ் போன்றனவும் வைரசு எதிர்ப்பு வலுவூட்டிகளாக செயற்படவல்லவையாக உள்ளன.

**இஞ்சி:** பண்டைத் தமிழ் வைத்தியமுறையின் மற்றுமொரு மருந்தாக இஞ்சி இருக்கின்றது. சுவையூட்டியாக தமிழர்கள் பயன்படுத்திய பல உணவுகள், மருத்துவ குணமுள்ளவை என்பதை உணராமலேயே எம் முன்னோர்கள் உணவோடு சேர்த்து வந்ததால் நீண்டகாலம் ஆரோக்கியமாக, நோய் அணுகாமல் வாழ்ந்து வந்தனர். வைரசுடன் போரிடவல்ல வலு இஞ்சிச் சாறுக்கும் உண்டு எனக் கூறுப்படுகின்றது.

**பெப்பமின்ற்:** தேனீராகவோ அல்லது சுவாசமூடாகவோ உட்கொண்டால் சுவாசப் பையிலுள்ள சளி, சைனஸ்(sinuses) தொல்லைகளிலிருந்து விடுபட முடியும். காய்ச்சலைக் குறைக்கவும் தலைவலியைக் குறைக்கவும் உதவவல்லது.

**பழங்கள்:** ஆரஞ்சு. grapefruit, தேசிக்காய் வகைகள் (Limes and lemons) போன்றன விற்றமின் சீ அதிகமுள்ள பழங்களாகும். எத்தகைய நோய் தொற்று அலர்ச்சியினையும் (infections) அழிக்கவல்ல அன்ரிஒக்சிடென்ற் பழங்களில் உண்டு. வாழைப்பழம், அன்னாசிப் பழம் போன்றனவும் நோயெதிர்க்கவல்ல விற்றமின் சீ இனை அதிகம் கொண்டுள்ளன. காய்ச்சல் தடிமன் வந்த வேளைகளில் உணவுச் சமிபாடு குறைந்திருந்தாலும் பழங்கள் இலகுவில் சமிபாட்டைய வல்லவையாதலால் எவ்வேளையிலும் உண்ணத்தகுந்தனவாகும்.

**மீன், விதைகள் (nuts):** இவற்றில் ஒமேகா 3, மற்றும் ஒமேகா 6. fatty acids என்பன உள்ளன. இவை உடலின் நோயெதிர்ப்பு ஆற்றலை ஊக்குவிக்க வல்லவை.

**நீர்:** தினமும் 8அவுன்ஸ் குவளை நிறைந்த தண்ணீரை குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு 8 தடவைகளேனும் அருந்துவோமேயானால் எத்தகைய நோயும் எம்மை எட்டிப் பார்க்கத் தயங்கும் என்பது பண்டைத் தமிழரின் ஐம்பூத மருத்துவத்தின் மகிமையாகும். இதனை இன்று மேலைத்தேய மருத்துவமும் முழுமையாக ஏற்று வலியுறுத்துகின்றது. நீர் வைத்தியத்தின் மூலம் கான்சர் போன்ற கொடும் வியாதியையும் கட்டுப்படுத்தலாம் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நீரானது கிருமிகளை உடலைவிட்டு கழுவி அகற்றுகின்றது. நோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்ட மூக்கு, தொண்டை, வாய் மென் சவ்வுகளில் கிருமிகளின் செறிவைப் படிப்படியே குறைத்து, போதிய நீர்த்தன்மையை உருவாக்கி பாதுகாக்கின்றது.

Caffine இல்லாத இயற்கை தேனீர் வகைகள் அருந்தினால் எம்மையறியாமலே நாம் அதிகம் நீர் அருந்துவோமாதலால் நீரின் பயனைத் தேடித் தரவல்ல இத்தகைய இயற்கை மூலிகைத் தேனீரை சீன வைத்தியம் வைரஸ் தொற்று காலத்திலும் ஊக்குவிக்கின்றது. அதேபோல், மிளகு தூவிய சூப் வகைகளும் காய்ச்சல் தடிமன் காலத்தில் இதமானவையாக உள்ளன. சூடான பானங்களை அடிக்கடி அருந்தினால் வைரசுகள் இருந்த இடம் தெரியாமல் போய் நோய்கள் குணமாகும் என்பதும் வைத்தியர்கள் கூறும் ஆலோசனையாகும். ஆரோக்கியமான வாழ்வு முறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாகவும் எமது நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்க முடியும்.

**தடிமன் காய்ச்சல் நேரத்தில் கடைப் பிடிக்க வேண்டிய சில ஆரோக்கிய வாழ்வுக் குறிப்புகள்:**

இனிப்பைக் குறைத்தல் - refind sugar உள்ள உணவு வகைகள் நோய் உருவாக்கும் பக்ரீறியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. குறிப்பாக சமிபாட்டுத் தொகுதியிலுள்ள ஊறு விளைவிக்கும் பக்ரீறியாக்களின் வளர்ச்சியைத் தூண்டுவதாகக் கூறப்படுகின்றது.

**புகைத்தலை நிறுத்துதல்** - புகைத்தலினால் சுவாசத்தொகுதியிலுள்ள சிறிய மயிர்கள் (cilia) அழிக்கப்படுகின்றது. மூக்கிலும் நுரையீரலிலும் உள்ள இம்மென்மையான மயிர்கள் ஊறு விளைவிக்கும் நுண்ணுயிர்களை உட்புகவிடாமல் தடுக்கவல்லவை. இவற்றை புகைத்தலினால் அழிப்பதோடு, சுவாசத் தொகுதியிலுள்ள ஈரலிப்பும் புகைத்தலினால் அற்றுப்போவதால் பக்ரீறியாக்களுக்கு உகந்த ஊடகமாக எம் சுவாசத் தொகுதி மாறி நோய்த் தொற்றிற்கு இலகுவில் ஆளாகின்றது..

**மது அருந்துவதை நிறுத்துதல்:** Alcoholic beverages எனப்படும் மதுபானங்கள் ஈரலுக்குச் சவாலாகின்றன. ஈரலின் தொழிற்பாடுகளில் ஒன்றான ரொக்சின்களை வடித்தல், குருதியிலுள்ள நுண்கிருமிகளை அகற்றி சுத்திகரித்தல் போன்ற தொழிற்பாடுகளை இயக்கமறச் செய்வதால் நோய்கள் உருவாகக் காரணமாகின்றன. அத்துடன், உடற் கலங்களில் உள்ள நீர்த் தன்மையை அகற்றுவதால் கலங்கள் சிதைவுற்று அழியவும் காரணமாகின்றன.

இருமல், தும்மல் மூலம் நோய்க் கிருமிகள் பிறருக்கு இலகுவில் பரப்பப்படுகின்றன – சிலர் கையை மறைத்து இருமித் தும்முவர். இதனால் நோயுற்றவர் கையில் கிருமிகள் விசிறப்படுகின்றன. நோயுற்றவர் எறியவல்ல ரிஸ்யூக்களினால் துடைத்து எறிவாராயின் பிறருக்கு நோய் பரவாமல் பெரும் உதவிசெய்பவராவார்.

“காய்ச்சல் என்ன பெரிய விடயமா?” என அலட்டிக்கொள்ளாதவர்களுக்கு இக்கட்டுரை வெறும் எழுத்துக்கள் எனலாம். ‘அடிக்கடி காய்ச்சல் வந்து எம் அன்றாட வாழ்வைப் பாதிக்கிறதே’ என வருந்துபவர்களுக்கு இவ்வெழுத்துகள் மருந்தாகலாம் என நம்புகிறேன்..

■ ■ ■



# இன்றைய குழந்தைகள்: நாளைய எமது எதிர்காலம்

# RESP

## குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்

*கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர் Canada Learning Bond அரசினால் வழங்கப்படுகின்றது.*

**Canada Education Savings Grant up to $7200**
**Canada Learning Bond up to $2000**
**Education Bonus From our Company 15%**

### சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி
(Universal Life Insurance)

*உங்கள் ஆயுட்காலம் வரை இந்தக் காப்புறுதி நீடிக்கும். இதற்கான கட்டுப்பணம் எந்தக்காலத்திலும் அதிகரிக்காது. நீங்கள் விரும்பியபடி 10,15 அல்லது 20 வருடங்களுக்கு மட்டுமே பணம் செலுத்தவேண்டும். அதன்பின்பு விரும்பினால் நீங்கள் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்; அல்லது 75 வீதத்தை கடனாகப் பெறமுடியும்.*

### வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
(Non Medical Life Insurance)

*இத்திட்டத்தின் மூலம் எண்பது வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் வைத்திய பரிசோதனை இன்றி ஆயுட்காப்புறுதியை செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.*

### கொடிய நோய்களுக்கான காப்புறுதி
(Critical Illness Insurance)

Cancer, Stroke, Heart Attack, Bypass Surgery, Kidney Failure, Coma, Paralysis, Blindness, Deafness, Alzheimer, Parkinson *போன்ற 23 வகையான கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம். நோய் ஏதும் ஏற்படாவிட்டால் 65வது வயதில் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்.*



digi Media Creations



## சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

LiLand Insurance Inc. — Industrial Alliance Insurance and Financial Services Inc.

# ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆயுட்காப்புறுதிக்கான விண்ணப்பம் ஒன்றை பூர்த்தி செய்து அத்துடன் அதற்கான முதல் மாதக் கட்டணத்தை காப்புறுதி முகவரிடம் கொடுத்தவுடன் உங்களுக்கான காப்புறுதித் திட்டம் தற்காலிகமாக ஆரம்பமாகி விடும்.

அதாவது நீங்கள் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்த நாளில் இருந்து காப்புறுதி செய்யப்பட்டுள்ளீர்கள். அதற்கான பற்றுச் சீட்டாக தற்காலிக காப்புறுதி ஒப்பந்தம் (TIA)என அழைக்கப்படும் ஒரு பற்றுச் சீட்டை உங்கள் முகவர் வழங்குவார்.

ஒரு சில நிபந்தனைகளுடன் இந்த தற்காலிக காப்புறுதி ஒப்பந்தம் உங்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் முடியும் வரை காப்புறுதியாக இருக்கும். (TIA) தற்காலிக காப்புறுதி ஒப்பந்தம் உங்களுக்கான காப்புறுதிப் பத்திரம் கிடைக்கும் வரை 90 நாட்களுக்கு பாதுகாப்பு வழங்கும். அதன் பின்பு TIA நிராகரிக்கப்படும்.

ஒருவருக்கு ஏற்கனவே நோய்கள் இருந்து அதன்மூலம் மரணம் ஏற்பட்டால் தற்காலிக காப்புறுதி பாதுகாக்க மாட்டாது. ஆனால் ஒருவருக்கு விபத்தால் (Accident) மரணம் ஏற்பட்டால் காப்புறுதிப்பணம் வழங்கப்படும்.

ஒருவர் வேறு காப்புறுதி நிறுவனத்தால் முன்பு நிராகரிக்கப்பட்டிருந்தால் அதன்பின்பு விண்ணப்பிக்கும் போது தற்காலிகமான காப்புறுதி வழங்கப்பட மாட்டாது. எனவே TIA தற்காலிக காப்புறுதி ஒப்பந்தம் ஒருவர் காப்புறுதிக்காக விண்ணப்பம் செய்தவுடன் காப்புறுதி அமுலில் இருக்கும். அதன்பின்பு அந்த விண்ணப்பத்தில் உள்ள காப்புறுதித் தொகையைப் பொறுத்து அதற்கான மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படும். அதன் பின்பு தான் காப்புறுதி பெற்றுக் கொள்ள முடியுமா என்பதை காப்புறுதி நிறுவனம் முடிவு செய்யும்.

நீங்கள் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது காப்புறுதி முகவர் உங்களுக்குத் தேவையான காப்புறுதித் தொகைக்கான காப்புறுதிக் கட்டணம் எவ்வளவு என்பதை உங்கள் வயது, நீங்கள் மருத்துவரீதியாக ஆரோக்கியமானவர்களா என்றும், புகை பிடிப்பவரா அல்லது இல்லையா என்பதையும் கருத்தில் கொண்டு மட்டும் மாதாந்தக் கட்டணம் கணிக்கப்படும்.

உங்களின் காப்புறுதிக்கான சரியான மாதாந்தக் கட்டுப்பணம் காப்புறுதி நிறுவனம் உங்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் செய்த பின்பு தான் சரியான கணிப்பீடு செய்வார்கள். எனவே மருத்துவப் பரிசோதனையின் பின்பு காப்புறுதி நிறுவனம் உங்களுக்கு கணிப்பிடும் மாதாந்தக் கட்டணமே உங்களின் சரியான மாதாந்தக் கட்டணமாகும்.

உங்கள் உடல் ஆரோக்கியம் மிகவும் சிறந்ததாக இருந்தால் உங்களின் கட்டுப் பணம் குறைவாகவும் உங்களின் உடல் ஆரோக்கியம் சராசரியாக இருந்தால் உங்களின் கட்டணம் நீங்கள் விண்ணப் பிக்கும்போது கூறிய கட்டுப்பணத்துக்கு சமனாகவும் இருக்கும்.

உங்கள் உடல் ஆரோக்கியம் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தால் உங்களுக்கான மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கப்படும். உங்களின் உடல் நிலையைப் பொறுத்துக் கட்டணம் அதிகரித்துக் கொண்டிருக்கும்.

உங்களின் உடல் ஆரோக்கியம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தால் காப்புறுதி நிறுவனம் காப்புறுதியை நிராகரிப்பார்கள்.

ஆனால் காப்புறுதி நிறுவனம் காப்புறுதியை நிராகரிப்பதற்கும் கட்டுப்பணத்தை அதிகரிப்பதற்கும் பல காரணங்கள் உண்டு.

- மருத்துவரீதியாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருத்தல்
- உடல் பருமன் அதிகமாக இருத்தல்
- நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருத்தல், (அதாவது பாட்டன், பாட்டி, தாய், தந்தை, சகோதரர்களுக்கு. பரம்பரையாக சில நோய்கள் ஏற்படுவதால், உதாரணமாக நீரிழிவு (Diabetic), புற்று நோய் (Cancer), இருதய நோய்கள் (Heart Diseases) போன்றவை.)
- Criminal குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டிருத்தல்
- சாரதி அனுமதிப்பத்திரத்தில் குற்றச்சாட்டுகள் இருத்தல் அல்லது தடைசெய்யப் பட்டிருத்தல். Driver's License Suspension.
- போதைவஸ்துக்களின் உபயோகம் (Drugs).
- உயிருக்கு ஆபத்தான விளையாட்டுக்களில் ஈடுபடுதல்
- உயிருக்கு ஆபத்தான தொழில் பார்த்தல்.
- அதிகமான நாட்கள் நாட்டை விட்டு வேறு நாட்டில் போய் குடியிருத்தல்
- அடிக்கடி விமானப்பயணம் மேற்கொள்ளல்.

போன்ற பல காரணங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு காப்புறுதி நிறுவனம் ஒருவருக்கு காப்புறுதி வழங்கலாமா என்பதைத் தீர்மானிக்கும்.

எனவே காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது உடல்நலம் மட்டும் சிறப்பாக இருந்தால் போதாது. மேற்குறிப்பிட்ட ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அண்மையில் நண்பர் ஒருவர் காப்புறுதிக்கு விண்ணப்பித்தார். அவர் வயதில் குறைந்தவர். உடல் ஆரோக்கியம் மிகவும் நன்றாக இருந்தது. அவரிடம் மருத்துவ பரிசோதனை செய்வதற்காக சென்ற மருத்துவ ஊழியர் (Nurse)சில கேள்விகளை கேட்டு விண்ணப் பத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

அதில் ஒரு கேள்வி, நீங்கள் கனடாவை விட்டு வேறு ஒரு நாட்டில் போய் 3 மாதங்களுக்கு மேல் இருக்கப் போகின்றீர்களா? என்பது. அதற்கு அவர் அளித்த பதில் எனது பெற்றோர்கள் இந்தியாவில் இருப்பதால் சில சமயங்கள் நான் அங்கு போக நேரிடலாம் என்பது.

ஆனால் ஆயுட்காப்புறுதி நிறுவனத்தைப் பொறுத்தவரை நீங்கள் எப்போது போவீர்கள், எவ்வளவு நாட்கள் அங்கே இருப்பீர்கள் என்ற விபரங்கள் தெரியாது. அதேசமயம் உங்களுக்கும் எப்போது போகப் போகின்றீர்கள் அல்லது எவ்வளவு காலம் அங்கே இருக்கப் போகின்றீர்கள் போன்ற தகவல்கள் தெரியாது.

இப்படியான கட்டத்தில் நீங்கள் நாட்டை விட்டுப் போவது. பற்றிய தகவல் எதுவும் காப்புறுதி நிறுவனத்திற்கு கூறவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் ஏற்கனவே வெளிநாட்டுப் பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்திருந்தால் மட்டும் அதை கூற வேண்டும்.

ஆனால் நீங்கள் கனடாவில் காப்புறுதி செய்த பின்பு எந்த நாட்டில் மரணம் ஏற்பட்டாலும் காப்புறுதிப் பணம் கிடைக்கும். ஆனால் வேறுநாட்டில் போய் குடியிருப்பதற்காக திட்டமிட்டு போவதற்கு முன்பு இங்கு காப்புறுதிக்கு விண்ணப்பித்தால் காப்புறுதி நிறுவனம் காப்புறுதியை நிராகரிப்பார்கள்.

காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும்போது கூடிய தகவல்களை ஆயுட்காப்புறுதிக்கு வழங்குவதன் மூலம் ஆயுட்காப்புறுதியை அங்கீகரிப்பதை துரிதப்படுத்த முடியும். உங்கள் குடும்பவைத்தியரின் விபரங்கள், நீங்கள் உபயோகிக்கும் எல்லா மருந்துகள், அண்மையில் செய்த வைத்திய பரிசோதனைகளின் முடிவுகள் போன்ற தகவல்களை சரியாக வழங்க வேண்டும். ஒருவர் இரண்டு குடும்ப வைத்தியரிடம் மருத்துவ வசதிகள் பெற்றிருந்தால் இரண்டு குடும்ப வைத்தியரின் பெயர்கள் விபரங்களை கொடுக்க வேண்டும்.

காரணம் ஆயுட்காப்புறுதி நிறுவனம் உங்கள் குடும்ப வைத்தியரிடம் இருந்து உங்கள் மருத்துவத் தகவல்களை பெற நேரிடும். சரியான தகவல்களை ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு கொடுப்பதன் மூலம் ஆயுட்காப்புறுதி பெற்றுக் கொள்வதை துரிதப் படுத்தலாம்.



ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள் நீங்கள் விண்ணப்பிக்கும்போதே உங்களின் மருத்துவ பரிசோதனை செய்வதால் உங்களுக்கு வழங்கப்படும் திட்டம் பின்பு மரணம் ஏற்பட்டதும் பணம் பெறுவதில் எதுவிதமான சிக்கலும் இருக்காது.

ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது மருத்துவ பரிசோதனை செய்யாவிட்டால், மரணம் ஏற்பட்டதும் நீங்கள் முன்பு கொடுத்த தகவல்கள் சரியானதா என்பதை பரிசீலனை செய்யவார்கள். அந்த நேரத்தில் ஏதாவது முரண்பாடுகள் இருந்தால் காப்புறுதிப்பணம் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும்.

எனவே நோய்கள் ஏற்படுவதற்கு முன்பு மருத்துவ பரிசோதனைகள் செய்து ஆயுட்காப்புறுதி அல்லது கொடிய நோய்களுக்கான காப்புறுதி பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது..

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

RBC Insurance · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



# இது ஒரு வியாதி அல்ல பெற்ரோரின் வேதனை:

- பொ. கனகசபாபதி -

ஒழுங்காட்சி குறைவுச் சீர்குலைவு (Discipline Deficit Disorder) என்பது ஊடகத் தேசிய நிறுவனத்தினைச் சேர்ந்த அமெரிக் ஆய்வாளர் ஒருவர் உருவாக்கிய புதிய சொற்றொடர். இது கவனக் குறைவுச் சீர்குலைவு (ADD - Attention Deficit Disorder) போன்ற ஒரு நோய் அல்ல. இன்றைய நாகரிகத்தில், சிறப்பாக மேற்கத்திய நாகரிகத்தில் பெற்றோர்களை வதைத்து எடுக்கும் பிள்ளைகளின் பிரச்சினையே இது என்கிறார் அந்த ஆய்வாளர். “பொதுவாக பிள்ளைகளுக்குப் பெற்றோர்களிடமிருந்து போகும் செய்தி தான் என்ன? அவர்களுக்கு எது வேண்டுமோ, அது கிடைக்கிறது, எப்போ வேண்டுமோ, அப்போ கிடைக்கிறது, எல்லா நேரங்களிலும் கிடைக்கிறது” என்கிறார் எறின் வால்ஷ். ஆவர்கள் தேவை தவிர்ந்த வேறு வகையான கூற்றுக்கள் எதுவும் அவர்கள் காதுகளில் ஏறுவதில்லை. சுருங்கக் கூறின் முயற்சி அதிகம் இல்லாமல் வெற்றியை எதிர் பார்க்கிறார்கள், சாதனை நிகழ்த்தாமல் கௌரவத்தினை எதிர் பார்க்கிறார்கள், திறமை நிறையா நிலையில் பெருமை பெற முனைகிறார்கள்’. என்கிறர்.

ஒழுங்கட்சி என்பது கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகள். ஆகவே, இந்நெறிகளைக் கடைப்பிடிக்கத் தவறுவது இரண்டு வகைகளில் சாத்தியமாகலாம். ஒன்று கடைப்பிடிக்காமல் விட்டு அதற்கான விளக்-கத்தினை பெற்றோர்களிடம் விளக்குவது மற்றையது ஆரம்பத்திலேயே பெற்றோர்க ளின் அனுசரணையையோ அங்கீகாரத்-தினையோ பெற்று அதனை முறிப்பது. இரண்டுமே சீர்குலைவுதான்.

இதற்கு அடிப்படைக் காரணங்களாக இரண்டு வேடிக்கையான காரணங்களை ஆய்வளர் கள் கூறுகின்றார்கள்

முதலாவதாக அவர்கள் குற்றம் சாட்டுவது ஹென்றி ∴போர்ட் என்பவரை. இந்த Henry Ford பற்றி : “Henry Ford put the poor man on the road” என்ற வாசம் பெயர் பெற்றது. மனிதன் ஓரளவிற்குச் சோம்பேறி ஆவதற்கு மறைமுகமான காரணிகளில் அவரும் ஒன்றாகிறார். ஹென்றி ∴போர்ட் கார் தயாரிக்கத் தொடங்கிய பின்னர் தான் பணக்கார வர்க்கத்தினுடைய ஏகபோக உரிமையாக இருந்த கார் சாமனியனாலும் வைத்துக் கொள்ள முடியும் என எண்ண வைத்தவர்.

இதன் விளைவாக அருகே உள்ள அங்காடிக்குக்கூட நடந்து செல்லும் செயல் முறையை மக்கள் இழந்து விட, பிள்ளைக்குத் தந்தை, தாயார் கார் ஓட்டுனராகவும், பின்னர் பரிசாரகராகவும், தாதியாகவும் மாறிவிட்டார்கள் என்கிறார்கள் அந்த ஆய்வாளர் கள்.

அவர்கள் சொல்லுகின்ற மற்றைய காரணம் இன்னும் வேடிக்கையானதாக இருந்தாலும் சிந்திக்க வேண்டியுள்ளது. பெண்கள் பெரும் அளவிலே வேலைக்குச் செல்வதாலும் அதன் விளைவாகப் பெண்ணியம் ஏற்றம் பெறுவதாலும், தாய் வீட்டில் இருக்கின்ற நேரத்தில் கணிசமான அளவு குறைந்து விடுகிறது, ஆனால் அதே சமயம் வருமானம் அதிகரிப்பதால் அதற்கு இது ஈடுகட்டு கிறது”. “இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை” என்கிறது நமது இலக்கியம்.

இங்கிலாந்திலே ஒரு கருத்துக் கணிப்பு

> “ உங்கள் பிள்ளைக்கு அவர்கள் தேர்வுகள் பற்றியும், பொறுப்புக்கள் பற்றியும், இடர்நிலைகள் பற்றியும் எடுத்துக் கூறி அவர்கள் அவற்றினை எவ்விதம் எதிர் கொள்ள வேண்டும் எனச் சொல்லிக் கொடுப்பதே சிறந்த பெற்றோரியம். ”

எடுத்தார்களாம். அதன்படிக்கு பெரும் பான்மையான பெண்கள் வீட்டு வேலை அலுவலக வேலை என அல்லாடிக் கொண்டிருக்கின்றமையால் பிள்ளைகளுக்காக வாரத்தில் இரண்டு மணித்தியாலம் கூட ஒதுக்க முடியமாமல் உள்ளனராம். அவர்கள் உள்ளத்தில பிள்ளைகளோடு நேரத்தினைச் செலவிட முடியாமல் உள்ளதே என்ற குற்ற உணர்வே மேலிட்டு நிற்கின்றதாம். வீட்டிற்கு வெளியே பாதுகாப்பற்ற சூழல், மேற்பார்வை இல்லாமல் பிள்ளைகளை வெளியே விட முடியாது என்ற காரணத்தினால் வீட்டின் உள்ளேயே பிள்ளைகளை முடங்கிக் கிடக்க வைப்பதனால் அவர்களுடைய பொழுது போக்கிற்காக ஊடகங்களையும் இணைய தளங்களையுமே நம்ப வேண்டி உள்ளது. இன்றைய தொலைக் காட்சிகள் தாய்மாரை விரட்டியே பணமாக்குகின்றன. ஒரு புறத்தில் பெற்றோரியம் சம்பந்தமாக தாய்மார்கள் செய்வது போதாது ஒரு நிறைவான குழந்தைப்பருவத்தை வழங்கத் தவறிய மாதிரியான எதிர்பார்ப்புகளைக் கூறி அவர்கள் பெற்றோரியத்திற்கு அருகதை அற்றவர்கள் எனப் பயமுறுத்தி அவர்களை என்ன செய்வது எனத் தெரியாமல் தத்தளிக்க வைத்து விடுகிறார்கள். மறுபுறத்திலே குழந்தைகளைக் கவரக்கூடிய விதத்திலே அபத்தமான கற்பனைகளைக் காண்பித்து அவர்களை மயக்கி தொலைக்காட்சியில் காண்பது அத்தனையும் நிசமென நம்ப வைத்து ஏமாற்றுகிறார்கள். தாய்ப்பாசத்தைத் தவிக்க வைத்துவிடுகிறது தொலைக்காட்சி. ஆரம்-ப்ப பாடசாலை மாணவர்கள் வாசிப்பதை ஒதுக்கி கணினி விளையாட்டுகளிலேயெ நேரத்தினைச் செலவிடுகிறார்கள் என்பது பொதுவான குற்றச்சாட்டு. இங்கிலாந்து அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலே இந்தக் குறைபாடு பெரும் அளவினிலே அதிகரித்து வருகிறதாம். 2001லே குழந்தை களில் வாசிப்பில் உலக நாடுகளில் 9வது இடத்தில் இருந்து அமெரிக்கா (கனடா உட்பட) 2006இல் 14வது இடத்திற்குப் பின் தள்ளப் பட்டுவிட்டது 15வது இடத்தில் இருந்த சிங்கப்பூர் 3வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. பெற்றோர்கள் விளையாட்டு, வீட்டு வேலை, வாசிப்பு, மின்னூடகப் பொழுது போக்கு என எதை எதை எப்படி எப்படிச் சமாளிப்பது எனத் தெரியாமல் திக்கு முக்காடுகின்றனர்.

இதனால் என்ன நடக்கிறது? பிள்ளைகள் முன் எப்போதும் இருந்ததற்கு மாறாக தமது எண்ணங்களையும் கோரிக்கைகளையும் பெற்றோர்கள் மீது சுலபமாகத் திணித்து விடுகிறார்கள். பெற்றோர்கள் ஏதோ காரணத்திற்காக “முடியாது” என்று சொல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள்.

இன்றைய பெற்றோர்கள் எந்த நேரமும் பிள்ளைகள் பற்றிப் பயந்தவர்களாகவே வாழ்க்கையினை ஓட்டிக்கொண்டிருக்கிறார் கள். ஏவுகின்ற அத்தனையும் இக்கட்டில் மாட்டிவிடுமோ என்ற பயம் அவர்களை எந்நேரமும் வாட்டியபடியே உள்ளது. பிள்ளைகளைத் தனியே பாதுகாப்பு இன்றிப் பாடசாலைக்கு அனுப்புவதே பெரும் பிரச்சினை. வழியின் ஏதாயினும் நடந்து விடுமோ என்ற அங்கலாய்ப்பு. இது தொடர்ந்தால் அந்தக் கிளி 20வயதிலும் கூட்டுக்கிளியாகவே இருக்கும் என்பதை அவர்கள் உணரவில்லை. பாடசாலையில் இருந்து வீடுவரும் குழந்தை சும்மாவா வருகிறது. அது முதுகு கூனுகின்ற அளவினுக்கு வீட்டு வேலைச் சுமை. ஆகவே அதன் வருங்காலம் வீட்டு வேலையின் கைகளிலே தான் தங்கி உள்ளது என்ற பயம் பெற்றோருக்கு. இதற்கு என்ன செய்யலாம்? பிள்ளையை அழைத்துக் கொண்டு ஒரு தனியார் போதனாசிரியரிடம் ஓட வேண்டும். பெற்றோர்கள் மிகையான (Overprotective parenting) பாதுகாப்பாளராக மாறினால் பிள்ளைகள் கற்கின்ற மிக அனுசரணையான சூழல்களிலிருந்தும் - விளையாட்டு மைதானம் அங்கு தான் தொடர்பு களையும் செயல்களுக்கான விளைவுகள் பற்றியும் தெரிந்து கொள்கிறார்கள்- அவர்களை இந்த அரிய வாய்ப்புக்களை அனுபவிக்காமல் செய்து விடுகிறார்கள். “இடர்நிலை அதிகம் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாயின் குழந்தையை ஆபத்தில் மாட்டிகிறோம் என்பது உண்மை ஆனால் இடர் நிலை மிகக் குறைவாக இருக்குமாயின் பிள்ளையினுடைய சீரான வளர்ச்சிக்கும் உளவியல் விருத்திக்கும் தேவையான போதிய சந்தர்ப்பத்தினைத் தவற விட்டுவிடுகிறோம்” “too much risk and we endanger child; too little risk and we fail to provide a child with healthy opportunities for growth and psychological development”. என்கிறார்கள் உளவியலாளர்கள்.

எதனையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் அற்புத திறமை சாலிகள் அவர்கள். நீங்கள் எப்பொழுதாவது உங்கள் பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டிர்களானால் வந்ததே வினை. தயவு செய்து அவருடன் என்னை ஒப்பிடாதீர்கள். என்னை நானாகவே வைத்துப் பாருங்கள் என்று ஆலொசனை சொல்லும் பிள்ளை. அவரை ஏதேனும் ஒரு நிகழ்ச்சிக்குச் செல்வதற்குத் தடைவிதித்தீர்களானல் என்ன சொல்வார், “அம்மா மற்ற எல்லோரும் போகிறார்கள். நான் மட்டும் ஏன் போகப்படாதாம்” என்பார். அப்போது எத்தனை பெற்றோரக்களுக்கு ‘நீ எப்படி மற்றையோர்களுடன் உன்னை ஒப்பிடலாம்” எனக் கேட்கின்ற தைரியம் உள்ளது.

கட்டிளம் பருவத்தினரைப் பற்றி உளவியலாளர்கள் “அவர்கள் பெரும்பாலும் மற்றையோரில் தங்கியேதான் வாழ்வதாகக் கூறுகிறார்கள். கடினமானது எதனையும் செய்வதற்கு மாத்திரமல்லாமல் நாளாந்த செயல் பாடுகளுக்கும் அவர்களுக்கு வயதானவர்களின் உதவி தேவைப்படுகிறதாம். இன்றைய கட்டிளம் பருவத்தினர் பெருமளவு சுய அக்கறை (self-centered) உடையோராகவும் அதிகாரத்தினுக்குப் (Authority) போதிய மரியாதை கொடுக்கத் தவறியவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளானவர்களாகவும் பற்றார்வம் (Anxiety) உடையோராகவுமே உள்ளனர் என்கிறார் லெவின் (Levine) எனும் உளவியலாளர். ஒரு பிள்ளைக்கு வேண்டிய பொருளாதார உதவியை பெற்றோர்கள் கொடுக்கலாம், அவரது உடநலம் நல்ல நிலையில் இருப்பதற்கு அனுசரணையாக இருக்கலாம், கல்வியில் சிறப்புற வருவதற்கு உதவலாம் ஆனால் அவர்களது மனதிலே ஒரு வெறுமை அல்லது அகவழிகாட்டல் இல்லாமை (Inner direction) உள்ளதே. அதனை லெவீன் ஆங்கிலத்தில் ENNUI என அழைக்கிறார். இந்த எனூயி அவர்களிடம் இருக்கின்ற வரைக்கும் அவர்களால் வாழ்வில் வெற்றி கொள்ள முடியுமா? பல்கலைக் கழகத்திலே கல்வி கற்கின்ற பிள்ளைக்குக் கூட எந்த விதமான கற்கை நெறி கற்கப் போகிறாய் எனக் கேட்டால் ஒரு தெளிவான பதிலைக் கேட்க முடிவதில்லை. பொதுவாக அவர்கள் சொல்வது “I don’t know’ என்பதே. இன்றைய இளைய சமுதாயத்தினரும் நாம் தொடர்பாடல் செய்கின்ற பொழுது நமது வார்த்தைப் பிரயோகத்திலே கூட சாதாரணமுறையிலிருந்து வேறு பட்டிருக்க வேண்டும் என சில வாரங்களுக்கு முன்னர் ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகை ஒரு பட்டியலினையே பிரசுரித்தது.

பெற்றோரியம் என்பது தொடர்பாடலுடன் (communication) சம்பந்தப்பட்டது என்பது பல வல்லுனர்களின் அபிப்பிராயம். உங்கள் பிள்ளைக்கு அவர்கள் தேர்வுகள் பற்றியும், பொறுப்புக்கள் பற்றியும், இடர்நிலைகள் பற்றியும் எடுத்துக் கூறி அவர்கள் அவற்றினை எவ்விதம் எதிர் கொள்ள வேண்டும் எனச் சொல்லிக் கொடுப்பதே சிறந்த பெற்றோரியம் என்கிறார்கள். சொல்லுகின்ற போது அவர்கள் மனதைப் புண்படுத்தாமல் சொல்ல வேண்டும், சொல்பவர் முழுமையான ஒரு அப்பழுக்கற்ற நெறியாளர் என்ற பிரமையை ஏற்படுத்தக் கூடாது, அவர்களது தீர்மானங்கள் பிழையானவை என்று உணர்வை அவர்களிம் ஏற்படுத்தும் உணர்வினைத் தவிர்க்க வேண்டும், அவர்கள் எண்ணங்களை அவமதித்ததாகக் காண்பிக்கப் படாது.

முயற்சி திருவி[redacted]ய[redacted]கும்[redacted]

மகாஜனா கல்லூரி முன்னாள் அதிபர்
திரு. கனகசபாபதி (கனெக்ஸ்) அவர்களின்

## நூல்வெளியீட்டு விழா

**March 16 2008**
**5. 30 pm**

**Canada Murugan Temple Mandapam**
**Birchmount & Eglinton**
**733 Birchmount Road**


Buy or Sell
Commercial & Residential
KIRUBAHARAN KANAGASABAI
REAL ESTATE BROKER.
DIR: 416-903-4663
416-299-8199 (24 Hrs)
RE/MAX
RE/MAX GOLDENWAY REALTY INC.,BROKERAGE
$213,000
Mccowan/Finch
2 Bedrooms, 2 Washrooms
New Wood Floor Thru Out,Freshly
Paint, Excellent Rec Facilities
Close To Everything
$295,000
Kennedy/Sheppard
2+1 Bedrooms, 2 Washrooms
Corner Unit, Ggolf View,
At 'Legends At Tom O'shanter'
Brand New Tridel Building
$358,900
9th Line/14th Ave
3 Bedrooms, 3 Washrooms
Sun-Filled Home With Lots Of
Upgraded Features: Maple
Hardwood Floor,Maple Kit Cabinets
$419,900
Bathurst/Mcclellan W
3 Bedrooms, 3 Washrooms
This Lovely Home Provides A Solitude
Seldom Enjoyed In New Home
Subdivisions, Great Neighbourhood
$439,900
Winchester/Watford
4 Bedrooms, 3 Washrooms
Warm & Inviting Home On 50Ft Lot On
Quiet Street, Tasteful Designer Decor.
Meticulously Maintained Inside/Out
$379,900
Finch/Morningside
4+2 Bedrooms, 4 Washrooms
'Ravine Lot' Immaculate
Green Park Built Home.
Spacious 4 Bedrm, Approx 2300 S.F.
FOR LEASE
Brimley/Sheppard (2101 Brimley Rd)
- PRICE RANGE FROM $500-$1000
- Very Good Loaction For Business!!!
- Close To TD Bank, HSBC Bank
- Indoor Mall With Lots Of Parking
- Good For Retail
- Health Centre, Yoga, Community Centre, Office Space Etc
$499,900
Staines/Steeles
4 Bedrooms, 3 Washrooms
Unique Bungalow Style 2750 Sqft
Beautiful Ravine Lot* Large Br On
Ground Flr W/ 5Pc Ensuite
$414,900
Kennedy/Major Mac
3 Bedrooms, 3 Washrooms
Georgous**1983Sqft**(As Per Mpac)
One Of A Kind Corner Home In
Angus Glen Community Situated
$539,900
14th Ave/ 9th Line
4 Bedrooms, 3 Washrooms
Excellent Box Grove Neigbrhood,
Extra Wide Premium
Corner Lot, 2712 Sq Ft, Exctve.
$494,900
Markham/Bur Oak
4 Bedrooms, 4 Washrooms
Less Than 1 Year New,
Well Maintained Approx.
2850 Sq. Ft. Home With 9Ft Ceiling.
Call me today to find out more home!
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
(RAJ) PATHMARAJAH ARIYANAYAGAM
REAL ESTATE BROKER
DIR: 416-930-4663
416-284-4757(24 Hrs)
CALL FOR COMPLEMENTARY MARKET EVALUATION & PROFESSIONAL ADVICE OF YOUR BUSINESS OR PROPERTY

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborugh, ON

BUY AND SELL through Pat Pushpakanthan
And enter to win Brand new Toyota FJ Cruiser
WIN WIN
MARKHAM / ELSON
335 000/-
NEW
Markham
NEW
4 bdrm monarch blt brand new home 2350 sq .ft
In warden & st clair
BUY AND SELL HOMES AND BUSINESS
அனுபவம்! திறமை! நேர்மை!
PAT PUSHPAKANTHAN
Real Estate broker
416 493 2100
Dir: 416- 490 SOLD
2.5%
total commission*
Century 21 Affiliate Realty INC.
200 Consumers Rd
416-290 1200
EXPERIENCE!!







**இம்மாதப் புகைப்படக் கலைஞர்**
**சிவா ரட்ணசிங்கம்**
ரொறன்ரோவில் வசிக்கும் ஈட்டுக்கடன் முகவரான இவர் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**
புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi